க்கேளீர், தீரமுடன்ஓமென்ற வட்சரத்தை தீர்க்கமுடனெந்தனுக்கு வு
பதேசித்தார், வீரமுடன் தூம் தூம் மென்றேசொல்லி விருப்பமுடன்
பிரணவத்தை யுச்சாடித்து, கோரமுடன் கிலி கிலி யென்றேசொல்லி
கொற்றவனேஸ்தம்பய வென்றிட்டாரே. (௬௪௮)

என்றாரே அண்டமதைத் தாண்டிநங்கி யெழிலானவாகாயந் தனி
லெறிந்து, குன்றானநாற்கடலுந் தத்தளிக்க குறிப்புடனேயென்முன்
னே ஓடிவாவா, சென்றுமே ஐயுங் கிலியும் சௌவுமென்று செப்பினார்
பிரணவத்தை என்முன்னிற்க, வென்றிடவேலட்சமுரு வோதுவோது
வுத்தமனே வசி வசி சுவாஹாயென்னே. (௬௪௯)

என்னவேமண்டலத்தில் வசியமாச்சு யெழிலானதூமதா தேவிம
ந்திரம், சொன்னதொருமந்திரத்தா லஷ்டசித்தி சுந்தரனேயுந்தமக்குப்
பலிக்கும்பாரு, பன்னவேகுளிகையது பூண்டுகொண்டு பாருலகஞ்சுற்
றிவருங் காலந்தன்னில், முன்னமேசித்துமுனி ரிஷிகள்தாமும் மூர்க்க
முடன்சபித்திடவே வருவார்பாரே. (௬௫௰)

பாரேதானுந்தன்னையுஞ் சபிக்கவந்தால் பாலகனேதூமதா பிரணவத்தை, நீரேதானுச்சாடஞ் செய்யும்போது நிஷ்களங்கமாகியல்லோ வணங்கியுன்னை, சேரேதானநுகமைத்து புத்தனுக்கு செப்புவார்வேணவுப தேசமெல்லாம், வேரேதான்வுபதேச முத்தனுக்கு வேண்டுமோ தூமதா மந்திரந்தானே. (௬௫௧)

தானானதூமதா மந்திரத்தால் சட்டமுடன்தாணிதனை ஜெயிக்கலாகும், கோனானயிடையூறு வந்தபோது சொற்றமானமந்திரவுச் சாடனத்தை, தேனானமேனான்மணியைக் கணிணைந்து செப்பிடவேயுந்தனுக்கு யெல்லாஞ்சித்தி, பானானதேவதா மந்திரத்தை பட்சமுடன்ஆருக்குஞ் சொல்லொண்ணாதே. (௬௫௨)

ஒன்றானநுருமந்திரம் தேவதாமந்திரம் வுத்தமனேபுலிப்பாணியுந்தனுக்கு, திண்ணமுடனுபதேசஞ் செய்தேனப்பா தீர்க்கமுடன்யென்றனும் மனதிலுன்னி, வண்ணமுடன்வுங்களுக்கு யிடையூர்காலம் வந்திட்டால் பிரணவத்தை யுச்சாடித்து, தண்ணமுடன்சின்மயத்திலிருந்துகொண்டு சதாநித்தம் தேவிதன்னைப் போற்றுவாயே. (௬௫௩)

மலையாளகறுப்பண்ணன் வசியம்.

போற்றுகிறேன்யின்னமொரு வசியங்கேளு புகழானபுலிப்பாணி மைந்தாபாரு, ஆற்றலுடன்கறுப்பண்ணன் வசியந்தன்னை வப்பனேமானுக்கள் பிழைக்கவென்று, மாற்றமேகுளிகையது பூண்டுகொண்டுமகத்தானசீனபதி விட்டுமல்லோ, ஏற்கவேமலையாள பதியிலப்பா யெழிலாகவாருண்டி யிருந்திட்டேனே. (௬௫௪)

இருக்கையிலேதூமதா தேவஸ்தானம் யெழிலானசன்னிதிக்கு வடபாகத்தில், பொருந்தவேசமாதியது யானுங்கண்டேன் பொங்கமுடன் கறுப்பண்ணன் விருட்சமுண்டு, திருந்தவேகுளிகையது யானும்விட்டு திரமுடனசமாதியுறங் கிடக்கும்போது, அருந்தவசியன்கொருவ ரிருந்தாரப்பா யப்போ யெந்தன்னையுங் கண்டிட்டாரே. (௬௫௫)

கண்டாரேசித்துமகா ரிஷியார்தாமும் கருத்தாகயெந்தனைத்தான் கண்டபோது, திண்மையுடனென்று யென்னைக்கேட்க தீர்க்கமுடன் காலாங்கி சிஷனென்றேன், வண்ணமுடன்தாள்பணிந்து யடியேன்றானும் வளமாகசிறங்குனிந்து தெண்டனிட்டேன், கண்ணபிரான்றன்னைப்போல் ரூபங்கொண்ட கர்த்தாவுமெந்தனையுமதித்திட்டாரே. (௬௫௬)

மதித்துமேயெந்தனையு மாசீர்மித்து மகிட்சியுடன்ஞானோபதேசஞ்செய்வேனென்றார், துதித்துமேயடியேனு மனதுவந்து துப்புரவாய்கமது

டைய பாதாரங்கான், வதித்துமேவையகத்தி லடியேன்றனும் வளமை யுடன்சதானித்தங் குருவென்றெண்ணி, கதிப்புடனேகாலாங்கி யென் றுசொல்லி கர்த்தாவேயெந்நாளும் மறவேன்றனே. (௬௫௭)

மறவேனேயென்றுசொல்லி மனங்களித்து மார்க்கமுடனடியே னுங் கூறும்போது திறமானசமாதியிது கறுப்பன்சமாதி தீரமுடன் விருட்சாதி விருட்சத்தினகீழ், உறமுடனேவெகுகோடி காலமாக வுத் தமனேசமாதியிட தவசியானும், குறைவதுவும்நேராமல் கோடிகாலம கொற்றவனேயானுமல்லோ யிருந்திட்டேனே. (௬௫௮)

இட்டேனேவெகுகோடி காலமப்பா பெரிலானகறுப்பண்ணஞ்ச மாதிபக்கல், வட்டமுடன்பெக்கனேயோ கோடாகோடி வண்மையுள்ள தவசிகளும் வருவார்போவார், சட்டமுடன்கறுப்பனுக்கு யெதிராளோர் கள் சாங்கமுடனிதுவரையிற் கண்டதில்லை, திட்டமுடன்கறுப்பண்ண ன் வசியந்தன்னை தீர்க்கமுடனனேகம்பேர் கேட்டிட்டாரே. (௬௫௯)

கேட்டாரேவெகுமாண்பர் கேட்டாரப்பா கெடியானகறுப்பண்ண ன் வசியந்தன்னை, வாட்டமுடனொருவருக்குஞ்சொன்னதில்லை வண்ண மையுடனெந்தனுக்கு வுபதேசித்தார், தாட்டிகமாய்குளிகைபதா பூண் டுகொண்டு தண்மையுடன்போகுகின்ற வுனக்குமந்த, நீட்டமுடன் பிரணவத்தை யுபதேசித்தேன் நிஷ்களமாகவல்லோ கேளுகேளே.

கேளேநீயென்றுசொல்லி பிரணவத்தை கெணிதமுடனெந்தனுக் கு வுபதேசித்தார், பாளேதான்போகாமல் பிரணவத்தை பட்சமுடனுந் தமக்கு வுபதேசித்தேன், ஆளேதான்மந்திரமோ பிரணவங்கான் வப்ப னே ஓம் சங்கரி சங்கரியென்னை, வீளேதான்வச்சாட மந்திரத்தை வி ருப்பமுடன்சங்கரியே வாவாவென்னே. (௬௬௧)

என்னவேதேவதா கறுப்பண்ணன்பகவா யெழிலானவுக்கிரகறுப் பண்ணுவாவா, துன்னவேஆகாகா காளியெடுகைகறுப்பா துடியானவா ங்கார முளளதீபா, பன்னவே அம் அம் அமமென்றேயோது பட்சமு டன்கடுகெனவே வந்துநிறபாய், சொன்னபடிஆஞ்சநேயர் முகனேவா டா சுந்தரனேகொஞ்சியென்ற சடையோன்றனே. (௬௬௨)

தானுனஅங்கிசங்கி தன்னில்நின்று தலையுருட்டுக்கறுப்பண்ணு தயாளபாலா, கோனுனமாலைதனில் மயக்கும்கறுப்பா கொற்றவனே அடி அடி பிடி யென்றேறுது, வேனுன அங் ஆங் கென்றேயோது விரு ப்பமுடன்ஆவேஸ ஆவேஸயென்றும், பானுனஅகோரகறுப்பண்ணு வாவா பாலகனேசீக்கிரம் வாவாவென்னே. (௬௬௩)

சீக்கிரமாஞ்சிவாயநம வென்றேயோது சிறப்புடனேபிரணவத்தையுச்சரித்து, சாக்கிரதையாகவல்லோ கருப்பன்றன்னை தகமையுடன்வுச்சாடித் தடுமையாக, வாக்குதப்பாமலேயுருவுபோடு வளமுடனேமண்டலந்தான் லட்சம்போடு, நாக்கதுவும்பிசகாமல் நளினையாலா நயமுடனேவுச்சாடஞ் செய்வீர்காணே. (௯௯௪)

காணவென்றாலுச்சாட வசியத்தாலே கருவானகருப்பண்ணன்முன்னேநிற்பான், தோணவேபிரணவத்தாலஷ்டசித்தி தோற்றமலுந்தனுக்கு பலிக்கும்பாரு, பூணவேயஷ்டமா சித்தியோடும் புகழானதேவதைகளெல்லாஞ்சித்தி, நீணவேசின்மயத்தி லிருந்துகொண்டு நிஷ்களங்கமாகவல்லோ வோதுவீரே. (௯௯௫)

சத்துருமாரணம்.

ஓதவென்றால்புலிப்பாணி மைந்தாகேளு வுத்தமனேசத்துருமாரணந்தான்சொல்லுவன், நீதமுடன்சத்துருவின் பிரணவத்தை நிகட்சியுடன்யாரறிவார் வுலகில்மாணபர், தோதமுடன்கருவாளி காண்பான்பாரு தொல்லுலகில்மற்றவருக் ...ணமாட்டார், நாதமென்றமனேன்மணியாள் கிருபையாலே நாதாந்தசித்தொளிவுங் காண்பான்பாரே. ( )

பாரேதான்யெதிராளி சத்துருதன்னை பாங்குடனேமாரணந்தாற்கொல்லுதற்கு, நேரேதான்பிரதமைபோல் பாவுசெய்து நேர்த்தானமண்பாத்திரந் தனிலமைத்து, சீரேதானதிமையம் வுத்திதன்னில் சிறப்பானவராகமென்ற முள்ளைப்பா, வீரேதான்நடுமையந்தனிலமைத்து விருப்பமுடன்வசியதனையே நாட்டிடாயே. (௯௯௭)

நாட்டிவாய்காந்தமென்ற வூசிதன்னை நலம்பெறவேமுப்பத்திரெண்டுவூசி நேட்டமுடன்கால்பத்து கரங்கள்பத்து நெடுதானவூசிதனையே நாட்டிடாய்நீ, வட்டமுடன்யிருவிலா நெஞ்சுதன்னில் வளமானகீலெட்டும் வசிகன்நாட்டி, ...ட்டமுடன்பஞ்சகருகனையெடுத்து தெளிவுடனே பாவுதனில் தூவிட..... (௯௯௮)

தூவிடவேகருவினது மார்க்கங்கேளாய் துளற்றசாலியனார் மண்ணுங்கூட்டி, ஆவியெனும்மாளிடத்தின் மசானச்சாம்பல் லப்பனேயெதிராளி பாதத்தூளும், காவிதனேர்கையழுக்கும் மலத்திலுப்பும் நலம்பெறவேதாமெடுக்கப் பஞ்சகோசம், பாவியெனுஞ்சண்டாளப் பதுமைக்கப்பா பாங்குடனேஐங்காயந் தானுஞ்சேரே. (௯௯௯)

சேர்த்துமேலலாடமதி லிட்டுமைந்தா செம்மலுடன்அம்மென்று கும்பித்தல்லோ, ஆர்த்துமேபிரணவத்தை யுச்சாடித்து 'வன்புடனே லட்சமது வுருவுபோடு, கோர்த்துமேவுருவதனை லெல்லாஞ்சித்தி கொ

த்தவனேசின்மயத்தி லிருந்துகொண்டு, பார்த்துமேகவகோண பீடந் தன்னில் பக்குவமாய்சொரூபமிலே நின்றிடாயே. (கூஎ0)

திரிசூலி மந்திரோச்சாடணம்

என்னவேதிரிசூலிபிரணவத்தை யெழிலானசத்துருவின் பாவுக் கல்லோ, சொன்னபடிமந்திரமாம் வட்சரத்தை தோமுமல்தானுரைத் து வுருவுபோடு, நன்னயமாய்வுருவதுவும் யேதென்றக்கால் நலமாக ஹரிஹரி யென்றேயோது, குன்றான அரனொளி சக்கரத்தை கொற்றவ னேசொரூபமதில் நின்றுவோதே. (கூஎக)

ஓதவே திரு திரு யென்றேயோது ஒளிவானசக்கரத்தைப் பின் னுமோது, நீதமுடன் நிருபுரையின் புவனேவாலை நிலையான ஓம் பத்தி ர காளிவாவா, தோதமுடன்சத்துருசம் ஹாரிவாவா தோமுமல் ஓம் ஓம் யென்றேயோது, ஆதமுடன்வுன்கையில்கபாலமேந்தி வப்பனேகண் டகோடாலியென்னே. (கூஎஉ)

கோடாலியென்றதொரு பீஜமோது கொற்றவனே யகோரமென்ற கோரவாவா, தாடாண்மைகொண்டதொ ... தண்ணை ... ள்ள புகைபுகை தனியேவாவா, பாடா...பெற்றஜல ஜலமேவா ... கான கும்பய கும்பய மென்றோது, ...ண்மை ஹண ... நீயே வாவா நிகட்சியுடன் தக தக யென்றேயோதே. (கூஎங)

என்றவுடன் பாஷய பாஷய வென்றேயோது யெழிலான அம் இம் குரோம் யென்றேயோது, வென்றிடவே லலி லலி லாங்கென்றோது வேதாந்தாந்தரமனது இருபையாலே, சென்றிடவே லிலி லிலி கிலி கிலி யென்றோது செயலான லுலு லுலு லூம்யென்றோது, தென்றி சையாற்பரிபாஷைதுறையாமற்றுன்செயலானவட்சரத்தையோதுவீரே

ஓதுவீர்வுயிரென்ற பிரணவந்தான் ஓகோகோநாதாக்கள் சொல் லமாட்டார், தீதுபுகலட்சரங்கள்கூறுமென்றுது நிரமுடன் மம மம வசங்கென்றோது, வாதுகூறி சிவ சிவயாமென்றேயோது மகத்தான குரு குரு வாவென்றோது, சூதுபுகழ் ஓம் கிலிம் கிலியுங்வாவா சுந்தரனே பகவதியே சுடரென்றோதே. (கூஎ௫)

சுடரான ஓங் குடனே பாஷாங்குசத்ரி சுத்தமுள்ள சூலி சூலி வாவா வாவா, தடமான சொரூபமதில் நக நக வென்றோது தாக்கான கலைவகுத்து தக தக வென்றோது, திடமுடனே எகுட எகுட வட்சர த்தை தீர்க்கமுடன்தலைசுழற்றி மாறுமாறு, சடமுடனே கும்பக கும் பக மென்றோது சாங்கமுடன்சுவாலாமென் றோதல்கூறே. (கூஎசு)

கூறவேசுசிசுவாலாம் யென்றேயோது குறிப்பானபிரணவத்தை தலைகீழாய்மாறு, மாறவேபிரதிசுவால மென்றேயோது மகத்தானதுக் கினிச் சுவாலாவென்று, ஆறவே நர திர யென்றேயோது வப்பனே கருவான பீஜமாகும் மீறவே கோமாங்கிஷ பக்ஷணியேவாவா மிக்கான பாஜிபந்து பந்தென்றோதே. (௲௭௭)

பந்தானபந்ததுவுங் குருபீஜமாகும் பாங்[illegible]கார வட்சரந்தான், சிந்தனையில்தானினைந்து மாறு மா[illegible]டாட்டே டாட்டே யென்றேயோது, தொந்தமுடன் ஐயுங் [illegible] விதற்கொவ்வாது சூதானவட்சரந்தான் அதர்வணமேயாகும், [illegible]ள்ளவட்சரங்க ளொவ்வொன்றுதாமும் பாலகனேயொன்றுக்கொன்றுயிருமாமே. ( )

உயிரானவெழுத்துக்கு வொவ்வொன்றுக்கும் வுத்தமனேபஞ்சபூத ஆவியுண்டு, மயிலானவட்சரந்தான் மாமாமாகி மகத்தான ராம் ராம் ரீம் மென்றோது, பயிலானவட்சரந்தான் ரூம் ரூம் மாகும் பாங்கான ஆக்குருஷா ஆக்குருஷா யாகும், ஓயிலான கிலீம் சௌவும் ஐயும் மாகும் வுத்தமனேபகவதி ஓம் மென்றேயோதே. (௲௭௯)

ஓம் யென்றவட்சரந்தான் சத்துருசங்காரம் ஓகோகோநாதாக்கள் மறைத்துவைத்தார், ஆம் மென்ற சத்துருவை மடி மடி யென்றோது வப்பனே மசி மசி நசி நசி யென்றோது, எம் யென்றவட்சரந்தான் படு படு சுவாஹா யெழிலானமித்துருவுக் கிதுபோலுண்டு, றீம் யென்ற சுடரானவட்சரந்தான் தீர்க்கமுடன்மித்துருவுக் குண்டேபாரே. ( )

உண்டானவட்சரத்தால்பகையாளிதம்மை வுத்தமனேரோகமதை விளக்கலாகும், கண்டாலும்விடுகார்கள் புத்திமான்கள் காசினியிலோரறிவா ரிந்தப்போக்கு, திண்டானசாத்திரங்கள் ரிஷிகள்தேவர் தீர்க்கமுடனின்னூல்போல் சொன்னாரில்லை, பண்டானபிரணவத்தால் பாரில்மாண்பர் பார்தனிலேமாளுவது திண்ணந்தானே. (௲௮௧)

மாரண்வித்தையால் மடிந்தவரை எழுப்புதல்.

தானானயின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் தன்மையுள்ளபுலிப்பாணி மைந்தாபாரு, கோனானமாரணத்தால் மடிந்தோர்தம்மை கொற்றவனேயெழுப்புதற்கு மார்க்கஞ்சொல்வேன், தேனானமனோன்மணியாள் பாதம்போற்றி செப்புவேன்மானுக்கள் பிழைக்கவென்று, பானானசாத்திரத்தின் வுயிரெழுத்தை பாருலகில்பாடுகிறேன் பண்பாய்த்தானே. (௲௮௨)

பண்பான அகாவணத்தால் மடிந்தார் தம்மை பாலகனை விதிப்படியே கொண்டுவந்து, நண்பான மசானமென்ற கனா போபா நாயகனே சடங்கதுபோல் சவத்தைத் தானும், திண்மையுடன் காளிநுதற்றி காவலோடும் திரமுடனகாளியின் றன் வசியத்தாலே, உண்மையாய பிரணவத்தை யுச்சாடிக்க வுத்தமனே வுயிராவும் வருகுமபாரே. (௬௮௩)

பாரென்றுல்பிரணவங்களே தினமுக்கால் பாகானஹரிஓம் ஓம் இலியும் சௌவும், நேரேதான் அம மம் இமமெனறேயோது நெசதாணகுரபகத்தினட் சரந்தான், சிரேதான் ரிய லிங வைங கென்றேயோது சிறப்பான ரீங் ரீங் ரீங ராமெனறேது நேரதான் யௌவும் சௌவும ஸ்ரீம் மென்றோது தீரகமுடன் பிரணவத்தை யோதுவாயே (௬௮௪)

ஓகமேவ ருமருமறூமமெனறோது வுகதமனே லௌவுடனே வௌவென்றோது, சேகமுடனே ஹ்ரௌவுடனே பௌவென்றோது நிலையானலாடகவி பிரணவங்கள். சாதகமாய்க் கூடலகாதுதான் மசானகாத தானசாங்கமுடன் குரூரா விருகாவீரி ஆகமுடனமசானந்தினை யெல லைககாரி அங்கிகாரிவரிசசந்திர பகவானகாமணை. (௬௮௫)

காணவே வாபக்கிரிசை குடையதேவா சுந்தவானருதரமாகா காளிவசியா, பூணவே செப்பூசி நாட்டுமடாலா புரு பானவுந்தியென்ற வூசிநீதா வேணவே விருட்சமென்ற வடமூலந்தான் மிகாகாளாவோமிங்கி வசியதேவா, ஆணவக் கேலமிகுந்ததொரு அகோரதீரா வப்பபோசோடசகை குடையோன்றனே. (௬௮௬)

சோடசமாமபதினையு ஈராறுமிபறறு குலமுடன்னகைபந்துமடாகினிவாவா, பாடமுடன் மசானதுறை வாவாவாவா பாரிதமிபதிலை பகவதிவாவாவா ஆடலுடன் சதாரவாத்தியகோ குமலேடானலாஅகோரவீரகாளிவாவா, கூடலுடன் தெங்கூடபதியமாகது கோடாலிபுரபலி கொள்ளுந்தேவே (௬௮௭)

கொள்ளவே துலிதுங்கி மாறெஜநசம கொதித்தொருமயதிராளி சத்துருமாரி, துளாமேவே பதர்வணத்தைத் கலைசிமாக்கி துபபுரவாய்மூதியோடுமாலைபூண்டு, விள்ளவே வுயஙகரிசி துளாசிவிழ விஷங்குடிதத வாயாலே பமூர்தங்கொள்ளு, உள்ளபடியமூாதுரசங் கொள வாயப்பா வுத்தமனே பானவுயிர வாவென்றோதே. (௬௮௮)

ஓதவேதலேமாடு கால்மாடாக்கி வுத்தமனேசபந்தனேயே பிரட்டு வாய்நீ, சாதகமாய்சடாட்சர பவனேவாவா சட்டமுடன்போனவுயிர் திரும்பிவாவா, வேதனைகள்நீங்கியல்லோ விருட்டிப்பார்த்து வேகமுட னதர்வணந்தா னில்லேயில்லே, தூதனேயுங்காலனேயுஞ் ஜெயித்தேதினெ ன்று துப்புரவாய்லட்சமுரு போடுபோடே. (கூ௮௯)

போடப்பாகாதாந்த வுள்ளெழுத்தை பொங்கமுடன்லட்சமுரு போடுபோடு, ஆடப்பாமசானகரை நின்றுகொண்டு வப்பனேவாசல்வ ழி தடைகள்கட்டி, நீடப்பாவரிச்சந்திரன் காவல்முன்னே நிட்சயமாய் அதர்வணத்தால் சிக்கினேனே, பாடப்பாமசானகரை விட்டுவிட்டு பார் மீதுஓடிவிடு ஓடென்றேதே. (கூ௯௰)

ஓடென்றவுச்சாடம் கூறும்போது வுத்தமனேயதர்வணமும் நீங் கியல்லோ, நீடென்றுவஸ்துசுத்தி பாணஞ்செய்து நிலேயுடனேபாலயிர் தம் வாயிலிட்டு, கூடென்றுவசிமூலிவாயிற்கொண்டு கொற்றவனேசெ விதனிலே யூதும்போது, மேடென்றுவையகத்தில் கண்திறந்து மே தினியினுயிரதுவும் வருகும்பாரே. (கூ௯௧)

பாரேதான்சித்துமுனி ரிஷிகள்தாமும் பாருலகிலதர்வணத்தை ம றைத்துவைத்தார், ஆரோதான்சொன்னவர்க ளாறுமில்லே வப்பனே யாமுமக்குச் சொன்னேம்பாரு, நேரோதான்காலாங்கி நாதர்தாமும் நே ர்மையுடனெந்தனுக்கு வுரைத்தநீதி, பேரோதான்சொல்வதற்கு யாரு மில்லே போரானபோகரிஷி யுரைததேன்பாரே. (கூ௯௨)

உரைத்தேனேயேழாயிர சத்தகாண்டம் வுற்பனமும்விற்பனமு மெத்தவுண்டு, நிரைத்தேனேயாறுவது காண்டத்துள்ளே நேர்மையுட னதர்வணத்தைக் கூறினேன்யான், விரைத்ததொருபொருளெல்லா மி திலடக்கம் விருப்பமுடன்பாடிவைத்தார் சத்தகாண்டம், குரைத்ததொ ருபொருளெல்லா மெந்தனையர் குருமுனியாமகஸ்தியரிற் காணலாமே.

காணலாமகஸ்தியனார் காவியத்தில் கருவானபன்னீரா யிரத்திலப் பா, பூணலாம்பனிரெண்டுகாண்டத்துள்ளே புகட்டினோர்கோடிவகை க் களஞ்சியங்கள், கோணவேயண்டசரா சரங்களெல்லாந் துறட்டியெ ன்றகுறடதுபோல் கூறினோர்காண், வேணபடி குருநூலாம் பன்னீராயி ரம் விருப்பமுடன்பாடிவைத்தார் முனிவர்தாமே. (கூ௯௪)

மூலியானவென்பாட்டன் அகஸ்தியர்தாமும் முனையானகாலாங்கி நாதர்தாமும், சுனைபோலேசாத்திரங்க ளனக்குரைத்தார் தோற்றமுடன்பிரகாச மானசித்து, மனைதோறும்சாத்திர வேதாகமங்கள் மார்க்கமுடன்பாடிவைத்தார் பலநூல்சித்தர், வினையாலேமாண்டதொருமாண்பருக்கு விரிவான அதர்வணங்கள் சொல்லார்காணே. (௬௯௫)

பதினெண்சித்தர்கள் ஜாதியும் தலைமுறைமையும் கூறல்.

தானானபுலிப்பாணி மைந்தாகேளு தகமையுள்ளகாலாங்கி சொன்னநீதி, கோனானபதினெண்பேர் சித்தர்தாமும் கொற்றவனேநவகோடி சித்தர்தாமும், பானானாற்பத்தெண் பேர்களப்பா பலபலவாஞ்சாத்திரங்கள் பாடிவைத்தார், மானானதலைமுறைகள் ஜாதிமார்க்கம் மன்னவனேசாத்திரத்திற் சொல்லாரன்றே. (௬௯௬)

சொல்லவில்லைசிலபேர்கள் சொன்னாரப்பா சுந்தரனேசிலபேர்கள் மறைத்துவைத்தார், வெல்லவேகாலாங்கி நாதர்தாமும் வேகமுடன்குளிகையது கொண்டுமல்லோ, கல்லானமலைகளிலுங் குகைகள்தன்னில் கண்டுமேஆராய்ந்து சித்துதம்மை, புல்லவேஜாதிபேத தங்கள்ரெண்டு புகழானசாத்திரத்தில் வசனித்தாரே. (௬௯௭)

வசனித்தாரெந்தமக்குக்காலாங்கிநாதர்வளமுடனேசொன்னதொரு ஜாதிமார்க்கம், நிசமுடனேயானுரைப்பேன் நீதவானே நிஷ்களங்கமானதொரு பேதஞ்சொல்வேன், தசமானகாலாங்கி நாதர்தாமும் தாக்கானமயன்ஜாதி யென்னலாகும், கசடன்றுதலைமுறைகள் பத்தேயாகும் காசினியில்கண்டவரை யுரைத்திட்டோமே. (௬௯௮)

உரைத்தோமேயெந்தனிட ஜாதிமார்க்கம் வுத்தமனேவிஸ்வகர்மனென்னலாகும், நிரைத்ததொருரோமரிஷி ஜாதிபேதம் நிலையானவலைவீசுஞ் ஜாதியப்பா, திரைத்ததொருஎந்தனது தலைமுறைதானப்பா திரளானபதினெட்டுத் தலைமுறையேயாகும், வரைத்ததொருரோமரிஷி தலைமுறைதானப்பா வரகானபனிரெண்டு தலைமுறைதானுமே. (௬௯௯)

தலைமுறையாமச்சமுனி ஜாதிபேதம் தண்மையுள்ளகல்லானையென்னலாகும், கலையானகோத்திரங்கள்யிருபத்திரெண்டு காசினியில்கண்டவரை சொல்லலாச்சு, மலையானசட்டமுனி ஜாதிபேதம் மகத்தானசிங்களவனென்னலாகும், சிலையானகோத்திரங்கள் பதினாலாகும் சிற்பரனேகண்டநூலறிந்தமட்டே. (௭௱)

மட்டான வயிடைக்காடர் ஜாதிபேதம் மகத்தான கோனேரே யென்னலாகும், திட்டமுள்ள கோத்திரங்கள் பதினெட்டாகும் திகழான நூலதனிற் கண்டமட்டும், சட்டமுடன் தன்வந்திரி ஜாதிபேதம் தகமையுள்ள மகாவிஷ்ணு வென்னலாகும், வட்டமுள்ள தலைமுறைகள் முப்பத்திரெண்டு வளமுடனே கண்டறிந்த நூல்தாமே. (௭௱௧)

காமான கம்பளி மைந்தாகேளு தகமையுள்ள மூலத்தி யீசனப்பா, சாமானிய மனுமைந்தரு ஜாதிபேதம் சாங்கமுடன் வேளாள னென்னலாகும், கோமானுக்கு தலைமுறைகள் யிருபத்தேழாம் கொற்றவனே நூற்படியே சொல்லலாச்சு, பூமான்கள் சித்தர்க்கு நூல்கள்தன்னில் புகட்டவில்லை ஜாதிபேதம் புகலார்தாமே. (௭௱௨)

தானான சிலநூலிற் சொன்னாரப்பா தன்மையுள்ள சிலநூலிற் சொல்லவில்லை, கோனான வகத்தியர் ஜாதிபேதம் கொற்றவனே வேளாள னென்னலாகும். பானான தலைமுறைகள் மேலுங்கேளாய் பதமுடனே நாற்பத்தியெட்டேயாகும், மானான நூல்தனிலே கண்டாற்போல மகத்தானபோகரிஷி வகுத்திட்டேனே. (௭௱௩)

வகுத்ததொரு சிவவாக்கியர் ஜாதிபேதம் வளமான சங்கரகுல மென்னலாகும், தொகுப்புடனே தலைமுறைகள் யிருபதாகும் தொன்மைச் சாத்திரங்கள் புகன்றவாறும், மிகுத்திட்டே வாமதேவர் ஜாதிபேதம் மிக்கான விஷ்ணுகுல மென்னலாகும், பகுத்திட்டே தலைமுறைகளாறதாகும் பாங்கானவவர் நூலிற் கண்டோமாமே. (௭௱௪)

கண்டோமே புஜண்டரிட ஜாதிபேதம் கருவான வக்கினிகுல மென்னலாகும், விண்டதொரு தலைமுறைகள் நாற்பத்தைந்து விரானசாத்திரத்தில் கண்டதுண்டு, பண்டிதமாம் வன்னியரின் புராணக்கூறு பலபல வாய்ப்பாடிவைத்தார் கவிவாணர்தாமும், கண்டகம்போல் சாத்திரங்கள் மிகவுங்கூறி தாமறைத்தார் சித்தமுனி ரிஷிகள்தாமே. (௭௱௫)

தானான கருவூரார் ஜாதிபேதம் தாக்கான பஞ்சணத்தில் குலத்திலொன்று, கோனான கன்னார ஜாதியாகும் கொற்றவனே நூல்தனிலே கண்டவாறு, தேனான தலைமுறைகள் நாற்பத்திரெண்டு தெளிவுடனே நூல்தனிலே சொன்னார்பாரு, மானான மார்க்கமது சமயபேதம் மார்க்கமுடனவரவர் நூலறியலாமே. (௭௱௬)

ஆதிபவ புண்ணாக்கீசர்தாமும் அவருடைய ஜாதிபேதங்கள் சொல்வேன், நெறியான கன்னடிய ஜாதியாகும் நேர்பான தலைமுறைக

௰௫

ளேதென்றக்கால், குறியானபதினெட்டுத் தலைமுறைதானாகும் குறிப் பானசாத்திரத்திற் சொன்னவாறு, முறியானசித்தர்மகா ரிஷிகள் நூலி ல் முறைபாடுசிலபேர்கள் சொல்லாரன்றே. (எ௱எ)

சொல்லாரேபுலிப்பாணி மைந்தாகேளு சுத்தமுள்ளகண்மணியே புகல்வேன்பாரு, வல்லானபுலிப்பாணி மரபேதந்தாம் மார்க்கமுடன் வேடனது ஜாதியல்லோ, புல்லானதலைமுறைக ளொன்பதாகும் புகழா னநூல்தனிலே புகலுமவாறு, நல்லானரிஷிதேவர் முனிவர்தானும் நல முடனேசிலருரைத்து சிலர்மறைத்தாரே. (எ௱அ)

மறைவானசங்கீசர் மறைபேதென்றால் மார்க்கமுடன்மிருகமகா ரிஷியார்கோத்திரம், குறையானதலைமுறைக ளேதென்றக்கால் கொற் றவனேமூன்றுதலை முறைதானாகும்; நிறையானசாத்திரத்திற் சொன்ன வாறு நிஷ்களங்கமாகவல்லோ கண்டறிந்தோம், முறையானமுனிதே வர் ரிஷிகள்நூலில் முற்றிலுஞ்சொல்லார்கள் மறைத்தாரேணே. ()

காணவேயின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் கருவானபுலஸ்திய ரின் மரபேதென்றால், தோணவேசிங்களவ ஜாதியாகும் தோறுமல் தலைமுறைக ளெட்டதாகும், பூணவேபுலஸ்தியரின் நூல்கள்தன்னில் புகலாமல்மறைத்துவைத்தார் முன்னோர்தாமும், வேணபடியான்கண்ட வரைதானப்பா வித்தகனேவெளியிட்டேன் பண்பாய்ப்பாரே (எ௱௰)

பாரேதானின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் பாலகனேபுலிப் பாணி மைந்தாகேளு, நேரேதான்வியாசருட மரபேதென்றால் நேர் பானசந்திரகுலஜாதியாகும், சீரேதான்தலைமுறைக ளொன்பதாகும் சிற ப்பானபுராணவகை கூறும்வாறு, ஆரோதான்சாத்திரங்க ளறியாமற் றன் வப்பனைகட்டிவைத்தார் கோடியாமே. (எ௱௰௧)

கோடியாந்தேறையர் மரபேதென்றால் கொற்றவனேயானுரைப் பேன் கண்டமட்டும், நீடியேபிரம்மகுல மென்னலாகும் நெடிதானகாப் பியங்கள் கூறும்வண்ணம், ஆடியதோர்தலைமுறைக ளேதென்றக்கால் வப்பனேநவதசமு மென்னலாகும், பாடியதோர்ரிஷிதேவர் முனிவர்தா மும் பண்பாகத்தாமுரைத்தார் பான்மைதானே. (எ௱௰௨)

பான்மையாம்பாக்கோபு மரபேதென்றால் பாங்கானகுலம்விட்டு குலம்புகுந்தோர், மேன்மையாம்முன்சொன்ன ராமதேவர் மெய்யா னகுலமென்றேசெப்பலாகும், தேன்மாரிபொழிகின்ற மக்கதேசம் செ ன்றல்லோபெயர்மாறி வுருவுகொண்டோர், வான்மீதுவழுந்துதிபோ லுதிக்குந்திரன் மகத்தானராமதேவ ரென்னலாமே. (எ௱௰௩)

என்னவேராமதேவரென்னலாகும் யெழிலானதலைமுறைகள் பதி
னாறாகும், மின்னவேனாமமது ரெண்டேயாகும் மிக்கானசாத்திரங்கள்
சொன்னவாறு, உன்னிதமாய்ப்பலமுனிவர் சித்துதாமும் வுத்தமனே
தாமுரைத்தார் மறைப்போமெத்த, நன்னயமாய்ப்பலநூலுங் கண்டா
ராய்ந்து நலமுடனேஜாதிபேதம் வுரைத்தேன்பாரே. (௭௱௰௪)

பாரப்பாகொங்கணரின் மரபேதென்றால் பாங்கானயாதவ குல
மேயாகும், ஆரப்பாதலைமுறைக ளென்னசொல்வேன் வப்பனேயிரெட்
டுப் பதினாறாகும், நேரப்பாவவர்சொன்ன காண்டந்தன்னில் நேர்மையு
டன்மரபதுவுந் சொல்லவில்லை, ஊரப்பாபலபேருங் கூடியல்லோ
வுத்தமனேதாமுரைத்தார் ஜாதிதானே. (௭௱௰௫)

ஜாதியாமின்னமொரு மார்க்கங்கேளு தயவானபுலிப்பாணி மைந்
தாபாரு, ஆதியாம்தட்சணா மூர்த்தியப்பா வப்பனேயவர்மரபு யேதெ
ன்றக்கால், நீதியாங்கவுண்டனென்ற மரபேயாகும் நிஷ்களங்கமான
தொரு மூர்த்தியென்பார், சோதிடமாம்பலநூல்க ளாராய்ந்தேதான்
சொன்னதொருமொழியதுவு மெய்யதாமே. (௭௱௰௬)

மெய்யானதலைமுறைகள் பதிமூன்றாகும் மிக்கானசாத்திரத்தி லு
ரைத்தவாறு, துய்யமேகோரக்கர் மரபேதென்றால் துப்புரவாய்மரா
ட்டியனா ரென்னலாகும், பையவேதலைமுறைகள் பதினொன்றாகும் பா
ங்கானசாத்திரத்திற் சொன்னவாறு, வெய்யவேவேதமுனி சித்துதாமு
ம் வெகுநூல்களாராய்ந்து பார்த்தார்தானே. (௭௱௰௭)

தானனையின்னமொரு மார்க்கங்கேளு தயவானபுலிப்பாணி கண்
ணேயப்பா, கோனனெனபால ராஜரிக்கோர்வை கொற்றவனேபாடி
வைத்தா ருண்மையாக, பானவவர்மரபு யேதென்றக்கால் பாங்கான
பப்பரவர் மறையேயாகும், மானனாதலைமுறைக ளெட்டேயாகும் மக
த்தானபெருநூலில் சொன்னார்பாரே. (௭௱௰௮)

சொன்னாரே சோதிமா முனிவரப்பா துப்புரவாய்சூணியென்ற
கோர்வைசெய்தோர், தென்னனாதட்சணா பதியிலப்பா தேற்றமுடன்ம
லைதனிலே யிருக்குஞ்சித்து, பன்னவேமரபதுவு மேதென்றக்கால்
பாங்கானபள்ளனென்றே செப்பலாகும், உன்னிதமாய்த்தலைமுறைக ளா
றேயாகும் வுற்பனமாய்வோதிவைத்தார் நூலில்தாமே. (௭௱௰௯)

நூலானநூல்தனிலே சொன்னமார்க்கம் நுணுக்கமுடன்வெகுகோ
டி சொன்னாரப்பா, பாலானடமரகர் மரபேதென்றால் பாங்கானமறவ

றென்றே செப்பலாகும், தானானதலை முறைகள் நாலேயாகும் தாக்கான வர்நூலிற சொன்னவாறு, பாலானமொழிபோலே முனிவர்தாமும பாடிவைத்தார் பட்சமுடன் பாரிலதானே (௭௨௰)

பாரினிலேயின்னமொரு மார்க்கங்கேளு பாலானபுலிப்பாணி மைந்தாகேளு, சீலகுஞ்சுடகரனு ஞானத்தமுமம மகாலை ரூபமு மே தென்றுபகால், ஆரியனார்தாமுறை அகமுடையரென்னலாகும, சூரியன்போல சொல்லுதற்குகாவில்லைப பாவிலலேதானே. (௭௨௧)

பாவில்லைபுலிப்பாணி யின்னமகேளு ரிஷியாஞ்சாதிபேதம, ஆவியுடனபூமிதனில் நந்தசித்து வாரதிலுல் பிறநதசித்து, காவிலயமகொண்டதொரு கனகராஜா கருணைஜாதியென் றே செப்பலாகும, நாவிலேசொல்லவொருயாராலாகும நலமானதலை முறைகள நாறபத்தெட்டே. (௭௨௨)

எட்டானவாலமீகா மாபெகென்றல பொழிலானவேடருட ஜாதியாகும, திட்டானதலைமுறைகள சொலலவேபாரீர திரக்கமுடன்றப பதிரெண்டேயாகும, சட்டமுடனவாலமீகா காவியத்தில சாஙகமுடனெழுதிவைத்த படிசாணம, சட்ட முடனவாலமீகா நூலறிந்து வள முடனேகண்டறிந்து சொன்னதாமே. (௭௨௩)

சொன்னேனேயின்னமொருமார்க்கம்பாரு தூய்கானபுலிப்பாணி மைந்தாகேளு நன்னயமாயவூவசியாள் சாத்திரத்தில நலமாகத்தானுரைத்த ஜாதிபேதம, உன்னிதமாய்த்தலைதா மடநதையென்று வுத்தமாகன்சித்தாமுனி கூறுமவண்ண பன்னியதலைமுறைகள் பருகமொன்றுது பாலகனே அடிமையென்ற ஜாதியாமே. (௭௨௪)

ஜாதியாமின்னமொருமா க்கங்கேள் யாகமுடனயானுரைப்பேனைமைந்தாபாரு, ஆதியாங்கமல முனி யென்றறிந்து வன்பானகுறவரிட ஜாதியாகும, நீதியாங்கலைமுறைகளாமெற்றாகும நிஷ்களங்கமாகவலலோ சாததிரத்தில், பாதிமதிசடையணிந்த தம்பிரானும பாடிவைத்த நூல்தனிலே காணலாமே (௭௨௫)

காணவேமகாசித்து அறிவானந்தா கைலாசநாதரென்றே செப்பலாகும, தோணவேவளளுவனா ஜாதியாகும் தோறுமலவர்செய்த நூலிறகாணபீர, வேணவேதலைமுறைக ளொன்பதாகும வெகுநாளாய்மலைதனிலே யிருநதசித்து, ஆணவங்கள்தானெருங்கி யிருந்தசித்து வப்பனே அறிவானந்த சித்துதாமே (௭௨௬)

சித்தானசித்தமுனி சொல்வேன்கேளீர் சிறப்பானதகப்பேயர் சித்தையாகும். முத்தானஜாதியது யேதென்றக்கால் முனையானநாயனார் ஜாதியாகும, சத்தமுள்ளதலைமுறைகள் யீரெட்டாகும் சார்பாகவவர் நூலிற் காணலாகும் நித்தமுமேவாணிபங்கள் விர்த்திசெய்து நிலையாகபூமிதனி லிருந்தசித்தே. (௭௱௭)

சித்தென்றல்சித்துயிதுயென்னசொல்வேன் சீர்பாலாபுலிப்பாணி மைந்தாகேளு, புத்தியுள்ளபூபாலர் புனிதவானே பூவுலகிலிருந்தெதாரு குதம்பைசித்து, பத்தியுடன்பெண்ரூபங் கொண்டசித்து பாருலகில்வெகுநாளா யிருந்தார்தாமும், சுத்தியுடன்தேவதா பூஜையாமே சுந்தரனேவெகுகால மிருந்தார்தானே. (௭௱௮)

தானானவவர்மரபு யேதென்றக்கால் தாக்காணகோணரின் ஜாதியாகும், கோனானையிடையரென்றே சொல்லலாகும் கொற்றவனேயவர் நூலிற் சொன்னநீதி, மானானதலைமுறைக ளேதென்றக்கால் மகத்தானபத்தொண் டொன்றுமூன்று, தேனானமனோன்மணியாள் கடாட்சத்தாலே தெளிவாகக்கண்டறிந்தேன் பலநூல்தானே. (௭௱௯)

நூலானபலநூலுங் கண்டாராய்ந்து நுட்பமுடன்தானுரைத்த வண்மைநீதி, பாலானபாம்பாட்டி மரபேதென்றால் பாலகனேஜோகியென்ற ஜாதியாகும், கோலானமாதவத்தார் குலத்தினாலே கொற்றவனேசமாதியது பிரவேசமாகி மேலானவையகத்தில் சிலதுகாலம் சிறப்புடனேசமாதிவிட்டு வசித்தீரே. (௭௱௰)

வசிதகொருசித்துக்கு முறைமைசொல்வேன் வளமுடனேசோடசமா மொன்றுமூன்று, சிந்தனையாயவர் நூலிற் கண்டாராய்ந்து சீருடனேயாமுரைத்தேன் மொழிதப்பாது, சுந்தரனேகாலகண்டர் முனிவர்தாமும் சுத்தமுடனவர்மரபு யேதென்றக்கால், தந்திரமாங்கள்ளருட ஜாதியாகும் தாரணியிலவர் நூலிற் கண்டவாறே. (௭௱௰௧)

வாறானதலைமுறைக ளொன்றுபத்து வளமையுடனவர் நூலிற்சொல்லலாகும் நூறாண்டுவெகுகால மிருந்தசித்து நுட்பமுடன்சிஷவர்க்கங் கொண்டசித்து, காறானயின்னமொருமார்க்கங்கேளு கருவானபுலிப்பாணி மைந்தாகேளு, ஆறானசுப்பிரமணியர் மரபேதென்றால் வப்பனேசைவமென்ற பேடமாமே. (௭௱௰௨)

பீடமாக்தலைமுறைக ளேதென்றக்கால் போனதூற்றிரண்டுபத்தமூன்று, கீடாதிநூல்களிலே கண்டவாறு கிருபையுடன்நானறிந்த மட்டுஞ்சொன்னோம் நீடனயூகிமுனி மாபேதென்றால் நிசமானகுரும்பருட ஜாதியாகும், தாடானதலைமுறைக ளெல்லாஞ்சொல்வேன் தாக்கானபதினெட்டு வொன்றுமூன்றே. (எகூக)

ஒன்றானஜாதியப்பா யின்னஞ்சொல்வேன் வுத்தமனைபுலிப்பாணி வுகந்துகேளு, நன்றான ஜமதக்கினி ஜாதிபேதம் நலமானசைனமென்ற ஜாதியாகும் குன்றானமலையேறி கிரணங்கண்டே கிருபையுடன்கண்டல்லோ சாதமுண்பார், வென்றிடவே தலைமுறைகள் பக்குபத்து வேகமுடனவர்நூலில் [illegible] (எகூச)

பாரேதானி[illegible] [illegible]ரணுக்கியமுனிவர்தானும், [illegible] ஜாதி [illegible] தானபிரபுலிங்கனிலே தூலார், நே[illegible] [illegible]ஜாதிபேதம் நேர்மையுடன்கண்டறிந்த ஜாதிமார்க்கம், [illegible]தலைமுறைக ளிரெட்டொன்று வித்தகனே நூல்தனிலே கண்டாம்பாரே. (எகூ௩)

பாரேதான்சண்டேசர் ஜாதிமார்க்கம் பாங்கானவன்னுவனு மென்றேயாகும், நேரேதான்தலைமுறைக ளொன்றுபத்து நேர்மையுடனவர்நூலிற் சொன்னநீதி, சீரேதான்சித்தர்முனி ரிஷிகள்தேவர் சிறப்புடனேபாடிவைத்த நூலைக்கண்டு, [illegible] வைவர்பிரித்து வகுத்துயானும் பேரின்பாடிலே நின்று பாடினேனே (எகூரு)

பாடினேனின்னமின்னம் [illegible] [illegible]புலிப்பாணி மைந்தபாரு, [illegible] [illegible] [illegible] ஜாதியதுமாபேதென்றால், கேடி[illegible] ஜாதியாகும் [illegible] கூட்டமெத்தவுண்டு சொல்லொணா [illegible] தலைமுறைக [illegible]கென்றக்கால் வப்பனேரெண்பத்து [illegible]. (எகூஎ)

ஒன்றானசாத்திரத்[illegible] [illegible]பலநூலுங்கண்டுதேர்ந்து, சென்று[illegible] [illegible] சிறப்பானசாத்திரகுறி தொகுப்பைக்கண்டு [illegible] தாள்பணிந்து, வேகமுடன்குளிகையது பூண்டுகொண்டு, குன்றானமலைகுகைகள் யானுங்கண்டு கொற்றவனேகாவியத்தான் கூறினேனே. (எகூஅ)

கூறினேன்காவியந்தா னேழாயிரமாகும் கூறானசத்தகாண்டம் போலேநூல்கள், மீறியதோர்நூலுண்டோ வையகத்தில் மிக்கானநூலிதுபோ லார்தான்சொன்னார், மாறுபாடாகவல்லோ சாத்திரநூல்கள் மகத்தானசித்துமுனி சொன்னாரப்பா. ஆறுதலம்போலாக யிந்தநூல்தான் வப்பனேயுந்தனுக்கு வறைந்திட்டேனே. (௭௩௯)

போகர் சித்தர்கள்வயதும் சமாதிமார்க்கமுங் கூறல்.

அறைந்ததொருபின்னமொரு மார்க்கங்கேளு வப்பனேபுலிப்பாணி மைந்தாபாரு, நிறைந்ததொருசித்தர்முனி ரிஷிகளானோர் நீடாழியுலகுபதி யிருந்தவாறும். குறைந்ததொருவவரவர்கள் யதுமார்க்கம் கூறுகிறேன்வையகத்தில் கண்டாராய்ந்து. மறைந்ததொருசமாதியின் றன்மார்க்கமெல்லாம் மன்னவனேயுந்தனுக்கு நிகழ்த்துவேனே. ()

நிகழ்த்துவேன்காலாங்கி நாதர்தம்மை நெடுங்காலசெய்தியெல்லாம் நிகழ்த்துவேன்பார், புகழானகாலாங்கி நாதர்தாமும் புண்ணியனார் வெகுகால மிருந்தசித்து, அகத்தனிலேமூன்றுயுகஞ் சமாதிசென்று வப்பனேமுயற்சியுடன் வந்தசித்து, பூசெகந்தனிலேசீனபதி தேசந்தன்னில் சிறப்புடனேகுளிகைகொண்டு போனசித்தே, (௭௪௧)

சித்தானகாலாங்கி முனிவர்தானும் சிறப்புடனேசீனபதி தன்னிற்சென்று, முத்தானகாலநாத னருளும்பெற்று முனையானசமாதிதனி லிறங்கியல்லோ, சத்தமுடனசரீரி வாக்கினாலும் தாரணியில்சமாதிமுக மிருந்துகொண்டு, பத்தியுடன்சீனபதி மாண்பருக்கு பலகாலுந்தரிசனைகள் புரிகுவாரே, (௭௪௨)

புரிகுவார்வயதினுட மார்க்கந்தன்னை புகலுவேன்காலாங்கி நாதருக்கு, சரியுடனேமூவாயிரஞ் சொச்சமப்பா சாங்கமுடன்வயததுதானென்னலாகும், குறியானவருஷம் மூவாயிரந்தான் குறிப்புடனேயவர்நூலிற் சொன்னநீதி, நெறியுடனேவையகத்தி லிருந்துமல்லோ நேர்மையுடன்சமாதிமுகஞ் சென்றார்தானே. (௭௪௩)

தானானபோகரிஷி மார்க்கஞ்சொல்வேன் தயவானபுலிப்பாணிமைந்தாகேளு, கோனானவெனதையர் காலாங்கிநாதர் குறிப்புடனேயெந்தனுக்குச் சொன்னநீதி, பானானவயததுவும் முன்னூறென்று பான்மையுடனெந்தனுக்கு வுபதேசித்தார், தேனானகுளிகையது பூண்டுகொண்டு தேசமெல்லாஞ்சுற்றிவந்தேன் காலந்தானே. (௭௪௪)

காலமாம்வெகுகால மடியேன்றனும் காலாங்கிநாதருட கிருபை யாலும், கோலமுடன்திருக்கமலம்வீற்றிருக்கும் கொம்பனையாள்மனோ ன்மணியாள் கிருபையாலே, ஆலகாலமுண்டதொரு அரன்பாகத்தால் வப்பனேவையகத்தில் யானுமல்லோ, காலமெலாஞ்சுற்றிவந்து யடியே ன்றனும் தாரணியில்சித்துமுனி ரிஷிகண்டேனே. (எ௬௫)

கண்டேனேவெகுகோடி சித்துதம்மை காலாங்கிநாதருட கிருபை யாலே, கொண்டதொருவையகத்து வதிசயங்கள் கொற்றவனேயடியே னுந் தானறிந்து, உண்டானவுளவுபடி மார்க்கமெல்லாம் வுத்தமனே கண்டல்லோ மிகவாராய்ந்து, பண்டிதங்கள்மிகப்பார்த்து பலநூல்சே தி பாங்குடனேசினபதிக் குரைத்திட்டேனே. (எ௬௬)

உரைத்தேனேசினபதிமாண்பருக்கு வுத்தமனேலோகவதி சயங்க ளெல்லாம், வரைந்தேனேசினபதிப் பெண்களுக்கு வகுப்பானசித்துமு னி ரிஷிகள்மார்க்கம், திரைகடல்சூழஷ்டாங்க லோகமெல்லாம் திறட் டினேன்போகரே யாயிரந்தான், புரையொன்றும்நேராமல் புகழ்ந்தநூ லாய் புகட்டினேன்சினபதி மாண்பருக்கே. (எ௬எ)

மாண்பானபுலிப்பாணி மைந்தாகேளு மகத்தானவையகத்தில் மு ன்னூறாண்டு, ஆண்மையுடனிருந்தே னதிசயங்கள் வப்பனேயான் கண்ட வாறுமட்டும், வீண்போகாக்காலமது சாத்திரத்தின் வீறானவு ளவுதானங்கள்கண்டு, தாண்மையுடன்யானுரைப்பேன் யிதிகாசங்கள் சட்டமுடன்சொல்லுகிறேன் பண்பாய்க்கேளே. (எ௬அ)

கேளேதான்ரோமரிஷி வயதுமார்க்கம் கெவனமுடன்சொல்லுகு றேன் பண்பாய்க்கேளு, நாளேதான்போகாமல்ரோமர்தானும் நலமுட னேசமாதிமுகஞ் சென்றுமல்லோ, ஆளேதான்வருஷமது வையகத்தில் வப்பனேதானிருந்து வெளியுமாகி, பாளேதான்போகாமல் வருஷமறு நூறு பாங்குடனேவீற்றிருந்த சித்துமாமே. (எ௬௯)

சித்தானமச்சமுனி வாறேதென்றால் சிறப்பான வையகத்தி லிருந் ததேதி, பத்தியுடன்முன்னூறு வாண்டுமட்டும் பகவானைத்துதிசெய்து காயங்கொண்டு, முத்தியுடன்சமாதிக்குச் சென்றுமல்லோ மூர்க்கமுட ன்மூவாண்டு சமாதிபூண்டு, சுத்தனையேதானினைந்து கைலைதன்னில் காசினியைவிட்டுமல்லோ யேகினாரே. (எ௭௦)

ஏகவேசட்டமுனிவரேதென்றால்யெழிலாகயெண்ணூறு வாண்டுமட்டும், போகவேசமாதிமுகம் மூன்றுமுறைதானும் பொங்கமுடன் பூமிதனி லிருந்துமல்லோ, சாகமுடன்வெகுகால மிருந்தசித்து சாங்கமுடன்சீஷவர்க்க முபதேசங்கள், ஆகமங்களோதியல்லோயிருந்தசித்து வப்பனேயோகமகாசித்துமாமே. (௭௫௧)

ஆமேதான்யின்னமொரு மார்க்கங்கேளு வப்பனேயிடைக்காடார் வாறுசொல்வேன், போமேதான்வெகுகால மிருந்தசித்து பொங்கமுடன்காயாதி கற்பங்கொண்டு, நேமமுடன்நிஷ்டையது பூண்டுகொண்டு நெடுங்காலம்தானுண்டு மிருந்தசித்து, வாமமுடன்தேவதா சாபத்தாலே வையகத்தில்பிறந்ததொரு சித்துவாச்சே. (௭௫௨)

ஆச்சப்பாதன்வந்திரி வயதுமார்க்கம் வப்பனேசொல்லுகிறேன் மன்னுகேளு பாச்சலுடன்வயததுதான் யெண்ணூறுண்டு பாங்குடனேசமாதிமுகங் கொண்டசித்து, மூச்சடங்கிதன்வந்திரிபகவான்றானும் மூன்றுமுறைசமாதிதனி லிருந்தசித்து, ஆச்சரியமாகவல்லோ வையகத்தில் யமர்ந்தசித்துதன்வந்திரி யென்னலாமே. (௭௫௩)

என்னலாம்வெகுகோடி மாண்பர்மெச்சும் யெழிலானதன்வந்திரி பகவான்றானும், பன்னவேமூலத்தி னீசாப்பா பாங்கானவயததுதானென்றக்கால் துன்னவேயிருநூறு வாண்டுமாகும் துப்புரவாய் பூமிதனி லிருந்தசித்து, பின்னவேகாலாங்கி நாதர்தம்மின் விருப்பமுடனுபதேசங் கொண்டசித்தே. (௭௫௪)

சித்தானசித்துமுனி மூலத்தீசர் சிறப்பானமலைதனிலே யிருதானுண்டு, சத்தியுடன்பூசையது செய்துமல்லோ சாங்கமுடன்மலைதனிலே அபிக்கியமாகி, வித்தகனார்சிஷவர்க்க மாண்பரோடும் விருப்பமுடன்சுனைதனிலே யிறங்கினார்பார், சத்தபரிசங்களற்று தாணிமீதில் சாங்கமுடன்தானிருந்தார் சிலநாள்தானே. (௭௫௫)

தானானயின்னமொரு மார்க்கங்கேளு தயவானபுலிப்பாணி மைந்தாபாரு, கோனானயென்னதையர் காலாங்கிநாதர் கொற்றவனாரெந்தனுக்குச் சொன்னநீதி, தேனானமனோன்மணியாள் கடாட்சத்தாலே தேஜோலிங்கமயங்கொண்ட கும்பயோனி, பானுபராபரத்துக் கொப்பதான பாருலகிலகஸ்தியரைப் பகருவேனே. (௭௫௬)

பகருவேன்அகஸ்தியர்க்கு வயதேதென்றால் பட்சமுடன்தொகை கணக்குக் கூறொண்ணாது, நிகாமுடன்சொல்வதற்கு யாராலாகும் நீதி

யுடன்நூல்களிலே யுரைத்தமார்க்கம், அகரமென்றவட்சரமுமவராலா ச்சு வப்பனேநாலுயுகங் கடந்தசித்து, சகரமெலாந்தான்துதிக்குங் கும் பயோனி சதுரானவகத்தியரென் றறையலாமே. (எ௯எ)

அறையலாம்வெகுகோடி காலமப்பா வபபனேசமாதிமுக மிருபத் தொன்று, நிறையவேசமாதிமுகம் வையகத்தில் நேர்மையுடன்தானிரு ந்த சித்துமாகும், குறையவேவயததுதான் சொல்வதற்கு குவலயத்தில் முடியாது ஒருவராலும், மறைபவே நூல்தனிலே காண்பதற்கு மகத் தானவயததுவு மில்லைதானே. (எ௯அ)

இல்லையேயின்னமொரு மார்க்கங்கேளு யெழிலானபுலிப்பாணி மைந்தாபாரு, தொல்லுலகம்புகழுஞ்சிவ வாக்கியர்தாமும் தோமுத வையகத்தில் வெகுநாளப்பா, புல்லவேசமுசார வாழ்க்கைவேண்டா புகழானவன்பத்தோ ராண்டுமட்டும், வெல்லவேசமுசாரவாழ்க்கையற் று வெகுநாளாயிருந்ததொரு சித்துமாச்சே. (எ௯௯)

ஆச்சப்பாவெகுகால வருஷமாக வப்பனேசமுசார வாழ்க்கையற் று, மூச்சடங்கிமடந்தனிலே யிருந்தசித்து மூர்க்கமுடன்சமுசாரம் வேண்டியல்லோ, பாச்சலுடன்தாய்தந்தை சீர்பாதத்தை பணிந்துமே மனதுவந்து கேட்டார்தாமும், மாச்சலுடன்தாய்தந்தை மனங்களித் து மார்க்கமுடன்மகன்றனையே கேட்டார்தாமே. (எ௱)

சிவவாக்கியர் தாய்தந்தைமாரை இல்வாழ்க்கைகேழ்க்குதல்.

தானனபிரகாச மானசோதி தண்மையுள்ளசிவவாக்கிய புனிதவா னே, கோனனகுருநாதர் கடாட்சத்தாலே கொற்றவனேசமுசார வாழ் க்கைவேண்டி, தேனனமனோன்மணியாள் கடாட்சத்தாலே தேற்றமு டனில்வாழ்க்கை கேட்டீரப்பா, மானனயில்வாழ்க்கை கேட்டதாலே மன்னவனேயிப்போது செய்யலாமே. (எ௱க)

செய்யவேசந்தோஷங் கொண்டுமல்லோ சிறப்புடனேமனதுவந்து மனம்நொடித்தார், துய்யவேசிவவாக்கியர் பெயருண்டாக துப்புரவாய் சிவானந்தர் பிறந்தார்தானும், வெய்யவேயெண்பத்தோ ருண்டுமட்டும் விருப்புடன்சிவவாக்கியர் தாமிருந்து, வையகங்கள்தான்புகழ சமாதி மார்க்கம் வளமுடனேயிறங்கினதோர் வளமைபாரே. (எ௱உ)

பாரேதானின்னமொருமார்க்கங்கேளு பாங்கானபுலிப்பாணி மன் னுபாரு, நேரேதான்ராமரென்னுந் தேவரப்பா நேர்மையுடன்வெகுகா ல மிருந்தசித்து, சேரேதான்வயததுவு மிருநூறுண்டு செம்மலுடன்

சமாதிமுகஞ் சென்றசித்து, கூரேதான்மூன்றுமுறை வையகத்திற்குறி ப்புடனேசமாதிமுகம் போனார்காணே. (௭௬௩)

காணவேயின்னமொரு மார்க்கங்கேளு கருவானபுஜண்டருட வயதுமார்க்கம், தோணவேமுந்நூற்று அறுபதாண்டு தோறுமல்குகை தனிலேயிருந்தசித்து, பூணவேசமாதிமுக மேறவில்லை பொங்கமுடன்முன்னூற்று அறுபதாண்டு வேணபடிவையகத்து வரிசயங்கள் விருப்பமுடன்யாங்கண்டேன் வனோதந்தானே. (௭௬௪)

தானேதான்சித்துமுனி புஜண்டர்தாமும் தண்மையுற்றசீஷவர்க்கந் தனையழைத்து, சோனையிலேயெந்தனுக்குச் சமாதிபூண சுத்தமுடன்சுரங்கமது செய்யவென்ன, ஆனையளவாகவல்லோ சுரங்கஞ்செய்து வன்புடனேமனதுவந்து கூறலுற்றார், மானையவர்கைபிடித்து சுரங்கந்தன்னில் மார்க்கமுடன்சாரலிடஞ் சென்றிட்டாரே. (௭௬௫)

சென்றாரேபுஜண்டரெனுஞ் சித்துதாமும் சிறப்புடனேசமாதிமுகஞ் சென்றபோது, குன்றனையமலைமீதிற் கூடிருந்த குறிப்பானமானதுவும் மனதுவந்து, வென்றிடவேரிஷியாரின் சித்துபாதம் வெகுநாளாய்த்தான்வளர்த்த பாசத்தாலே அன்றுமேகூடிருந்த மான்தானப்பாவப்பனேசமாதிமுகஞ் செல்லலாச்சே. (௭௬௬)

ஆச்சப்பாசமாதிமுகஞ் செல்றபோது வப்பனேசீஷவர்க்க மான்பர்தானும், மூச்சடங்கிப்போனதொரு புஜண்டரப்பா முனையானவையகத்தில் வருவதில்லை, பாச்சலுடன்சமாதிமுகம் மூடியல்லோ பண்பானபாறைகொண்டு யேயியல்லோ, வீச்சலுடன்மாண்பரெல்லாம் வெளியேயேகி விட்டாரேகோடிதளங் காணலாச்சே. (௭௬௭)

காணவேயின்னமொரு கருமானங்கேள் காசினியிற்கருவூரா ரென்றசித்து, தோணவேநடேசரென்னுங் கருவுண்டாக்கி துப்புரவாய்ப்பாண்டியனுக் கருளுந்தந்தார், பூணவேபாண்டியன் தேவாலயத்தில் பொங்கமுடன்நடேசரைத்தான் செய்துவைத்தோன், தோணவேகாயசித்தி கற்பங்கொண்டு தொல்லுலகில்வெகுகால மிருந்தசித்து. (௭௬௮)

சித்தானகருவூரா ரென்றசித்து சின்மயத்திற்பேரின்பங் கொண்டசித்து, முத்தானவயததுவும் முன்னூறாண்டு மூதுலகிற்பாண்டியனுக் குகந்தசித்து, பத்தியுடன்சிதம்பரமாந் தேவஸ்தானம் பட்சமுடன்நிர்மித்த ஞானசித்து, சத்தியெனும்மடாலயங்க ளுண்டுபண்ணி சாங்கமுடன்சமாதிமுகஞ்சென்றசித்தே. (௭௬௯)

சென்றதொருசித்துமுனி மார்க்கங்கேளு செயலானபுண்ணாக்கு யீசரப்பா, வென்றிடவேவயததுதான் நூற்றிரண்டுபத்து விருப்பமுடன்மரப்பொந்தி லிருந்தசித்து, குன்றுமலைகுளிகையது யளியாசித்து கோபாலாகோபாலா வென்னுஞ்சித்து, தென்றிசையில்வடகோடி கானகத்தில் திருவாத்தின்மரத்தின்மே லிருந்தசித்தே. (எஎ௰)

சித்தானசித்துமுனி நாதருக்கு சிறப்பானவாசானும் பாம்பாட்டியாகும், சத்தானவையகத்தில் சிலதுகாலம் சாங்கமுடனறியாதவாவியத்தில், சுத்தமுடனறிபூசை சிவனார்பூசை சுந்தரனாரென்னோருஞ் செய்துகொண்டு, கத்தனைகோபாலா கோபாலாவென்று காசினியில்வாய்பினத்தி திரிவார்பாரே. (எஎக)

பாரேதான்மாண்பர்களைக் கண்டபோது பாலகனார்வாய்திறந்து யாருங்கேளார், நேரேதான்பசிவந்து வுற்றபோது நேர்மையுடன்கோபாலா வென்றசத்தம், வீரேதான்வீரிட்டு சப்தமிட்டு விண்ணுலகைக்கண்திறந்து பார்க்கும்போது, ஆரோதான்தேவாதி வரத்தினாலே வப்பனைபால்பழமுந் தருவார்தானே. (எஎ௨)

தானானபால்பழமு முண்டபின்பு தாக்கானவழிதடங்கள் காணமாட்டார், கோனானபாம்பாட்டி தனைநினைந்து கொற்றவனார்நடுவீதி பள்ளிகொள்வார், தேனானமின்னாள்மணியாள் கடாட்சத்தாலே தேசமெலாந்தான்திரண்டு வந்திப்பார்கள், மானானபுண்ணாக்கர் கண்திறந்து மகத்தானகோபாலா யென்பார்தானே. (எஎ௩)

என்னவேபுண்ணாக்கு யீசர்தாமும் யெழிலானமண்ணதனைத் தானெடுத்து. உன்னிதமாய்மாண்பருக்குத் தான்கொடுப்பார் வுத்தமனேமண்ணதுவுந் தித்திப்பாகும், பன்னவேநோயாளி யார்வந்தாலும் பட்சமுடன்மண்கிள்ளித் தான்கொடுப்பார், சொன்னபடிநோயாளி ரோகந்தீர்ந்து சுத்தமுடன்போவார்கள் மெத்தவுண்டே. (எஎ௪)

உண்டானமாண்பருக்குப் புண்ணாக்கீசர் வுத்தமனேபிரதிவென்ற மண்ணைத்தானும், வண்மையுடன்தான்கொடுத்து வியாதிரோகம் வளமையுடன்தான்தீர்ப்பா ரதீதமெத்த, திண்மையுடன்சிலகாலஞ் சென்றபின்பு தீர்க்கமுடன்வயததுவும் நூறுண்டாச்சு, தண்மையுடன்வையகத்திலிருக்கலாகா தற்பரனைக்காணவெண்ணிநினைத்திட்டாரே. (எஎ௫)

இட்டதொருபுண்ணாக்கு யீசர்தாமு மெழிலானதிருவாத்தி மரத்தின்கீழே, சட்டமுடன்திருப்பொந்தி லிருந்துகொண்டு சாங்கமுடன் சிவயோகஞ் செய்துமல்லோ, திட்டமுடன்சிலநாட்கள் கழிந்தபின்பு

தீர்க்கமுடன்மரப்பொந்தி லயிக்கியமாகி, பட்டமரந்தளுத்தல்லோவை யகத்தில் பட்சமுடன்மாண்பருக்கு குருவுமாச்சே. (எஎசு)

குருவானதிருவாத்தி மரத்தையப்பா கொற்றவனூர்வையகத்து மாண்பரெல்லாம், திருவானரோகமது கண்டபோது தீர்க்கமுடன்மரத்துக்குக் காப்புகட்டி, சருவானசருகுவகை கியாழமிட்டு சட்டமுடன் தானருந்தி ரோகந்தீர்ந்து, பெருமையுடன்வையகத்தில் புனிதவானாய் பேருண்டாய்வெகுநாளாய் வாழ்ந்த ர்தாமே. (எஎஎ)

வாழ்ந்தாரேயின்னமொரு மார்க்கங்கேளு வகுப்பானபுலிப்பாணி மைந்தருக்கு, ஆழ்ந்தவேகாலாங்கி கடாட்சத்தாலே வப்பனேவேங்கை தனி லேறிக்கொண்டு, தாழ்ந்திடவேஜலந்திரட்டிப் புனிதவானும் சாங்கமுடன்தாரணியில் சுற்றிவந்தோன், மூழ்ந்திடவேவெகுகோடி காலமப்பா, மூதுலகிலிருந்ததொரு சித்துபாரே. (எஎஅ)

பாரப்பாபுலிப்பாணி பாலனனை பட்சமுடனுந்தமக்கு வயதுசொல்வேன், ஆரப்பாவயததுவு மறுநாளுண்டு வப்பனேவையகத்தி லிருந்தசித்து, நேரப்பாசமாதிமுகஞ் சென்றதில்லை நேர்மையுடனெடுங்காலமிருந்தசித்து, சீரப்பாவியோகந் தன்னிற்சென்று சிறப்புடனேசின்மயத்தி லிருந்தசித்தே. (எஎகூ)

இருந்துமேவெகுகால மானசித்து வெழிலாகவெந்தனிட வுபதேசங்கள், பொருந்தவேதானடைந்து புனிதவானும் பொங்கமுடன்வையகத்தி லிருந்தசித்து, திருந்தவேமலேகுகைகள் வனாந்திரங்கள் தீரமுடன் கண்டறிந்த சித்துவாகும், கருந்தமிழுஞ்செந்தமிழுங் கலந்தசித்து காசினியிலுபவாச சித்துமாமே. (எஅ0)

ஆமப்பாபுலிப்பாணி மைந்தாகேளு வப்பனேயின்னமொரு மார்க்கஞ்சொல்வேன், போமப்பாநந்தியுட மார்க்கந்தன்னை புகலுகிறேன்வயததுவு மேதென்றுக்கால், நாமப்பாவயததுவு மெழுநாளுண்டு நலமானவெகுகால மிருந்தசித்து, வேமப்பாசமாதிமுகங்கண்டசித்து வேதாந்தநந்தியென்று சொல்லலாச்சே. (எஅக)

சொல்லவென்றால்நாவில்லைப் பாவுமில்லை சுந்தரனூர்யுகங்கடந்த நந்திமூர்த்தி, வெல்லவேமலேயடியாம் வாரந்தன்னில் வேண்டியேசமாதிமுக மிருந்தசித்து, புல்லவேஷிவர்க்க மில்லாமற்றான் பூதலத்தில் வெகுநாளா யிருந்தார்தாமும், நல்லதொருதேவதா ஸ்தலங்கள்தன்னில் நலமுடனேநந்தியென்ற பேருண்டாச்சே. (எஅஉ)

உண்டாச்சுசித்துமுனி பாலனுக்கு வுற்றதொருசந்திமுகந் தானு மாச்சு, கண்டதொருமாண்பரெல்லா மாலயத்தில் கருத்தினிலேமுன் னின்ற சந்தியென்று. அண்டர்முனிராட்சதரும் ரிஷிகள்தாமும் அந்த ரதுந்துபிமுதலுந் தேவரானோர், மண்டலத்தில்தேவதா ஸ்தலங்கள்த ன்னில் மகத்தானசந்தியென்று மதித்திட்டாரே. (௭௮௩)

மதிக்கவேயின்னமொரு மார்க்கங்கேளு மகத்தானபுலஸ்தியரின் வண்மைசொல்வேன், துதிக்கவே அகஸ்தியனார் வாசம்பெற்ற துடியா னபுலஸ்தியனா ரென்னலாகும், விதிப்படியேகமலமுனி கோத்திரத்தில் வித்தகராய்வந்துதித்த முனிவர்தாமும், கதிபெறவேயகஸ்தியனார் பாக ம்பெற்று காசினியில்வந்துதித்த சித்துமாச்சே. (௭௮௪)

ஆச்சப்பாபுலஸ்தியரின் வயதேதென்றால் வப்பனேயறுநூற்றுஅ றுபதாகும், மூச்சடங்கிப்பிராணவத்தை மாறிமாறி மூதுலகில்வெகு காலமிருந்தசித்து, பேச்சறியாமாயாவின் சித்துவப்பா பேரின்பநிலை தனையே துறந்தசித்து, நீச்சனெனும்பஞ்சமரோ டிருந்தசித்து நெடுங் காலவையகத்து சித்துமாச்சே. (௭௮௫)

சித்தானபுலஸ்தியருஞ் சமாதிகேக சிறப்பானதோரணமா முனி வர்தம்மை, பக்தியுடன்சீஷவர்க்கங் கொண்டுமல்லோ பாருலகில்சமாதி க்கே யேகவென்று, முக்திபெறசின்மயத்தை மனதிலுன்னி மூதுலகில சமாதிக்கு செல்கவென்று, சத்தியமாயபுவககடலே யொழித்துமல்லோ சட்டமுடன்சமாதிமுக மேகினாரே. (௭௮௬)

ஏகவேவையகத்தில் சமாதிதன்னில் யெழிலாகமுப்பது வாண்டு மட்டும், போகமென்னு மக்கீத நிலையில்நின்று பொங்கமுடன்றானிரு ந்த மாயாசித்து, பாகமுடன் தோரணமா முனிவர்தன்னால் பாருலகில் மறுபடியும வந்தசித்து, சாகமதுவாராம லறுநூற்றுசொச்சம சாங்க முடன்வையகத்தி லிருந்தார்பாரே. (௭௮௭)

பாரேதான்யின்னமொரு வயணஞ்சொல்வேன் பண்பானயெந்த னது நேசபாலா, சீரேதான்வேதமென்ற வியாசரப்பா சிறப்புடனே வெகுகாலங் கடந்தசித்து, கோரமென்றவயததுவும் ஆயிரத்துச்சொச் சம் குவலயத்தில்வேதமதை யறிந்தசித்து, தீரமுடன்நூலாறி நூல்க ளெல்லாந் திறைகடலபோலுண்டதொரு சித்துகாணே. (௭௮௮)

காணவேவனுந்திரங்கள் குகைகள்நாடு கருவானமலையாறு குண்ணுதாமும், வேணதொருவண்டர்முனி கூட்டத்தார்கள் வெளிகாணுகாடுமுத லுறைந்தசித்து, கீணவேசமயமென்ற மார்க்கந்தன்னை நேர்மையுடன்றுகைபாடு செய்தசித்து, மாணமருங்கல்விதனி லுறைந்தசித்து மகத்தானமாண்பருக்கு வுகந்தசித்தே. (எஅகூ)

மாண்பானவையகத்து ஜனங்களுக்கு மார்க்கமுடன்வேதமதை யோதுஞ்சித்து, ஆண்மையுடன்சாத்திரங்கள் புராணமெல்லா மவரவர்க்குவுகந்தபடி செய்துவைத்தோன், தாண்மைபெறசைவாதி சமயமெல்லாம் தாரணியில்கொடிநாட்டி யிருந்தசித்து, நீண்மையுடன்காயாதி கற்பங்கொண்டு நெடுங்காலமிருந்ததொரு தவசியாச்சே. (எகூ௰)

தவசியென்றால்மாண்பருக்கு வுகந்தசித்து தாரணியில்சமுசார வாழ்க்கையோடும், பவக்கடலைத்தாணுநீத்துப் பாரினமீது பட்சமுடன்றானிருந்த கொடியசித்து, தவப்பெருமைகொண்டல்லோ ரிஷிகளோடும் தயங்காமலாசர்முதல் வணங்குஞ்சித்து, நவகண்டவையகமு மறிந்தசித்து நலமானவியாசமுனி யென்றசித்தே. (எகூக)

முனியானசித்துமுனி வியாசர்தாமும் மூதுலகில்பெருமைதனை யறிந்தசித்து, கனிவோடுபோலேரும ரிஷிகள்தம்மை கண்ணினால் கண்டறிந்த சித்துவாகும், பனிபோன்றமலைநாடு பார்த்தறிந்து பட்சமுடன்சென்றல்லோ வுபதேசங்கள், தனியாகத்தானிருந்துபிரணவத்தை தன்மையுடன்றானறிந்த சித்துதானே. (எகூஉ)

தானானசித்துக்கு சமாதியில்லை தாரணியில்வெகுகால மிருந்தசித்து, கோனானகுருக்கள்மா ரிஷிகள்தேவர் கொற்றவனார்சிஷவர்க்கமாண்பர்தன்னை, மானானவையகத்தி லறிந்தசித்து மகத்தானவியாசமுனிசித்துபோல, தேனானவேதமதை யறிந்தசித்து திரைகடலிற்கண்டதுண்டோ வுண்மைதானே. (எகூங)

உண்மையாமின்னமொரு மார்க்கங்கேளு வுத்தமனேபுலிப்பாணி மைந்தாபாரு, வண்மைபெறும்தேறைய ரென்னுஞ்சித்து வளமான ரோகமதைத் தீர்க்குஞ்சித்து, நண்மைபெறவயததுவு மேதென்றாக்கால் நாதாந்தசித்துமுனி கும்பயோனி, திண்மையுடனெழுதிவைத்தசாத்திரத்தில் தீர்க்கமுடன்வயதுமுன்னூ றென்னலாமே. (எகூச)

என்னவேவயததுவு மூன்னூறுண்டு யெழிலானதேரையர் முனிவருக்கு, பன்னவேசாத்திரத்தின் வகுப்பைப்போலே பட்சமுடன்கண்டறிந்து சொல்லலாச்சு, துன்னவேயிவர்தமக்குச் சமானமில்லை துப்புரவாய்ஜகத்தாசை விட்டோர்தாமும், முன்னமேயகஸ்தியனு ருபதேசங்கள் முறைப்படியேகண்டறிந்த சித்துமாச்சே. (௭௯௫)

முறையானகருவிகரணாதியெல்லாம் முயற்சியுடன்தாமறிந்த மாயாசித்து, கறைபோன்றபதினெண்பேர் சாத்திரத்தை கருத்தினிலே யென்னாளும் மனதுவந்து, மறைவானபொருளெல்லா மாண்பருக்கு மகத்தானமுறைப்பாடு யாவுங்கண்டு, குறைபாமலுபதேசஞ் செய்த சித்து கொற்றவனார்தேரைய முனிவர்தாமே. (௭௯௬)

முனியானதேரையமுனிவரப்பா மூர்க்கமுடன்சங்கமென்றசபையிற்சென்று, தனியாகவகஸ்தியரின் பின்றொடர்ந்து சட்டமுடன்பிணிதீர்க்க சித்துவாகும், பனிபோன்றவனுந்தாத்தி விருக்ஷகுளிகை பாங்கான சஞ்சீவி மூலிதன்னை, மனிதர்களைத்தானெழுப்பு மமிர்தமூலி மார்க்கமுடன்கண்டறிந்த சித்துபாரே. (௭௯௭)

பாரப்பாயோமமென்ற வித்தைதன்னை பண்புடனேமனதுவந்து கண்டசித்து, ஆரப்பாயிவர்போலுஞ் சித்துமுண்டோ வவனிதனிலாரேனுங் கண்டதில்லை, நேரப்பாயோமமென்ற சித்தேயாகும் நெடிதான மலையனைத்தும் பழக்குஞ்சித்து, சீரப்பாவையகத்தில் நெடுநாளாக சிறப்புடனேதானிருந்த சித்துதாமே. (௭௯௮)

தாமேகேளின்னமொருமார்க்கஞ்சொல்வேன் தயவானபாலகனே மைந்தாபாரு, போமேதான்பக்கிரி யாக்கோபுவென்றும் பொங்கமுடன் சாத்திரத்தி லுரைத்தவார்போல், நேமமுடன்வயததுவு மேதென்றாக் கால் நிலையானவாண்டதுவு மிருநூற்றுச்சொச்சம், நாமமுடன்நபிநாயன் தன்னைக்காண நன்னயமாய்மக்கபுரி போனார்தாமே. (௭௯௯)

போனாரேமலைநாடுகுகைகடந்து பொங்கமுடன்நபிதனையே காணவென்று, கானாறுபாதவழி செல்லும்போது கடுங்காளைநபிக்கூட்டம்மிகவாய்க்கண்டு, மானானமகதேவர் பதியிலப்பா மார்க்கமுடன்வந்ததினாலுந்தமக்கு, தீனானதீன்பதியி லுந்தனைத்தான் திட்டமுடன்சபித்திடுவோ மென்றிட்டாரே. (௮௱)

என்றவுடன்யாக்கோபு தாள்பணிந்து யெழிலானவார்த்தையது கூறும்போது, சென்றுமேயாக்கோபு தன்னைக்கண்டு சிறப்புடனேசுன்னத்து செய்துமல்லோ, இன்றிடவேரொட்டியது தானுமீய்ந்து சிறப்புடனேயசேன்வுசே னென்றுகூறி, வென்றிடவேயுபதேச பிரணவத்தை விருப்பமுடன்மலுங்குமா ரோதினாரே. (௮௱௧)

ஓதவேநபினயர் கூட்டத்தார்கள் வுத்தமர்கள்மனமபோலே மனதுவந்து, நீதமுடன்மககபுரி கோட்டைக்குள்ளே நிஷ்களங்கபக்கிரியாக்கோபுதன்னை, தோதமுடன்கொண்டுசென்று ராணமனைக்குள் தோருபலகொத்துபா யோகினார்கள் வீதமதுயனாதிக்க சித்துதாமும் விடுபட்டுவந்ததொரு யாகோபாசமே (௮௱௨)

ஆச்சயபாயின்னமொரு வயணஞ்சொல்வேன்வப்பனே கொங்கணவர் வபதுமாக்கம, பாசசலுடன்யெணாறு வாண்டமட்டும் பாரினிலேயிருந்ததொரு சித்துமாகும, மாச்சலுடன்சமாதிமுகஞ் சென்றசித்து மகததானகொங்கணவா சித்துவாகும, ஒச்சலதுயிலலாமல் வுலகுதன்னில் வுத்தமனேவெகுகாலம் வாழ்ந்தசித்தே (௮௱௩)

சித்தானசித்துமுனி ரிஷியாதாமும் சிறப்பானகொங்கணவர் காண்டஞ்சொல்ல, முதகானகடைக்காணடம மூன்றுஞ்சொல்லி மூதலகில்சமாதிக்கு போகலானா பக்தியுடனகடைக்காண்டம் நாலிலப்பா பாடினைததாலெவ நசங்கை காணப்போமோ, புத்தியுளளமாண்பர்களுங் காணாபாரப்பா கணடாலுமதிறசங்கை யின்னமுண்டே. (௮௱௪)

உண்டானகடைக்காண்டம பாடியல்லோ வுத்தமனுங்கொங்கணவர் முனிவாதானும, நண்பாலவையகததில மாணபர்முனிவோ நலமானரிஷிமுனிவா தன்னையழைத்து வண்ணசாத்திரங்கள பாடியல்லோ வளமுடனேவெகுசீக்கா மறைத்துவைத்தார் திண்ணமுடன்காயாதிகற்பங்கொண்டு திரமுடன்சமாதிதனச் செலவென்றானே. (௮௱௫)

செல்லவேசமாதிமுகம நின்றபோது செமமலுடன்சீஷவர்க்க மனேகங்கோடி, மெல்லவேசமாதிககுயிடமுந்தேடி மேன்மையுடன்வழிபாடு செய்தாமல்லோ, புல்லவேகொங்கணனா முனிவர்தானும் புகழானசமாதிமுகம் வுள்ளேசென்று, வல்லமையாய்முப்பது வாண்டுதானும் வளமுடனேயிருந்துவந்த சித்துதானே (௮௱௬)

தானனயின்னமொரு வயணஞ்சொல்வேன் தாக்கானகண்மணியே புகலக்கேளும. கோனதட்சணா மூர்த்தியப்பா குவலயத்திலவெகுகால மிருந்தசித்து மானுனவயததுவு மேதென்றுக்கால் மகத்தான

வாயிரத்து சொச்சமப்பா, பானுனபடியேழுங் கடலுஞ்சுத்தி பாரினி
லேவுழன்றதொரு சித்துகாணே. (௮௱௭)

காணவே தட்சணா மூர்த்தியாரும் காசினியில் திருமந்திரம் பாடி
னோர்தான், பூணவே சிவாலயங் கல்லிலப்பா பொங்கமுடன் வெகுகால
மிருந்தசித்து, தோணவே திருமந்திரம் பாடியல்லோ தோற்றமுடன்
சமாதிக்கு யேகவெண்ணி ஆணவங்களதாலெனுங்கி சித்துதானும் வ
ன்பாகாசிபதி சென்றிட்டாரே (௮௱௮

சென்றாரே நகரமதா சதிபிலாபங்கல் சிறப்புடனே தட்சணா மூர்த்தி
னயன், குன்றான கரையோரம மண்டபந்தான் கொற்றவனார் சமாதிமு
கஞ் செய்தாரல்லோ வென்றிடவே வொருயுகமாம வாயுபகாண்டு வெத்தம
னார்தானிருந்து வக்கனித்து, தென்றிசையில் தட்சணா மூர்த்தியென்று
தேசமதில் பேர்கொண்ட சித்துபாரே (௮௱௯)

பாரேதானின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் பாங்காலபாலகனே
பகரக்கேளும், நீரேதான் கோரக்கர் வைபோகங்கள் நிஷ்களங்கமாக
வல்லோ மாயாசித்து, சேரேதான் வைபசத்துவ மெண்பநாகுஞ் செப்பினா
ரவர் நூலிற் சூத்திரத்தான், சீரேதான் பதினாறு ருத்திரத்தில் சிறப்பா
கப்பாடிவைத்த தன்மையாமே (௮௱௰)

உண்மையாங் குளிகையது தானுமில்லை யுத்தமனே நரைதிரையு
ம் யாதொன்றில்லை, வண்மையாம் பிணிபெயன்ற ரோகமில்லை வகுப்பா
னகாயாதிரானுமில்லை, தன்மையுடன் வையகத்து மாண்பரெல்லாம்
தப்பாமல் சிவயோகி யென்பார்பாரு, திண்மையுடன் கோரக்கர் மூலித்தம
மை திர்க்கமுடன் யெப்போதுந் தின்பார்தானே. (௮௱௰௧)

தின்பாரே கோரக்கர் மூலிபாலே திர்க்கமுடன் கோரக்கர் சித்துமா
ச்சு, வன்பானசம்சார வாழ்க்கையில்லை வளமான பொருளின் மேலா
சையில்லை, என்வோரஞ்திரிகால பூசையோடும் யெறிலாவகாலிகா ஷா
யத்தோடும், சொன்னபடி மனோன்மணிபால் பிராணயத்தை தொல்லுல
கில்யெப்போதுஞ் சொல்வர்தானே (௮௱௰௨)

சொல்வாரே யின்னமொரு மார்க்கங்கேளு தூப்தாவமுற்பாலா திரா
வானே, புல்லவே கொளபால சித்துகாணும் புசமுானவையகத்தி லிருந்த
சித்து, வல்லவொருபொன்னுக்கு வாணிமாற்று வகுப்புடனே கண்டறி
ந்க ஞானசித்து, சல்லியமாம்வித்தைதனில் தேர்ந்தசித்து சட்டமுடன்
வுரைகல்லுக் குறியசித்தே. (௮௱௰௩)

உரையானபொன்னுரைக்குங் கல்லைத்தானும் வுத்தமனேமலைத னிலேகண்டிதேதா, விரையோடும்புரையகற்றி வயிரக்கல்லை திட்டமூடனுராய்ந்த ஞானசித்து வரையானசித்துக்கு வயதேதென்றால் வளமுடனேகூறுகிறே னின்னமேகேளு. கரைகண்டசித்தல்லோ கெவுனசித்து கெளபாலசித்தென்று பேருண்டாச்சே. (அ௱௫௪)

பேரானசித்துக்கு வயதேதென்றால் பெருமையுடன்கூறுகிறேன் கொற்றவாகேள், நேரானவயதுவும் நூற்றைந்து நெடிதானகிரிமலை திரிந்தசித்து, ஊரோடுங்கூடியல்லோ வுறவுபேசி வுரமையுடன் சாத்திரத்தை யறிந்தசித்து சீரானகெளபால சித்தருக்கு திடமுடனே ஞானமென்ற தேசத்தானே, (அ௱௫௫)

தேசமாம்பதேசம் பெற்றுக்கொண்டு தேறுமுனங்காயாதி கற்பங்கொண்டு, வாசமதுமலைதனிலே யிருந்துகொண்டு வகுப்பானசித்தரது வளவாராய்ந்து, நேசமுடன்சமாதிக்கு யேகவென்னி நெடுங்காலந்தீஷைவர்க்க மாண்டபோகம், பாசமொழிந்தனக்குகந்த தீஷைதன்னை பட்சமுடன்கண்டறிந்து வுரைத்தார்தாமே. (அ௱௫௬)

உரைத்தாரேதீஷைவர்க்க செய்திதன்னை வுத்தமனேசமாதிக்குப் போறேனப்பா, வரையானசமாதிமுகஞ் சென்றபோது வளமுடனே யெந்தனுக்கு வயிரக்கல்லாம், குறையாமல்சமாதிதனை முதலில்லோ கொற்றவனேகருவயிரக் கல்லில்தானும், மறையாகத்தானாட்டிச் சித்திரத்தான் மன்னவனேயெழுத்துவரையுமெய்யாந்தானே. (அ௱௫௭)

என்றவுடன்கெளபாலசித்தரானும் பெரிதானவயிரக்கல மேலேயப்பா, வென்றிடவேயெழுத்துமுகமாகியல்லோ மேதினியிலெல்லவர்க்கு மறிவதற்கு குன்றனகல்லின்மே லெழுத்துவூன்றி கொற்றவனேகெளபாலர் சமாதியென்று, நன்றுகவுரைதீட்டி சீஷர்தாமும் நலமுடனேசமாதிமுகஞ் செய்தாரப்பா. (அ௱௫௮)

செய்யவேயப்பனுக்கு வருஷம்பின் செப்பரியசமாதிமுகந் தன்னிலிருந்து, மையவேவையகத்தில் மனத்துடனே யாகமென்ற சித்துவாகும், துய்யதமிழ்ப்பண்டிதர்கள் போற்றுஞ்சித்து துறையதனை யேமமாற்றறிந்தசித்து, வையகத்தில்சித்துமுனி ரிஷிகள்தேவர் வளமுடனேயவரறிந்த ஞானிதானே. (அ௱௫௯)

ஆணியாமின்னமொரு வதிதஞ்சொல்வேன் வப்பனேபுலிப்பாணி மைந்தாகேளு நீணிலத்தில்சோதிமா முனிவர்தானும் நீதியுடன்வெகு காலமிருந்தசித்து, வாணிபங்கள்செய்வதற்கு யேமமாற்றை வளமுடனேகண்டறிந்த சித்துதாமும், காணிகளும்பூமிவள மெல்லாங்கண்டு கருவயிரக்கல்லெடுத்த சித்துதானே. (௮௨௰)

தானனசித்துக்கு வயதேதென்றால் தண்மையுள்ளவருடமது நாலாறாகும், பானனகாடுமலே தன்முகத்தில் பாங்குடனேதான்றிரிந்த சித்துமாகும், கோனனகுருக்கள்மார் ரிஷிகள்தம்மை கொற்றவனார்தான்கண்டு வுரவுபேசி, மானனபொன்மாற்று அறியவென்று மார்க்கமுடன்சென்றதொரு சித்துபாரே. (௮௨௧)

பாரப்பாசோதியென்ற முனிவர்தானும் பட்சமுடன்சமாதிமுகம்வுள்ளேசென்று, சீரப்பாமுப்பதா ருண்டுமட்டும் சிறப்புடனேவையகத்தை மறந்தசித்து நேரப்பாதவசுநிலேத் தான்கடந்து நேர்மையுடன்சமாதிவிட்டு வந்தசித்து, ஆரப்பாஅறிவார்கள் சோதிமார்க்கம் வப்பனேயானறிந்து சொல்லிட்டேனே. (௮௨௨)

சொல்லவேயின்னமொரு மார்க்கம்பாரு தூய்தானபாலகனே யென்சொல்வேன், வெல்லவேடமரகனார் வயதேதென்றால் வுத்தமனேமுன்னூற்று சொச்சமாகும், புல்லவேநெடுங்காலம் வையகத்து புகழானமாண்பருடன் கூடியல்லோ, நல்லதொருவஷ்டகரு வித்தையெல்லாம் நலமுடனேசெய்ததொரு டமரர்காணே. (௮௨௩)

காணவேஜெகஜால டமரகந்தான் காசினியிலதீதவித்தை செய்தசித்து, பூணவேநீர்மேலே நடந்தசித்து புகழானவாசியை நடத்துஞ்சித்து, தோணவேகூடுவிட்டு கூடுபாய்ந்து தொல்லுலகில்வித்தைகளைசெய்தசித்து, ஆணவங்கள்தானொடுக்கி காயந்நின்று வன்புடனேவீற்றிருந்த சித்துதாமே. (௮௨௪)

தானனடமரகனு ராடுஞ்சித்து தகமையுள்ள சாத்திரத்திற்சொலவில்லை, கோனனவாகாயந் தன்னின்மட்டும் கொற்றவனார்கெடைகட்டி யாடுஞ்சித்து, பானனபரிதிமதி தன்னைத்தானும் பக்குவமாய்த்திசைமாற்றி செய்தசித்து. மானனடமரகனார் சமாதிதன்னில் மார்க்கமுடன்யேகுதற்கு நண்ணினாரே. (௮௨௫)

கண்ணவேசகலரிஷி சித்துதாமும் நலமுடனேவையகத்து சமாதிதன்னில், மண்ணதனிலிருந்ததொரு சித்துமாச்சு மகத்தானவவர்போன்ற சித்துமல்ல, கண்ணவிந்தகுருடனேப்போல் கேணிதன்னில் காசினியிலிறங்கியல்லோ சித்துதானும், தண்ணீரில்பனிரெண்டுவாண்டுமட்டுந் தண்மையுடன்விற்றிருந்த சித்துதாமே. (அ௨௬)

சித்தானசித்துஜல ஸ்தம்பனசித்து சிறப்பானடமரகர்போல் சொல்லொண்ணுது, முத்தானகேணிவிட்டு வந்தசித்து மூதுலகிலிவர்போலு மெங்குமுண்டோ, பத்தியுடன்வையகத்தி லனந்தஞ்சித்து பாரினிலேவெகுமுனிவ ரிருந்தாரல்லோ, சத்தியங்கள்மறவாத சித்தாளுலும் ஜலஸ்தம்பனசித்துபோ லில்லைதானே. (அ௨௭)

இல்லையேயின்னமொரு கவிதைசொல்வேன் யெழிலானயெந்தனிரு மணியேகேளும், சொல்லவேசுந்தரா னந்தரப்பா தொல்லுலகில்கேசரியாம் வித்தைதன்னை, புல்லவேவதிதமென்ற மாண்பருக்கு புகழுடனேபுகட்டியதோர் சித்துமாகும், வெல்லவேயவர்தமக்கு வயதேதென்றுல் விட்டகுறைதொட்டகுறை மிகுதியாமே. (அ௨அ)

ஆமேதானவர்தமக்கு வயதுமெத்த வப்பனேயெண்ணூற்று சொச்சமாண்டு, நாமேதான்சொன்னபடி குளிகைபூண்டு நலமானகேசரிமேல் சென்றசித்து, போமேதான்வையகத்தி லிருந்துமல்லோ பொங்கமுடன்சமாதிமுகஞ் சென்றசித்து, வேமேதானிருபத்தா றுண்டுமட்டும் விபெட்டுபூமிதனில் வந்தசித்தே. (அ௨௯)

வந்ததொருசித்துக்கு சமாதிமார்க்கம் வையகத்தில்மெத்தவுண்டு சொல்லொண்ணுது, சந்ததமாஞ்சீஷவர்க்கங் கோடிமாண்பர் தாரணியில்கணக்குண்டோ லக்கோயில்லை, சொந்தமுடன்வெகுமாண்பர் கிட்டியல்லோ சுந்தரனார்பாதார விந்தந்தன்னை, அந்தமுடன்தாள்பணிந்து சிரங்குனிந்து வன்புடனேபோற்றிசெய்த சித்துமாச்சே. (அ௩0)

ஆச்சப்பாபுலிப்பாணி மைந்தாகேளு வன்புடனேசொல்லுகிறேன் வதிதமெத்த, மாச்சலென்றவரரிஷியாஞ் சித்துதம்மை வளமுடனேசொல்லுகிறேன் வண்மைபாரு, பாச்சலென்றவயததுவும் யெழுநூற்றுச்சொச்சம் பாருலகில்நெடுங்கால மிருந்தசித்து, மூச்சடக்கிசிவயோக மானசித்து மூதுலகிலிவர்போலுங் காணுர்தாமே. (அ௩௧)

காணுரேதவசியென்னும் வரரிஷியார்தானும் கருவாககாளிக்கமடுவுதன்னில், வேணபடிதவயோகஞ்செய்யவென்று விட்டகுறைதனையகற்றி மடுவிற்சென்று, தோணவேபனிரெண்டு வாண்டுமட்டும் தொ

ஸ்துலதில்ஜலஸ்தம்ப சமாதியாகி, மாணாரும்வையகத்தோர் காணவெ ன்று மார்க்கமுடன்வந்தோர் சித்துதானே. (௮௬௨)

தானென்றசித்ததுவும் ஐரூபசித்தர் தாரணியிலிவர்போலுஞ்சித் துமுண்டோ, வானென்றதேவரிஷி திரிசங்கர்பால் வரத்தினால்பேரு பெற்ற சித்தேயாகும் கோனென்றமகாரிஷியாரென்றுசொல்லிப் போற் றவர்க்குகுவலயத்தில் பேருண்டாச்சு மானென்றசித்தர்களும் வணங்கி யல்லோ மகத்தானரிஷியாரைப் போற்றுவாரே. (௮௬௩)

போற்றுவார்பூகலத்தாரெல்லாருந்தான் பொங்கமுடனின்னமொ ரு மார்க்கஞ்சொல்வேன், கேற்றமுடன்வால்மீக ரென்றசித்து தெளி வானமார்க்கமது சொல்வேன்பாரீர், மாற்றமயம்நீக்கியல்லோ வையத் தில் வளமையுடன்வெகுகால மிருந்தசித்து, ஆற்றலுடன்வால்மீக ரா மாயணத்தை அவனிதனில்மாந்தருக்குச் செய்திட்டாரே. (௮௬௪)

செய்ததொருவால்மீகர் வயதேதென்றால் செப்பமுடன்எழுநூற் றுச் சொச்சமாகும், துய்யதமிழ்ப்பண்டிதனுங் கல்விவானும் தூய்தா னமகப்பேரு கொண்டசித்து, பையவேசமாதிமுகஞ் சென்றதில்லை பா ங்குடனேகாயாதி கொண்டிதானும், வெய்யவேநெடுங்கால மிருந்தசித் து வேதாந்தவால்மீகர் தானுமாமே. (௮௬௫)

தானானவையகத்து மாந்தர்க்கெல்லாம் தகமையுள்ளவால்மீகர் சரி தைதன்னை, கோனானகுருவான வால்மீகர்தானும் குவலயத்தில்பேர் கொண்ட ஞானசித்து, தேனானவைதீக சாத்திரங்கள் தெளிவுடனே கட்டிவைத்த ஞானசித்து, பானானபராசரிஷிக் கொப்பதான பாங்கான ரிஷியென்று செப்பலாமே. (௮௬௬)

செப்பலாமின்னமொருமார்க்கங்கேளு செயலானபுகழ்ப்பாணி மை ந்தாபாரு, ஒப்பமுடன்ஊர்வசியாள் வயதேதென்றால் வுத்தமனே நூற்றி யிருபத்தேயாகும், தப்பிதங்கள்நேராமல் தாரணிமீதில் சாங்கமுடன் விற்றிருந்த மாதுசித்து, இப்புவியிலூர்வசியாள் சருக்காத்னம் யெழி லாகப்பாடிவைத்த மாதுதாமே. (௮௬௭)

மாதானவூர்வசியாள் காயகற்பம் மகத்தானவையகத்தி லுண்டுமல் லோ, தோதானகாவியங்களொன்றுகூறி தோறுமல்பாடிவைத்தமாது சித்து, நீதானவியாசரிடம் வுபதேசங்கள் நீதியுடன்பெற்றதொரு மா துதானும், கோதாவரிக்கரைதனிலே மடிந்தசித்து கொற்றவனேசமாதி யது அங்கேயுண்டே. (௮௬௮)

உண்டானசமாதியதுமண்டபத்தில் ஓகோகோநாதாக்கள் கண்டறிந்து, திண்பானவேதமா மாயுந்வேதந் நிரமுடன்கண்டறிந்த மாது சித்து, கண்டல்லோரிஷிமுனிவர் சித்ததானுங் காசினியில்பூசைமுதல் நைவேத்தியங்கள், சண்டமாருதம்போலே தானடத்தி தாரணியில் கோடித்து வருகின்றீர. (௮௩௯)

வருகிறர்பூவாடைக் காரிசித்தை மார்க்கமாமின்னமொரு மகிமை கேளு, கருமமதைவைபகத்திற் றனகற்றி காசினியில்நெடுங்கால மிருக்கசித்து, கருமமதுதானறிந்த கமலசித்து தாரணியில்தானறிந்தகொடியசித்து, அருமையுடன்சைபதி தேசந்தன்னில் வன்பாகசென்றதொரு சித்துபரே. (௮௪௰)

பாரேதான்கமல முனி வயதேதென்றால் பாலகனேசொல்லுகிறேன் பண்பாய்க்கேளு, சீரேதானயதுவும் காலாயிரந்தான் நேர்மையுடன்முன்னூற்றுச் சொச்சமாகும். சீரேதான்சிவபதி தன்னிலப்பா சிறப்புடனேநெடுங்காலம் இருந்தசித்து நீரேதான்சமாதிமுகந் தன்னிற் சென்று நிங்களுடன் ஞ்ஞநாறு வாண்டுதானே. (௮௪௧)

ஆண்டானவருஷமது கிருநாறப்பா வப்பனேபூமிதனிலிருந்தசித்து, கூண்டானகூண்டேதான் வெந்தசித்து குவலயத்திலவர்போலுஞ்சித்துமுன்னேட, தாண்டவமபோலசிவபதி தேசந்தன்னில் சாங்கமுடன் விரதங்கள் செய்தசித்து, ஆண்டைகைபாமனவொரு கமலர்தாமும் வப்பனேவையகத்து சித்துமாச்சே. (௮௪௨)

ஆச்சப்பாவின்னமொரு மகிமைசொல்வேன் வப்பனேயதிசயங்கள் மெத்தவுண்டு, மாச்சலுடன்வையகத்தி லிருந்தசித்து மகத்தான அறிவானந்த சித்துதானும், பாச்சலுடன்வயததுவு மேதென்றக்கால் பண்பானமுன்னூற்று வருஷதாண்டு, மூச்சடங்கிசமாதிதனி லிருந்த சித்து மூர்க்கமுடன்பனிரெண்டு வருஷங்கானே. (௮௪௩)

காணவேபன்னிரெண் டாண்டுமட்டும் காசினியில்பூமிதனி லிருந்தசித்து தோணவேசொபாலர் சிஷனுகும் தொல்லுலகில்வர்மகிமை மெத்தவுண்டு, பூணவேவையகத்து மாண்பருக்கு புகழாகமுன்னடந்த காரியத்தை வேணபுசங்தைகள் கொண்டாற்போலே விட்டகுறையிருந்தபடி சொல்வார்பாரே. (௮௪௪)

சொல்லவேயின்னமொரு மார்க்கங்கேளு தூய்தானவகப்பேயர் சித்துதாமும், வெல்லவேயவர்தமக்கு வயதேதென்றால் விருப்பமுடன்சொல்லுகிறேன் வினயந்தானும், புல்லவேநூற்றிபத்து ஒன்றுமூன்று புகழானமரத்தடியி லிருக்குஞ்சித்து, நல்லதொருசமாதிமூன்றுஞ் சென்றதில்லை நாதாந்தகுகப்பைவெளி சித்துதானே. (௮௪௫)

வெளியானசித்துக்கு குருவேதென்றால விருப்பமுடன்வியாசமுனி யென்னலாகும், ஒளிவானகாயாதி தானுமில்லை ஓகோகோவுலகமதில் வாழுஞ்சித்து, களியானசோதியென்ற விருட்சந்தன்னில் கைலாசநாதரைப்போல் சமாதிகொண்டு, வளியானமரபொந்தில் தானேநின்று மகத்தாகயிருந்ததொரு சித்துமாச்சே. (௮௪௬)

சித்தானசித்தினுட மார்க்கஞ்சொல்லவேன் சீரானபுலிப்பாணி மன்னுபாரு, முத்தானபாமபாட்டி வயதேதென்றால மூதுலகில்பெயர்கொண்ட நெடியசித்து, புத்தியுள்ளசித்துக்கு வயதுசொல்லவேன் புண்ணியனேநூறறியறு பத்துமூன்று, சுத்தமுடன்பாமபினுது விஷத்தைவாங்கி துப்புரவாயருந்துகிற சித்துகேளே (௮௪௭)

கேளேதான்காயாதி கற்பங்கொண்டு சீத்தியுடன்பலகால மிருந்தசித்து, பாளேதான்போகாமல தேகந்தன்னை பட்சமுடன்காப்பாற்றி பாதுகொண்டு, நீளேதான்திருவாத்தி மரதமூலகீழே நீதியுடன்கொலுவிருந்த காயசித்து, ஆளேதானகோகரண சித்துமல்ல வப்பனெனினையத்தின் சித்துபாரே. (௮௪௮)

பாரேதானின்னமொரு மார்க்கம்பாரு பட்சமுள்ளயெங்கனது பாலாகேளு, சீரேதான்காலகண்டா வயதேதென்றால் சிறப்பானவாயிரமாமிருநூறுண்டு, நேரேதான்நெடுங்காலமிருந்தசித்து நேர்மையுடன் குளிகையது பூண்டசித்து, ஊரேதான்பெயரேது சொல்லவென்றால் வுத்தமனேசேஷனால் முடியாதன்றே (௮௪௯)

அன்றான ஆதிசேடன் றன்னினாலும் வெப்பினைகூறுதற்கு முடியாதப்பா, குன்றானநெடுமலைகள வனாந்திரங்கள் கொற்றவனேநெடுங்காலமிருந்தசித்து, தென்றிசையில்தட்சணா மூர்த்தினயன் சிறப்பானசித்துமகா சிஷனுக்கு வென்றிடவேயுபதேசஞ் செய்தசித்து விட்டகுறையிருந்ததொரு காலர்தாமே. (௮௫௰)

காலனும்நெடுந்தூத காலசித்து காசினியில்சமாதிமுகஞ் செல்கை ற்கு, பாலனுஞ்சிஷவர்க்க மாண்பர்தம்மை பட்சமுடன்தாமழைத்து சித்துதாமும், சீலமுடன்முப்பத்து வாறுவாண்டு சிறப்புடனேவையக த்தி லிருந்தசித்து, கோலமுடன்முகமறியா பாலசித்து கொற்றவனே வெகுகால மிருந்தசித்தே. (௮௫௧)

சித்தானசித்தினுட மார்க்கஞ்சொன்னேன் சிறப்பானபின்னமொ ரு வயணங்கேளீர், முத்தானவடிவேலர் முருகரப்பா மும்பற்சியுடன் வையகத்து மேலென்றக்கால், சத்தியமாய்வையகத்தும் கணக்கோயில்லை சார்பான நூல்தனிலுஞ் சொல்லவில்லை, சித்திபெறஞானவழி கொண் டசித்து சிறப்பானசுப்பிரமணிய மென்னலாமே. (௮௫௨)

என்னவேவிவரப்பிர மணியரான மெய்ஞ்ஞானசித்துக்கு வயதோ யில்லை, டன்னவே பலசாஸ்திர நூல்களதன்னில் பாகமுடன்வயதுவு ங் கூறவில்லை, சொன்னபடி உகநதிமுறை வேதாகமங்கள் தோற்றமுடன் பலபேரும் பாடிவைத்தார், கன்னமதாய்சுப்பிரமணியர் காப்பேயென் று நாட்டினார்நூல்களெல்லாம் நாட்டினாரே. (௮௫௩)

நாட்டினதோர் நாமமதைக் கண்டதல்லால் நாதாந்தவையகத்துவைக் கண்டதில்லை, காட்டுகிறேன்இன்னமொரு வயணஞ்சொல்வேன் தயாள முள்ளசிறப்பான சாற்றக்கேளீர், வாட்டமுடன்பூசியென்ற முனிவர்தா னும் வருடமாய்வையகத்து மேலென்றக்கால், நாட்டமையாய்வராறுநா ற்று யெண்பதாண்டு மார்க்கமுடன்வையகத்து சித்துபாரே. (௮௫௪)

பாரேதான்கோரக்கண்ட ரிஷியார்தம்பால் பாருலகிலுபதேசம் பெற் றசித்து, நேரேதான்சமாதிமுகந் தன்னிற்சென்று நேர்மையுடனிருப த்தோரா யாண்டுமட்டும் தீரேதான்சமாதிமுக மிருந்துமல்லோ தீர்க்க முடன்வையகத்தில் வந்தசித்து, பேரேதான்நூல்களிலே பூசியென்று ம் பேருலகில்கீர்த்திபெற்ற சித்துதாமே. (௮௫௫)

தாமானசாத்திரங்க ளறிந்தசித்து தாரணியில்நெடுங்கால மிருந்த சித்து, கோமானையுபதேசம் பெற்றசித்து குவலயத்திலிவர்போலும் யாருமுண்டோ, பூமான்களானவொரு மாண்பரெல்லாம் புகழ்ச்சியுட னிவர்பாதம் புகழுஞ்சித்து, சாயானியமானதொரு சித்துபோலே சட் டமுடன்வையகத்திற் காணோந்தாமே. (௮௫௬)

தானானபின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் தகமையுடன்பூபாலா மணிமேகேளீர், பானுனிராஜனுக்கிய முனிவர்தாமும் பாருலகில்வந்த

ங்கால மாலசித்து, கோனுளவயததுவு மேதென்றுக்கால் கொற்றவ னேதுலாயிரத்தி யெண்பதாண்டு, மானுனசமாதிமுகஞ் சென்றசித்து மார்க்கமுடனிருபத்தி ரெண்டுதானே. (௮௫௭)

ஆண்டானவருஷமது யிருபத்திரெண்டு வப்பனேசமாதிமுக மிரு ந்தசித்து, பாண்டவர்களிவரும் காணுமுன்னே பாருலகில்வெகுகால மிருந்தசித்து, தாண்டவம்போல்ஜெமதகினி முனிவர்தானும் தாரணி யில்பெற்றெடுத்த சித்துவாகும், மாண்டதொருமாண்பரெல்லாம் வை யகத்தில் வாழ்த்தியல்லேலாவஞ்சலிகள் செய்தசித்தே. (௮௫௮)

சித்தானசித்துமுனி யிவர்தானப்பா சிருலகில்ரிஷிவர்க்க கூட்டத் தோடு, முத்திபெறவல்வழிக்கு வுறுதிகொண்டு மூதுலகில்சின்மயத் தை மனதிலுன்னி, சத்தியுடன்மனோன்மணியை தியானித்தேதான் சதாகாலநிஷ்டைகுறி களங்கனுகி, முத்தியுடன்வையகத்தில் தவசியாகி பொன்னுலகுபதிதனிலே சேர்ந்தார்காணே. (௮௫௯)

சேரவேயின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் செம்மலுடன்புலி ப்பாணி மைந்தாகேளு, வாரமுடன்சண்டிகரர் வளமைகேளும் வண் மையுடன்வயததுவு மேதென்றுக்கால், தீரமுடன்நானூற்றி யறுபதா கும் தீர்க்கமுடனவர் நாலிற சொன்னதீதி, சாரமுடன்சமாதிமுகஞ் செ ன்றசித்து சாங்கமுடன்வையகத்து சித்துகாணே. (௮௬௰)

காணவேசமாதிமுகம் பத்துரெண்டு கருவாசலுன்றுடனே தானு ங்கூட்டி, பூணவேபூமிதனி லிருந்தசித்து பொங்கமுடன்ஞானமென்ற கிரியாசித்து, நீணவேநானுயுக வதிசயங்கள் நேராகியுலகுபதில் வதி ந்தசித்து, சீணமதுயில்லாமல் நெடுங்காலந்தான் சிவனோடிருந்ததொ ரு சித்துமாச்சே. (௮௬௧)

ஆச்சப்பாயின்னமொரு மூறைமைசொல்வேன் வப்பனேசங் கனிலாய்க்கொண்டபாலா, ஏச்சலதுவாரான லிருந்தசித்து யெழிலா னதிருமூல ரென்னலாகும், பாச்சலென்றவயததுவு மேதென்றுக்கால் பாரினிலேலவாயிரத்து சொச்சமாகும், மூச்சடக்கிசமாதிமுகந் தன்னி லப்பா மூதுலகில்நெடுங்கால மிருந்தசித்தே. (௮௬௨)

நெடுங்காலஞ்சமாதிமுகந் தன்னிற்றானும் நேர்மையுடனறுபதுவ ருஷமாண்டு, கடுந்தவசியாயிருந்த சித்துதானும் கண்டுகொள்ளாவதி சயங்கள் மெத்தவுண்டு, படுந்துயரந்தானறியார் மாண்பர்க்கப்பா பாரி னிமேலதிகொடுத்து வதிதஞ்செய்வார், சுடுவாரிதமைக்கண்டு தீர்த் தஞ்சொல்லி தப்புறவய்விதியுரைத்து வழிசொல்வாரே, (௮௬௩)

வழியானமுறைபாடு தாமுரைத்து வண்மையுடனுபதேசங் கூறி யல்லோ, பழியானவார்த்தைக்கு யாளாகாமல் பாருலகில்சித்துவிளை யாடச்சொல்லி, முழியானவார்த்தையது வுபதேசங்கள் மூர்க்கமின்றி தானுரைக்கும் ஞானசித்து, சுழியானவாசியிலே தனிலிருந்து சுத்தமு டன்வையகத்தி லிறந்தார்தாமே, (௮௬௪)

போகர்புலிப்பாணிக்கு சித்தர்கள்பிறப்பும் திருநட்சத்திரமுங்கூறல்.

இறந்தாரேயின்னமொரு மார்க்கங்கேளு யெழிலானபதினெண் பேர் முனிவர்தானும், பிறந்ததொருவளப்பங்கள் யாவுங்கண்டு பேரி ன்பநிலைதனையே மனதிலுன்னி, சிறந்ததொருநட்சத்திர யோகங்கண் டு சீரானபாதங்கள் தான்வகுத்து, துறந்துமேகவ்கோடி ரிஷிகள்தா னும் துப்புரவாய்நாற்பத்தெண் பேர்தானே. (௮௬௫)

போனபிவர்களது பிறப்புதானும் பேரின்பநட்சத்திர கால்தான் கூட்டி, சீரானசீஷபதி மாண்பருக்கு தீர்க்கமுடனுபதேசஞ் செய்த நாலாம், கூரானவையகத்து மாண்பரெல்லாங் குறிப்புடனேதானறிய மனதுவந்து, வீரானபோகரே மூயிரத்தை விருப்பமுடனுபதேசஞ் செய்திட்டேனே. (௮௬௬)

செய்தேனேபுலிப்பாணி மைந்தாகேளு செங்கமலகரத்தானே யி ன்னஞ்சொல்வேன், மெய்யானவேதமிது சத்தகாண்டம் மேதினியில் சகலகலைக் கியானமெல்லாம், மையவேவடநூலைத் தனையாராய்ந்து பா டினேன்காண்டமது யேழாயிரந்தான், துய்யதமிழ்ப்பரியாஷைத் தன் னை நீக்கி துப்புரவாய்வோதிவைத்தேன் காண்டந்தானே (௮௬௭)

காண்டமாமேழாயிரம் பெருநூலப்பா கருவிகாணுதிமுதலிதிலட க்கம், பூண்டமனதுறுதியினு லிந்தநூலைப் புகட்டினேன்காலாங்கி கடா ட்சத்தாலே, வேண்டியதோர்சீனபதி கருமானங்கள் வேற்றுருவமில லாமல் கூறினேன்யான், ஆண்டவையாமெந்தன்குரு நாதன்றன்னு லப் பனேபாடிவைத்த நூலிதாமே. (௮௬௮)

நூலான நூலிதுதான் நுணுக்கமெத்த நுட்பமுடன்காலாங்கி பிற ந்தவண்ணம், பாலானசித்திரையா மாதமப்பா பாங்கானவசுவனியாம் நாலாங்காலாம், சேலான ஜெகதகுரு மைந்தனப்பா செயலானபாக்கிய மும் பெற்றமைந்தன், காலானகாலாங்கி நாதரப்பா காசினியில்வந்துதி த்த வுருவுமாச்சே, (௮௬௯)

உருவானமார்க்கமது யின்னுஞ்சொல்வேன் வுத்தமனேபோகரது பிறப்புநேர்மை, கருவானமாதமது வைகாசியப்பா கருத்தானபரணியது ரெண்டாங்காலாம, குருவான அஞ்சணத்திலொருவனப்பா கொற்றவனேவிசுவகாமன் ஸமாநதனுக்கும திருவானபோகரிஷி யென்றுமல்லோ செப்பினாயலநூலகள வேதமாமே. (௮௭௰)

வேதமாமின்னமொருமார்க்கங்கேளு வெளியானபுலிப்பாணி மைந்தாபாரு, போதமாமரோமரிஷி பிறந்தநேர்மை புகலுகிறேன்மானுக்களறியவென்று, சீதமுடன் ஆனியாந் திங்களப்பா நிஷ்களங்கமான கார்த்திகைதானுக்கும, வீதமுடன்பயமறிய மூன்றுங்காலாம் விறப்ப ரூர்பிறந்ததொரு நாளுமாசமே. (௮௭௧)

ஆசசப்பாசெம்படவன் தனையனப்பா வப்பமாதுருவுங் குறத்தியாகும், பாசமுடன்பெற்றதொரு கண்டாராயத்து பாதுவைத்தமரப்பதுவு மெய்யேயாகும், மாச்சமுனி குலத்தார் பெற்றமைந்தன மகத்தானரோமரிஷியெனனலாகும, மூச்சடங்கிசெயற்கொருகாரணனப்பா மூதுலகிற்சென்றதொரு சித்துமாசமே (௮௭௨)

சித்தானமார்க்கமது யின்னஞ்சொல்வேன் சீபாலாயெந்தனிரு கண்ணேகேளும, பத்தியுடனா மச்சமுனி பிறந்தநேர்மை பாங்குடனேயாடியாந் திங்களப்பா, சதயமுடன்சேரணியா முதற்காலப்பா சாங்கமுடன்பிறந்ததொரு நாளுமாசம், புத்தியுள்ள ஆதலமான குலத்துதித்த புகழானகன்னியுட மைந்தனாமே. (௮௭௩)

ஆமேதான்மச்சமுனி யடவுசொன்னேன் வனப்பானபுலிப்பாணி மைந்தாகேளு, நாமேதான்சொன்னபடி சட்டநாதர் நன்மையுடன்பிறந்ததொரு நேர்மைதானும, போமேதான ஆவணியாந்திங்களப்பா பொங்கமுடன்மிருகசீரிடமுமாகும, வேமேதான்விட்டகுறை மூன்றாங்காலாம விருப்பமுடனவதரித்த பாலனாமே. (௮௭௪)

பாலனாஞ்சிங்களவ தேவதாசி பட்சமுடன்பயின்றெடுத்த புத்திரனதான, சீலமுடனசட்டமுனி யென்றுசொல்லி சிறப்புடனேகுலவலயத்தில பேருண்டாச்சு, கோலமுடன்யின்னமொரு மார்க்கம்பாரு கொற்றவனேபுலிப்பாணி மைந்தாகேளு, தாலமுடனிடைக்காடர் பிறந்த நேர்மை சட்டமுடன்சொல்லுகிறேன் தன்மையாமே. (௮௭௫)

தண்மையாம்புரட்டாசி மாதமப்பா தாழ்வாகயிரணியனைக் கொன்றமாதம், வண்மையாம்திருவாதிரை ரெண்டாங்காலாம் வளப்பமுடனவதரித்த சிசுபாலன்றான், பெண்மையாங்கானகுற ஜாதியப்பா பேரானகானீனன் பெற்றபிள்ளை, திண்மையாமிடைக்காடார் தானுமாகும் தீர்க்கமுடன்பூவுலகி லிருந்தசித்தே. (௭௬௬)

சித்தாவின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் சிறளானநவகோடிரிஷிகள்தன்னில், புத்தியுள்ளதன்வந்திரி பகவான்றானும் பூபாலரானதொரு மாயாசித்து, சத்தியுள்ளமகாவிஷ்ணுவென்றேசொல்வார் தாரணியில்மானிடமாஞ் சித்துவாகும், முத்திபறவைப்பசியாந் திங்களப்பா முனையானபுனர்பூசம் நாலாங்காலே. (௭௬௭)

காலானதன்வந்திரி பிறந்தநேர்மை காசினியிலவர்நூலிற் சொன்னவாறு, நாலானபலநூலிற் கண்டாராய்ந்து நுட்பமுடன்பாடிவைத்தேன் குருநூலாகும், பாலானயிருபிறப்பாளரப்பா பாங்கானஅனுலோமன் பெற்றபிள்ளை, சாலானசாத்திரங்கள் யாவுங்கூறும் சகலவிதபண்டிதருங் காணார்காமே. (௭௬௮)

கண்டேனேகீர்வாணபாஷையப்பா காசினியில்சமஸ்கிரத் பாஷையாலும், விண்டதொருயித்தாலி பாளபந்து விருப்பமுடன்பாகவத பாஷையாலும், கொண்டேனமனந்துறுதி யாடியின்றானும் கொற்றவனேகுவலயத்தில் கண்டாராய்ந்து, விண்டுமிகயானுரைத்தேன்விஷ்ணு காதை விளம்பிடவேசத்தகாண்ட முண்மைதானே. (௭௬௯)

தானுவின்னமொரு மார்க்கப்பாரு தயவானபுலிப்பாணி மகனேகேளு, கோனுனென்குருவாங் காலாங்கிநாதர் கொற்றவனுர்தானுரைத்த வுளவுகண்டேன், பானுனமூலத்தி னீசரப்பா பண்புடனேபிறந்ததொரு நேர்மைதானும், மானுனகார்த்திகையாங் திங்களப்பா மகத்தாலாபூசமது மூன்றுங்காலே, (௭௮௦)

மூன்றானபாதமது மூலத்திசர் முனையாகப்பிறந்ததொரு நேர்மையப்பா, சான்றவாராமூலத்தி னீசரப்பா சட்டமுடன்வந்துதித்த நாளுமாகும், குன்றதொருஜாதியிலே பள்ளஜாதி யெழிலானகன்னிகையும் பெற்றபிள்ளை, மேன்மையுடன்தான்பிறந்தார் மூலத்திசர் மேதினியில் ரிஷிதனக்குப் பிறந்தார்தாமே. (௭௮௧)

பிறந்ததொருயின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் பேரானபுலிப்பாணி மைந்தாபாரு, சிறந்ததொருஅகத்தீச ருதித்தநேர்மை சிறப்பா

னதனுர்மாத மென்னலாகும், துறந்ததொருஆயிலியம் மூன்றும்பாதம் துப்புறவாயவர்பிறந்த நாளுமாச்சு, கறந்ததொருபால்பசுவும் கண்ணு மாரி காசினியில்பிறந்ததொரு சித்துமாச்சே. (௮௮௨)

ஆச்சப்பாஅகத்தியரின் பிறப்புநேர்மை அவனிதனிலாராலுமுடி யாதப்பா, மூச்சடக்கிமலையின்மேல் நின்றசித்து முனையானகமலமதி ல் பிறந்தசித்து, மாச்சலுடன்தேவரிஷி வரத்தினாலே மகாதேவர்வந் துதித்த திருவுமாகும், ஏச்சலதுவாராத கும்பயோனி யெழிலானவக ஸ்தியரென் றறையலாமே. (௮௮௩)

அறையவேயின்னமொரு வயணஞ்சொல்வேன் வன்பானகண்ம ணியே சொல்லக்கேளீர், நிறையவேசிவவாக்கியர் பிறந்தநேர்மை நீதி யுடன்சொல்லுகிறேன் நினைவாய்க்கேளு, குறையாததைமாதம் மகத் திலப்பா கொற்றவனேரெண்டாங்கா லென்னலாகும், மறையவேதிரு மூல கூட்டத்தாரில் மகத்தானகன்னியது பிள்ளையாமே. (௮௮௪)

பிள்ளையாஞ்சிவவாக்கியரென்னலாகும் பேரானதிருமூலர்மரபிலு ள்ள, வள்ளலெனுஞ்செய்மடவார் கன்னிதன்னின் மகத்தானசிவவாக் கிய ராகும்பாரு, தெள்ளுதமிழ்க்கவிவாண ரிவர்க்கீடுண்டோ செந்த மிழின்சுவையறிந்த சிவவாக்கியர்தான், கள்ளமதுவாராத புனிதபால ன் காசினியிலவதரித்த வுருவுமாமே. (௮௮௫)

உருவானயின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் வுத்தமனேசிகாம ணியே யுண்மைபாரீர், திருவானராமரென்ற தேவரப்பா தீர்க்கமுடன் வந்துதித்த நேர்மைகேளீர், கருவானமாசியென்ற திங்களப்பா கடிய தோர்பூரமது ரெண்டாயபாதம், அருவமுள்ளராமரென்ற தேவர்தா னும் வப்பனேவந்துதித்த நாளுமாச்சே. (௮௮௬)

நாளானநாலாங்கா லென்னலாகும் நலமானராமதேவர் பிறந்தநா ளாம், ஆளானரோமரிஷி பாட்டனுக்கு அழகாகவந்துதித்த ராமதேவ ன், கோளானநூல்களிலே குற்றஞ்சொல்லார் குறையானமுறைப்பாடு யேதுஞ்சொல்லார், பாளானநூல்தனிலே சொல்லாதாலே பட்சமுடன் யானுரைத்தேன் பண்பாய்க்கேளே. (௮௮௭)

பண்பானயின்னமொரு மார்க்கம்பாரு பாலகனேவைந்தறிவிற்சிற ந்தபூலா, திண்பானபுஜண்டருட மார்க்கஞ்சொல்வேன் தீர்க்கமுடன் பங்குனியாந் திங்களப்பா, கண்பானவுத்திரமா மிரண்டாம்பாதம் காசி னியில்வந்துதித்த திருவுமாச்சு, மண்பானவ்ரரிஷியின் சாபத்தாலே மார்க்கமுடனவதரித்த பாலனுமே. (௮௮௮)

டாலனுஞ்சந்திரகுலம் விளங்கவந்த பாரினிலேவெள்ளாட்டி பெ
ற்றமைந்தன், மாலானரதிகேளி மடந்தையாகும் மகத்தானவருந்துதியு
மென்னலாகும், சேலானபாக்கியமும் பெற்றபாலன் செம்மலுடன்சா
பத்தால் வரத்தில்வந்து, தாலானதவசியென்ற நாமம்பெற்று தாரணி
யில்புஜண்டரென்ற பேருண்டாச்சே. (அஅகூ)

பேரானயின்னமொரு வழிதான்சொல்வேன் பேருலகில்கீர்த்தி
பெற்ற புனிதவானே, சீரானகருவூரார் பிறந்தநேர்மை செப்புகிறேன்
செம்பவள வாயாகேளீர், கூரானசித்திரையா மாதமப்பா குறிப்பான
வஸ்தமது ரெண்டாமபாதம, தேரானநாட்களிலே பிறந்தசித்து தேற்
றமுடன்கருவூரா ரெனலாமே. (அகூய)

ஆமேதான்தேவநத்த மொன்றுசொல்லி வப்பனேயவன்மைந்தன்
மயினென்பார்கள், நாமேதான்சொன்னபடி மயனுக்கல்லோ நாடாளக்
கருவூரார் பிறந்தாரல்லோ, போமேதான்பொன்னுலக தேவதச்சர்
பொங்கமுடன்கருவூரார்க் கிதமல்ல. ஆமேதான்பாண்டியர்க்கு வுருவு
செய்து வப்பனோதான்கொடுத்த சித்தராமே. (அகூக)

தாமேகயின்னமொரு வழிபாடல்லோ சாற்றுகிறேன்புத்தியுள்ள
பூபாலகேள, கோமானகளறிந்ததிலலே சாத்திரதோஷம கொற்றவ
னேயாமாண்ட வரைக்குஞ்சொல்வோம், சாமானியமெனறதொருபுண்
ணுக்கீசர் தாரணியில்வந்துதித்த நேர்மைசொல்வேன், பூமான்களாரே
னு மறிந்ததுண்டோ புகட்சியுடன்கூறுகிறேன் புனிதவானே.(அகூஉ)

புனிதமாம்வைகாசிமாதமப்பா புகழானபுண்ணுக்கு யீசர்தாமும்,
வனிதமுடன்சித்திரையாமிரண்டாம்பாதம மகத்தானபுண்ணுக்கர் பிற
ந்தநாளாம், சனியிராகுடன்கூடி பிறந்ததாலே சாங்கமுடன்தேவரிஷி
தன்னைப்போல, மனிதனுயவதாரந் தாமெடுத்து மாட்டிடைச்சியமங்
கலியின் பிள்ளையாமே. (அகூங)

பிள்ளையாமின்னமொரு பாகஞ்சொல்வேன் போரானகண்மணியே
புகலக்கேளீர், எள்ளளவுபிசகாத புலிப்பாணியும்மை யேற்றமுடன்
சொல்லுகிறேன் யெழிலாய்க்கேளு, உள்ளபடிநீபிறந்த மாதமப்பாவுத்
தமனேபுரட்டாசி யென்னலாகும, களையிலாசோதியென்ற நாலாங்கா
லாம் கருத்துடனேயவதரித்த சித்துமாச்சே. (அகூச)

ஆச்சப்பாவேடர்குலம் வந்துதித்த வப்பனேகன்னிகழி யாதமன், கைகை, மூச்சடங்கிகானகத்தில் தவசியாக மூர்க்கமுடன்முனிருந்த ரிஷி யாரோடு, பேச்சிகளும்மிகப்பேசி வாதுகூறி பேரானநவகண்ட ரிஷி தானப்பா, பாச்சலுடன்கன்னிகைதனையச் சேர்ந்துமல்லோ பாலகனே பெற்றெடுத்த சிசுதானீயே (அகூரு)

சிசுவானபாலகனை நீதானப்பா சிறப்புடனேகாலாங்கி கடாட்சத் தாலே, பசுபோலேவேடனைத்தனே வாகனமுமாகசி பாரினிலேசுற்றிவந் த பாலனுக்கு, நிசிதமுடன்போகனுக்கு சீஷனாகி நிஷ்களங்கமானதொ ரு புத்திவானாய், விசுவாசமுள்ளதொரு பாலனாக மேதினியில்வந்துதி த்த சித்துமாச்சே. (அகூசா)

சித்தானபின்னமொரு குறிதான்சொல்வேன் சிறப்பானபுலிப்பா ணி மகனேகேளாய் முத்தமுடனந்திசா பிறந்த நாமை முதலாகா தானறிய சொல்வேனப்பா, நித்தமதுவைகாசி மாதமப்பா நீடானவிசா கமது நாலாங்காலாம், பக்தியுடன்தான்பிறந்த நந்திதேவர் பாரினிலே தேவஸ்தான குருவுமாச்சே (அகூஎ)

குருவானதேவதா ஸ்தலங்கள்தன்னில கொற்றவனென்றுமென்ற பேருண்டாச்சு, அருவானதேவேந்திரன் சாபத்தாலே பெருமானப்பிரம்ம குலந் தனிலுதித்து உருவாகிமானி-ஜெம்மமாகி வுகதமனேகன்னி யது வயிறதிறதயசி, திருவானநந்திரூபம கொண்டுமல்லோ சிறப்புட னேவந்துதித்த சித்துதானே (அகூஅ)

சித்தானபின்னமொரு மார்க்கமப்பாரு சீருளபுலிப்பாணி மைந் தாகேளு புத்தியுள்ளபுலஸ்தியனை பிறந்தநாமை பூதலத்திலேலவரா லுக்கூறப்போமோ, முத்திதருமாவணியாம் திங்கள்தன்னில் முனையா னஅனுஷமாம நாலாங்கால்ல பத்தியுடனதான்பிறந்தாா புலஸ்தியர் தானும பாரினிலேவந்துதித்த குருவுமாச்சே (அகூகூ)

உருவானபுலஸ்தியரின் மார்க்கங்கேளு ஓகோகோநாதாக்க ளறிந் ததிலலே, கருவானதேவதா ரிஷிவரதாால கமலமுனிதன்வயறதிற் பிற ந்தபோன், திருவானவகஸ்தியருக குருததசீஷன் தீர்க்கமுள்ளசிவராஜ புனிதயோகன், பருவானதிருமந்திர வுபதேசந்தான் பாருலகில்புலஸ் தியரென் றறையலாமே. (கா)

அறையலாமின்னமொரு மார்க்கம்பாரு வப்பனேபுலிப்பாணி மை ந்தாகேளு, நிறையவேவேதமென்ற வியாசர்தாமும் நேர்மையுடன்தா ன்பிறந்த சேதிவண்ணம், மறைபோன்றவானியாந் திங்களப்பா மகத் தானகேட்டையது ரெண்டாங்கால்தான், குறைபோன்றநாளதனி லுதி த்தபாலன் கொற்றவனார்வேதமென்ற வியாசர்தானே. (௯௱௧)

தானனபாராசரது மைந்தனப்பா தாக்கானவியாசரென்றே செப்ப லாகும், கோனனைநூற்படியே யானுரைத்தேன் கொற்றவனார்மாண்ப ரிட மறியவேண்டி, பானனையின்னமொரு பதமுஞ்சொல்வேன் பாரினி லேமாண்பர்களுந் தெரியவேண்டி, மானனபுலிப்பாணி யுந்தமக்கு மா ர்க்கமுடன்முறைபாடு சொல்லலாச்சே. (௯௱௨)

சொல்லவென்றால்தேறையர் மார்க்கந்சொல்வேன் சுந்தரனேபங் குனியாந் திங்களப்பா, வெல்லவேமூலமது ரெண்டாங்காலாம் மேன் மையுடனவதாரஞ் செய்தநாளாம், புல்லவேதேறையர் முனிவர்தானு ம் புகழானபிரம்மகுலந் தன்னிலப்பா, செல்லவேவர்ணரிஷி தன்றனக் கு சிறப்புடனேபெற்றெடுத்த பாலனாமே. (௯௱௩)

பாலனுந்தேறையர் முனிவர்தானும் பண்பானவகஸ்தியருக் குக ந்தசீஷன், சீலமுடன்ஞானோபதேசம்பெற்று சிறப்புடனேமலைதனிலே யிருந்தசித்து, கோலமுடன்யமமென்ற வித்தைதன்னை குவலயத்தில் மாண்பர்களுக் காகவேண்டி, காலமுடனகஸ்தியராங் குருபாதத்தை தண்மையுடனெதிர்த்ததொரு சீஷனாச்சே. (௯௱௪)

சீஷனுமின்னமொரு மார்க்கம்பாரு சீருள்ளபுலிப்பாணி மன்னவா கேள், தோஷமதுநேராமல் யாக்கோபென்னுந் துய்யரவாய்ஞானமெ ன்ற சித்துதானும், வேஷமதுதான்மாற்றி நயினயத்தை விருப்பமுடன் கண்டுவந்த யோகசித்து, பாஷமுடன்றானிறந்த நேர்மைகேளும் பா ரினிலேபங்குனியா மாதந்தானே. (௯௱௫)

மாதமாம்பங்குனியாந் திங்களப்பா மகத்தானபூராடம் மூன்றாங் கால்தான், தோதமுடன்பக்கிரி யாக்கோபுதானும் தொல்லுலகைத்தா ன்மறந்து பிறந்தசித்து, சாதகக்கள்பொய்யாது விதியுந்தப்பா தாரணி யில்நெடுங்கால மிருந்தசித்து, கோதமெனும்புலஸ்தியனார் தானுமப்பா கொற்றவனாரீன்றெடுத்த புனிதனாமே. (௯௱௬)

புனிதமாமகமது மார்க்கந்தன்னில் புகழானகன்னியவள் பெற்ற பாலன், சனியுடனேரேவதியுங்கூடச்சேர்ந்து சட்டமுடன்வந்து தித்த

யாக்கோப்பா, மனிதனெனுஞ்சென்மமது வெடுத்துமல்லோ மகத்தா னமமது யார்க்கருஞ்சென்று தனியானமக்கமென்ற தேசந்தன்னில்சட் டமுடன்போனதொரு சித்துமாமே (௯௱எ)

சட்டமுடனின்னமொரு மார்க்கந்தேனு சங்கரனேபுத்திரியுள்ள மணியேபாரு, திட்டமுடன்கொங்கணனார் பிறந்தநேர்மை திர்க்கமுட ன்யானுரைப்பேன் சுகந்தமாக, வட்டமுடன்சித்திலோர்கள் திங்களப் பாலமானஉத்திராட முதநாள்தன்னில், அட்டதிசைதான்புகழ பிரதாபாலன் வன்பானகொங்கணவ ரென்னலாமே. (௯௱அ)

என்னவேயவர்பிறந்த நேர்மையப்பா வெழிலானசனகர்குலத் தல க்குதித்த, பன்னவேகாளினன் பெறாபலன் காசினியில்வந்துதித்த திருவுமாகும், பொன்னரங்கபூண்டதொரு புனிதவானும் புகழான தேவதாசித்துமாகும் கல்லைவதுகுசெப்பமன கொங்கணவர்தானுங் காசினியிலவதரித்த திருவுமாச்சே. (௯௱கூ)

ஆச்சப்பாயிக்கதொருநாளுஞ்சொல்வேன் அப்போயுயப்பானி மைந்தனே, மூச்சடக்கிப்போனதொரு மாயசித்து முனியானதட் சனு மூர்த்திபாரும், பாசகுடைதட்சனைப பெரிலே காணுமு பாதகுட னேபன்னிகொண்ட சித்துமாகும், ஆசனிக ரானதொரு மாயசித்து அவர்பிறந்தவண்மைதனைப் புகலுவேனே (௯௱ய)

புகலுவேன்துவணியாப் திக்கெல்லாதும் பூரணமாந்திருவோணமு தற்காலப்பா, திகலவேஉத்தமனுஆத்திரேயனாதிபு னருனாபிறந்த நா ளாநக்கு, ஆலவேகெம்பீலவாசன்பேரம் சனமானவஷ்டகுல சம்பிரதாயன், சகலநம்பிக் காரு நாசனிகத காசினியிலவதரி க்க சித்துமாச்சே. (௯௱யக)

சிதரானகுலசம்பிர காயபூபன் சிரமாதட்சனு றார்த்திநாயன், முத்தானமின்னமொரு யாக்கருஞ்செல்வேன் மூதுலகைக்கடந்தொ ரு புனிதனுக்கு, பத்தியுளாரேகோரகர் பிறந்தநேர்மை பண்பானகார்த் திகையா மென்னலாகும், சித்திபெறதுவிடமா மிரண்டாங்கால்தான் சிறப்பானநாளென்று சொல்லலாமே. (௯௱யஉ)

சொல்லவேகோரகர் பிறந்தநேர்மை சுந்தரனார்வசிஷ்டமகா ரிஷி யாருக்கு, புல்லவேகானகுற ஜாதிப்பா புகழ லகன்னியகள் பெற்றபி ள்ளை, வெல்லவேஅனுமோமென்னலாகும் வேதாந்தகோரக்கர் சித் துதானும், நல்லதொருபிரகாச மாமசித்து நாதாந்தசித்தென்று செ ப்பலாமே. (௯௱யங)

என்னவேயின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் யெழிலானபுலிப் பாணி மன்றுபாரு. தன்னவேகௌபால சித்துதாமும் சுடரொளியாம் பிரகாச மானசோதி, மின்னவேவைகாசி மாதமப்பா மிக்கானசதயமது ரெண்டாங்கால்தான், சன்னயமாயவர்பிறந்தநாளேயாகும் நலமானகௌ பால சித்தபாரே. (௯௱௪)

பாரேதான் தேவதா தச்சனப்பா பாங்கானஜகதகுரு சம்மாளன்று ன், நேரேதான்தவத்துதித்த சித்துவென்றும் நேர்மைதானகௌபாலரிஷி தானென்றும், சீரேதான்வயிரக்கல் கண்டெடுத்து தீர்க்கமுடன்பொன் னுரைத்த சித்துவென்றும், சீரேதான்பலநூல்காப் பியங்கள்கண்டு செ ப்பினோன்கௌபால சித்துதானே. (௯௱௫)

காணவேயின்னமொருபுதுமைசொல்வேன் காசினியில்காதாக்கள் கூறவில்லை, தோணவேஜோதியென்ற முனிவர்தானும் துப்புரவாய்தா னுதித்த வண்மைபாராய், பூணவேபுரட்டாசி மாதமப்பா புகழானபூ ரட்டாதி யென்னலாகும், பேணவேநாலாங்கால் தன்னிலப்பா மகத்தான சோதிமுனி யுதித்தவாறே. (௯௱௬)

வாறானபிரம்மரிஷி மைந்தனப்பா மகத்தானஜெகதகுரு தன்னிலு தித்த, தாரானவயன்பாது மறவர்ஜாதி துலக்கானசோதிமுனி முனிதானு ரும், பேரானமலைகுகைகள் குன்றுதேடி விந்தமறைகளெல்லாமே வாரா ய்ந்தேதான், கூறுவதாயிரக்கல் கண்டெடுத்த கொற்றவனார்சோதிய முனிதானுச்சே. (௯௱௭)

ஆச்சப்பாயின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் மயிலானபுலிப்பாணி வண்ணமேலே, மூச்சடக்கிசெய்தவத்தோரு படரர்தானும் முனிபுங் கனேதான்பிறந்த வண்மைகேளீர், பேச்சவென்றமார்கழியாம் திங்களப் பா மகத்தானஉத்திரட்டாதிதானும், வீச்சடங்கேளப்பா வெண்ண லாகும் விசாகமானநாள்தனிலே பிறந்தார்தாமே. (௯௱௮)

பிறக்காரேடமரகர் யாரென்றக்கால் பேரானசுந்தரனார் மைந்த னப்பா, இறந்தகொரு சுந்தரற்கு மைந்தனப்பா யெழிலானபிள்ளையது ரெண்டாம்பிள்ளை, துறந்தகொருஞானியப்பா மெய்ஞ்ஞானி சுத்தமுள் ளவீராதி வீரனப்பா, மறந்தகொருமார்க்கமெல்லாம் மந்திரத்தால் மகத்தானபுத்தியின லறிந்தசித்தே. (௯௱௯)

சித்தானபின்னமொருமகிமைசொல்வேன் சீர்பாலாபுண்ணியனே புகலக்கேளீர், முத்தானஞானியிலு முதிர்ந்தஞானி முனையானசுந்தர னூர் சித்துதாமும், புத்தியுள்ளபூபாலன் தான்பிறந்த புகழானமாதமது யேதென்றாக்கால், சுத்தமுள்ளஆவணியாந் திங்களப்பா சுடரானசுந்தர னூர் பிறந்தார்தானே. (௬௨௰)

தானானரேவதியா மூன்றாங்காலம் தண்மையுடன்பிறந்ததொரு நாளுமாச்சு, கோனானசுந்தரனு ருளவுகேட்டால் கொற்றவனேசிக்கிம் தா மலையினுச்சி, தேனானவகண்ட ரிஷியார்தம்மின் சிறப்பாகயவர்தம க்கு போனதும், மானானமகத்துவங்க ளுள்ளசித்து மண்டலத்தில்சிவ ஞான சித்துபாரே. (௬௨௧)

பாரேதானின்னமொரு வதிதஞ்சொல்வேன் பாலகனேசிறுபாலா பகரக்கேளும், ஆரோதான்சொன்னார்க ளிதிகாசங்கள் வப்பனேயார்தா னுஞ் சொல்லவில்லை, நேரேதான்யின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் நெடிதானவரரிஷியா மென்றசித்து, சீரேதானவர்பிறந்த வண்ணமப்பா சிறப்புடையசித்திரையாந் திங்கள்தானே. (௬௨௨)

சித்திரையாமசுவனிதான்மூன்றாங்காலம் சிறப்பானநாள்தனிலே பிறந்தாரென்றும், பத்தியுடனவருடைய மார்க்கஞ்சொல்வேன் பண்பா னதிரணுக்கிய முனிவர்போன், முத்திவழிசெல்லுகின்ற சித்தவாகும் முனையானவரரிஷியா மென்றும்பேரு, சத்தியங்கள்தவராத விசுவயோகி தாரணியில்வரரிஷியா மென்னலாமே. (௬௨௩)

என்னவேயின்னமொரு வயணஞ்சொல்வேன் மெய்ஞ்லானயெந்த வது புத்திவானே, துன்னவேவால்மீகர் பிறந்தநேர்மை துப்புரவாயவ ருடைய வளமைசொல்வேன், மன்னவனுக்கொப்பான வால்மீகர்தானு ம் மகத்தானலோகமதில் பெரியசித்து, சொன்னதொருபுரட்டாசி திங்க ளப்பா சொற்பெரியவனுஷமது நாலாங்காலே. (௬௨௪)

காலானவால்மீகர் வேடனப்பா கன்னியாள்பெற்றதொரு குறத்தி மைந்தன், கோலானமராமரா வுபதேசங்கள் கொற்றவனார்பெற்றதொ ரு சித்துமாச்சு, பாலானமாண்பருக்கு ஞானகாண்டம் பகுத்தறியவால் மீகர் சரிதையப்பா, மாலானவவர்பெருமை யர்க்குண்டு மகத்தானரி ஷிதனுக் கில்லைதானே. (௬௨௫)

இல்லையேயின்னமொரு சரிதைசொல்வேன் யெழிலானயெந்தன
து புத்திமாரா, தொல்லுலகில்கீர்த்திபெற்ற மாதுசித்து துப்புரவாயூர்
வசியா ளென்னுமாது, எல்லவருந்தான்புகழ வைகாசிதன்னில் யெழி
லானபூரமென்ற நாலாங்காலாம், வல்லமையாய்வந்துதித்த தேவமாது
வையகத்திலூர்வசியா ளென்றமாதே. (கூ௨௬)

மாதானவூர்வசியாள் மார்க்கந்தானும் மகத்தானகானகத்து ரிஷிதா
னப்பா, நீதானபிரிங்கிமகா ரிஷியின் பேதசி தீர்க்கமுடன்கானினன் பெ
ற்றமாது, ஆதானசாத்திரங்கள சித்துநூலில் அறிவுடையவூர்வசியாள்
மாதுதானும், சோதானந்தான்குடித்துபிறந்தமாது குவலயத்திலூர்வசி
யாஞ் சித்துகாணே. (கூ௨எ)

காணவேயின்னமொரு கவிதைசொல்வேன் கண்ணானகண்மணி
யே யழாக்கேண்மோ, பூணவேபுலிப்பாணி மைந்தபாரு புகழானயெ
ந்தனிரு மணியேகேளும், வேணவேயின்னம்வெகு வனேகசித்து ரீவ
டமதுபூண்டுமெல்லோ யிருந்தாரப்பா, மாணமருங்கல்வியுள்ள சித்துத
ன்னில் மகத்தானசித்துகளைக் கூறலாச்சே. (கூ௨அ)

கூறவென்றால்கமலமுனி பிறந்தநேர்மை கூறுவேன்வைகாசி திங்
களப்பா, மாறலுடன்பூசமது ரெண்டாங்காலாம் மகத்தானகமலமுனி
பிறந்தநாள்தான், சிறலதுவாராத தேவசித்து தெளிவுடையவையகத்
துக் குகந்தசித்து, ஆறவேயொருவரால் கூறப்போமோ வப்பனேஞா
னவொளி சித்துபாரே. (கூ௨கூ)

பாரேதான்சித்தொளியின் மகிமைபாரு பாங்கானகாலாங்கி பாட்
டன்வர்க்கம், நேரேதான்வம்முஷத்திற் பிறந்தசித்து நெடிதானசின்மயா
னந்தசித்து, வேரேதானின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் வெளியர
ங்கமானதொரு மாராகேண்மோ, சீரேதான்அறிவான னந்தசித்தர் தீர்
க்கமுடன்பிறந்ததொரு நேர்மைகாணே. (கூ௩0)

காணவேமாசியென்ற திங்களப்பா கருவானரேவதியா மூன்றும்
பாதம், பூணவேயவர்பிறந்த நாளதாகும் புகழானமார்க்கமது யேதென்
றுக்கால், வேணதொருடமரகனூர் மைந்தப்பா வேதாந்தஅறிவான
னந்தராகும், தோணவேபிரதி லாமவென்றுசொல்வார் தொல்லுலகி
லிவர்போலுஞ் சித்துமுண்டோ. (கூ௩க)

உண்டானயின்னமொரு மர்மஞ்சொல்வேன் வுத்தமனேகாதாந்த
மணியேகேண்மோ, தொண்டனெனுஞ்சித்துமுனி ரிஷிகளுக்கு நேரா

ற்றமுள்ளவகப்பேயர் சித்துவாகும், கண்டவர்கள்விதிமார்கள் சித்துத
ம்மை காசினியிலுபதேசம் பெற்றசித்து, அண்டமெனும்வையகத்தில்
பிறந்தநேர்மை வப்பனேயானுரைப்பேன் சொல்வேன்பாரே. (௯௱௨)

ஆச்சப்பாகன்னியவள் பெற்றபிள்ளை யவதாரபுருஷனென்றே செ
ப்பலாகும், மூச்சடக்கிவெகுகால மிருந்தசித்து முனியானவகப்பேயர்
சித்துவாகும், மாச்சலுடனின்னமொரு மார்க்கங்கேளு மகத்தானகுக
ம்மையென்ற சித்துதாமுன், ஏச்சலதுவாராமல் தான்பிறந்த யெழிலா
னசித்தினுட மார்க்கங்கேளே. (௯௱௩)

கேளேதானுடியாம் திங்களப்பா கெவனமுடன்விசாகமென்ற மூன்
றுங்காலில், நாளப்பாதான்பிறந்த குகம்மைசித்து நலமுடனே திரிகால
பூசைசெய்து, வேளப்பாயாகமது முடித்துமல்லோ வேள்வியுடன்பா
லமுர்த முண்டசித்து, ஆளப்பாபெரியோர்கள் நேசம்பெற்று வப்பனே
மரப்பொந்தி லிருந்தசித்தே. (௯௱௪)

சித்தானமாதவமாங் குலத்துதித்த சிறப்பானகுகம்மையென்ற சித்
துவப்பா, முத்தானபாலமுர்த முண்டுமல்லோ மூதுலகைத்தான்பழித்
த சித்துவாகும், பத்தியுடன்வையகத்தில் நெடுங்காலந்தான் பான்மை
யுடன்வீற்றிருந்த பக்மசித்து, சுத்தியுள்ளதிருவாத்தி மரத்தின்கீழே
சுந்தரம்போலிருந்ததொரு மாயாசித்தே. (௯௱௫)

மாயானசித்தல்லோ மகிமையொரு மகத்தானபுலிப்பாணி மைந்தா
கேளு, தாயானபாம்பாட்டி சித்தரப்பா தாரணியில்நெடுங்கால மிருந்த
சித்து, காயானமுப்பழமும் பாலுங்கொண்டு கலியுகத்தில்நெடுநாளா
யிருந்தசித்து, சேயானபாம்பாட்டி சித்துதாமும் சீருலகில்பிறந்ததொ
ரு சித்துதானே. (௯௱௬)

தானானபாம்பாட்டி பிறந்தமாதம் தாக்கானகார்த்திகையாம் திங்க
ளப்பா, கோனானமிருகசீ ரடத்தானாகும் கொற்றவனேமூன்றுங்கா லெ
ன்னலாகும், தேனானவவர்பிறந்த நாள்தானப்பா தேசத்தில்சித்தர்முனி
கண்டதுண்டோ, மானானபதினெண்பேர் நூலைப்பார்த்து மார்க்கமுட
ன்றானறிந்து சொல்லிட்டேனே. (௯௱௭)

சொல்லவென்றால்பாம்பாட்டி மர்மந்தானும் தோற்றமுடன்ஜோகி
யென்ற வம்முஷந்தான், புல்லவேமசானகுறி சோகியப்பா புகழ்பெரிய
குருடனார் பெற்றபிள்ளை, வெல்லவேமாலைசுற்றித் தான்பிறந்த வேதாங்
தப்பாம்பாட்டி யென்னலாகும், நல்லதொருசித்துமுனி வுபதேசங்கள்
நலமுடனேபெற்றபாம் பாட்டியாமே. (௯௱௮)

பாம்பானயின்னமொரு மார்க்கங்கேளு பண்புள்ளபுலிப்பாணிகே சபாசா, திம்பில்லாகாலகண்ட ரிஷியார்தாமும் திர்க்கமுடன்பிறந்தவொரு திண்ணம்பாரு, தாம்புகழுஞ்சித்திரையார் திங்களப்பா தாக்ஷாணவுத்திராட மிரண்டாம்பாதம், மாம்புலமாம்வட்டாரம் தன்னிலப்பா மகத்தானசிவவேடம் பூண்டசித்தே. (௯௩ ௯

பூண்டதொருகாலகண்ட ரிஷியார்தாமும் புகழானபோண்டமுனி தான்சித்து, ஆண்டகையார்சித்துமுனி மைந்தனுக்கு வன்பானபோனது போனப்பா, தாண்டகையாங்காலகண்டசித்துவாகும் தாணிபதிசிவயோக சித்துவாகும், வேண்டியதோர்கருமான மறிந்தசித்து வேதாந்த காலகண்ட ரென்னலாமே. (௯௪௰)

எங்ஙனமேவேயின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் வெழிலானபுலிப்பாணி கண்ணேகேளாய், பன்னமேவடிவேலர் தாம்பிறந்த பதாம்புயத்தைச்சொல்லுகிறேன் பண்பாய்க்கேளும், துங்கமேவூன்றியுகங் கடந்தவேலர் துப்புரவாய்ப்பிறந்ததொரு சேர்மையப்பா, சொன்னபடியாவணியாம் திங்களப்பா சொல்லுகிறேன்முதற்பூசங் கால்தானென்றே. ()

ஒன்றானகால்தனிலே பிறந்தநாளாம் வுத்தமனார்வடிவேலர் பிறந்தாரென்றும், குன்றானமலைபோலே சாத்திரங்கள் கூறினார்குவலயத்தில் சொல்லொண்ணாது, தென்றிசையிலகஸ்தியருக் குபதேசங்கள் செய்ததொருவடிவேலர் சித்துமாகும், பன்றிபெருச்சாளியின்மேல் சாரிபோகும் பண்பானவிநாயகர்க்கு தம்பியாமே. ௯௪௨)

தம்பியென்றசாத்திரங்கள் சொல்லலாகு சதகோடிவடிவேலர் சித்துதன்னை, வெம்பியதோர்மாண்பருக்கு போகத்திற்கும் வெட்டிவெரிவடிவேலவென்றுசொல்வார், கும்பியெனக்கொதித்து வந்தபேர்க்கு கோடானகோடிபொருளீவாரப்பா, தம்பியென்றதனுக்கு குருவுமாகும் தாக்ஷாணவடிவேலர் தன்மையாமே. (௯௪௩)

பாகிதானின்னமொருபதமுஞ்சொல்வேன் பாங்கானபுலிப்பாணி மகனேபாரு, சிரவணமூலம்நிறைமுனி பிறந்தவண்ணம் சிறப்புடனேசொல்லுகிறேன் திறமையுடன், பூராடமாவணியாம் திங்களப்பா பெருந்தானபூசமது மூன்றுங்காலம், ஆனாளதனில் பிறந்தசித்து குறிப்பானபூமியென்ற மனதிலறிவிதாமே. (௯௪௪)

தானானயூகிமுனிமார்க்கமென்றால் தகைமையுள்ளதன்வந்திரிக் குற்றபேரன், கோனானசிங்களவ குலத்துதித்த கொம்பனையாள்கானினன் பெற்றபிள்ளை, தேனானதிரவிடத்திற் சொன்னாற்போல தீர்க்கமுடன்வடமொழியிற் சொல்லலாச்சு, மானானமாண்பர்களுக் குபயோகத்தால் மாட்சியுடன்சொன்னதொரு நீதியாமே. (௬௪௫)

நீதியாமின்னமொரு மர்மஞ்சொல்வேன் நிஷ்களங்கமானபுலிப்பாணியப்பா, தீதிலாஜெமதகினி முனிவர்தானும் சிறப்புடனேபிறந்ததொரு நேர்மைசொல்வேன், கோதிலாதற்பசி மாதமப்பா குறிப்பான புனர்பூச மூன்றாங்கால்தான், பாதிமதிசடையணிந்த தம்பிரான்போல் பாரினிலேயவதரித்த சித்துதாமே. (௬௪௬)

சித்தானஜெமதகினிமுனிவர்தானும் சிறப்பானபாத்துவமாம்ரிஷியின்பேரன், முத்தானவனுலோமன் பெற்றபிள்ளை மூதுலகில்கீர்த்தியுடனிருந்தசித்து, சத்தானயூகியென்றசாத்திரந்தான் சாங்கமுடன்பன்னீராயிரந்தானாகும், சுத்தமுள்ளரிஷிதேவர் சொன்னதில்லை சுந்தரனாரிதிகாசங் கூறினாரே. (௬௪௭)

கூறினாரின்னமொரு குறிப்பைக்கேளு கூரானபுலிப்பாணி மைந்தாபாரு, மீறியதோர்திரணாக்கிய முனிவரப்பா மிக்கானபிறந்ததொரு வண்மைசொல்வேன், ஆறுபுடைதிங்களாம் புரட்டாசியப்பா வப்பனே திருவாதிரை ரெண்டாம்பாதம், வீறுபுகழ்சாத்திரத்தை மனதிலுன்னி விருப்பமுடன்பாடிவைத்தார் நூலிதாமே. (௬௪௮)

நூலானமார்க்கமதை யேதென்றாக்கால் நுணுக்கமுடன்ஜெமதகினி பெற்றபாலன், கோலானகுறத்தியுட சற்புத்திரந்தான் குறிப்பானபிரிலோமனென்னலாகும், பாலானமார்க்கமதை யேதென்றாக்கால் பட்சமுடன்சொல்லுகிறேன் பண்பாய்க்கேளு, காலானபுலிப்பாணி மைந்தாகேளு கசடற்றபுத்திரனை புகல்வேன்பாரே. (௬௪௯)

புகலுவேன்சண்டீசர் பிறந்தநேர்மை புகழானவைகாசிமாதமாகும், திகலுவேன்பூரமென்ற மூன்றாநாள்தான் தீயுடன்றான்பிறந்தநாளேயாகும். சகலமுமறிந்ததொரு சித்துதாமுஞ் சதாகாலம்வையகத்திலிருந்தசித்து, அகஸ்தியபுலஸ்தியருக் குற்றபேரன் அன்பானவேடருடஜாதிதானே. (௬௫௰)

சாதியாங்கானினன் பெற்றபிள்ளை சாங்கமுடனெடுங்கால மிருக்க
சித்து, சோதிமணிசுந்தரம்போல் குகைகாஉள்ளே [illegible]
லாய் [illegible]
ழியுல [illegible]
ல்வுபமேனைந்த [illegible]

செயயச்வலி [illegible]
யபாலா, உய்யவே [illegible]
வண்ணம், பையவேபுரட்டாசி இவகாப்பா பால [illegible]
மாகும், வெய்யவேயவிட்டமென்ற மூன்றுங்காஸ்தான [illegible]
துதித்த சித்.மாச்சே. ([illegible])

ஆச்சப்பா திருமூல வர்க்கத்தோர்கள் அவனியிலேசொல்கைதற்கு
நாவுமில்லை, மூச்சடக்கிப்போனதொரு பாண்டியர்கள்தாமும் முனையா
னசங்கமதில் வாதுசெய்தோர், பாச்சலுடன்சேரனுக்குப் பெற்றபாலை
ன் பாரினிலேயனுலோம வென்னலாகும், வீச்சலுடனேதிகாச புராண
மெல்லாம் விருப்பமுடன்பாடிவைத்த சித்தர்தானே. ([illegible])

போகர் தட்சணபதிமாண்பரின்குறியை சீனபதியோருக்குரைத்தல்.

காணவேயின்னமொரு கருமானத்தின் கருவானபுலிப்பாணி [illegible]
ந்தபாரு, தோணவேயெமுதடூநுந்தறிவங்கேன் தொறுமல்தட்ச [illegible]
மாண்பர்தம்மை, பூணவேநெடுங்கால மிருந்தமல்லோ பொங்கமுடன்
இசயங்கள் மிகவுகண்டேன், வேணதொருதேவாதிதேவரல்லோ [illegible]
ப்பமுடனயோகவித கோயிலுண்டே. ([illegible])

உண்டான வையகத்து மாண்பர்தம்மில் வுத்தமனேசன்னதங்கள்
மெத்தவுண்டு, கண்டு [illegible] பார்த்தபோது கருவான [illegible]
[illegible] றமைகொண்டு வுறவு [illegible]
[illegible] திண்மையுடன்குறிசெ [illegible]
[illegible] தீர [illegible] தீதந்தானே. ([illegible])

அனியமாஞ்சமு [illegible] யித்தை வல்போடுவாயிரம் [illegible]
றிலோடாலும், கதிமுடன் [illegible] வசியத்தாலே கதிர [illegible]
சேதி [illegible] சொல் [illegible] தேவதா இருடையாலும் [illegible]
தானவுண்மைமொழி கூறினாற்போல், சதியுடனேசன்னதங்கள் [illegible]
மாகி சட்டமுடன்கூறலுற்றார் மாண்பர்க்காமே. ([illegible])

மாண்பானகுறிசொல்லும் மார்க்கங்களும் மகத்தானபத் [illegible]
ரெட்டுபேர்கள், ஆண்பிள்ளைத்தன் [illegible] பாலரோடும் வழக [illegible]

தர்களின் கூட்டத்தோடும், விண்பேச்சிவார்த்தைகளு மிகவாய்ப்பேசி விருப்பமுடன்யாதொன்றுந் தெரியார்போலும், நாண்போடுதூதுரைக்கும் மாண்பர்தாமும் நலமானமாந்தருடன் பேசுவாரே. (கூ௬எ)

பேசியேமாண்பரொடு வுறவுபேசி பேரானகுறிகேட்க வந்தோர் தம்மை, காசினிக்குவந்த கோருமாண்பர்நாங்கள்கருவாகக்குறிசொல்லு மடியவன்னே, மாசிடாகுறியுரைப்பா ரென்றுசொல்லி பட்சமுடன் வெகுதூரங் கேட்டுவந்தோம், மாசியென்னும்மதிதனிலே குறிகள்கேட்டோம் மகத்தானகுறியதுவுஞ் சொல்லலாச்சே. (கூ௬அ)

சொல்லவென்றால்குறியதுவு மென்னசொல்வோம் சோடசத்திலொன்றேனும் பொய்யேயில்லே, வெல்லவேகுறிகேட்டோர் மெய்யைப்போலே மேன்மையுடன்கூடிவரு மாண்பரோடு, புல்லவேவுறவுகொண்டு நயங்கள்பேசி புகழானயெதிரியின்றன் வார்த்தைதன்னை, மெல்லவேயவருரைக்கும் வார்த்தைதன்னை மேன்மையுடனுபாயத்தா லறிவார்தானே. (கூ௬௯)

தானுகயெதிர்மாண்பர் கூறும்வார்த்தை தண்மையுடனுபாயமதாய்த் தானறிந்து, கோனுனகுறியுரைக்குஞ் சங்கன்றனும் கொப்பெனவேயடையாள ரூபத்தோடும், மானுகயெதிரியின்றன் வார்த்தையெல்லாம் மார்க்கமுடன் றனுரைத்து ஆளேக்காட்டி, பானுசபதிமேடை மறைந்துகொண்டு பாங்குடனேகுறிசொல்வோர் பின்னிற்பாரே. (கூ௭0)

நின்றுமேதூதுரைக்க ஆள்காணுமல் நேர்மையுடனோர்பக்கம் மறைவாய்நின்று, சென்றேகுமாண்பருக்கு குறியுஞ்சொல்ல செம்மலுடன்ஜங்கமனும் வேடம்பூண்டு, நன்னயமாய்க்கிருஷ்ணமுடி தானும்பூண்டு நலமானவுத்க்கைதனைக் கையிலேந்தி பன்னவேபலபேர்கள்கூட்டத்தோடும் பாரினிலேபலகுறிகள் சொல்வான்பாரே. (கூ௭௧)

சொல்வானேயவரவர்கள் வார்த்தைகொண்டும் துப்புரவாய்முன்சொன்ன தூதைக்கொண்டும், புல்லவேகுறிமேடை தனிலிருந்து புகழானயாவேசம் வந்தாற்போல, மெல்லவேவாய்திறந்து பொன்னுங்காயை மேன்மையுடன்மென்றுமின்று உமிழ்நீர்தன்னை, நல்லதொருமதுவுண்ட நாற்றம்போல நயமுடனேவமனமது செய்வான்பாரே. (கூ௭௨)

செய்யவேமதுபானங் கொண்டுமல்லோ செயலானதன்னினேவு தனக்குமாறி, பையவேமயன்மீதில் வாடைகொண்டு பதறுதேதேகமது நிலேகொள்ளாது, உய்யவேயார்வந்து யெதுகேட்டாலும் உத்தமனேசித்தடியேன் சொல்வேன்பாரு, துய்யபுகழ்பாண்டியன்போல் வுதாரமபேசி துப்புரவாய்க்குறிசொல்வோன் கேட்பான்பாரே. (கூ௭௩)

பாரேதான்முன்சொன்ன வடையாளம்போல் பாங்குடனேமாண்பர்களை யுருட்டிப்பார்த்து, நேரேதானீசானிய மூலையப்பா நெருக்கமுடன்நடுப்பந்தில் தனியிருக்க, சீரேதான்கட்டழகி மாதுதன்னை சிறப்பாவசித்தடியைக் கூப்பிடென்று, ஆரோதானம்மம்மா குடைக்கொன்று ஆர்க்கமுடிபோகாது யென்பான்பாரே. (௯௯௪)

என்னவேயுந்தனுக்குக் குறைகள்மெத்த ஏர்க்கமுடி போகாதுரோகம்மீறி, பன்னவேயுன்புருஷ னின்னைவிட்டு பாரினிலேவனசாரி சென்றாரம்மா, துன்னவேமைந்தனுக்குக் கண்ணும்போச்சு துப்புரவாய்ப் பாவாடை ராயனுக்கு, மின்னவேகங்கணமுங் கட்டியல்லோ மிக்கான பொங்கல்களு மிட்டீர்காணே. (௯௯௫)

காணவேயிருபத்தோர் வாரமம்மா கட்டழகிகாணிக்கை கொண்டுசென்று, தோணவேமுதற்பூசை யுன்னுதென்று துப்புறவாய்ச்சொல்லினதும் வுண்டோகூறும், நாணவேகுறிமுகத்தில் வந்துயென்னை நன்மையோதுன்மையோ வென்றுசொல்லி, பாணம்போல் ... மனதுவந்து பாலகனேகேட்கவந்தீ ருண்மைதானே. (௯௯௬)

உண்மையாமென்குறிகள்பொய்யாதம்மா வுத்தமியேநாதாக்கள்வணங்குவார்கள், வண்மையாங்கைகண்டகுறிதானென்று வளப்பமுடன்நிதியெனக்கு குடுப்பார்பாரு, திண்மையாம் பாதகாணிக்கையோடும் தீர்க்கமுடன்புஷ்பதாம்பூலத்தோடும், தண்மையுடன்வெணவுப சாரத்தோடும் தட்டாமலெந்தனுக்குத் தருவார்தாமே. (௯௯௭)

தட்டாமல்தருவார்தா னென்று சொல்லி தர்க்கமிட்டுசித்தடிக்கு வாதுகூறி, கொட்டாவிகொண்டல்லோ மலையேயரியப்பா கொப்பெனவேயான்போறே னென்றுசொல்லி, சட்டமுடன்கற்பூர பழத்தைவாங்க சாங்கமுடன்வாய்தனிலே கொண்டுமல்லோ, வட்டபுரியம்மனது பாதம்போறேன் வளமுடனேயெல்லோரும் பணிவீர்தாமே. (௯௯௮)

பணியவென்றுகுறிசொல்வோன்கூறும்போது பண்பானமுழுமூடர் கழுதைமாண்பர், அணியணியாய்க்குறிகேட்டு மெய்யென்றெண்ணியவன்பாதந்தன்னில்விழுந்சண்டிமாண்பர், மணியானதெய்வமதுவொன்றிருக்க மார்க்கமுடன்மதுகொள்ளும் மாண்பர்தன்னை, கணிதமுடன் குறிகண்டு குணமுங்கண்டு காசினியில்வந்துநித்த தெய்வந்தானே. ()

தானனமதுகொள்ளும் மதுரைவீரன் தாரணியில்குறிசொல்லுந் தெய்வமென்றுங், கோனுமுழுமடையர் பேயரப்பா குவலயத்தில்கல்மேற்றும் பேயனுகி, மானனபஞ்சறிவுந்தானறிந்து மகத்தானசாத்திர

..ள் படித்துக்கேட்டு, பானுக்குறிசொல்வோர் வலையிற்சிக்கி பண்பு
டனேமயங்குகிறார் மடையர்தாமே. (௯௭௰)

மடையானமாண்பர்களும் பலநூல்கற்று மகத்தானமாயாவின் வ
..யிற்சிக்கி, இடைநடுவில்வையகத்து வாழ்க்கைதன்னை யெழிலாகத்
..மலதில் மாராமற்றான், கடைபோல் நடுனவழி கோடிசித்தர் கரு
..னசாத்திரங்கள் செய்திருக்க, திடமுறவேசற்றேனு மனதுறாமல்
..ர்க்கமுடன்பலநூலும் பார்த்தார்தானே. (௯௭௧)

சத்தகன்னி குறிகேட்டல்.

காணைபின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் தகமையுள்ளபுலிப்
பாணி மைந்தாகேளு, கோனையெனதைநாதர் காலாங்கிநாதர் சொற்றவ
னார்தாமிருக்குங் காலந்தன்னில், பானையையர்த்து மாண்பரெல்லாம்
பதிகெட்டுமதிகெட்டு குறிகேட்டு, [illegible]
மல்லோ தீர்க்கமுடன்முடை [illegible] (௯௭௨)

பாரேதான்குறியுரை [illegible]
தனிலிருந்து, நேரேதான் [illegible] யுட
ன்தாணுக்கிப் பார்த்துமேதான், [illegible]
சிறப்புடனேசன்னதங்கள் மிகவுண்டாச்சு, கூ[illegible]டைகொண்
வீசுதையா சொற்றவரே குறிகேட்டால் கூறுவேனே. (௯௭௩)

கூறுவேன்விளையாடி சன்னதங்கள் கொப்பெனவேவழங்கார சத்தத்
தோடு, மாறுபடாத்திருமேனி மங்கையப்பா மகத்தானபச்சைரிஷிவன
த்திற்றானும் ஆறுண்டுகுளமுண்டு மடுவுமுண்டு அங்கிருக்கும்வனத்
துகன்னி யாறுமல்லோ, வீறுடனேவெகுநாளா யுந்தன்வாசல் விருப்ப
முடன்விளையாட வந்தேன்பாரே. (௯௭௪)

வந்தேனென்று சொல்லுகையில் ஐங்கன்றுனும் வகையறியமுழு
மூடர் மாண்பர்தம்மில், சிந்தனையாயதிலோர்நவர் தாமெழுந்து சிறப்பு
டனேகுறிகேட்க வந்துநின்று பந்துமுலைகுலத்தாளே பச்சைகன்னி
பட்சமுடனெந்தனுக்குக் குறிகள்கூறாய, தந்தையார்வைத்ததோர் நிதி
கள்கோடி தாரணியில்மெத்தவுண்டு சொல்லொண்ணாதே. (௯௭௫)

உண்டானதிரவியங்கள் மெத்தவுண்டு ஓகோகோநாதாக்கள் குடி
த்தபாக்கியர், தண்மையுடன்தேவதா ஸ்தலங்கள்யாவும் தகமையுடன்
தருமமது செய்தேன்யானும் வண்மையுடன்யாகமது செய்துமல்லோ
மகத்தானகாணிக்கை யாவுந்தந்தேன், உண்மையாய்க்கொடுத்தநிதிகோ
டியுண்டு புத்திரபேறமைந்தனிலை யென்றார்தாமே. (௯௭௬)

என்றுமேமாண்பர்களிலொருவனப்பா யெழிலானஜங்கமனைக்கண்டுமல்லோ, குன்றானமலைநாடு குகைகள்தன்னில் கொம்பனையேவந்தொரு கன்னிதாயே. சென்றுமேதம்பதிக்கு வந்தேனம்மா செம்மலுடன்யெந்தனுக்கு மைந்தன்வேண்டும், இன்றுமேகூறியுரைத்து யெந்தனுக்கு யெழிலுடனேயேகவென்று தொழுதிட்டாரே. (கூளஎ)

தொழுதாரேசமுசாரியானமாண்பன் துப்புரவாய்பாதகாணிக்கையிட்டு, அழகாரேதேவியுடன் றானுமல்லோ அங்ஙனவேயிருபேருஞ்சாஷ்டாங்கிட்டு, முழுவதிலுமெங்களிர் பாதுகாத்து மொய்குழலேயெங்களுக்கு மைந்தனீய்ந்து, மழுவுடனேகற்பூர தீபாராத்தி மகிழ்ச்சியுடன்தருவீரென்று பணிந்திட்டாரே. (கூளஅ)

பணியவேசத்தகன்னிஜங்கன்றானும் பட்சமுடன்மனதுவந்துமனக்களித்து, மணியானமைந்தனல்லோ யுனக்குண்டாகும் மகப்பேறுமெத்தவுண்டு யுத்தமர்க்கு கனிதமுடன்கூறியுரைத்தேன் மைந்தாபாலா கட்டழகியுந்தேவி யின்றுமட்டும், துணிவுடனேயிருபத்தோர் வாரமப்பா திப்புரமைப்பூசைமுகமாரச் சொல்வீரே. (கூளகூ)

சொல்லவேசத்தகன்னிஜங்கன்றானும் சுத்தமுடன்சமுசாரிமாண்பன்கேட்டு, வெல்லவேதன்தேவி தனையழைத்து விருப்பமுடனின்றுமுதல் நீயுமேதான், புல்லவேசத்தகன்னி சங்கன்றானும் புகழாகவாக்குரைத்த தன்மைபோலே, நல்லதோர்யிருபத்தோர் வாரமட்டும் நலமுடனேபதிமுகத்தில் செல்வீர்தாமே. (கூஅய)

தாமானசமுசாரி மாண்பன்தேவி சட்டமுடன்நாயகன்சொற் கடவாமற்றான், பேரானதானுரைத்த வார்த்தைதன்னை பேருலகிலுபதேசமமெய்யென்றெண்ணி, சாமானியமானதொரு பெண்பால்தானும் சட்டமுடன்ஜங்கமன்றன் வாசல்சென்று, பூமான்களறியாமல் பதிமுகத்தில் புகட்சியுடன்ஜங்கமனைக் கண்டாள்பாரே. (கூஅக)

கண்டதொருசத்தகன்னி ஜங்கன்றானும் கருத்துடனேகொம்பனையைக் கொண்டுசென்று. அண்டர்முனிகோநிதேவர்க்கெல்லாம் அவனியிலேகூறியுரைத்தேன் மெத்தவுண்மை, தண்டுளவமாலையணிகிருஷ்ணன்போல தகமையுடன்மாதுதனைக் கைபிடித்து, கொண்டனைத்துசைதன்னியஞ்சு சென்றுமல்லோ கொப்பெனவேமைந்தனுமுண்டாக்கினனே. (கூஅஉ)

ஆக்கினன்யிருபத்தோர் வாரமட்டும் அங்ஙனவேபதிமுகத்தில்சென்றுமல்லோ. பாக்கியங்கள்பெற்றவர்கள் வாரவாரம் பதிமுகத்தில்

ஜங்கமன்றன் கூடிருந்து, சாக்கிரங்கள்சொற்பனங்கள் கண்டாற்போ லே சட்டமுடன்தம்பதிக்கு வந்துமல்லோ, நீக்கியேசத்தகன்னி வரமு ம்பெற்று நீட்சியுடன்வடபதிக்கு வந்திட்டாரே. (௯௮௩)

வந்தாரேவெகுநாட்கள் தான்கழித்து வளமையுடன்மைந்தனையும் பெற்றயில்பு, சிந்தனைகள்தாம்நீங்கிகலியும்நீக்கி சிற்பரனைப்போலவொ ரு பாலன்பெறறு, பந்தமுடன்மணவாளன்மனைவிதானும் பட்சமுடன் மைந்தனையுங் கொஞ்சியல்லோ, இந்தவுலகத்தினிலே சத்தகன்னி யெ ழிலானகுறிபோலே யுண்டென்பாரே. (௯௮௪)

என்பாரேமுழுமடையர் தானுமப்பா வெழிலானசாத்திரங்கள்கற் றுமென்ன, வன்பானமாண்பனல்லோ நம்மைப்போலே வளமையுடன் வையகத்தில் வந்தமாண்பன், தன்போலேமனிதனென்று வறியாமற்று ன் தண்மையுடன்சத்தகன்னி ஜங்கன்றன்னை, நன்னயமாய்மைந்தனையு ஞ் சாமியென்று நலமுடனேயவர்காலில் விழுந்திட்டாரே. (௯௮௫)

விழுந்தாரேயவன்கலைவி தன்னிற்சென்று விட்டகுறையிருந்த தொரு பாவத்தாலே, அழுந்தியேயவன்வலையிற் சிக்கியல்லோ அவனி யிலேபேருண்டாய் பேறும்பெற்று தொழுதுமேகுலதெய்வ மவன்தா னென்று தொல்லுலகில்கெட்டகொரு கழுதைமாண்பர், மழுவேந்துங் கதைபேசி நயங்கள்பேசி மானிலகதிலகெட்டவர்கள் கோடியாமே. ()

தட்சணமாண்பருக்கு பலவித சவதை குறிகூறல்.

கோடியாயின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் குறிப்பானதட்சண மாண்பருக்கு. நீடியேபல தேவ கோடியாக நீடு மான முறைப்பாரன ந்தமார்க்கம், வாடியே வைக்குந்து மாண்பரெல்லாம் வளமையுடன்பல காலுந் தொழுதிறங்கி, தேடியேதிரவியங்க ளனைத்துங்கந்து தீர்க்கமு டன்தான்கொடுத்து நிதிகேட்பாரே. (௯௮௭)

நிதியானமானிடர்மேல் குறிகள்வந்து மிக்கவினையாகிறது சன்ன தங்கள், பரியானபரிவிட்டு வந்தேனென்றும் பாலகனெதெய்வகன்னி நான்தானென்றும், துதியுடனேமரத்துமுனி யென்பேரென்றும் துப் புறவாயெல்லையது பிடாரியென்றும், மரியானலாடமுனி நான்தானெ ன்று மகத்தானசன்னதங்கள் கூறுந்தானே. (௯௮௮)

தானனவம்மனது காளியென்றும் தாக்கானவேல்முருகர் யான்தா னென்றும், கோனனவாடைமுனி யான்தானென்றும் குறிப்பானகாட் டேரி யான்தானென்றும், தேனனதிருவேங்கட பதிதானென்றும் சிறப்

கண்டேனையடியேனும் யானுமல்லோ கனமானபோகரே ழாயிரத்தை, அண்டர்முனி தேவாதி தேவரெல்லாம் அன்புடனேமனதுவந்து களிப்பதற்கும், தண்டாம்போல்வையகத்து சித்துமாண்பர் தருவான குருக்கள்மனு வேந்தருக்கும், சண்டமாருதம்போலே யிந்தநூலை சாற்றினேன் பெரியோர்கள் சமுசாரிக்கே. (௯௯௬)

சாரிகேள் சமுசாரியானபேர்க்கு சட்டமுடன் சித்துமுனி யானபேர்க்கு வாரிதிபோல் பெருநூலே ழாயிரந்தான் மகத்தானநூல்களெல்லாமிதிலடக்கம் மீறியதோர் பின்னூலுங் குற்றநூலாம் மேன்மையுடனகஸ்தியனார்க் காவியந்தான், வீறியதோர் பன்னீராயிரக்காண்டந்தான் வித்தகனார் பாடிவைத்த நூல்தாம்பாரே. (௯௯௭)

பாரேதான் சத்தகாண்டந் தன்னிற்றுன்றா பாங்கான லோகவுதிசயங்களெல்லாம், நேரேதான் [illegible] தானகாண்டமிது குருநூலாகும், நீரேதானேகண்டக்காண்ட மேழாங்காண்டம் நிர்க்கமுடனின்னவதி சமுசாரிக்கூறும் சீரேதான் காலாங்கி கடாட்சத்தாலே சிறப்புடனே பாடிவைத்தேன் பெருநூல்தானே. (௯௯௮)

நூலானநூலிதுதான் சத்தகாண்டம் நுணுக்கமுடனிலடக்கங் சொல்லொண்ணாது பாலானபதினெண்பேர் சொன்னநூலும் பயிலானவிந்நூலுக் கொவ்வாதப்பா, சேலானநவகோடி ரிஷிகள்தாமும் செம்மலுடன் கோடிவரை நூலுஞ்செய்தார், மாலானநூலிதுவும் மகிமைமெத்த மகத்தானவிந்நூல்போ லில்லைதானே. (௯௯௯)

தானென்னையனையர் காலாங்கிநாதர் தன்னையுடனவர்பாதகடாட்சத்தாலும், தேனென்னமனோன்மணியாள் கிருபையாலும் தேற்றமுடன் காவியமே ழாயிரத்தை, மானென்னவையகத்தோர் பிழைக்கவென்று மகத்தானசீனபதி மாண்பருக்கு பனுவகாண்டமே ழாயிரத்தில் பட்சமுடனிருமூன்று காண்டமுற்றே. (௲)

## போகர்சத்தகாண்டத்தில்

## ஆறுவதுகாண்டம்

முற்றுப்பெற்றது.

—(*)—

பானஅங்காள வல்லியென்றும், மானுனகாத்தவ ராயனென்றும் மகத் தானஅனேகவித தெய்வம்பாரே, (௯௮௧)

பாரேதான்தெய்வமது வனேகங்கோடி பாரினிலேமாண்பர்மேல் சன்னதங்கள், நேரேதான்தெய்வமயல் கொண்டோர்போலும நேர்மை யுடன்பலபலவாஞ் சன்னதங்கள், கூரேதான்குடிகள்படை சேனைதன் னில் கோஷ்டமிட்டுசன்னதங்கள மிகக்கொண்டாடும், வீரேதான்பிரா ணய வுச்சாடணந்தான் வீரமுடன்தானுரைப்பார் வெகுவாய்த்தானே.

தானேகேள்லாடகவி யனேகஞ்சொல்வார் தாக்கானபரிபாஷைமிக வுஞ்சொல்வார், மானேகேள்சன்னதங்கள் மிகவுண்டாகி மார்க்கமுடன் இரேகமது நடிக்கல்கொண்டு, தேனேகேளசிதாபாச நிலையிலநின்று தீ ர்க்கமுடன்வசிதங்கள் மிகவுரைப்பார், தானேதான்தெய்வமது கொண் டாற்போலே தகமையுடனே பேசுவாரே. (௯௯௧)

பேசுகின்றவார்த்தைதனை மெய்யென்றெண்ணி பேரானதட்சண த்து மாண்பரெல்லாம் காசுபணம்நிதியனைத்தும் மிகவுந்தந்து கருத் துடனேகுறிமுறைகள் கேட்பாரப்பா, ஆசுகவிசாத்திரங்கள் பார்த்து மென்ன அறிவுகெட்டமாண்பரந்த மயிலாந்தான், தேசுலவுபூந்து டையாய் போகசீஷா புண்ணியனேமிகவுரைப்பேன் கேளுகேனே. ()

கேளேதான்தட்சணத்து மாண்பரெல்லாம் கெவனமுடன்குறிகே ட்டு மதியுங்கெட்டு, பாரோதான்சாத்திரத்தை மிகப்பாராமல் பாருலகி ல்மதிகெட்ட குருடராகி, ஆளேகானறிவழிந்து மானங்கெட்டு வப்ப னேவஞ்ஞான வலையிற்சிக்கி நாளேதான்போகாமல் மனுகாளாய் நா ட்டினிலேயிருந்தவர்கள் கோடிகாணே. (௯௯௩)

காணவேயென்தனது சீஷபாலா கருவானபுலிப்பாணி மைந்தாகே ளு, தோணவேதேசாதி தேசமெல்லாம் துப்புறவாய்க்குளிகைகொண் டு வடியேன்றானும், நீணவேகாலாங்கி கடாட்சத்தாலே நீதியுடன்சத் தசாகரமுந்தாண்டி, பாணமுடனெழுகடலுஞ் சுற்றிவந்து பாங்கான நிலைதனிலே நின்றிட்டேனே. (௯௯௪)

இட்டேனே அட்டதிசை யானுங்கண்டேன் யெழிலானதட்சணத் து மாண்பர்போலே, கெட்டதொருமாண்பர்களைக் கண்டதில்லை கெடி யானதட்சணமாம் பதியிலப்பா, திட்டமுடன்வெகுகோடி மாண்பர்தம் மை தீர்க்கமுடன்கண்டேனே தட்சணத்தில், சட்டமுடன்காலாங்கி நா தர்தாமும் தானுரைத்தவண்ணமது போல்கண்டேனே. (௯௯௫)



உ

கடவுள் துணை.

1433

---

மகாமகத்துவம் பொருந்திய

# போகமுனிவர்

திருவாய்மலர்ந்தருளிய

பெருநூல்

## சத்தகாண்டம் - எழு.

### முதலாங்காண்டம்.

காப்பு.

சாருவாகிச் சகாசமனை மதித்தே
தன்மையுள்ள மேன்மணிப் பாதம் போற்றி
கருணைவேல் முருகர்தாள் பணிந்தேன்
பொற்றவனை யரியயனும் பதந்தாள் போற்றி
மாணுளைய சத்தியனார் பாதம் போற்றி
மகத்தான காலமுனி தாள் பணிந்தேன்
தேனான சதாசிவத்தினடி பணிந்தேன்
தேற்றமுடன் காலாங்கி பாதங் காப்பே. (௧)

காப்பானபதினெண்பேர் முனிவர்தாமும் பலபலவாய்ப்பாடலைக்கூட்டி நூல்கள்பேசும், அப்பானநூல்களுக்குமேலே மேலாகச்சொன்னார் முனையானசித்துமகாரிஷிபார்த்தாமும், வாப்பானபெருநூலிலேவளந்தஞ்சொன்னார் வளமையுடனின்னூல்போலாருஞ்சொல்லார். தாப்பானநூலிதுதான்சத்தகாண்டம் தண்மையுடன்பாடிவைத்தாரொமாயிரத்தானே.

தானானசத்தகாண்ட மேழாயிரத்தில் தண்மையுள்ளகாண்டமிது
யேழாங்காண்டம், கோனானகாலாங்கிகடாட்சத்தாலே கூறினேன்னை
யகத்து வதிசயங்கள், தேனானமணிபோலே ழாயிரத்தில் தேற்றமுட
ன்சொல்லிவைத்தே னேழாங்காண்டம், மானானகடைக்காண்டம் நீதி
மார்க்கம் மன்னவனேயுத்தமக்காய் ஓதினேனே. (௩)

ஓதினேன்சீனபதி மாண்பருக்கு வுத்தமனேகாண்டமே ழாயிரத்
தான், நீதியுடன்சன்மார்க்கநிலையுஞ்சொன்னேன் நிஷ்களங்கமானதொ
ரு வழியுஞ்சொன்னேன், பாதிமதிசடையணிந்த தம்பிரான்கள் பாருல
கில்செய்ததொரு நூலையெல்லாம், ஆதியந்தம்முடியுடனே பொருளா
ராய்ந்து வப்பனேசின்மயத்தின் வழிசொன்னேனே. (௪)

சொன்னதொருபொருள்களெல்லா மிதிலடக்கஞ் சுந்தரனேபோக
ரேழாயிரந்தான், மன்னவர்கள்வையகத்து வாழ்க்கையெல்லாம் மார்க்க
முடனிதிலடக்கஞ் சொல்லொண்ணாது, தென்னவர்கள் தேவாதி முனி
வர்தாமும் தேற்றமுடன்செய்ததொரு நூலையானும், பன்னவேதிரட்டி
யல்லோ பெருநூலாக பாரினிலேவிளைதவகை சொல்லிவிட்டேனே. ()

இட்டேனேயிதிகாசப் பொருள்களெல்லாம் யெழிலானபோகரே
ழாயிரத்தில், சட்டமுடன்பாடியல்லோ நூனுக்கமாக சாங்கமுடன்செ
ய்துவைத்த பெருநூலப்பா, கட்டமதுவாராது யிந்நூலப்பா கலமான
வேதையிது கோடிக்கோடி, திட்டமுடன்நாதாக்கள் சொன்னதில்லை
தீர்க்கமுடன்சத்தகாண்டம் பண்புதானே, (௬)

பண்பானவாறுவகை காண்டத்துள்ளே பலகோடிவேதைமுக மன
ந்தஞ்சொன்னேன், நண்பானநாதாக்கள் நீதிமார்க்கம் நலமுடனேயா
ரேனுஞ் சொன்னதில்லை, திண்பானநீதிவழிக் குளியசித்தை தீர்க்கமு
டன்பாடிவைத்தே னிந்நூலுக்குள், வண்பானபெருநூல்தான் குருநூ
லாகும் வண்மையுடன்பாடிவைத்தேன் காண்டமாமே. (௭)

காண்டமாஞ்சத்தகாண்ட மேழாயிரந்தான் காவியங்கள்போல
வொரு நூலுமில்லை, பாண்டவாள்வையகத்து மாண்பரெல்லாம் பாங்
குடனேசித்துவகை முனிவர்வாழ்க்கை, தாண்டவம்போல்பெருநூலே
ழாயிரத்தில் சாற்றினேனாறுகாண்டந் தன்னிற்குள்ளே, பூண்டதொரு
லோகவதிசயங்களெல்லாம் புகட்டினேன்காலாங்கி கடாட்சந்தானே. ()

தானானசத்தகாண்டந் தன்னைப்போலே சாற்றினாகஸ்தியனார்மு
னிவர்தானும், கோனானபன்னீரா யிரந்தானப்பா கொற்றவனேபுலஸ்
தியருக்குபதேசித்தார், பானானபனிரெண்டு காண்டஞ்சொன்னார் பா
லகனே வாயிரத்துக் கொருகாண்டந்தான், தேனானமனோன்மணியாள்
கிருபையாலே தேற்றமுடன்பாடிவைத்த நூல்தான்பாரே. (௯)

பாரேதானேழுலட்சங் காப்புதன்னை பாலகனேபாடிவைத்தா ரா
நந்தமாக, நேரேதானின்னாலே மூவாயிரந்தான் நேர்மையுள்ளகாண்டம
து தன்னைப்போலும், சீரேதானகஸ்தியனா ருண்டுசெய்த சிறப்பான
பன்னீரா யிரத்தைப்போலும், ஆரேதான்சொன்னதுண்டோ நூலை
யப்பா வப்பனேயாருமில்லை யுரைத்திட்டேனே. (௰)

உரைத்திட்டேனெவருக்குநாலுக வணக்கங்கோடி யுத்தமனேயின்னா
லுஞ்சொப்பதாமோ, கரைத்ததொருபொருள்களெல்லா மிதிலடக்கம்
காசினியில்கண்டவர்க ளில்லைமோசொல், நரைதிரையும்வருவதில்
லையிந்நூல்கண்டால் நாதாக்கள்தம்முதலோர் கூறுவார்கள், கரைய
டர்ந்தகதைபோலே பெண்ணை வேண்டாம் கருவானகுருநூலாம் மெய்
நூலாமே (௰௧)

நூலான நாலுக்குள் ளார்க்குஞ்சொன்னேன் நுட்பமுடன்மார்க்க
மது யென்னவென்றால், பாலானசித்தருக்கு நீதிசொன்னேன் பாங்குட
னேயனீதமுறி விதியுஞ்சொன்னேன், சேலானசன்மார்க்கந் துன்மார்க்
கந்தான் செப்பினேன்கடைக்காண்ட மேருதனுள்ளே மாலானமருத்து
வங்கள் சொல்லொண்ணாது மகத்தானநீதிவழி பாடினேனே. (௰௨)

காணவேசத்தகாண்ட மேருதனுள்ளே கருவானகடைக்காண்டந்
தன்னுக்குள்ளே, பூணவேசிட்சைகளென்ற நூலுக்கப்பா புகட்டினே
ன்புவிப்பாணி மைந்தாகேளு, ஆணவங்கள்தானொடுங்கி மைந்தாநீயும்
வட்பனேசித்தாதி முனிவர்க்கெல்லாம், நாணமுடன்முடிவணங்கி கரங்
குவித்து நற்பாதகமலமதை வணங்குவாயே. (௰௩)

வணங்கியேநூலதனைப் பதனம்பண்ணு வகையில்லாகசடருக்கு
யீயவேண்டாம், கணங்களெனுங்குழுதையப்பா மாண்டர்தாமுந் சுந்த
ரனேவெகுபேர்க ளிருப்பாருண்டு, கணமுடையராட்சதர்கள் தன்னை
ப்போலே கிருமிகளுமெத்தவுண்டு யீயவேண்டாம், மணங்கமழும்புண்
ணியர்கள் தம்மைத்தேடி மகத்தானநூல்கொடுத்தால் புனிதமாமே. ()

புனிதமாங்கருமிகட்கு கொடுத்தாயானால் பூபாலாகண்மணியே
பாபமெய்தும், கனிவுடையபுண்ணியர்கள் வெகுபேருண்டு காசினியி
லுன்னைவந்து நூல்கேட்டாலே இனிதானவார்த்தையது மிகவுங்கூறி

யெழிலான நூலுக்கு சாபந்தீர்த்து, கனியாகத்தானமைத்து வுபதேசி
த்து தாரணியில்பிழைக்கும்வகை சொல்லுவீரே. (௰௫)

சொல்லவென்றால்நாவில்லைப் பாவுமில்லை துரைராஜகாலாங்கிநா
தர்தம்மை, புல்லவேயவர்தமது பதாம்புயத்தை போற்றியேயென்று
ளும் மனதுவந்து, அல்லலதுவிட்டகற்றி யன்புகூர்ந்து வப்பனேசதா
நித்தம் மனதிலுன்னி, வெல்லவேயுபதேச மோதியல்லோ விருப்பமு
டன்நூல்கொடுத்தால் புண்ணியமாமே. (௰௬)

புண்ணியமாமின்னமொரு மார்க்கங்கேளு புகழானபுலிப்பாணி
மைந்தாபாரு, மண்ணினிலேவெகுகோடி சித்துதாமும் மகத்துவங்
கள்கொண்டதொரு புனிதவான்கள், கண்ணியதோர்நூல்களெல்லா மி
கவுங்கூறி கலமுடனேமறைத்துவைத்தாரனேகங்கோடி, உண்மையா
ய்நூலதனைப்பாடியல்லோ வுத்தமனேமறைத்ததிலொன்றுங்காணே.

ஒன்றானசித்துமுனி ரிஷியைப்போலும் ஓகோகோநாதாக்கள்தன்
னைப்போலும், குன்றான நூலதனை மிகவும்பாடி குகைதனிலேமறைத்
துவைத்தார் கோடிமாண்பர், வென்றிடவேயகஸ்தியரு மிகவாய்ப்பாடி
வெட்டவெளிகுகைதனிலே மறைத்துவைத்தார், தென்றிசையில்சித்
தர்களுந் தாமுமல்லோ தெரியாமல்மலைமீதி லொளித்தார்தானே. ()

தானானசாத்திரத்தை பாடியல்லோ தண்மையுடன்குகைதனிலே
வைத்தாரப்பா, கோனான்பெரும்பமுனி ரிஷியர்தாமும் கூட்டமிட்டுசாத்
திரத்தை மறைத்துவைத்தார், மானானகாலாங்கி நாதர்தாமும் மார்க்க
முடன்நூலதனைப் பாடியல்லோ, தேனானசீஷவர்க்கமாண்பருக்குத் தே
ற்றமுடன்நூல்கொடுத்தார் திண்ணமாமே. (௰௯)

போகர் இமயகிரிவடபாகத்தில் சிங்கம் குட்டிஈனுவதைக்கண்டது.

திண்ணமாமின்னமொரு மார்க்கம்பாரு தீர்க்கமுடன்புலிப்பாணி
மைந்தாகேளு, வண்ணமாமேருவுக்குவடபாகத்தில் மகத்தானகடலோ
ரங்காட்டகத்தில், நண்ணவேசிங்கமதை யானுங்கண்டேன் நாதாக்
கள்சித்துமுனி யங்குமுண்டு, திண்ணமுடன்குளிகையது கொண்டுமே
ல்லோ தீர்க்கமுடனவ்வனத்தை யிறங்கினேனே. (௨௰)

இறங்கினேன்வடபாகங் கடலோரத்தில் யெழிலானயிருளடைந்த
கானகந்தான், உறங்குமேகாடிபுலி சிங்கந்தானும் ஓகோகோநாதாக்கள்
மெத்தவுண்டு, திறமுடையகரிக்கூட்டஞ் சொல்லொண்ணாது திரளா
னவடகோடி கானகத்தில், குறைவன்றிவாழுமது மிருகமெல்லாம் கொ
ற்றவனேயிமயகிரி வடபாகந்தானே. (௨௧)

தானானமுற்பக்கம் அரிகள்கூட்டம் தாக்கானபிற்பக்கஞ் சரிகள்கூட்டம், கோணானமேற்பக்கம் பரிகள்கூட்டம் கொற்றவனேகீழ்ப்பக்கம் நரிகள்கூட்டம், தேனானநிமையங் கானகந்தான் தேவிமனோன்மணியாரு மறியாநாடு, மானானபரிதிமதி காணாநாடு மாத்தானசில்லென்ற காடுதானே. (௨௨)

காடானநடுமையக் கானகத்தில் கரடிபுலிசிங்கமது வாழும்நாடு, நாடாண்மைகொண்டதொரு தழைந்தநாடு தகமையுள்ளகானகந்தான் சித்தர்நாடு, நாடாளும்ராஜர்பதி கண்டதில்லை நலமுடனே தேவரிஷியிருக்கும்நாடு பாடாண்மைகொண்டதொரு பக்கள்நாடு பாரினிலேயாரேனுங் காணார்தாமே. (௨௩)

காணாதேயவ்வனத்தின் மகிமைதன்னை கதையுரைப்பேன்புலிப்பாணி மன்னுகேளு, தோணாமல்சித்தர்முனி ரிஷிகளுக்கும் தொல்லுலகில்கண்டறியா வதிசயங்கள், காணாதசிங்கமென்ற காட்டகத்தை நன்மையுடன்குளிகைகொண்டு சென்றுயானும், வினாகத்காலமது கழியாமற்றான் விருப்பமுடன்சிலகால மிருந்திட்டேனே. (௨௪)

இட்டேனேநெடுங்கால மடியேன்றானும் யெழிலானகாலாங்கிகிருபையாலும், திட்டமுடன்குளிகைகொண்டு கானகத்தில் தீர்க்கமுடன் சுற்றிவருங் காலந்தன்னில், பட்டையம்போலாண்சிங்கம் பெண்ணைக் கண்டு பாச்சலுடன்மோகமது மிகமாகி, சட்டமுடன்கலவிதனில் மிகக்கலந்து சாங்கமுடனிருக்குமது காலந்தானே. (௨௫)

காலமாமானுடனே பெண்ணுக்கூடி கலவிதனிலிருக்கின்ற நானுங்கண்டேன், காலமாம்பன்னிரண்டு வருஷந்தானும் தாக்கானபெண்சிங்கங் கருவுமாகி கோலமுடன்பூரணமாங் கெற்பங்கொண்டு கொற்றவனேயீனுகிற காலமாச்சு, சாலமதுயென்சொல்வேன் மன்னுகேளு சாங்கமுடனொருவருந்தான் கண்டிலாரே. (௨௬)

பெண்சிங்கம் யானைக்கூட்டத்தில் குட்டியீனுவது.

கண்டேனேகானகத்தி லதிசயங்கள் கண்கொள்ளாமகிமையது யென்னசொல்வேன், அண்டர்முனிராட்சதர்களறியாநாடு யவ்வனத்தில் சிங்கமது கற்பங்கொண்டு, பண்டுபலவஸ்துங்களருந்தியல்லோ பாங்குடனேகெற்பமேவேதனையுமாகி, அண்டமுடியாமலது சிங்கந்தானும் அவனிதனில்வேதனைகள் படிகலாச்சே. (௨௭)

ஆச்சப்பா வாண்சிங்கந் தானுமல்லோ அரிவையெனும் பெண்சிங்கந் தன்னைக்கண்டு, பாச்சலுடன் யானையது விருக்குங்கூட்டம் பான்மையுடன் தானறிந்து மனதுவந்து, மேச்சலுடன் பெண்சிங்கந் தன்னைக்கூட்டி மேன்மையுடன் கரிக்கூட்டந் தன்னிலங்கே, மாச்சலது வாராமல் சிங்கந்தானும் மன்னவனே சென்றல்லோ விற்கலாச்சே. (உ௮)

நிற்கவே கரிக்கூட்டம் முன்னதாக நேரான சிங்கமது பின்னதாக, விற்பனமாய் முதுகொடுத்து நின்றுகொண்டு வீரமுடன் குட்டியது யீன்றபின்பு, சொற்பெரிய குட்டியென்ற சிங்கந்தானும் சுந்தரனே மத்தகெஜந் தலையிற்பாய்ந்து, உற்பனமா மூளையது உறிந்துமல்லோ வுத்தமனே சிங்கமது விறக்கும்பாரே. (உ௯)

பாரேதான் சிங்கமது பிறக்கும்போது பாங்கானகரிக்கூட்டம் நடுங்கியல்லோ, நேரேதான் தலைவாறு திசைமாறிதானும் நேர்மையுடன் கானகத்தைச் சென்றுபோகும், சீரேதான் சிங்கமென்ற குட்டிதானும் திறளானகரிக்கூட்டந் தன்னிற்சென்று, வீரேதான் நாட்குநாள் யிரையுங்கொண்டு விபிடமுகாட்டகத்தே வருகுவகானே. (௩௰)

காணவே சிங்கமது பிறவியல்லோ கைலாயநாதருட கடாட்சத்தாலே, தோணவே வையகத்தில் குட்டியீன்று தொல்லுலகில் வாழ்துவது மகிமைமெத்த, ஆணவங்களகமுண்டு அரிதனக்கு அவனியிலே ராஜனென்ற மிருகமாச்சு, பூணவே வையகத்தின் மிருகமெல்லாம் புகழான சிங்கத்தின் கீழுமாச்சே. (௩௧)

கீழான மிருகமது வனேகமுண்டு கீர்த்தியுள்ள சிங்கமது ராஜனப்பா, பாழான காடுகளி லிருக்குஞ்சிங்கம் பார்த்தவர்களாரேனுங் கண்டதுண்டோ, சாழலுடன் காறுறு தன்னிலப்பா சட்டமுடன் விழுந்திறந்த கதைகேட்டார்கள், ஆழானமடுக்களிலே விழுந்திறந்த அதிசயங்கள் வையகத்தில் கண்டார்தாமே. (௩௨)

சிங்கத்தினால் சித்தர்கள் மடிந்தது.

தாமானபின்னுமொரு மார்க்கம்பாரு தண்மையுள்ள புலிப்பாணி மைந்தா கேளு, கோமான்களறிந்ததில்லை குவலயத்தில் கொற்றவனே யின்னமொரு மகிமைசொல்வேன், சாமானியமானதொரு சித்தரப்பா சட்டமுடன் ஐம்பதுபேர் கூட்டமாக, ஆமானமாகவல்லோ கூட்டங்கூடி அடவானகாட்டகத்தில் வந்திட்டாரே. (௩௩)

வந்தொருவழிதனிலே மார்க்கங்கண்டு வண்மையுடன்சிங்கம்து கர்ச்சித்தல்லோ, சிந்தையாய்மாண்பருட சைகைதன்னை சிறலுடன் தானறிந்து கோபமிஞ்சி, தொந்தரவுசெய்வதற்கு மனதுவந்து தோற்றமுடன்பாச்சலது வதிகமாகி, விந்தையுடன்சிங்கமது வேவுகொண்ட வீரியத்தைக்கண்டார்கள் சித்துதாமே. (௯௪)

{சித்தர்கள் சிங்கத்தைக்கண்டு கல்லாலமரத்தின்மே லேறிக்கொண்டது.}

சித்தானசித்துமுனி ரிஷிகள்தாமும் சீரலுடன்வருகின்றசிங்கந்தன்னை, புத்தியுள்ளசித்துமுனி பார்த்துயேங்கி புகழானவன்பதுபேர்கூட்டத்தோடும், பத்தியுடன்கல்லாலின் மரத்தின்மேலே பரிவுடனேயேறியல்லோ பார்க்கும்போது, சுத்தியெங்கும்பார்த்துமல்லோ சிங்கந்தானும் சுந்தரனான்பதுபேர் காணலாச்சே. (௯௫)

காணவேசிங்கமது சித்தர்தம்மை கனமானவீரியத்தால் கோபமிஞ்சி, தோணவேசிங்கமது யேதுசெய்யும் தோற்றமுமல்கோபமது வதிகங்கொண்டு, பாணம்போல்சிறுநீரை பூமிதன்னில் பள்ளமதாய்ச்செய்துமல்லோ மண்ணைத்தானும், பூணவேமூத்திரத்தில் வாலைவிட்டு புகழுடனேமண்ணதனைப் பிரட்டலாச்சே. (௯௬)

பிரட்டியேவால்தனிலே மண்ணையேத்தி பின்பக்கமாகவல்லோ திரும்பியேதான், வரட்டியேவாலதனைத் தூக்கியேதான் வளமையுடன் மண்ணதனை நோக்கியல்லோ, துரட்டியேவால்சுழற்றி யெறியும்போது துப்புறவாய்மண்ணதனை மேலேநோக்கி, மிரட்டியேதானெறிய மண்தானப்பா மீறியேசித்தரின்மேல் விழுகலாச்சே. (௯௭)

விழுகவேசாற்பத்தி யெண்மர்மேலில் விஷமானமண்ணதுவும்மேலேபட்டு, பழுதுபடாமேனியதில் விஷமுங்கண்டு பாங்குடனேசித்திரைகள் வந்தாற்போலே, கழுகியேசிங்கமது சென்றபின்பு கடுக்கமுடன்திரேகமது ஒடுக்கமாகி, முழுதாமேசாற்பத்தி யெண்மர்பேரும் மூஞாலகமண்மீதில் வீழ்ந்திட்டாரே. (௯௮)

மண்ணானபூமிதனில் விழுந்தபோது மயக்கமுடன்கண்ணுறங்கி யிருந்தாற்போலும், திண்ணமுடன்மடிந்தார்கள் சித்தரெல்லாம் தீர்க்கமுடன்வையகத்தைக் கண்டதில்லை, எண்ணியேமரத்தின்மே லிருந்ததபேர்கள் யெழிலானயிருவருமே யிறங்கியேபின், குண்ணியேமுகம் வாடி மனமயர்ந்து குவலயத்தில்மடிந்தவரைக் கண்டார்தாமே. (௯௯)

தானானமண்படா திரண்டுபேருஞ் சட்டமுடன்மறம்விட்டுக் கீழிறங்கி, கோனானசிங்கமது சென்றபின்பு சொற்றவனேயிருவருமே யதி

ந்துகொண்டு, தேனுமைமேனன்மணியை மனதிலுன்னி தெளிவுடனே புத்தியது மிகவுமாகி, பானுனசித்துமுனி யிருவர்தாமும் பரிட்சிக்க எண்ணமது கொண்டிட்டாரே. (௪௰)

கொண்டுமோரத்தடியை விட்டிறங்கி கொற்றவர்கள்சிங்கத்தின் பள்ளங்கண்டு, விண்டிட வமுத்திரமாம் பள்ளங்கண்டு விருப்பமுடன் சோதனைகள் செய்யவெண்ணி, கண்டிடவேகரமதனி லிருந்தசெம்மை கட்டழகர்தாமெடுத்து மண்ணிற்போட, கொண்டதொருசெம்பதுவுந் தங்கமாச்சு கொற்றவனேயதின்விஷத்தை யறிந்தார்பாரே. (௪௧)

பாரேதான்விஷமேறி பழுக்கலாச்சு பாங்கான அரியவிதமுத்திரந்தான், நேரேதான்மண்ணதனில் விஷமுமாகி நேர்மையுடன்சித்தரின்மேல் படிகலாச்சு, சீரேதான்தேகமது புண்ணுமாகி தீர்க்கமுடன் தானிறந்தார் சித்தரெல்லாம், ஆரேதான்கண்டவர்களுலகிலில்லை யப்பனைசித்தர்முனி கண்டார்தானே. (௪௨)

கண்டாரேசித்துமுனி ரிஷியார்தாமும் கானகத்தில்நடந்ததொரு வதிசயத்தை, தண்டகம்போல்தான்கண்டு பிரமித்தேங்கி தாரணியில் குளிகைகொண்டு சீனந்தன்னில், வண்ணமுடன்சீனபதி மாண்பருக்கு வளமானவதிசயத்தை யெடுத்துக்கூற, திண்ணமுடன்மனதுவந்து மனங்களித்து தீர்க்கமுடன்சீனபதிக் கேகினாரே (௪௩)

போகர் சீனபதிக்குவந்தது.

ஏகவேயின்னமொரு மார்க்கந்தேளு யெழிலானபுலிப்பாணிமணி யேபாரு, சாகமுடன்நெடுங்காலம் வடமேருதன்னில் சட்டமுடன்நானிருந்தேன் வெகுகாலம், பாகமுடன்சிங்கத்தி னதிசயத்தை பாரினிலேசாதாக்கள் கண்டதில்லை, வேகமுடன்யான்கண்டு சீனத்தார்க்கு விருப்பமுடனுபதேசஞ் செய்திட்டேனே. (௪௪)

செய்தேனேவடமேருதன்னிலப்பா சிறப்பானசிங்கத்தின் மகிமைதன்னை, வெய்யபுகழ்சீனபதி மாண்பருக்கு விருப்பமுடனுபதேசஞ்செய்தேன்யானும், மையவேயான்கொண்ட காயகற்பம் பட்சமுடனவர்களுக்குக் கொடுத்தேன்பாரு, துய்யவேசீனபதி மாண்பரெல்லாந் துப்புரவாய்க்காயாதி கொண்டார்பாரே. (௪௫)

பாரேதான்காயாதி கொண்டபின்பு பாங்கானசீனபதி மாண்பர்தம்மில், நேரேதான்சிலதுபேர் ஞானவானும் நேர்மையுடன்குளிகையது பூண்டுகொண்டு, சீரேதான்வடமேரு கானகத்தில் தீர்க்கமுடன்தான் சென்று காணுதற்கு, வீரேதான்குளிகையது பூண்டுகொண்டு விருப்பமுடன்வடமேருக் கேகினாரே. (௪௬)

ஏகினார்சிங்கமென்ற காட்டகத்தில் எழிலானகாதாக்கள் தன்னைப் போலே, பாகமுடன்காயாதி கொண்டுமல்லோ பக்குவமாய்க்குளிகை விட்டுக்கானகத்தில், சாகமுடன்சிங்கமதைக் கண்டாரங்கே சட்டமுடன்சிங்கமது கெர்ச்சித்தேதான், வேகமுடன்சீனபதி மாண்பர்தம்மை வீறுடனேகொல்லுதற்கு வருகலாச்சே. (சஎ)

வருகவேசித்துமுனிதம்மைப்போலே வாகானசீனபதிமாண்பரெல்லாம், பெருகவேகல்லாலின்மரத்தின்மேலே பேரானமுன்னிருந்த சித்துபோலே, சொருபமதைக்கண்டவுடன் மரத்தின்பேரில் சுந்தரனைபார்த்துமல்லோ திகைத்துநின்று, அருவமென்னசிங்கமதைக்கண்டுமல்லோ வப்பனேபிரம்பித்து நின்றிட்டாரே. (சஅ)

நின்றாரேசித்துமுனி சிஷியர்தாமும் நேரானசிங்கமது கண்டுமேதான், குன்றிடவேதம்மனதி லுறுதிகொண்டு கூரானசிங்கமதுவே துசெய்யும் வென்றிடவேமுன்போலே மண்ணைவாரி விட்டெறியசீனபதி மாண்பரெல்லாம், தன்றிடவேகல்லாலின் மரத்தின்பேரில் சட்டமுடன்மேலிருந்து விழுந்தார்தாமே, (சகூ)

தாமானசீனபதி மாண்பரெல்லாம் தகமையுடன்மண்ணதனில் விழுந்துமேதான், பூமான்கள்விஷமதுவுஞ்சகியாமற்றான் புகழானதேகமது சிலிர்த்துமல்லோ, காமானதுஞ்சேந்திரிய முள்ளடங்கி நமனுக்கு ஆளாகி பொறிகலங்கி, வேமானமாகவல்லோ மண்ணின்பேரில் விழுந்துமேபிரண்டிருக்கக் கண்டிட்டேனே. (ருய)

போகர் சீனபதிமாண்பருக்கு சிங்கத்தின்விஷத்தை முறித்து வுயிர்குடுத்தல்.

கண்டேனேசீனபதி மாண்பர்தம்மை கடுகெனவேவிஷமேறி யிருந்தபேர்க்கு, தண்டகம்போல்காயாதி முறிப்புபாலும் தகமையுடன்தான்கொடுத்து யெழுப்பியல்லோ, மண்டலங்களுள்ளளவும் சிங்ககற்பம் மடியாமலிருப்பதற்கு மனதுவந்து, விண்டிடவேயான்கொடுத்துவுயிர் கொடுத்தேன் விட்டகுறையிருந்ததினா லெழுந்தார்பாரே. (ருக)

பாரேதான்சீனபதி மாண்பருக்கு பாங்கானகற்பமுறை யானுஞ்சொல்லி, நேரேதான்பிழைப்பதற்கு வழியுஞ்சொன்னேன் நேர்மையுடன்கருவாளி கண்டுகொள்வார், சீரேதான்சித்தர்முனி மார்க்கந்தன்னை சிறப்புடனேபானுரைத்தேன் மாண்பருக்கு, வேரேதான்மற்றோரால் சொல்லப்போமோ வேதாந்தகாலாங்கி கடாட்சந்தானே. (ருஉ)

தானானசினபதி மாண்பரெல்லாந் தகமையுடன்தானெழுந்து முடி வணங்கி, கோனானகால்ரங்கி கடாட்சத்தாலே கொற்றவனார்சினபதிமா ண்பரெல்லாம், பானானவிட்டகுறை யிருந்துமல்லோ பாங்குடனேயெ ன்றாலே யெழுப்பப்பட்டார், மானானமகதேவர்கடாட்சத்தாலே மறை பொருளையானுங்கல்லோ வுணர்ந்திட்டேனே. (௫௩)

போகர் உச்சிலிங்கத்தேளைக்கண்டது.

உணர்ந்தேனேயின்னமொரு மார்க்கம்பாரு வுத்தமனேபுலிப்பா ணிமைந்தாகேளு, மணங்கமழும்வடகோடி கானகத்தில் மார்க்கமுடன் மகமேரு பக்கந்தன்னை, கணமுடனேயனேகவித தெய்வந்தானும் காட் டகத்தேவாசமது செய்துகொண்டு, பிணமதனையாபூதிகொள்ளுங்காளி பேரானகாட்டகத்தைக் கண்டேன்தானே. (௫௪)

தானேகேளண்டமுனி யறியாக்காடு தகமையுள்ளவனந்தனிலே திரிந்துயானும், மானேகேள்மகமேரு சாரல்பக்கம் மகத்தானகுண் ணுாளு மலையுமுண்டு, தேனானமலைதனிலே வாசஞ்செய்யும் தேளது வுந்திரள்கூட்டஞ் சொல்லொண்ணாது, கோனானதேளதுவின் கூட்டந் தன்னை தேற்றமுடன்கோடிவரை யான்பார்த்தேனே. (௫௫)

பார்த்தேனேசெங்தேளாங் கோடிமார்க்கம் சாங்கமுடன்யுகம்பிரித் துநடக்கும்போது, தீர்த்தலிங்கந்தனிலுதித்த செந்தேளப்பா தீரமுட ன்கோ[illegible]ம் வருகும்போது, ஆர்த்தியுடன்மேலேறி வருகுந்தேளாம் வப்பனேவுச்சிலிங்கத் தேளேயாகும், மூர்த்தியுடன்மும்மூர்த்தி யான பேறும் மூதுலகில்கடுங்குலது திண்ணமாமே. (௫௬)

திண்ணமாமுச்சிலிங்கத் தேள்தானப்பா தீர்க்கமுடன்காட்டகத் தே யிருக்கக்கண்டேன், வண்ணமுடன்மலைச்சாரல் காளிகோயில் வள மானதேவதா ஸ்தலமுங்கண்டேன், எண்ணரியகோயிலது மூலஸ்தா னம் யெழிலாகவாள்நுழையயிடமுமுண்டு, தண்ணமுடன்காளிதனைக் காணவென்றால் சாங்கமுடன்சுரங்கம்வழி செல்வார்பாரே. (௫௭)

பாரேதான்தேவதா ஸ்தலத்துக்குள்ளே பாங்கானவழியதுவுமூல ஸ்தானம், நேரேதான்காளிதனைக் காணவென்றால் நேர்மையுடன்மார் பாலே நகர்ந்துமல்லோ, தீரேதானெண்சாணு விடமுந்தாண்டி தீர்க்க முடன்காளிதனைக் காணலாகும், கூரேதானதற்கப்பால் காளிவாசம் கொற்றவனேதானிருக்கக் காணலாமே. (௫௮)

சுரங்கத்தில் உச்சிலிங்கத் தேளிருப்பது.

காணலாம்வுச்சிலிங்கத் தேள்தானப்பா கடியதொருசுரங்கமதில் வாசஞ்செய்து, பூணவேநெடுங்காலம் வாசஞ்செய்து யொங்கமுடனி

ருக்குமந்த காலந்தன்னில், நீணவேயவ்விடத்தில் கரிக்கூட்டங்கள் நீதி யுடன்சொல்வதற்கு லக்கோயில்லை, ஆணவங்கள்மிஞ்சியல்லோ யானை க்கூட்டம் வப்பனைகணக்குண்டோ சொல்லொண்ணாதே. (௫௯)

யானை கோணனைத்துரத்துவது.

ஒண்ணாதுகாட்டகத்தே கோணன்றானும் வுத்தமனைமாடாடு மே ய்க்கும்ஸ்தானம், அண்ணார்ந்துபார்ப்பதற்கு முடிகொள்ளாது வப்ப னைபசுக்கூட்டம் மெத்தவுண்டு, கண்ணாலேயானையது கோணன்றன் னை கடைநோக்கிப்பார்த்தல்லோ சீறலாகி, மண்ணோடேதும்பிக்கையா ற்புரண்டி மகத்தானகோணனைத் துரத்தலாச்சே. (௬௰)

ஆச்சப்பாகரியல்லோ கோணனைத்தான் வப்பனைதுரத்துகின்ற வேளைதன்னில், பாச்சலுடன்கோணனும்ஓட்டங்கொண்டு பதுங்கியே செல்வதற்கு காளிகோயில், மூச்சடங்கியோடியல்லோ தேவஸ்தானம் முனையானகாளியது மூலஸ்தானம், மாச்சலதுவருவதற்கு முன்னதாக மகத்தானசுரங்கம்வழிச் சென்றான்தானே. (௬௧)

சென்றானேகோணனுங் காளிபக்கல் செம்மலுடன்பதுங்கியல்லோ முற்புரத்தில், நின்றானேகோணனும் வுடல்நடுங்கி நீதியுடன்காளிபுரம் தன்னில்நிற்க, குன்றேறிவாழுகின்ற யானையப்பா கொற்றவனைசுரங்க ம்வழி வருகலாச்சு, வென்றிடவேயானையது தும்பிக்கையால் வீரமுட ன்சுரங்கமது நுழையலாச்சே. (௬௨)

நுழையவேசுரங்கத்தின் வழியிலப்பா நுண்மையுடன்தும்பிக்கை விட்டுமல்லோ, குழையவேதேகமது செல்லாமற்றான் கொற்றவனை யானையது நின்றுகொண்டு, தழைமேய்க்குங்கோணனை தும்பிக்கையா ல் தட்டாமல்நாற்புறமுந் தடவும்போது, நுழையவேகதிதனக்குயிடமு மில்லை நுட்பமுடன்யிடையூறு நேரலாச்சே. (௬௩)

ஆச்சுதேதும்பிக்கை யாலேதானும் வப்பனைகோணனைத் தேடும் போது, மூச்சடங்கித்தானிருந்து கோணன்றானும் முனையானகாளியி ன்மேல் சிந்தையாகி, மாச்சலதுவாராம லிருந்துகொண்டான் மகத்தா னயானையுந்தன் தும்பிதன்னை, வீச்சலுடன்வுச்சிலிங்கத் தேன்தானப் பா வீரமுடன்கொட்டிடவே சத்தமாமே. (௬௪)

சத்தமதுகொண்டிடவே யானைதானும் சதுரானமலைதனிலேகே ட்கும்போது, முத்திபெறுஞ்சித்தர்களின் கூட்டத்தார்கள் முனையான சத்தமதைக் கேட்டுமேதான், புத்தியுடன்யானையது தன்னையல்லோ புகழானவுச்சிலிங்கத் தேன்தானப்பா, வெத்தியுடன்கொட்டியதோர்தே ன்தானென்று வீரமுடன்சித்தர்களு மறிந்திட்டாரே. (௬௫)

அறிந்தாரேவுச்சிலிங்கத் தேள்தானப்பா வப்பனேகரிதனையேகொட்டிற்றென்று, செறிந்துமேமலைதனையே விட்டிறங்கி செம்மலுடன்யானையது பக்கல்வந்தார், குளியானையானையது விஷமுமீறி கொப்பெனவேநெருப்பதுபோ லெறியுதக்கே, மூறியுடனேதந்தமெல்லாம் யற்றி யல்லோ முனையானகொழுந்துவிட்டு யெரியலாச்சே. (௬௬)

எரிந்துமேபிரிதிவென்ற சாம்பலாச்சு யெழிலானயானையது மடிந்துபோச்சு, சொரிந்ததொருசாம்பல்தனைசித்தர்கண்டு சோராமலவரவர்கள்பங்குவீதம், புரிந்துமேபங்கதுவும்பகரும்போது புகழானகோனனுஞ் சுரங்கத்தண்டே, வரிந்துமேகோனனைசித்தர்கண்டு வகையுடனேவளப்பமதைக் கேட்டிட்டாரே. (௬௭)

கோனன்மீதில் இரக்கம்வைத்து சித்தர்கள்பங்குகொடுத்தது.

கேட்டவுடன்கோனனும் மனநடுங்கி கெவனமுடன்சித்தர்கட்குகூறலுற்றான், வாட்டமுடன்மாடுமேய்க்கும்போது வளமானயானையது யென்னைக்கண்டு, தாட்டிகமாய்ச்சீரலது மிகவுண்டாகி சட்டமுடனெந்தனையுந்துரத்தலாச்சு, கோட்டமுடன்யானையது வருகும்போது கொப்பெனவேயான்பயந்து ஓடினேனே. (௬௮)

ஓடினேன்தங்குதற்கு யிடமில்லாமல் ஓகோகோநாதாக்கள் முனிவரோகேள், தேடியேகாளியது தேவஸ்தானம் தேற்றமுடன்யான்கண்டு மனதுவந்து, வாடியேசுரங்கமது வழியிற்சென்று மகத்தானகாளியின்றன் பக்கல்நின்றேன், நீடியேயானையது யெந்தனைத்தான் நிஷ்களங்கமாகவல்லோ தேடலாச்சே. (௬௯)

ஆச்சையாசித்துமுனி ரிஷியாரேகேள் ஆங்காரமுள்ளதொரு யானைதானும், மூச்சடங்கித்தும்பிக்கை தன்னினாலே முனையானசுரங்கத்தின் வழியினுள்ளே, பாச்சலுடன்தும்பிக்கை விட்டபோது பாழான சுரங்கமதில் மகிமையேதோ, கூச்சலுடன்வீறிட்டு யெறிந்துமேதான் கொப்பெனவேபிரிதிவென்ற சாம்பலாச்சே. (௭௰)

சாம்பலாய்ப்போனதொரு சேதிகண்டு சட்டமுடன்சுரங்கமதுவுள்ளிருந்து, தீம்புகளும்நேராது யென்றுசொல்லி திட்கமுடன்வெளியரங்கம் வந்தேனென்றான், வீம்புடையகோனனின்வார்த்தைதன்னை விருப்பமுடன்சித்தர்முனி கேட்டுவந்து, நாமிவனுக்கோருதவி செய்யவென்று நலமுடனேசித்தரெல்லாம் நினைத்திட்டாரே. (௭௧)

நினைத்துமேவுச்சிலிங்கத் தேவினாலே நிஷ்களங்கமானதொருதிரவியங்கள், சுனைபோலேயமமென்ற தங்கந்தானும் துப்புரவாய்நந்தமக்கு வாய்த்ததென்று, கனையானகோனனால் வந்தபாக்கியம் காசினியி

ல்சதகோடி சொல்லொண்ணாது. பணையளவுபாக்கியமு மிங்ஙனலாச்ச பட்சமுடன்சித்தர்முனி யெண்ணினாரே. (௭௨)

எண்ணியேசித்தர்முனி மனதுவந்து யெழிலானகோனானைத் தானழைத்து, பண்ணவேயேமமென்ற வித்தைதன்னை பட்சமுடனிவனுக்கோர் பாகமீய்ந்து, வண்ணமுடன்செய்பாகங் கைபாகங்கள் வளமையுடன்காண்பித்து விதியுஞ்சொல்லி, சுண்ணமென்றசாம்பல்தன்னையோர்பாகந்தான் சுத்தமுடன்கைகொடுத்துப் போவென்றாரே. (௭௩)

போமென்றுசொல்லியல்லோ முனிவர்தானும் பொங்கமுடன் கோனானுக் குறுதிகூறி, நாமென்றகாலாங்கி வாக்குபோலே நலமுடனேஞானோபதேசஞ்செய்து, தாமென்றபிரிதிவைகுஞ் சாம்பல்தன்னைசட்டமுடன்தான்கொடுத்து மறியுஞ்சொல்லி, வேமென்றகாட்டகத்தேசித்தர்தாமும் வேகமுடன்குகைதனிலே சென்றிட்டாரே. (௭௪)

சென்றவுடன்கோனானுஞ் சாம்பல்தன்னை செம்மலுடனவர்பதிக்குக் கொண்டுசென்று, பொன்னானமாற்றதுவுஞ் செம்பிலேற புகழான செம்பதுவுந் தங்கமாச்சு, மன்னவனைபோலாகக் கோனான்தானும் மகதேவர்சித்தர்முனி தம்மைப்போலும், தென்னகிராமருடசெல்வம் போலும் திறளானகோடிவரை பார்த்திட்டானே. (௭௫)

பார்த்தானேசித்தருட மகிமைதன்னால் பாங்கானயேமமென்ற வேதைதன்னை, சீர்த்தியுடன்முறைசெய்த தபோபலத்தால் சீர்பெற்றான் கோனானுஞ் சிதறாதம்மால், பேர்பெற்றான்கோனானுங் காட்டகத்தில் பேருலகில்விட்டகுறை யிருந்ததன்னால், தார்வேந்தர்மெச்சிடவே தரணிதன்னில் தாமுமொருசிவயோகி போலானானே. (௭௬)

போகர் சதுரகிரிவதிசயத்தை புலிப்பாணிக்குகூறல்.

ஆனானேயின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் வப்பனேபுலிப்பாணி புத்திவானே, கோனானின்கதையுரைத்தேன் மகிமையல்ல கொற்றவனேயின்னமொரு மகிமைசொல்வேன், தேனானதேவிமனோன்மணியாள்பாதம் தேற்றமுடன்யான்வணங்கி காதைசொல்வேன், பானனகாலாங்கி நாதர்பாதம் பட்சமுடன்யான்வணங்கிப் பகருவேனே. (௭௭)

பகருவேன்புலிப்பாணி மன்னாகேளீர் பாருலகில்குளிகைகொண்டு சுத்தியேதான் நிகரமுடன்வையகத்து வதிசயத்தை நீதியுடன்யான் கண்டு மலையிற்றேடி, சிகரமதுசதுரகிரி மலையிலப்பா சிறப்புடனேயானிறங்கி யிருக்குங்காலம், நிகரமுடன்கிரிதனையே சுத்தியல்லோ நீடூழி காலம்வரை திரிந்திட்டேனே. (௭௮)

பனையளவுசித்தரை போகர் கண்டது.

திரிந்துமேமலையோரந் தன்னிற்சென்று திர்க்கமுடன்யான்காணு
ம் வேளைதன்னில், புரிந்துமேசிகரமது கிரியில்நின்று புகழானபனைய
ளவு சித்துதாமும், தெரிந்துமேமலையைவிட்டுக்கீழிறங்கி சிறப்புடனே
மாண்பர்களைக் காணும்வண்ணம், செரிந்துமேமகிமையது கோடியுண்
டு தேசமதில்விதியுள்ளான்காண்பார்பாரே. (எசு)

சதுரகிரிசித்தர் பொடிமாட்டுக்காரரை புகையிலைகேட்டது.

பாரேதானின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் பாலகனேபுலிப்பா
ணி மன்னுகேளு, ஆரோதான்பொடிமாட்டுக் காரரப்பா ஆயிரம்பேர்
ஒருகூட்ட மாகக்கூடி, தேரோடும்பாவனைபோல் மாண்பரெல்லாம் தே
ற்றமுடன்மலையோரஞ் செல்லும்போது, சீரோடும்புகயிலையின் பொ
திகைதன்னை சிறப்பானசித்துமுனி கண்டிட்டாரே. (அ௰)

கண்டாரேபுகையிலையின் வாசந்தன்னை பாங்கானபனையளவு சித்
துதாளும், கொண்டதொருபுகையிலையி னெண்ணமப்பா கொற்றவனே
மயக்கமது மிகவுண்டாகி, எண்ணமுடன்புகையிலையின் கற்பந்தன்னை
ஏற்றமுடன்குகைபிடிக்க மனதயர்ந்து, வண்ணமுடன்மலையைவிட்டுக்
கீழிறங்கி வளமுடனேவருவதற்கு எண்ணினாரே. (அக)

எண்ணியேசித்துமுனி ரிஷியார்தாமும் யெழிலானகிரியைவிட்
டு யிறங்கும்போது, பிண்ணதொருபனமரம்போல் தோற்றமாச்சு ரிஷி
களங்கமாகவல்லோ யிறங்கும்போது, தண்ணமுடன்மேற்பனியை விட்
டுமேல்லோ தாழவேபடிபடியாய் இறங்கும்போது, புண்ணியனார்சித்து
முனி ரிஷியார்தாமும் புகழுடனேயிறங்கிவரக் குறைவானாரே. (அஉ)

குறைவானரோமமென்ற கரடிபோலும் கொற்றவனேசித்துமுனி
ரூபங்கண்டார், நிறையானபொடிமாட்டுக் காரரெல்லாம் திர்க்கமுடன்
சித்துமுனி யிறங்கும்நேர்மை, மறைவாகவாள்ரூபங் குறைந்துகாணும்
மகத்தானரோமமது தெரியவில்லை, முறையானமகுத்துவத்தை யெண்
ணுமற்றான் மூர்க்கமுடன்சித்துதமை வசனிப்பாரே. (அங)

வசனிக்கபொடிமாட்டுக் காரரெல்லாம் வளமையுடன்ஒருவருக்
கோருவமைகூறி, விசமுடையபனையளவு சித்துபோலும் நீதியுடன்சி
த்துதமை மதியாமற்றான், புசமுடையதேவாதி சித்துதம்மை புக
ழானமகுத்துவங்களெண்ணுமற்றான், கசம்போன்றஆயிரம்பேர் மாண்
பரெல்லாங் கட்டாகஒருவருக்கோர் பேசுவாரே. (அச)

பேசுவார்மலையைவிட்டு யிறங்குஞ்சித்தை போானமகத்துவங்க
ளறியர்மற்றான், காசுபணமில்லாத சித்தரென்றும் கருவானசதுரகிரியி

ருக்குமாண்பன், விசுபுகழ்மகுத்துலங்க ளில்லாரென்றும் வீரமுடனொ ருவருக்கோ ருகந்துபேசி, ஆசுகவிபோலாக வார்த்தைகூறி வப்பனோ சம்வாதம் செய்வார்தானே. (௮௫)

தானனபொதிமாட்டுக்காரரெல்லாம் தகமையுடன்ஒருவருக்கோர் வாதுகூறி, கோனனகுருவென்று மறியாமற்றான் கொற்றவனேகும்ப லது மிகவுங்கூடி, தேனனபுகையிலையின் பொதிகைதன்னை தேற்றமு டன்தானிறக்கி யமுதுசொல்ல, மானனசாவடியாங் கிரியோரந்தான் மகத்தான அமுதுகொள்ள நண்ணுவாரே. (௮௬)

நண்ணியேயேகாந்த கூட்டந்தன்னில் நலமுடனேதானிருக்கும் வேளையப்பா, திண்ணமுடன்கிரிதனிலே யிருந்தசித்து தீர்க்கமுடன் மாண்பருட கூட்டந்தன்னில், தண்மையாய்பொதிமாட்டுக் காரர்தம் மை தகமையுடன்சித்துமுனி யருகிற்சென்று, உண்ணவேபுகையிலை யின்கற்பமப்பா வுத்தமனேயெனக்கருளு மென்றிட்டாரே. (௮௭)

என்றுமேயேதுரைத்தார் முனிவர்தாமும் யெழிலானமாண்பர் களின் முகத்தைநோக்கி, குன்றுமேல்சித்துமுனி யொருவருண்டு குவ லயத்திலொருநாளும் வருவதில்லை, இன்றுமுதல்காற்றினது வாடை யாலே யெழிலானபுகையிலையின் வாசமப்பா, வென்றிடவேயவர்தமக்கு காணலாச்சு விட்டகுறையிருந்ததனால் கிடைக்கலாச்சே. (௮௮)

ஆச்சப்பாபொதிமாட்டுக் காரர்பாலா வப்பனேயெந்தனுக்கு மன துவந்து, மூச்சடங்கித்தானிருக்குஞ் சித்துதானும் முனையானவனைத்து ரிஷி முனிவருக்கு, பாச்சலென்றபுகையிலையின் கற்பமப்பா பட்சமுட ன்நீரவர்க்குத் தருவீரானல், மாச்சலென்றவினையகலு முந்தமக்கு மக யோகபுண்ணியமது கிட்டும்பாரே. (௮௯)

பொதிமாட்டுக்காரர்கள் சித்தர்பெருமையறியாமல்
பகடிசெய்யல்.

பாரேதானென்றலுமே யோகிதானும் பாங்குடனேசித்துமுனிநா தருக்கு, சீரேதான்புகையிலையின் கற்பந்தானும் சிறப்புடனேயாங்கள து கொடுப்போமானல், நேரேதானும்மாலே மகிமையென்ன நேர்மை யுடனெந்தமக்குக் கூறுமென்றார், தீரேதான்சித்துமுனி ரிஷியார்தா மும் சிறப்புடனேமனதுவந்து கூறுவாரே. (௯௰)

கூறுவார்வாய்திறந்து முனியார்தாமும் கொப்பெனவேபொதிமா ட்டுக் காரருக்கு, தேறுதலாய்வார்த்தையது கூறும்போது தேற்றமுட னதிலொருவன் தானெழுந்து, மாறுதலாய்சித்துமுனி தம்மைப்பார்த்

து மகத்தானரிஷியாரே பண்பாய்க்கேளும், ஆறுபுடைசூழ்ந்திருக்கும் நதியோரத்தில் அசோகமென்றவிருக்ஷமது விழுகலாச்சே. (௬௧)

சித்துமுனிசாய்ந்த அசோகமரத்தை நேராய்நிறுத்தல்.

விழுந்ததொருஅசோகமென்ற விருக்ஷந்தன்னை வீறுடனேநிமிரவது செய்வீரானால், பழுதுபடாத்திருமேனி தன்றனக்கு பட்சமுடன் கற்பமது தருவோம்நாதா, வழுத்துணையாங்கற்பமது கொண்டபோது மகத்தானசித்துமுனி யெங்களுக்கு முழுதுமேபுகையிலையின் கற்பந்தன்னை முனையாகயாங்கொடுப்போங் காணீர்தானே. (௬௨)

காணவேமாண்பரெல்லாங் கூறும்போது கருவானசித்துமுனி ரிஷியார்தாமும், தோணவேபவர்களுக்கு பிரம்மைதோன்ற துப்புரவாய்சித்துமுனி நாதரல்லவோ, வேணதொருசாயாதி கொண்டசித்து வேகமுடனசோகமென்ற விருக்ஷந்தன்னை, பூணவேதானுக்கிபார்த்து மல்லோ புகழானவிருக்ஷமதை நிமர்த்தினாரே. (௬௩)

நிமர்த்தவேவிருக்ஷமது தானெழுந்து நீதியுடனிலையூன்றிநிற்கும்போது, சமர்த்துள்ளசித்துமுனி தம்மைக்கண்டு தாரணியில்மகிமை பெரிதுமல்ல, கமர்மேவன்றகானகத்தி லிருக்குங்கல்லாம் கடிதானமலைக்கல்லைத் தன்னைத்தானும், சுமர்ந்துமேயெங்களிடங் கொண்டுவந்து சுத்தரேகொடுத்தாலே நம்புவோமே. (௬௪)

நம்புவோமென்றல்லோ மாண்பரெல்லாம் நயமுடனேவார்த்தையது மனதுவந்து, வம்புடனேசித்துமுனி தம்மைக்கண்டு வளமுடனேவார்த்தையது கூறும்போது, தெம்புடனேகுண்ணுமலை தன்னைத்தூக்கி தீரமுடன்பொதிமாட்டுக் காரர்முன்னே, கும்பல்தனில்குண்ணதனையிடித்துமல்லோகொப்பனவேகொண்டல்லோபோட்டிட்டாரே. ()

போட்டாரேசித்துமுனி ரிஷியார்தாமும் பொங்குடன்கொண்டுவந்து மாண்பர்முன்னே, நீட்டமுடன்குண்ணதனைக்கொண்டுவந்தநிலையானவித்தையது மகிமையல்ல, வாட்டமுடன்பின்னமொரு மார்க்கஞ்செய்தால் மகத்தானமகிமையென்று நம்பியல்லோ, கூட்டமுடனுந்தமக்குப் பணிகள்செய்து கொப்பனமேவசீஷர்களாயிருப்போம்தானே

தானனவார்த்தையது கேட்டபோது தண்மையுடன்சிவ்ஞான சித்துதாமும், கோனனபொதிமாட்டுக் காரர்தம்மை கொப்பனமேமகிமையது யென்னவேண்டும், தேனனமகிமையதுவேண்டுமானல் தேற்றமுடன்சித்தொளிவுஞ் செய்யக்கூடும், மானனமகதேவர் கடாட்சத்தாலே மார்க்கமுடன்மகிமையது வழிதமுண்டே. (௬௭)

பொதிமாட்டுக்காரர் சித்துவை மழைவருவிக்கச்சொன்னது.

தருவேனென்றுசித்துமுனி கூறும்போது தகமையுள்ளபொதி
மாட்டுக் காரர்தாமும், குருவானசித்துமுனி ரிஷியாரேகேள் கொற்ற
வரேயெங்களுக்கு யின்றுதானும், பருமழையுமின்னேபடி காத்தல்தாமு
ம் பட்சமுடன்வரவழைப்பீராகுலல்லோ, திருவானகுருவென்று வும்
மைத்தானும் திரமுடனென்றைக்கும் வந்திப்போமே. (௯௯)

வந்திப்போமும்மையொரு குருவாயெண்ணி மகத்தானநாதாக்க
ள்நீர்தானென்றும், சிந்திப்போய்சதாகால மர்ச்சித்தேதான் சிருடனே
சின்மயத்தைமனதிலுன்னி, எந்நாளுஞ்சிரிவாழும் பதாம்புயத்தை யெ
ழிலானசற்குருவை மெய்க்குருவென்றெண்ணி, பக்தியேசிரிதனிலே
மாண்பரெல்லாம் பாங்குடனேசதாசித்த மர்ச்சிப்போமே. (௱)

போமேதான்வார்த்தையது கூறும்போது பொங்கமுடன்வணக்க
மகா ரிஷியார்தாமும், ஆமேதான்சொன்னபடி வணக்கில்தானும் தக
மையுடன்மனந்தந்து மனதுமாக, ஆமேதான்மின்னலடி ஜோதிபோ
லும் அவனியெலாந்தந்தளிக்க விகிர்மம்செய்தார், வேமேதான்பொதிமா
ட்டுக் காரரெல்லாம் சிறப்புடன்கண்டல்லோ பிரமித்தாரே. (௱௧)

பிரமிக்கவேயுமலர் மாண்பரெல்லாம் போரானசித்துமுனிரிஷியார்
தம்மை, வரமுடன்பதாம்புயத்தை தொழுதுவந்து மனதுவந்துமுடிசாய்
த்து வந்தனித்து, தமருடனேதாந்த சித்தர்கள் தாரணியிலென்
றுரைத்தமைந்தார், பார்மேதுவையாமல் வையகத்தில் மார்க்கமுட
னென்றுமே வசனிப்போமே (௱௨)

வசனிப்போஞ்சற்குருவேயென்பாதா வளமையுடனென்றுநாங்
கிரிவில்வாழும், பிரமுடையயோகர்க சித்தர்களும் ரிஷிகளெங்கமான
தொருவொருபாதம், பூசல்கொண்டவீரதி சித்தர்களும் துவாபர
மமுள்ளதுயுகந்தன்னில்தானும், ராசமுடையசின்மயத்தி லிருந்தசித்
தர்போலானவேகாதம் தானறிந்தோமே. (௱௩)

கண்டோமேயாட்டிகிரி தனனில்தானும் காணுமேயும்மைப்போ
லொருவரானும், தொன்றிசெப்புவதற்குமேகோடி மாண்பரெல்லாம் தொ
ல்லுலகில்லிருப்பார்களனேகங்கோடி, விண்டுரைசொல்கேளாதவினர்
கோடி வெகுகோடிவையகத்தில் கண்டதுண்டு, துண்டரிகமானதொரு
சித்துபோலே தப்புரலாய்வையகத்தில் காணேந்தானே. (௱௪)

பொதிமாட்டுக்காரர் புகயிலைகற்பம் குடித்தது.

தானானகற்பமது கொடுக்கவேதான் தகமையுள்ளபொதிமாட்டுக்
காரரெல்லாம், கோணகிரிதனிலே யிருக்குஞ்சித்து கொற்றவனூர்மா

யாவின் சித்துவுக்கு, மானுனபுகைகயிலேயின்கற்பந்தன்னை மார்க்கமுடன் சித்தரவர் கொள்வதற்கு, பானுனமாண்பரெல்லா மொன்றாய்க்கூடி பட்சமுடனுள்பாரங் கட்டினாரே. (௱௫)

கட்டினார்மாண்பரெல்லா மொன்றாய்க்கூடி கனமானசுமையதுவு மென்னசொல்வேன், இட்டமுடன்சுமையதனையெடுக்கும்போது வெழிலானசித்துமுனி நடுக்கங்கொள்ள, வட்டமுடன்பாலரெல்லா மொன்றாய்க்கூடி வளமானசித்தருக்கே கொண்டுசென்று, பட்டமரம்போலே யல்லோ மாண்பரெல்லாம் பாதவித்துநின்றல்லோ பார்த்திட்டாரே. ( )

பார்த்தவுடன்மலையில்வந்த சித்துதாமும் பாலரெல்லாந்தானடுங்க கரத்திலேந்தி, தீர்த்தகிரிசிவலிங்கப் பொதியைப்போலும் திறமுடனே சுமைதாங்கியேந்திகொண்டு, வார்த்தையதுகூறாமல் மவுனித்து வளமுடனேகிரிதனிலே கொண்டுசென்று, பூர்த்தியுடன்குருபாதந் தனைவணங்கி புகழுடனேயஞ்சலிகள் மிகச்செய்தாரே. (௱௭)

செய்யவேசித்துமுனி சீஷர்தாமும் சிறப்புடனேகுருநாதர் மனதுவந்து, துய்யபுகழ்புகையிலையின் கற்பந்தன்னை துப்புரவாய்மனதுவந்து நாதர்தாமும், வெய்யவேகாயாதி கற்பந்தன்னை வேண்டியேவிருப்பமுடன் கொடுத்தமாண்பர், பையவேயெவ்விடத்தி லிருப்போரப்பா பான்மையுடனவர்களுக்கு விதிசொல்வீரே. (௱௮)

குருவுத்திரவின்படி சீஷராகியசித்து பொதிமாட்டுக்
காரருக்கு வுபதேசித்தல்.

விதியானகுருமதியி னுபதேசத்தை வித்தகனார்சீஷவர்க்கந் தானுங்கேட்டு, மதியானவுபதேசம் மாண்பருக்கு மார்க்கமுடன்செய்வதற்கு மனதிலெண்ணி, துதியுடனேபொதிமாட்டுக் காரர்தம்மை துப்புரவாயவர்மனதி லெண்ணங்கொண்டு, நிதியதுவுந்தான்கொடுத்து மாண்பருக்கு நீதியுடனுபதேச மெண்ணினாரே. (௱௯)

எண்ணியேபொதிமாட்டு மாண்பர்தம்மை யெழிலாகவரவழைக்க மனதுபூண்டு, வண்ணமுடன்சரமாரி பொழியவல்லோ மார்க்கமுடன் மகதேவர் தனைநினைந்து, திண்ணமுடன்ரிஷிபாரும் நினைக்கும்போது தீர்க்கமுடன்பிரளயங்க ளதிகமாகி, எண்ணமுடன்பொதிமாட்டுக் காரரெல்லாம் யெழிலானமலைதனிலே வந்திட்டாரே. (௱௰)

வந்ததொருமாண்பரெல்லாஞ் சித்துதம்மை மகதேவர்முன்னிருந்த சித்தென்றெண்ணி, சொந்தமுடனவர்பாதம் முடிவணங்கி சுந்தரரேஎம்பெருமானென்றேயையா, அந்தமுடன்சரமாரி பொழிந்துமல்

லோ லையினைபிரளயங்க ளதிகமாகி, விந்தையுடன்வந்ததொரு யிடையூர்தன்னால் விசனமுடன்மலையேறி வந்தோம்தாமே. (௱௰௧)

வந்தோமேயென்றுசொல்லி மாணபரெல்லாம் வளமுடனேசித்துவுக்கு கூறும்போது, பந்தமுடன்மாணபருக்கு சித்துதாமும் பட்சமுடன்கூறலுற்றார் நாதர்தன்னை, விந்தையதுவுபதேசஞ் செய்வதற்கு வித்தகனார்குருமொழியின் வாக்கதாச்சு, சிந்தனையாயெல்லோரும் வந்திருந்து சிறப்புடனேசித்துமுனி கூறினாரே. (௱௰௨)

கூறினார்சித்துமுனி மாணபருக்கு "குவலயத்தில்நீங்கள்செய்த அறத்தினாலே, மீறியதோர்வுங்களுக்கு வுபதேசங்கள் மிக்கமனுநீதியுடன் குருவின்வாக்கு, தேறியேபலநூலும் ஞானந்தேர்ந்து தேற்றமுடனுங்களுக்கு வுபதேசங்கள், சீறியேகோபமது வாராமற்றான் சிறப்புடனேவுபதேசஞ் செய்தார்பாரே. (௱௰௩)

பாரேதானுபதேசஞ் செய்தவண்ணம் பாருலகில்யாருக்குங் கிட்டாதன்று, நேரேதான்கிரியிலுள்ள வளப்பும்வாய்ந்து நேர்மையுடன்மநுநீதி கலைக்கியானம், கூரேதான்வேதமுந்த லாறுசாத்திரம் குறிப்பாணகலைக்கியான மறுபத்துநான்கு, நேரேதான்மாணபருக்கு வுபதேசித்தார் தீர்க்கமுடன்சித்துமுனி ரிஷியார்தாமே. (௱௰௪)

பொதிமாட்டுக்காரருக்கு ஏமவித்தை காண்பித்தது.

தானானரிஷியாரு மன்புகூர்ந்து தகமையுடன்பொதிமாட்டுக் காரருக்கு, கோனானகுருசொன்ன வாக்குபாதம் குவலயத்தில்யாதொன்றுங் குறைவில்லாமல், மானனமினோன்மணியாள் கடாட்சத்தாலும் மகத்தானகாலாங்கி கிருபையாலும், தேனானதேவர்முனி ரிஷியார்பாதம் தெளிவுடனேவாதமது யோதிப்பாரே. (௱௰௫)

போதிக்கவாதமது யேதென்றாக்கால் போக்கானமலைதோறுங் குவந்தோறும், ஆதித்தன்சந்திரனார் காணுவண்ணம் அகஸ்தியனார்மலைமூலி யனைத்துங்காட்டி, வாதிக்குநமதியாத மூலிவர்க்கம் வளமையுடன் கிரிமூலி பசுமூலியாவும், வேதிக்குமூலிகளு மனைத்துங்காட்டி வேகமுடனுபதேசஞ் செய்திட்டாரே. (௱௰௬)

செய்துமேயேமமென்ற வித்தைதன்னை செப்பினார்பொதிமாட்டுக் காரருக்கு, கைதவமாய்மூலிகைக்குச் சாபஞ்சொல்லி கபடகற்றிவுளவுமுதல் யாவுங்காட்டி, வையகங்கள்தான்புகழ மாணபருக்கு வண்மையுடன்யேமமென்ற வித்தைதன்னை, துய்யநற்மாணபருக்கு வுளவுமூலி செப்பினார்நாதரிஷி செப்பினாரே. (௱௰௭)

பொதிமாட்டுக்காரருக்குக் காண்பித்தமூலியெல்லாம்
போகர்-புலிப்பாணிக்குகூறல்.

செப்பவேயின்னமொரு மார்க்கங்கேளு செயலானபுலிப்பாணிமைந்தாபாரு, ஒப்பமுடன்பொதிமாட்டுக் காரர்தாமும் ஓகோகோநாதாக்கள் மூணிவருக்கு, தப்பிதங்கள்நேராமல் புகைலேகற்பஞ் சட்டமுடன்தான்கொடுத்த வுபகாரத்தால், செப்பவேபேமயென்றமூலிதன்னை செயலாகக்காண்பித்தார் கண்டிட்டேனே. (௱௰௮)

கண்டேனேவனத்திலுட மூலியெல்லாம் கருவாகக்குளிகைகொண்டு கிரியைசுற்றி, விண்டதொருமூலிகையின் பகுப்பையெல்லாம் விருப்பமுடனுந்தமக்கு வுபதேசங்கள், பண்டதுபோல்பாண்பகுத்துச் சொல்வேனப்பா பட்சமுடன்மூலியது போக்குசொல்வேன், சண்டமாருதம்போல செய்வாய்நீயும் சாங்கமுடன்கருமிகட்குச் சொல்லொண்ணாதே. (௱௰௯)

வசனமூலி-நெடுமாற்று.

சொல்லவென்றுமின்னமொரு மார்க்கங்கேளு ஆய்த்தானவசனமென்றமூலிமார்க்கம், புல்லவேகுமைகோ கொண்டுவந்து புசமானமுப்பூவுங் கூடச்சேர்த்து, சொல்லவேதாம்பரமாங் குகைட்டுக்கிமேலே கொப்பெனவேமுப்பூவை யுத்தித்தேதான், மென்னவேபுடமிட்டுன்மேல் பூதியேதான் மேன்மையுடன் கொரியென்று படங்காணீரேடே. (௱௨௰)

போடேதான்புடமதுவு மாற்பாரு பொன்சமுடன்மாற்றுவமே னைசொல்வேன், கூடேதானவேலோகஞ் செம்புநாகம் கூறுமனமூலிகைக்கு யீடுமுண்டோ, நாடேதான்மூலவனை யறியமாண்பர் நாட்டினிமேலகட்டலைந்து கெட்டார்கோடி, மாட்டதான்குருமுடிக்கும் வகையுந்தாரோர் மட்டுகளாங்கூர்மையில்லா மாண்பர்தானே. (௱௨௰௧)

பொன்முட்டை-நிலமாற்று.

மாண்பானயின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் மகத்தானபுலிப்பாணி மன்னுகேளு, காண்பானபொன்முகட்டை மூலிதானும் காடெல்லாந்திரிந்தாலுங் கிடையாதப்பா, மாண்பாமகாநூறு குகைகள்கண்டுமடிந்தவர்கள்லக்கில்லை கோடாகோடி, சாண்பாம்புகிளையப்பா மூலிதானும் சட்டமுடனுணீவே மாற்றிலே. (௱௨௰௨)

ஆணியாய்மூலிகைக்கு மூலமப்பா வப்பனேசாணிரண்டு சொல்லலாகும், காணிமுதல்காடெல்லாந் திரிந்திட்டாலும் கசடருக்குகிட்டாது கருமிகட்கும், வாணியாஞ்சரஸ்வதியாள் வீற்றிருக்கும் வளமானமூலியது பொன்முகட்டை, பாணியதுபூமிவளந் தன்னிலப்பா பாங்கானமூலமது காணுதன்றே. (௱௨௰௩)

அன்றானமூலிகைதான் கொண்டுவந்து வப்பனேமுப்பூவுங்கூட்ச் சேர்த்து, குன்றானசமூலமுடன்கூட்டியல்லோ கொற்றவனேகுழித்தயில மாகக்கொண்டு, வென்றிடவேநவலோக தகட்டின்மேலே வீரமுடன்றைதலயதைப் பூசியல்லோ, சென்றிடவேபாண்டமென்ற வோட்டிலப்பா செம்மலுடன்சீலையது வலுவாய்ச்செய்யே. (௱உச)

வலுவானசீலையது செய்தபின்பு மகத்தானபுலிப்பாணி மன்னுகேளு, சுலுவானபுடமதுவுங் கோழியாக துப்புரவாய்ப்போட்டெடுக்கயே மந்தானும், மலுவானதகடதுவும் பழுப்புமேரி மகத்தானமாற்றதுவுமைநாறுரும், நிலுவையாம்[illegible]தியென்ற தங்கமப்பா நீதிசொல்லயிதற்கிடு சொல்லொண்[illegible]. (௱உரு)

பொன்றவாகா-னா அ-மாற்று,

சொல்லவேயின்[illegible] சுந்தரனேபுலிப்பாணி மன்னுபாரு, [illegible] சொல்லவில்லை வேகா[illegible]ரு[illegible] சொல்லவில்லை, [illegible]தார்தாமும் புகழ[illegible]தியருங் கூறவில்லை, [illegible] பூண்டதாலே [illegible] லநானுமல்லோ [illegible]. (௱உசா)

அறி[illegible]யப்பா வழுமானமலைதோறுஞ்சுனைகள்[illegible] [illegible]னவுபார்த்து செம்மலுடன் [illegible]போகாமல் தைலமாக்கி மூர்க்கம[illegible], [illegible]தொருதயிலமதை யெடுத்துக்கொண்டு [illegible]பூடாயே. (௱உஎ)

பூ[illegible] [illegible]ச்சொல்வேன் புகழானநாதாக்கள் கூறவில்லை, [illegible]றும்போது கனமானமாற்றதுவுமிருநூற்கெட்டு, [illegible] யென்னசொல்வேன் மகத்தானபிரிதியென்ற தங்க[illegible] [illegible]ருமினிலே தாக்கிஞக்காலத்துமேனசுயத்தங்க[illegible]. (௱உஅ)

பொ[illegible]மாற்று.

தங்க[illegible]சொல்வேன் தகமையுள்ளபுலிப்பாணி மகவேயாரு, [illegible]மத்தையப்பா அழகானமூலியதுங் கொண்[illegible], [illegible]மூலியது வாசகஞன்று துப்புரவாய்மூலியது சாற்றி[illegible], பொங்கமுடன்மதியென்ற தகட்டிலப்ப புகழாகப்பூசிடவே [illegible]. (௱உகூ)

ஏமமாங்காயரதி கொண்டமூலி யெழிலானக[illegible]யகற்ப மூலியாகும் சாமமென்றமூலியதுவர்ணமூலி தாக்கானசித்தருண்ணும் மூலியாச்சு

வாம்முடன்மாற்றதுவுமெழுநூற்றெட்டு வளமானசுயத்தங்கம்பிறவித்தங்கம், நேமமென்றபூசைக்குக் கருவித்தங்கம் நெடிதானசித்துமுனி மூலியாச்சே. (௱௬௰)

கறுப்புக்கையாந்தகரை-தாது-மாற்று.

ஆச்சப்பாயின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் வப்பனைபுலிப்பாணி மன்னுகேளு, மூச்சடங்கிநெடுங்காலங் கொண்டசித்து முதலாகில் யாரேனுங் கண்டதில்லை, பாச்சலென்றமூலியது கறுங்கையானுங்கதிரோனைக்கண்மறைக்கும் மூலிதானும், மாச்சலென்றமூலியது வதிதஞ் சொல்வேன் மகத்தானமாற்றதுவும் நூற்றெட்டுமாமே. (௱௬௧)

எட்டானமூலியது தலைமையாகும் யெழிலானபூனீறு களஞ்சியாகும், சட்டமுடன்மத்தித்து வெண்ணெயாக்கி சதிரானசெம்பென்ற தகட்டிற்பூசி, திட்டமுடன்சில்லிட்டுச் சீலைசெய்து சிறப்பானபுடமதுவுங் கோழியாக, வட்டமுடனுறியபின் னெடுத்துப்பாரு மகத்தானதங்கமென்ற செம்புமாமே. (௱௬௨)

செம்பானசெம்பதுவு மென்னசொல்வேன் செழிப்பானதங்கமென்ற செம்புமாச்சு, அம்பொன்னுந்தங்கமென்ற செம்புதன்னை வப்பனே மதிதனிலே நூற்றுக்கொன்று, கும்பிடவேதானுருக்கி குருவொன்றிய குற்றமற்றமதியதுவுந் தங்கமாச்சு, வெம்பியதோர்விஷமதுவுந் தீண்டினாற்போல் வேதாந்தசித்தினுட தங்கங்காணே. (௱௬௩)

காணவேதங்கமதை யென்னசொல்வேன் கைலாசநாதருந்தான் காணமாட்டார், பூணவேசுயத்தங்கம் பிறவித்தங்கம் புகழானநாதாக்கள் செய்யுந்தங்கம், ஆணவங்கள்காமியங்க ளொடுக்குந்தங்கம் ஆரகராயித்தங்க மென்னசொல்வேன், வேணதொருநாதாக்கள் பாடுபட்டு வேதைமூகங்காணமல் மறைத்திட்டாரே. (௱௬௪)

மறைத்தாரேயித்தங்க மாருக்கென்றால் மகத்தானசிவயோகி ஞானிகட்கும், குறைந்ததங்கமானாலே வையகத்தில் கொற்றவர்கள்மாண்பருக்கு விதியாகும், நிறைந்ததொருபரிபூரண தங்கமப்பா நீதியுள்ள ஞானிகட்குஞ் சிவயோகிக்கும், சிறைகொண்டுகோணத்தில் வாழுஞ்சித்து சீரானதேவரிஷி வாய்க்குந்தானே. (௱௬௫)

வாய்க்குமேமற்றவர்க்கு சித்தியில்லை மகத்தானகொற்றவருங் கண்டதில்லை, காய்க்குமேயிம்மூலி வேதைதன்னை காசினியிலாருக்குங் கிட்டாதப்பா, தோய்க்கமலம்வீற்றிருக்குமம்பாள்பாதம் தொழுதுமேபணிந்துநித்தஞ் சதாகாலந்தான், சேய்போலேயம்பாட்குப் பணிகள்செய்து சித்தம்வரமனதுவந்து நடந்துகொள்ளே. (௱௬௬)

சிறியானங்கை-கூச-மாற்று

கொள்ளவேயின்னமொரு வதிதஞ்சொல்லேன் கூரானபுலிப்பா
ணி மகனேகேளு, எள்ளளவுங்கோளாறுநேராமற்றான் யெழிலானகா
னகத்தின் மூலிகண்டேன், மெள்ளவேசிறியானின் நங்கைதன்னை மே
ன்மையுடன்கொண்டுவந்து கூறக்கேளும், விள்ளவேமூலியது சாற்றி
லப்பா வீரமுடன்சூதமதைத் தாக்கிடாயே. (௱கூஎ)

நாகவேதை.

தாக்கவேசூதமென்ற சரத்தைத்தானுந் தண்மையுள்ளநாகமதில்
தன்னிலூட்ட, நோக்கமுடன்நாகமது கண்ணடைந்து சொருக்கியே
சவளையது போலேயாகும், ஊக்கமுடன்சவளைதனை யொடித்துமைந்தா
ஓகோகோநாதாக்கள் சொன்னநீதி, தூக்கமதுகொள்ளாமல் செம்பிலப்
பா துப்புரவாய்நூற்றுக்கு ஒன்றுதாக்கே. (௱கூஅ)

ஒன்றானசவளையது கொடுத்தபோது வுத்தமனேமாற்றதுவு மெ
ன்னசொல்வேன், வென்றிடவேமாற்றதுவு மெறுபத்துநான்கு வேதாங்
தத்தாயாரு மூரைக்கநீதி குன்றினில்வாழ்சித்தர்முனி கூறுமப்பா கு
வலயத்திலுந்தனுக்கா யுரைப்பேன்யானும், சென்றிடவேநெடுங்காலம
மலையில்கார்த்து செம்மலுடன்வாங்கியதோர் வேதைபாரே. (௱உகூ)

பாரேதான்சிறியானின நங்கைவேதை பாருலகில்யார்செய்வார்
மாண்பரப்பா, நேரேதான்நாதாக்கள் செய்யும்வேதை நேர்மையுடன்
கண்டறிந்து மனதுவந்து, நீரேதானுந்தமக்கு மனங்களித்து தீர்க்கமு
டன்யான்கொடுத்த வேதைதன்னை, சீரேதான்மற்றவருங் காணுமற்று
ன் சீருலகில்புத்திவானாய் வாழ்வீர்தாமே. (௱சூ)

பெரியாநங்கை-௱உஅ-மாற்று.

வாழவேயின்னமொரு வதிதஞ்சொல்வேன் மகத்தானபுலிப்பாணி
யதிதவாளே, தாழவேபெரியானின்மூலியப்பா தாரணியில்சித்தர்களு
ங் காணமாட்டார். மூழவேகண்டாலுங் கூறமாட்டார் முனையானமூலி
தனை மறைத்துப்போவார், சூழவேகானகத்திலிருக்குமூலி சுடர்மூலி
விடமூலிசுருதியாமே. (௱சக)

கருதியாம்மூலியுட வேகந்தன்னை சதானேயென்னசொல்வேன்
மச்சகேந்திரா, விருதியாங்காடெல்லாந் திரிந்தாலுந்தன் நிஷ்களங்கமா
னதொரு மூலிதன்னை, சூருதியாமம்மூலி நிறமேயாகும் குவலயத்தில்
கண்டவர்கள்விளம்பாரப்பா, பருதிமதிகாணுக விருட்சத்தின்கீழ் படர்ந்
துமேதானிருக்கு மூலியாமே. (௱சஉ)

மூலியாந்தழையதனைக் கொண்டுவந்து முனையானரசமதுவுந் துலமேயாகும், நாவிலோர்பங்கதுவுஞ் சூதந்தன்னை கலமுடனேதான்கூட்டி மத்தித்தேதான், வேலியெனும்வீரமதைக் கால்தான்கூட்டி வேகமுடன்குழைத்துமன்றுகேளு, பாலியெனும்பரித்தநட்டிற்பூசியேதான் பாங்காவோட்டிவிட்டுச் சீலைசெய்யே. (௪௪௩)

சீலையதுசெய்தபின்பு ரவியில்வைத்து சிறப்பானகோழியென்ற புடத்தைப்போடு, வேலையெனும்புடமதுவு மாறிப்பின்பு வேதாந்தத் தாயதனை மனதிலுன்னி, நூலையதுவரன்முறையாய்த் தொகுப்புங்கண்டு நுட்பமுடன்கைபாகஞ் செய்பாகந்தான், மாலையுடன்புடமாறி யெடுத்துப்பாரு மகத்தானயேமமது களங்கமாச்சே. (௪௪௪)

ஏமமென்றகளங்கதனை யெடுத்துமைந்தா யெழிலானவெள்ளிதனில் நூற்றுக்கொன்று, வாமமுடன்தானுருக்கி ருதுவோடீய மகத்தான தெள்ளியது யேமமாச்சு, நாவிலெறிவெள்ளியது சிறவித்தங்கம் நாதாக்கள்கண்டதொரு நாகத்தங்க, ஆமமென்றதங்கமது வர்ணத்தங்கம் வப்பனைமூலிகையின் பெருமைதானே. (௪௪௫)

பெருமைபாயினைகவிக [illegible] முனி வேண்டும், கருமமதுதானகற் [illegible] தது போல் பெயருங்கொண்டு, [illegible] வல புடனேயேவலது [illegible] லுகமதில்பெயருண்டாய் வாழ்வீர்தானே. (௪௪௬)

தானெனமாற்றதுவும் [illegible] தாக்கள் செய்யுந்தங்கம், கோனெனசித்தமுனி [illegible] வெகுகோடி நூலிலப்பா, தேனெனமனிஞெ [illegible] தேற றமுடன்கண்டறிந்த வேதைதன்னை, மானென [illegible] புண்ணியத்தால் மகிட்சியுடனென்றுநும் மணங்கொள்வீரே. (௪௪௭)

மணமுடனேசிதாபாசம் மனதிலுன்னி மார்க்கமுடன்மதியமூர்த்தங் கொண்டுமேல்லோ, தணலதுவும் நாமல் யோகந்தன்னில் தமுற்சியுடன்சிவயோக நிலையில்நின்று, குணமுடனேதிரிகரண சொருபாக குவலயத்திலஷ்டாங்க யோகங்கண்டு, வணங்கியேயஷ்டசீலை பதியைக் கண்டு வாமமுடனர்ச்சித்து வலுகொள்வீரே. (௪௪௮)

உண்டானவித்தையது வனேகமுண்டு வுத்தமனேபார்க்கவென்றால் கண்கொள்ளாது, திண்டானவித்தையது சொல்வீராகில் திரமுடன்செய்வதற்கு வையமில்லை, பண்டானகுலைகளவுமில்லாவித்தை பட்சமுடனெந்தமக்குச் சொல்வீராகில், வண்மையுடன்செய்துமல்லோ வுந்தமக்கு வளமையுடன்காட்சியது தருவேன்பாரே. (கூஅ)

கறுப்புக்கோடாசுழி-குய-மாற்று.

கொள்ளவேயின்னமொரு குணமுஞ்சொல்வேன் கூரானபுலிப்பாணி புளிதவானே, விள்ளவேகாடெல்லாந் திரிந்தாலுந்தான் விட்டகுறையிருந்தாலே லபிக்கும்பாரு, வெள்ளாடு மண்டாலே யழியுமுறவி வேதாந்தத்தாயிருந்து ஏறவேயப்பா, என்னவுங்குற்றமது நேராமுனி யெழிலானகறுப்புக்கோடாவாமே. (௱௪௯)

கோடானசுழியென்ற முய்யப்பா கொற்றவனேகொண்டுவந்துசொல்லக்கேளும், தாடானமூர்சதந் தலவேயாரும் தாக்கானவீரமது விராகனென்று, கூடானதுகமது விராகனென்று கொற்றவனேமுன்றையுந்தானென்றாய்க்கூட்டி, வாடாமல்மெல்லவேதான் போலரைத்து வளமானசெப்பதனில் பூசிடாயே. (௱௫௰)

பூசவேமேனமைத செம்பதனில பரப்பாகவேவித்துக் காய்ந்தபின்பு, வாசமுடன்கரியேயட்ட வடுமைந்தா வளமையுடன்மெல்லிட்டுச் சீலைசெய்து, பாசமதுதானுகல சுவிவில்லைய்த்து பட்சமுடன்கோழியென்ற புடத்தைப்போடு, நேசமென்றபின்னது சேர்ந்தாலே கொற்றவனேசெய்பதாலும் வரணமாச்சே. (௱௫க)

ஆச்சப்பாசெய்பதாலும் வாணமிறி வப்பனேமாற்றதுவு மைம்பதாகும், மாச்சவேமுறைவிப்பதாலும் விட்டகன்று மகத்தானசெய்பதுவும் பழுப்புமிறி, காச்சவுடன்றிரைசவதி கமியபோசேல் சாடகற்றிசவளையுடனறுகல்லாறி, ஆச்சரியமானதொரு ஆட்டமாய்ப்பு வப்பனேசரகரப்பு புடனையப்புகானே. (௱௫உ)

தானானேஜயிமென்ற தங்கப்போலே தன்மையுள்ளகுற்றமதுதீங்கியேதான், கோனானகுருந்தங்கம் பிறவிந்தங்கம் குவலயத்தில்காதாக்கள் செய்யுந்தங்கம், மானனமகமேரு வானதங்கம் மகத்தானமுலியுடகாரசாரம், தேனானபாசமது பட்டபோது தெளிவான வுறுதியென்ற தங்கந்தானே. (௱௫௩)

தங்கமாமதிதனிலே நூற்றுக்கொன்று தாக்கடாசோடசமுஞ் காணுங்காணும், வங்கமாய்ப்போகி யானவங்கம் வளமானவரணமதைக்

கொல்லாதப்பா, புங்கமாமஷ்டசித்தி யிதற்குள்ளாகும் புகழானதங்கம து பிறவித்தங்கம், பங்கமதுவாராது நாததங்கம் பாருலகில்மாண்பரு க்குக் கிட்டாதன்றே. (௱௫௪)

அன்றானவிதியாளி வருவானானால் அவனுக்கேகிட்டுமது மற்றோ ர்க்கில்லை, குன்றானமலைநாடு தேசந்தன்னில் கொற்றவருஞ்சிவயோகி மாண்பருண்டே, தென்றிசையிலகஸ்தியனார் மலையிலப்பா திரமுடன்செ ன்றுவந்தோர் கோடியுண்டு, வென்றிடவேயவர்களிலுங் கருமியுண்டு வேதாந்தசிவயோகி தானுமுண்டே. (௱௫௫)

உண்டானமனோலயத்தை யறிந்துகொண்டு வுத்தமனேநால்பார் த்த வாதிகண்டு, கண்டாலும்விள்ளாத காரியாளர் கசடகற்றிமனம் பொருந்தி கருத்திலுன்னி, அண்டர்முனிதேவாதி ரிஷிகட்கொப்பாய் வப்பனேமுற்பலத்தை யகற்றிவாழும், சண்டமெனும்மாருதம்போல் பாசம்விட்டு சட்டமுடன்வாழுகின்ற யோகியாமே. (௱௫௬)

யோகிபார்த்ததுவத்தில் மிகுந்தவானாய் யோகமெனும்பதினைக்கு வுகந்தசீஷன், போகமதுதானகற்றி பொறுத்துவாழும் பொங்கமுடன் ஞானமென்ற மாண்பர்கண்டு, ரோகமதுயில்லாத புண்ணியவானாய் கொடிக்குள்ளேபகுத்தறிவு கொண்டதீரன், சாகமதுசேராத சீஷன் கண்டு சட்டமுடனுபதேசஞ் செய்குவீரே. (௱௫௭)

சிகப்புசித்திரமூலம்-உரு-மாற்று.

செய்யவேயின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் செயலானபுலிப்பா ணி வதிகவானே, துய்யதமிழ்ப்பாண்டியனுக் கொப்பதான துரைராஜ சுந்தரனே புகலக்கேளீர், வையகந்தன்தான்புகழும் வனந்திரத்தில் வண்மையுள்ளசிவத்தகொடி வேலியப்பா, மெய்பானமலைதனிலே மெ த்தவுண்டு மேதினியோர்காண்பதுவு மரிதுபாரே. (௱௫௮)

பாரேதான்மலைதனிலே சுற்றும்போது பாங்கானபாறையின்றனை வெடிப்பில்தன்னில், நேரேதான்விளைந்திருக்குஞ் சிவந்தமூலி நெடிதா னகொடிவேலி யென்னலாகும், சீரேதான்கொடிவேலி கிளையெடுத்து சிறப்புடனேகூமனை யெடுத்துமைந்தா, நீரேதான்வீரமது களஞ்சி கூட்டி நீதியுடன்மத்தித்து ரவியிற்போடே. (௱௫௯)

போடவேசீலையது வலுவாய்ச்செய்து பொங்கமுடன்கனயெருவி ற்புடத்தைப்போடு, நீடவேபுடமாறி யெடுத்துப்பாரு நிலையானசெம்ப துவு மென்னசொல்வேன், கூடவேசெம்புதனை பதனம்பண்ணு கொற் றவனேகவசகுண்டலத்துக்காகும், ஆடவேமாற்றதுவு மிருபத்தைந்து வப்பனேகுங்குமப்பூ நிறமுமாச்சே. (௱௬௰)

ஆச்சுதென்றுவிடுகாதே யின்னங்கேளு ஆகாசநாதாக்கள் மறைத்தஜோதி, வாச்சுதேசிவயோகிக் குகந்ததங்கம் வர்ணதங்கமிதற்கலேலா யிடாமோதான், போச்சுதென்றுவிடுகாதே புண்ணியவானே புகழானநாதாக்க ளாடுங்கூத்து, காச்சுதேசிவந்தசித்திரமாமூலி கனகமெல்றவேதையது கைக்குள்ளாச்சே. (௭௬௧)

உள்ளானபொருளெல்லா மிதிலேதாயும் வுத்தமனேநாதாக்கள் கூறாட்பா, கள்ளமின்றிநோதாத மெய்சித்தை காசினியில்சித்துமுனி செய்யுமார்க்கம், எள்ளளவும்பிசகதுவும் வாராதப்பா யெழிலானவித்தையது யென்னசொல்வேன், கொள்ளைகொண்டகுருவினது வாக்குதானும் குவலயத்தில்பொய்யாது மெய்யதாமே. (௭௬௨)

மெய்யானசிவந்த சித்திர மாமூலி மேதினியில்வெகுமாண்பர் கரணுமற்றான், பொய்ய னதுமிதனை மெய்யென்றெண்ணி பொங்குமுடன் கெட்டலைந்தார் கோடாகோடி, துய்யதமிழ்சாத்திரங்கள சூழும்வண்ணம் துப்புரவாய்த்தலைமாடு கல்மாடான, செய்யதொருகாப்பேடு பாராமற்றான் செகனதிரமாண்பர்களும் கெட்டார்தாமே. (௭௬௩)

மேற்படி மூலிகற்பம்.

கெட்டாரேசிவந்த சித்திரமாமூலி கெடியானவையகத்தில்காணமற்றான், பட்டலைந்துமலைவளங்கள குன்றுசாரி பாருலகில்தேடியல்லோ காணமற்றான், அட்டகிரிதான்புகுமும் மேதினியில் வன்பானமூலிதனைக் கண்டபிந்து, மிட்ட குறையிருந்தொரு தன்மையாலே மேதினியில்சிலபேர்கள் கண்டார்தாமே. (௭௬௪)

கண்டாரேகாலாங்கி திருவையாலே காசினியில்நாதாக்க ளிருக்கும்ஸ்தானம், தொண்டுபிசெய்கல்லோ மூலிதன்னை தோறுமல்மனதுவந்து கற்பங்கொள்ள, கண்டமாருதம்போலே மூலிகற்பம் சாங்கமுடனிருவேனோ புண்டுமல்லோ, வனமெழுதுகோடதுபோல் வரணங்கொண்டு வையகத்தில்வெகுமாண்ப ரிருந்தார்தானே. (௭௬௫)

தானானமூலியது கொண்டபோது தாக்கானவாசியது கிழ்நோக்காகும், கோனானகுருநாதர் சொன்னவாக்கு குவலயத்தில்பொய்யாமல் மெய்யென்றெண்ணி, தேனானசிவப்பு சித்திரமாங்கற்பம் தேசமதில் கோடான கோடிபேர்கள், மானானமலைவளத்தி லிருந்துகொண்டு மார்க்கமுடன்கற்பமது கொண்டிட்டாரே. (௭௬௬)

கற்பமாஞ்சித்திரமாமூலிகற்பம் கனமுடனேயுண்டவர்க்கு வயதேசொல்வேன், சொற்பமென்றுயெண்ணாதே அய்யாலா சொர்ணம்

பேர்ல்தேகமது மின்னும்பாரு, விற்பனமுமிகவுண்டா மறிவுமுண்டா விருத்தமதுவாராது பாலன்போலாம், அற்பமென்றுநினையாதே யறிய பாலா வாயிரமாம்வருடமது யிருக்கலாமே. (௱௬௭)

இருக்கவென்றுனுலகுபதி சித்துதாமும் யெழிலுடனேநெடுங்கால மிருந்தசித்தும், பொருக்கவேகாயாதி கற்பங்கொண்டு பொன்னுலகுபதிதனிலே சேர்ந்தாரப்பா, வருக்கமுடன்வெகுகோடி சித்துதாமும் வளமானமூலிகற்பங் கொண்டுமேதான். திருக்கமலம்வீற்றிருக்கு மம்பாள்பாதம் தீர்க்கமுடனெடுங்கால மிருந்தார்பாரே. (௱௬௮)

போகர் புலிப்பாணிக்கு பொய் இன்னதென்றுகூறல்;

பாரேதானின்னமொரு பண்புசொல்வேன் பாங்கானபுலிப்பாணி பாக்கியவானே, நேரேதானுலகுபதி மாண்பரெல்லாம் நேர்தானபொய் யதனை நுகரும்நேர்மை, நேரேதான்யான்தெய்வ மென்பார்தானும் திறளானசார்வாகம் பொய்யேயாகும், கூறேதான்தான்கடவு ளேனுமதும் பொய் குவலயத்தில் தெவனில்லை யென்பார்தாமே. (௱௬௯)

தாமானலோகமது பொய்யேயாகும் சகலகலையறிவதுவும் பொய்யேயாகும், கலமானமோகனங்கள் பொய்யேயாகும் கலமானவசியமுதல் மாற்றம்பொய்யே, வேமானமுள்ளதொரு வுச்சாடணங்கள் வெகுவிதட்டுகலைதிரட்டு மேதினிக்குள், சாமானியமானதொரு தேவரங்கம்சட்டமுடன்வரவழைத்தல் பொய்யதாமே. (௱௭௰)

பொய்யானசெப்பிடிகள் வித்தைபொய்யே பொங்கமுடனாலங்கள் செல்லல்பொய்யே, துய்யசெஜகரணமது சுத்தம்பொய்யே துப்புரவாய்க்குளிசங்க ளெல்லாம்பொய்யே, வெய்யபுசழ்தேகமது தானும் பொய்யே மேதினியிலிருப்பவரும் பொய்யேயாகும், வையவருமுலகமதி லெல்லாம்பொய்யே காதாக்கள்சொல்லுமுறை சிலபொய்தானே. ()

போகர் புலிப்பாணிக்கு மெய்கூறல்.

தானனபுலிப்பாணி தார்வேந்தனே தண்மையுடன்சொல்லுகிறேன் தருமவானே, கோனேதானுலகுபதி மாண்பரெல்லாம் கோர்வையுடன்பலநூலுங் கற்றுமென்ன, வீணேதான்பொய்மெய்யு மறியாமலன்பர் விருதாவாய்சிவயோகஞ் செய்துகொண்டு, காணுமல்வையகத்திலுண்மைதன்னை கசடகற்றிமெய்பறிய மறந்தார்பாரே. (௱௭௨)

பாரேதான்வையகத்தில் மெய்வுமுண்டு பாங்கானமோக்ஷமென்ற வீடுமுண்டு, நேரேதான்பாவிகட்டு நரகமுண்டு நீடாழியுலகமதுவழிவதுண்டு, சீரேதான்வாதமது மெய்யேயாகும் சிறப்பானகுளிகையதுமெ

ய்யேயாகும், வீரதான்கற்பமது மெய்யேயாகும் விருப்பமுடன்யிறப் பதுவும் மெய்யதாச்சே. (௱௭௩)

நன்னாரி கற்பம்.

ஆச்சப்பாபுலிப்பாணி புனிதவானே அவனிதனிலின்னமுண்டு கற்பங்கேளீர், மாச்சலென்றநன்னாரி கற்பமப்பா மகத்தானகற்பமதை ஆண்டுகொண்டால், பாச்சலென்றவுதிரமது விஷங்களுது பாங்கான தேகமது களைலோராது, வீச்சுடனேநேத்திரங்கள் குளிர்ந்துகாணும் வீரானசுவாசமது கீழ்நோக்காமே. (௱௭௪)

நோக்கானமுலிகையாங் கற்பந்தன்னில் நுணுக்கமுள்ளமாண்பர் களுங் கொண்டுவந்து, தாக்கானமதியமுர்தம்பூண்டுகொண்டு வன்மை யுடன்தவநிலைக்கு வுறுதிகொண்டு, வாக்குமனம்சித்தமா காயம்பொங்கி வளமையுடன்வாயுது கீழ்நோக்கி, தேக்கமுடன்சிவயோக பதியிற் சென்று தேற்றமுடன்டுநெடுங்கால மிருக்கலாமே. (௱௭௫)

கற்பமுண்பவர்க்கு யோமித்தி லிங்கப்போக்கு.

இருக்கவேயின்னமொரு மருந்துவந்தான் யெழிலானபுலிப்பாணி இலர்தவானே. பொருக்கவேகாயாதி கொண்டபேர்க்கு பொங்கமுடன் ஜீவனத்துக் கிடமேதென்றால், நிருக்கையிலேதானிருக்குஞ் சிவஞான நிர்க்கமுடன்வாதமது புகலக்கேளும், பெருக்கமுடன்காலாங்கிநா தர்பாதம் பெருமையுடன்யான்வணங்கி கூறுவேனே. (௱௭௬)

கூறுவேன்ஜாதிலிங்கம் பலந்தானொன்று கொற்றவனேமுலைப்பா லி னாரப்போடு, கேளுதலாய்மப்பெருமது மானபின்பு தெளிவிருத்து லிங்கமதை யெடுத்துவைத்து, மாறுபடாயெதிராலன் பாலேயப்பா மார்க்கமுடனென்சாருஞ் சுருக்குதாக்கு. வீறுடையகுமரியின்றன் பாலால் தானும் விருப்பமுடனாற்சாமஞ் சுருக்குதாக்கே. (௱௭௭)

தாக்கானலிங்கமதை யெடுத்துபாலா தன்மையுடனாதாரச்சார க்காம், போக்கானசரக்குதுவு மேதென்றக்கால் பொங்கமுடன்துருசு வெடியுப்புக்காரம், நோக்கானசாரமுடன்சினங்தானும் நுண்மையுள் ளகரியுப்பு கூடச்சேர்த்து, வாக்கதுவும்பிசகாறு வண்ணமப்பா வள மையுடன்திரோகஞ்செயநீர்தானே. (௱௭௮)

தானேனவாராதா ரச்சரக்கால் தாரணிபிலண்டபிண்டந் தானுமா ச்சு, கோனுனகுருவருளுங் காணலாகும் கொப்பெனவேசத்திசிவ மா றிற்காண்பீர், பானுனமேந்தூரக் கட்டுப்போக்கும் பாங்கானகளங்குமு த லிதனுலாகும், தேனுனதேவிமனோன் மணியாள்பாதந் தேர்ந்தெடுத் தவாராதா ரந்தான்பாரே. (௱௭௯)

பாரேதான் ஜெயநீரி லனந்தம் போக்கு பாடினார் ஜெகதலத்தில் முனி வர்கோடி, நேரேதான் குருக்கிடையுங் கருக்கிடையுமப்பா நெடிதான சாத்திரங்க ளனந்தஞ் சொன்னார், வேறேதான் சாத்திரத்தி லிந்தப் போக்கு வேதைமுகங் காணுதற்கு குறிகள் காணார், நீரேதான் சாத்திரத்தி னுளவு கண்டு நீதியுட னாராதா ரத்தைக் காணே. (௫௮௰)

காணவே .... தக்கண்டால் கனகமேனும் வாதமது கைக் குள்ளாச் ... காணவே ... கருது கல்லிலப்பா தோறுமெலன் சாமஞ் சுருக்கும ... வேணவே ஜெயநீரில் நிற்பானாகம் வேகமுடன் தூரதனி ல் நின்றசத்து, நீணவே சத்ததனை யெடுத்து மைந்தா நிகட்சியுடன் லிங் கமதிற் கவசம் பூசே. (௫௮௧)

பூசவே லிங்கமதிற் கவசம் போகிப் புகழான லிங்கமது புடந்தான் பத் து, மாசில்லா லிங்கமது மணந்தானப்பா மகத்தான புடமதுவும் பத்தி யாகும், கேசியெனும் வஸ்தி ... தாரம் ... கட்டும்பாரு, ... லிங்கமப்பா வுத்தமனே யுருக்கது போ லிருக்கும்பாரே. (௫௮௨)

உருக்கவே லிங்கமதை யெடுத்து மைந்தா வுத்தமனே மேற்போக் கு கூறக்கேளும், பெருக்கமுடன் சாரமென்ற ஜெயநீர் தன்னுங் போரா னதங்கமதை பத்துக்கொன்று, குருக்கியே தங்கமதை ஜெயநீராக்கி கூ சாமலிங்கமதிற் சுருக்கு தாக்கு, நெருப்பிலே நிலைத்தல்லோ நீறிதாக் கி நேரான ஜெயநீரை சுருக்கு தாக்கே. (௫௮௩)

தாக்கிடவே லிங்கமது பிறமைந்தா தன்மையுடன் வெட்டுருக்கு போலேகாணும் நோக்கிடவே மேற்போக்கு புகலக்கேளும் நாட்டமுட ன்தேனதனை சுருக்கு தாக்கு வாக்குடனே காலாங்கி நாதர்பாதம் வண் மையுடனவர்பாதம் வணங்கியல்லோ, இக்குறியிலயமதனால் சட்டிதன் னை திர்க்கமுடன்தானமைத்து செப்பக்கேளே. (௫௮௪)

கேளே தான் லிங்கமதை யிரும்பில்வைத்து செழியான தேனதனை மனதுவந்து, பாளே தான் போகாமல் சுருக்கு தாக்கு பட்சமுடன் லிங்க மது யிருகிக்காணும், சூளே தான் சுருக்கதுவு மறுபத்தொன்று சுயமா னதேனதனால் சுருக்கு தாக்கு, விளேதான் லிங்கமது ஜெயக்கட்டாகும் மிக்கான கட்டதுவு மறிந்தம்பாரே. (௫௮௫)

அரிதான கட்டதனை யெடுத்து மைந்தா வப்பனே சிற்றண்ட தயிலம் வாங்கி, பெரியான வெண்காரம் பத்துக்கொன்று பொங்கமுடன் தைல

மதில்சேர்த்துமல்லோ, வரியானலிங்கமதை சுருக்குதாக்கு வண்மை யுள்ளலிங்கமது யிளகிக்காட்டும், பரியானதங்கமது ஜெயநீர்சேர்ந்துபா க்கானலிங்கமது மெழுகுமாச்சே. (ருஅசு)

ஆச்சப்பாலிங்கமது கல்மெழுகேயாகும் வப்பனைமெழுகதனைப் பதனம்பண்ணு, காச்சலென்றலிங்கமது யிளகிக்காட்டும் கருவானலிங் கமது போக்குசொல்வேன், மாச்சலதுவாராம லிங்கந்தன்னை மயங்கா மல்கருவங்கஞ் சுத்திசெய்து, பாச்சலுடன்வங்கமதை லிங்கந்தன்னை பட்சமுடன்தானுருக்கி யிடைதானீயே. (ருஅஎ)

இடையானயிடையதுவு மென்னவென்றால் யெடைலாகசரியிடை யே செப்பலாகும், மடைபோன்றவங்கமதை யுருக்கிமைந்தா மயங்கா மல்வுருக்குமுகந் தன்னிலீய்ந்து, கடையானதங்கமதில் வங்கலிங்கம் கருவுடனேவுருகிநின்ற களங்குதன்னை, தடையறவேதங்கமதி கொடுத் துமைந்தா சட்டமுடன்தானுருக்கி யெடுத்துப்பாரே. (ருஅஅ)

எடுத்துமிகப்பார்க்கையிலே யென்னசொல்வேன் யெடைலானகள ங்கமது போமவித்தை, தொடுத்தோருகளங்குதனை யெடுத்துபாலா கோருமல்வெள்ளிசெம்பில் பத்துக்கொன்று, கொடுத்திடவேவுருக்கு முகந் தன்னிலீய்ந்து கொற்றவனே செம்பதனை யூதிப்போடு, விடுத்த கொருமாற்றதுவு மென்னசொல்வேன் விட்டகுறையிருந்தவர்க்கு லபிக் குந்தானே. (ருஅகூ)

தானனவெள்ளியது மென்னசொல்வேன் தன்மையுள்ளமாற்றது வு மாறதாகும், மானனமட்டமிவ் நாலுக்கொன்று மகத்தானதங்கமது வொன்றுசேர்த்து, தேனனதேகியுட கடாட்சத்தாலே தேற்றமுடன்மாற் றதுவு மெட்டதாகும், கோனனபுடத்துக்கு வுறுதிதங்கம் குவலயத்தி லாரறிவார் சித்தர்தாமே. (ருகூ0)

சித்தானசித்தமுனி நாதர்தானும் செப்பானரிஷிதேவர் செய்யுமா ர்க்கம், முத்தானவேதைவிதம் யின்னஞ்சொல்வேன் முனையானமார்க்க மது போலொன்றுது, பக்தியுடன்சிவராஜ யோகிமாண்பர் பாலகனே செய்யும்வகை யனேகமுண்டு, சுத்தியுள்ளசெம்பதுவுந் துலந்தானொ ன்று துறையானலிங்கமது துலந்தான்ரெண்டே. (ருகூக)

துலமானசெம்பதனில் லிங்கம்ரெண்டு தூக்கானலிங்கமதைக்கிரா சமிவாய், நலமானயிருண்டசெம்பு கட்டிப்போகும் நாற்றமுள்ளவூறல து யேகிப்போகும், சலமானவூறலது யேகியல்லோ சாங்கமுடன்நிரை வடு மற்றுப்போகும், குலமானதங்கமதை சரியாய்ச்சேர்த்து குகைத னிலேதானுருக்கி யெடுத்திடாயே. (ருகூஉ)

எடுத்துமேமதிதனிலே பத்துக்கொன்று யெழிலானதங்கமதை தாக்குதாக்கு, கொடுத்திடவேமாற்றதுவு மாறதாகும் கொப்பெனவேதங்கமது வெட்டிலொன்று, அடுத்துமேதான்கொடுத்து வுருக்கிக்கொண்டு வப்பனேவாரடித்துப் புடந்தான்போடு, தொடுத்ததொருமாற்றதுவு மென்னசொல்வேன் தோருமல்வயததுவு மேழதாமே. (௱௯௩)

ஏழானபொன்னதுவும் பசுமைமெத்த யெளிதானயேற்றமொன்று யின்னஞ்சொல்வேன், தாழானமட்டமது மாற்றுகாணும் தண்மையுள்ளபசுமையது யென்னசொல்வேன், காழானதுருசினுட செந்தூரத்தால் கருவானமாற்றதுவு மதிதங்காணும், சூழானசூதவித்தை யேமவித்தை சுந்தரனேசொல்லவுந்தான் நாவொண்ணாதே. (௱௯௪)

ஒண்ணாதுயின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் ஓகோகோபுலிப்பாணி யுங்கபாலா, கண்ணானலிங்கமது களஞ்சியொன்று கருவானநாகமது களஞ்சியொன்று, மண்ணானவாயுவென்ற பிரிதுவுகாணும் மகத்தானவங்கமது களஞ்சியொன்று, திண்ணமாம்லோகமதை யொன்றாய்க்கூட்டி திரமுடன்மூசைதனி லுருக்கிடாயே. (௱௯௫)

உருக்கியேகண்விட்டு ஆடும்போது வுத்தமனேலிங்கமென்ற களஞ்சிதன்னை, பெருக்கியேயுருக்குமுகந் தன்னிலப்பா யோரானலிங்கமதை குருவொன்றீய, வருக்கமுடன்மூசைதனை யாற்றிப்பாரு வளமானகளங்கமது யென்னசொல்வேன், சுருக்கமுள்ளசிமிட்டுவித்தை வேதைகாணும் துப்புரவாய்மூசைதனை யுடைத்துப்பாரே. (௱௯௬)

உடைத்துமிகப்பார்க்கையிலே யென்னசொல்வேன் வுத்தமனேலோகமென்ற களங்குலிங்கம், தடையறவேமேயதுவு மேழதாகும் தாக்கானரவியதுவு மூன்றதாகும், கடையானகளங்கமது வொன்றதாகும் களங்கமறதானுருக்கி குருவொன்றீய, மடைபோன்றகளங்கமதைத் தானெடுத்து மகத்தானவோட்டில்வைத்து ஆதிப்போடே. (௱௯௭)

போடேதான்கரியோட்டி லூதும்போது பொங்கமுடன்வெள்ளியது சவளைபோலாம், நாடேநீசெம்பகல ஆதிப்போடு நலமானபசும்பொன்னு யென்னசொல்வேன், தேடேநீபுடமதனில் தாக்கிப்பாரு தெளிவானதங்கமது ஜோதிமெத்த, ஆடேநீஜீவனத்தை செய்துகொண்டு வப்பனேந்தவநிலையை சாதிப்பாயே. (௱௯௮)

நத்தைகற்பம்.

சாதிப்பாயின்னமொரு கற்பஞ்சொல்வேன் சற்பாத்திரமுள்ளதொருமைந்தாகேளு-வேதினியிலேரிதனில்வளருகின்ற மேன்மையுள்ளநத்தையதுவொன்றுவிதம்-ஆறியென்றமுப்பதுவுங் கூட்டச்சேர்த்து வப்பனைமண்டலந்தான் கொண்டாயானால், நீதியுடன்காயமது கற்பமீதி நீணிலத்தில்வெகுகால மிருக்கலாமே. (௱௯௯)

இருக்கவென்றால்கோடிவரை யிருக்கலாமே யெழிலானகாலாங்கி யுண்டகற்பம், திருக்கமலம்வீற்றிருக்கும் தாயார்பாதம் நீர்க்கமுடனென்னாளும் மனதிலுன்னி-வருக்கமுடன்நத்தையின்றன்கற்பந்தன்னை வாகுடனேகொண்டோர்க்கு காயசித்தி, பெருக்கமுடன்முப்பூவின்வலுமையாலே பேரானநத்தையது கற்பமாச்சே. (௨௱)

கற்பமென்றநத்தையது யேதென்றாக்கால் கருவானபிரிதிவினில்வளர்ந்தபிண்டம், சொற்பமென்றுநினையாதே துய்யபாலா துப்புரவாய்பிரிதிதனில் வளர்ந்தசொர்ணம், விற்பனர்கள்ராஜாதி யோகிமாண்பர் விருப்பமுடன்கொண்டருளும் காயகற்பம், துற்புரவாயிருந்தோர்க்கு வொன்றுமில்லை துறைகோடிவரைகோடி கற்பமாமே. (௨௱௧)

கற்பமுண்பதற்கும் ஔஷதம்பலிப்பதற்கும் வாதஞ்
செய்வதற்கும் சூட்சமுப்பூ.

வரையானயின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் வளமையுள்ளபுலிப்பாணி யிந்திரகோபா, திரைமறைவுநேராமல் முப்புமார்க்கம் செப்புகிறேனுந்தமக்குப் புனிதவானே, முறையானவழிபாடு முன்னனந்தம் முனையானசுருக்கமது யிதிலடக்கம், குறையாதுசிடிகையென்ற வேதையப்பா குவலயத்திில்சித்துமுனி சொல்லார்தானே. (௨௱௨)

தானானமனோன்மணியாள் கிருபையாலும் தாக்கானகாலாங்கிகடாட்சத்தாலும், தேனானமுப்பூவின் வளமைதன்னை தேற்றமுடன்வெளியரங்க மாகச்சொல்வேன், பானானமுப்பூவை யெடுக்குமார்க்கம் பாலகனேமுறைபாடு வழிபாடாகும், மானானபங்குனியாம் பருவந்தன்னில் மார்க்கமுடனமாவாசை பருவந்தானே. (௨௱௩)

பருவமாம்வடக்குவெகு தூரமப்பா பாங்கானவளர்பூமி தன்னிற்சென்று, உருவுடனேநடுச்சாம வேளைதன்னில் வுத்தமனேமனோன்மணியை மனதிலெண்ணி, குருவானபூநீரை யெடுப்பதற்கு கொற்றவனேவிடிகாலந் தன்னிலப்பா, பருவமுடன்பூர்க்குமந்த முப்புதன்னை பட்சமுடன்தானெடுத்து வரையக்கேளே. (௨௱௪)

கேளேதான்முப்புவென்ற பூநீர்தன்னை கெவனமுடன்பீங்கானிற் பதனம்பண்ணு, நாளேதான்போகாமல் குருமுடிக்கும் நலமாகக்கைபாகஞ் சொல்வேனப்பா, பாளேதான்போகாமல் பூநீர்தன்னை பாங்கான நிலமதனிற் சொல்லக்கேளீர், ஆளேதான்பூநீர்களெடுத்தபூமி வதிலிருக்கும்மர்ம்மமதை யறைவேன்பாரே. (௨௱௫)

பாரேதான்வோராறு மட்டமாக பான்மையுடன்குழியதுதான் தோண்டும்போது, நேரேதான்பிரம்மமென்ற கல்தானப்பா நேர்மையுடன்தானிருக்கும் நிகலக்கேளும், தீரேதான்பிரம்மமென்ற சுக்கான்கல்லை தீரமுடன்தானெடுத்து சொல்லக்கேளும், சேரேதான்கல்லதனைப் பதனம்பண்ணு செயலானபாக்கியமு மனேகமுண்டே. (௨௱௬)

உண்டானயின்னமொரு மர்மஞ்சொல்வேன் வுத்தமனேமுப்பூவின் மார்க்கமப்பா, திண்டானகல்லுப்பு வேணமட்டும் திரமுடனேதானெடுத்து புகலக்கேளும், வண்மையுடன்கல்லுப்பை பதனம்பண்ண வாகுடனேபோகும்வகை வண்மைபாரீர், நண்பாகமூன்றையுந்தான்முடிப்பதற்கு நலமானமும்மூர்த்தி சொரூபந்தானே. (௨௱௭)

காடிமுடிக்கவிபரம்.

தானானபழச்சாறு யென்றமார்க்கம் தண்மையுடன்முடிப்பதற்குப் பருவஞ்சொல்வேன், கோனானகுருநகையென்ற நெல்தானப்பா கொற்றவனேஅவிக்காமல் தானெடுத்து, பானானவரிசியது படிதானொன்று பாலகனேதானளந்து வரிசைபாரீர், மானானபுதுப்பாண்டம் தன்னில் தானும் மார்க்கமுடன்றான்சமைக்கும் வகைதான்கேளே. (௨௱௮)

வகையானவரிசியது பொங்கியேதான் வண்மையுடன்தானிறக்கி யாரப்போடு, தொகையுடனேமருமாண்டந் தன்னிலிட்டு தோஷமல்ஜலமதுவுஞ் சோடசந்தான், முகையுடனேபாணியென்ற தண்ணீர்தன்னை முசியாமல்தான்காய்ச்சி யிறக்கிக்கொண்டு, பகையானவாசியென்ற சாதந்தன்னில் பக்குவமாய்ஜலம்விட்டு மூடக்கேளே. (௨௱௯)

மூடவேரவியென்ற வெய்யில்தன்னில் முனையானகாடியென்ற பாண்டந்தன்னை, நீடியேநாள்தோறு மருணன்முன்னில் நிலையானபாண்டமதை வெய்யில்வைத்து, சாடியென்றபாண்டமதில் ஜலமுந்தானும் தாக்கானரவிதனிலே சுண்டமட்டும், கூடியதோர்ஜலமதனைக் காய்ச்சிமைந்தா கொற்றவனேகுறைவுக்கு விட்டிடாயே. (௨௱௰)

விட்டிடவேநாள்தோறுங் குறைவுமட்டும் வீரானகாடியென்றபாண்டந்தன்னில், கொட்டளவுவெந்நீரை யாரவைத்து குறையாமல்நாள்

தோறு மிப்படியேவாரு, சட்டமுடன்பாண்டமதை யாறுதிங்கள் சா
ங்கமுடன்தினந்தோறும் ரவியில்வைத்து, திட்டமுடன்ராக்காலம் பனி
யில்வைக்க தீர்க்கமுடன் செய்குவதும் பாகமாமே. (உ௱௰க)

பாகமாங்காடியென்ற பாண்டந்தன்னை பரிதிமுன்னேதினந்தோறு
ம் வைக்கும்போது, நாகமதுசீறியதோர் விஷத்தைப்போல நாதாந்தக்
காடிக்கி காரமேறி, வேகமுள்ளசரக்குக்கு காலனச்சு வேகாதசரக்கெ
ல்லாம் வெந்துநீறும், யூகமுடன்காலாங்கிப் பாதம்போற்றி வுத்தமனே
காடியது வழிசொன்னேனே. (உ௱௰உ)

சொன்னதொருகாடிதன்னை யாறுதிங்கள் துப்புரவாய்ரவிதனிலே
வைக்கும்போது, நன்னயமாய்நாதாக்கள் செய்பாகந்தான் நலமானபழ
ச்சாறு யென்னலாச்சு, வின்னமதுநேராது முப்புமார்க்கம் வின்னார்
கள்சித்துமுனி ரிஷிகள்தேவர், பன்னிவசாத்திரத்தில் சூட்சமுப்பு பா
டவில்லைசித்தர்களும் பாடார்தானே. (உ௱௰௩)

தானானஆதியென்ற முப்புதன்னை தண்மையுள்ளபதினெண்பேர்
சித்தர்தாமும், மானானசாத்திரத்தில் சூட்சமாக மார்க்கமுடன்முடிக்கு
ம்வகை சொல்லார்தாமும், கோனானகுருநாலாஞ் சத்தகாண்டம் கூறி
னேன்போகரே ழாயிரத்தில், பானானசூட்சமென்ற முப்புதன்னை பா
ருலகில்மாண்பருக்குப் பாடினேனே. (உ௱௰௪)

பாடினேன்காடியென்ற பழச்சார்சொன்னேன் பான்மையுள்ளநா
தாக்கள் மறைத்துவிட்டார், நீடியதோர்சிவமுப்பு யிந்தமுப்பு நீடூழியு
லகமேலா மிதிலடக்கம், கூறியதோர்கருவிகர ஞாதியந்தம் குருவான
ஜெயநீர்க ளிதிலடக்கம், ஆடியதோர்சரக்குவாறு பத்துநான்கு வப்ப
னேசிவமுப் பால்மதிவுகாண. (உ௱௰௫)

மடியுமேசரக்குவாறு பத்துநான்கும் மார்க்கமுடன்கைபாகஞ் செ
ய்பாகந்தான், முடியுமேகைபாகம் தவறிட்டாலும் முனையாலவயித்திய
த்துக் காரியாகும், அடியானகாயகற்பமிதுவேயாகும் வப்பனேன்காடியெ
ன்ற பழச்சார்தானும், கெடியானகாரமது யேற்றுதற்கு நேர்மையுடன்
கைபாகஞ் சொல்லக்கேளே. (உ௱௰௬)

காடிதிராவகம்.

சொல்லவேகாடியென்ற மார்க்கந்தன்னை தோருமல்திராவகமாய்
முடிப்பதற்கு, வெல்லவேவாலையென்ற சக்ரவாலை வேகமுடன்தீநீராய்
வாங்குதற்கு, புல்லவேகாடியென்ற மண்பாண்டத்தில் புகழானவாலை
யதை மேற்பொதித்து, சில்லுடனேசீலைபது வலுவாய்ச்செய்து தீர்க்க
முடன்வாலுகையா மடுப்பிலேற்றே. (உ௱௰௭)

ஏற்றவேதீபதூபந்தான்கொடுத்து யெழிலானவாலையென்ற பாண் டத்திற்கு, நாற்றிசையுங்குழலமைத்து சீசாவைத்து நலமுடனேதிரா வகத்தை யிறக்கிக்கொண்டு, மேற்புரமாம்ஜலமதனைத் தள்ளிநீக்கி மே ன்மையுடன்மறுபடியும் ஜலத்தைவாறு, ஆற்கமுடன்மறுபடியுங் குழ லமைத்து வப்பனேதிராவகத்தை வாங்கிடாயே. (உ௱௰௯)

வாங்கியேதிராவகத்தைப் பதனம்பண்ணு வளமானகாடியென்ற பழச்சார்தன்னை, தூங்கியேதிரியாதேவருண்மைந்தாகேள் துப்புரவா ய்குருமுடிக்கும் திராவகந்தான், ஏங்கியேதிராவகந்தை முடியாமற்று ன் யெழிலானவையகத்து மாண்பரெல்லாம்,சாங்கமுடன்சாத்திரத்தை யுணராமற்றான் சட்டமுடன்பலதுரையாய்ப் போனார்தாமே. (உ௱௰௬)

பூவழலையெடுக்க.

தாமானவழலையது யெடுக்கும்பூமி தாக்கானநெடுங்காசி தன்னி தப்பா, பூமான்க..செல்வதற்கு வளப்பஞ்சொல்வேன் புகழானதிண்டி க்கல் பூ..ாறையாகும், நாமேதான்சொன்னபடி திருப்புவனமாகும் நலமானயாவடியார் கோயில்தானும், வேமேதான்விலாடபுரம் தன்னில் தானும் மிக்கானவயநாடு பூமியாச்சே. (உஉ௰)

ஆச்சப்பாதென்காசிப் பதியில்தானும் வப்பனேகன்னியா குமரி யாகும், நீச்சானவளையலென்ற குப்பிதன்னை நேர்மையுடன்தான்முடிக் கும் காளாஸ்திரிதானும், மூச்சுடனேநெடுந்தூரஞ் சென்றலப்பா மூ னையானபாளமென்ற கோயம்புத்தூர், வீச்சுடையபூமியது பள்ளநாடு விராலிகள்ளழகர் நாடுதாமே. (உஉக)

நாடானநர்மதா தேசமப்பா நலமானசித்தூரருஞ் சியிங்கிநாடு, பா டாண்மைகொண்டதொரு சிந்தேசம் பாங்கானமுப்பூவுக் கிடமேயாகு ம், கோடானகோடிமனு மாண்பர்க்கெல்லாம் கொற்றவர்க்குயின்னுடே வஞ்சிநாடு, தாடாண்மைகொண்டதொரு தேசமப்பா தாரணியில்பூவி ழலை யெடுக்குநாடே. (உஉஉ)

எடுப்பதற்குயிந்நாடு சிந்துதேசம் யெழிலானதேசமெல்லாம் பின் னுடாகும், கொடுப்பதற்குசிவயோகி மாண்பருக்கு கோடானகோடிமு றை யிதிலொப்பாகும், தடுப்பதற்குயிப்பூமி விட்டாலப்பா தாக்கானபூ மிவள மெங்குமில்லை, உடுக்கையென்றபிரம்மக்கல் தானுமப்பா வுத்த மனேயெடுக்கும்வகை செப்பினேனே. (உஉ௩)

செப்பினேன்வழலையது யெடுப்பதற்கும் செயலானகாடியது முடி ப்பதற்கும், ஒப்பானமுப்பூவின் மார்க்கந்தன்னை ஒழுங்குடனேமுடிப்

பதற்கு வழிதான்சொன்னேன், தப்பிதங்களில்லாமல் குருமுடித்தால் தன்மையுள்ளமுப்பூவும் முடியும்பாரே. (உஉச)

பூநீறுகாய்ச்சல்.

பாரேதான்பூநீறு சுத்திசெய்து பாகமுடனெடுப்பதற்கு வகையைக்கேளும், நேரேதான்பூநீறுபடி தானப்பா நிலையானமுன்சொன்ன காடிதானும், சேரேதான்பூநீறில் விட்டுமைந்தா சிறப்புடனேகலக்கியதைத் தெளிவிறுத்து, கூறேதான்ரவிதனிலே காயவைத்து கொப்பெனவே யுப்பதனை யெடுத்திடாயே. (உஉரு)

எடுத்துமேயிப்படியே பத்துமுறைகலக்கி யெளிதானரவிதனிலே காயவைத்து, தொடுத்ததொருவுப்பதனைப் பதனம்பண்ணு தோருமல்பத்துமுறை செய்தவுப்பை, கெடுத்திடாவண்ணமது பீங்கான்றன்னில் கெவனமுடன்பதனமாய்ச் செய்துகொண்டு, நடுத்தெருவாங்கருமியென்றமாண்பருக்கு நவிலாதேநவின்றிட்டால் சாபமாமே. (உஉசு)

பிரம்மக்கல்சுன்னம்.

சாபமாமின்னமொரு மார்க்கங்கேளு தப்பாதுகாலாங்கி வாக்குதானும், பாபமதுநேராது புண்ணியவானே பாருலகில்சித்துமுனி சொல்லார்தாமும், கோபமதுகொண்டல்லோ முனிவர்தாமும் கூராரேசிவசூப்புகுட்சந்தன்னை, தாபமுடன்மனோன்மணியாள் கடாட்சத்தாலே சாங்கமுடனடியேனும் நவின்றிட்டேனே. (உஉஎ)

இட்டதொருபிரம்மக்கல் தனையெடுத்து யெழிலானகறுப்பதனை நீக்கிமைந்தா, தொட்டளவுகுருசொன்ன வாக்குபோல துறைமுகமுங் கண்டறிந்து பளிங்குக்கல்லாய், சட்டமுடன்கல்லதனை யிடித்துமைந்தா சாங்கமுடன்பச்சையென்ற பூநீர்தன்னை, திட்டமுடன்கல்லுக்குமொண்டேயாகும் நீரமுடன்றானகலந்து பாண்டம்வையே. (உஉஅ)

பாண்டமதுதனிலமைத்துப் பாகங்கேளீர் பாங்காகமுன்னுரைத்த காடிநீரை, வேண்டியேபூநீருக் கரைதானப்பா விருப்பமுடன்பாண்டமதி விட்டுமைந்தா, தூண்டியதோர்கருமான மிரண்டும்வேக துப்புரவாய்க்காடியென்ற நீரினாலே, மாண்டிடவேதானெறிப்பாய்க் காடிநீர்தான் மார்க்கமுடன்சுண்ட மட்டு மெரித்திடாயே. (உஉகூ)

எரித்துமேபச்சையென்ற காடிநீரால் ஏற்றமுடன்தானலம்பிரவியிற்போடு, மரித்துமேபிரம்மமென்ற கல்தானப்பா மகத்தானசுண்ணமது கக்கிப்போச்சு, குளித்தபொருள்பிரம்மமென்ற சுண்ணக்கல்தான் கூரானவேகமது வதிகங்கொண்டு, தெரித்துமேபொடிபொடியாம் தகடுபோலாம் தெளிவானசுன்னத்துக் கிடந்தானுச்சே. (உ௩௰)

ஆச்சென்றுவிடுகாதே யின்னங்கேளு வப்பனேகாலாங்கி சொன்னநீதி, காச்சலென்றசுண்ணமதைத் தானெடுத்து கருவானகல்வமதிலிட்டுமைந்தா, மாச்சலென்றசிற்றண்டம் கருநானப்பா மகத்தானபிரம்மக் கல் சுண்ணந்தன்னை, வீச்சுடனேதானரைப்பாய் மடியுமட்டும் வீரான சுண்ணமதைப் பில்லைசெய்யே. (௨௩௧)

செய்யவேசிறுபில்லை காசதாக செம்மலுடன்ரவியுலர்த்தி சொல்வேன்பாரீர், துய்யதொருபில்லைமுகந் தானுலர்ந்து துப்புரவாய்மூசையிட்டு சீலைசெய்து, வையகத்தேத னிருக்கும் கருமமான வளமானபாகமதை யறியாமற்றான், கைபாகந்தவராமல் மைந்தாநீயும் கருக்குடனேஉலையில்வைத்து ஊதுவாயே. (௨௩௨)

ஊதவேசுன்னமது வாகுமாகும் உத்தமனேமூசையது வழுகுமட்டும், நீதமுடன்வூதிடவே சுன்னமாகும் நிலையானசுன்னமது பிரம்மக் கல்லாம், தோதமுடன்மூசைதனை யுடைத்துப்பாரு சுந்தரனேசுன்னமது பிரம்மக்கல்லாம், சாதமதுதான்கொடுக்கும் சுக்கான்கல்லாம் சட்டமுடன்நாதாக்கள் பெருமையாமே. (௨௩௩)

பாரேதான்சுன்னமென்ற பிரம்மக்கல்லை பாங்குடனேபீங்கானிற் பதனம்பண்ணு, நேரேதான்சரக்குக் கோலனுச்சு நெடிதானபிரம்மக் கல் லென்றசுன்னம், ஆரேதான்முடிப்பார்க ளப்பாகேளு ஆதியென்ற சுன்னமதை முடியாரப்பா, சீரேதான்சாத்திரத்தி னுளவாராய்ந்த சிறப்புடனேபார்த்துவைத்த சுண்ணமாமே. (௨௩௪)

கல்லுப்புகாய்ச்சு முறை.

சுண்ணமாமின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் சுந்தரனேரகுபாலா புண்ணியவானே, வண்ணமுடன்கல்லுப்பு பெரிதாய்க்கொண்டுவளமுடனேபடியதுவும் தானெடுத்து, திண்ணமுடன்பாண்டமதி லிட்டுமைந்தா தீர்க்கமுடன்முனசொன்ன காடிநீரை, நண்ணமுடன்மருபாண்டம் தன்னிலப்பா நலமுடனேஜலமதனை வடிதான்வாரே. (௨௩௫)

வார்க்கையிலேமுன்சொன்னகாடிநீர்தான் வளமானபாண்டமதி லிட்டுமைந்தா, தீர்க்கமுடன்தான்கலக்கி தெளிவிருத்துத்தீரமுடன்பாண்டமதை யடுப்பிலேற்றி, ஏர்க்கவேயுப்பதுவும் நூர்க்குமட்டும் யெரிலாவைப்பதனை காய்ச்சியல்லோ, சேர்க்கவேமறுபடியுங் காடிவிட்டு சிறப்புடனேகலக்கியதை யெடுத்திடாயே. (௨௩௬)

எடுத்திடவேயிப்படியே பத்துமுறைகாச்சு யெழிலானகல்லுப்பும் குருவுப்பாகும், கெடுத்திடாவண்ணமது பீங்கான்றன்னில் கிருபையுடன்யதனமது மிகவாய்ச்செய்து, கொடுப்பதற்குமுன்போலே வும்மை நன்றாய் சுத்தமுடன்சேர்க்கும்வகை விபரங்கேளு, அடுத்துமேமுன் சொன்ன கையாகந்தான் வப்பினைமுறைபாடு கூறுவேனே. (௨௩௭)

முப்பென்றதற்குநாமம்.

கூறவேமுப்பென்ற மார்க்கந்தன்னை குவலயத்தில்மாண்பர்களுக் கெளியதாக, ஆறவேமுன்சொன்ன வழலைமார்க்கம் வப்பனேபலமதுவு மெடுத்துக்கொண்டு, மாறவேபிரம்மமென்ற முப்புதன்னை மார்க்கமுடன்பலமதுவு மெடுத்துக்கொண்டு, தேறவேகல்லுப்பு சுண்ணந்தன்னை தேற்றமுடன்பலமதுவும் வொன்றாய்க்கூட்டே. (௨௩௮)

கூட்டவேமூன்றையுந்தா னொன்றாய்க்கூட்டி குறிப்புடனேவீரமுடன் புழுகுதானும், தேட்டமுடன்வாகனது ரண்டேயாகும் தெளிவுடனேமுன்சொன்ன காடி-தன்னை, வாட்டமுடன்தானரைப்பாய் நாலு சாமம் வளமானபில்லையது லகுவாய்ச்செய்து, நீட்டமுடன்ரவிதனிலே காயவைத்து நிஷ்களங்கமானதொரு வகையில்வையே. (௨௩௯)

அகலானபாண்டமது தன்னில்வைத்து வப்பனேசீலையதுவலுவாய்ச்செய்து, பகலானரவிதனிலே காயப்போடு பாங்குடனேகாய்ந்தபின்பு செப்பக்கேளு, நிகலவேகோழியென்ற புடந்தான்போடு நிஷ்களங்கமாகவல்லோ நீறிப்போகும், புகலவேபற்பமதைப் பதனம்பண்ணு புகழானமனோன்மணிக்குப் பூசைசெய்யே. (௨௪௰)

பூசையாமனோன்மணியாளாராதாரம் பொங்கமுடன்தான்செய்து யெடுத்துமைந்தா, ஆசையதுகொள்ளாம லருண்மைந்தாகேள் வப்பனேசீசாவிற் பதனம்பண்ணு, காசுபணம்தேடுதற்கு வுரிமைகேளு கனமானபாஷாணம் பலந்தானொன்று, மாசுபடாமுப்பூவும் பலந்தான் காலாய் மார்க்கமுடன்கல்வமதில் போட்டிடாயே. (௨௪௧)

போட்டவுடன்சரக்கதுவு மொன்றாய்க்கூட்டி பொங்கமுடன்முன்னுரைத்த காடிநீரால், வாட்டமுடன்தானரைப்பாய் சாமமப்பா வளமானபில்லையது லகுவாய்ச்செய்து, நீட்டமுடன்ரவிதனிலே காய்ந்தபின்பு நீறியுடன்முன்சொன்ன மார்க்கம்போலே, தேட்டமுடன்புடமதுவுங்கோழியாக தெளிவுடனேபோடுவதும் முறைதான்கேளே. (௨௪௨)

முறையானபுடமதுவு மாறிப்பின்பு முனையானபற்பமதை யெடுத்துமைந்தா, நிறைபோடுவெனுவளவுங் குறையுமில்லை நீட்டமுடன்பற்பமது காரமெத்த, குறையாதுபாஷாண மென்னசொல்வேன் குவலயத்தில்சித்துமுனி கூறுவண்ணம், அறைந்தேனேவுலகுபதிமாண்பருக்கு வப்பனேசிவயோக தவத்தில்நில்லே. (உசங)

நிற்கையிலேமனோன்மணியாள் மனதுவந்து நிஷ்களங்கமாகவல்லோ வுனக்குமைந்தா, சொற்பமென்றவாதமது பலிக்கும்பாரு சுந்தரனேவுன்னைப்போல் சித்துமுண்டோ, அற்பமென் றுநினையாதே தூய்ய பாலா வருண்மைமைந்தாமுப்பாலே யெல்லாஞ்சித்தி, விற்பனர்கள்கொண்டாடு மிந்தவேதை மேதினியில்சமுசாரிக் கானவாறே. (உசச)

வாரானபற்பமது போக்குசொல்வேன் வளமையுள்ளவெள்ளியந் தன்னைத்தானும், கூரானசேரதுதா னென்றேயாகும் குறிப்புடனேதானுருக்கி செப்பக்கேளும், நீரானபாஷாண பற்பந்தன்னை நீமகனேவராகனிடை காலதாக, சேராடும்வெள்ளிய முருக்கியல்லோ செம்மலுடன்பற்பமதை தாக்குவாயே. (உசரு)

தாக்குவாய்வெள்ளியம் பற்பத்தாலே தண்மையுள்ளநீரதுவு முறிந்துகொள்ளும், வாக்குடனேகாலாங்கி மொழிபொய்யாது வளமையுடன்போகரே ழாயிரந்தான், நோக்கமுடன்நீர்வடிந்த வெள்ளிதன்னை நுணுக்கமுடன்வருமைவரும் காலந்தன்னில், ஏக்கமதுகொள்ளாமல் வெள்ளிதன்னை யெளிதாகசமுசாரி யுண்ணலாமே. (உசசா)

உண்ணவென்றால்சாபமது யாதுமில்லை வுத்தமனேசாக்குவறு பத்துநான்கும், திண்ணமுடனிம்முறைபோல் செய்வாயப்பா தீரமுடன் சாக்குவறு பத்துநான்கும், வண்ணமுடன்நீற்றுதற்குப் பிசகோயில்லை வளமானமுப்பூவின் சுண்ணமப்பா, நண்ணமுடன்முப்பூவின்காரத்தசலே நலமானசரக்கெல்லாம் நீறிப்போமே. (உசஎ)

நீறுமேகூதமென்ற சரக்குதானும் நீதியுடன்பலமதுவு மெடுத்துக்கொண்டு, வீறுடனேமுப்பூவைச் சரியாய்க்கூட்டி வீரமுடன்முன்சொன்ன காடிதன்னால், மாறுதலும்நேராமல் பற்பந்தன்னை மார்க்கமுடன்தானரைப்பாய் சூதங்கூட்டி, தூறுடனேகலசமென்றபாண்டந்தன்னில் திப்புரவாய்சில்லிட்டுச் சீலைசெய்யே. (உசஅ)

சிலையதுவெழுசிலை வலுவாய்ச்செய்து சிறப்புடனேரவிதனிலே காயவைத்து, வாலையென்றபத்திரமாம் புனைவாலே வளமானவாலுகை யாமடிப்புதன்னில், காலையதுஜாமமது நாலதாக கருவானசூதமதை யெரிப்பாய்நீயும், மாலையதுசூதமதை யெடுத்துப்பார்க்க மகத்தானகருங்கார சுண்ணமாச்சே. (௨௪௯)

அறுபத்துநான்குசரக்காலும்வேதைமுகம்.

சுன்னமென்றால்சுன்னமது யென்னசொல்வேன் சுந்தரனேநாதாக்கள் செய்யும்வித்தை, வின்னமதுவாராது யிந்தப்போக்கு விருப்பமுடன்செய்வதற்கு மனதுவக்து, அன்னமெனுங்காடியின்றன் பழச்சாரப்பா ஆகாகாசித்துமுனிமறைத்தாரக்கே சொன்னமதுமுப்பூவால்கைக்குள்ளாச்சு சோருமல்செய்பவர்க்கு சித்தியாமே. (௨௫௰)

சித்தியாம்பஞ்சபூத சரக்கைத்தானும் சிறப்புடனேதானெடுத்து செப்பக்கேளீர், வெத்தியுடன்முப்பூவை சரக்குபாதி வேகமுடன்காடியின்றன் பழச்சாராலே, சுத்தியுடன்தானரைத்து பில்லைசெய்து துப்புரவாய்ரவிதனிலே காயப்போடு, சத்தியுடன்வோட்டிலிட்டுச் சீலைசெய்து சாங்கமுடன்புடமதுவுங் கோழிதானே. (௨௫௧)

தானனகோழியது புடமதாக தண்மையுடனாறினபின் னெடுத்துப்பாரு, கோனனகுருசொன்னவாக்குபோலே கொற்றவனேபற்பமதுதவளம்போலாம், மானனபற்பமதை யெடுத்துமைந்தா மகத்தானசிசாவிற்பதனம்பண்ணு, பானனரவிமதியில் தாக்கவல்லோ பான்மையுடன்சொல்லுகிறேன் பண்பாய்த்தானே. (௨௫௨)

பண்பானவெள்ளிசெம்பில் பத்துக்கொன்று பாக்குடனேபற்பமதை யொன்றுதாக்க, நண்பானமாற்றதுவு மேழதாகும் நலமானபுடமதுவுக் கேகாவர்ணம், திண்பானபட்டசெம்பு ஆறுவெள்ளி தீர்க்கமுடன்தான்கொடுக்க மாற்றெட்டாகும், உண்மையுடன்தங்கமது நாலுக்கொன்று வுத்தமனேசேர்க்கநவ மாகும்பாரே. (௨௫௩)

பாரேதானவமதுவு மொன்பதாகும் பாங்காணபுடத்தங்கம் பிறவித்தங்கம், சீரேதான்பஞ்சமுகக் கறுத்துதானும் சிறப்புடனேமறைத்துவைத்தார்சித்துதாமும், நேரேதான்சரக்குவறு பத்துநான்கும் நேர்மையுடன்முன்சொன்ன முப்பூவாலே. வீரேகான்சுண்ணமென்ற முப்பூவாலே, விண்ணுலகும்மண்ணுலகுங் காணலாமே. (௨௫௪)

காணலாம்முப்பூவா லனந்தப்போக்கு காசினியில்நாதாக்களாடுங்கூத்து, பூணவேசிவயோகிசித்தருக்கு புகட்டவில்லையிந்தவழி முப்பூ

மார்க்கம், தோணவேகைமுறையா யெடுத்தபாகம் துப்புரவாய்வையக
த்து மாண்பருக்கு, வேணதொருகருவிகர ணுநியந்தம் விருப்பமுடன்
பாடிவைத்தே னுண்மைதானே. (௨௫௫)

பாடினேன்முப்பூவின் வழலைமார்க்கம் பாருலகில்சகலசித்து மாடு
மபாரு, நீடியதோர்முப்பூவைக் குன்றிவிதம் நீதியுடன்மண்டலந்தான்
கொண்டாயானால், வாடியதோர்திருமேனி சடலந்தானும் வண்மையுட
னாயாதி கற்பத்தாலே, கூடியதோர்தேகமது சட்டைதள்ளும் குண
மானமுப்பூவின் காட்சிகேளே. (௨௫௬)

காட்சியாமுப்பூவைக் கொண்டபேர்க்கு காசினியில்நரைதிரையு
மில்லையப்பா. மாட்சியுடனெந்கால மிருக்கலாகும மகத்தானவாசிய
தாமேல்நோக்காது, நீட்சியுடன்பதாம்புயத்தை நண்ணலாகும் நிஷ்கள
மகாமனே தநூசித்தனுவான், மீட்சிபெறவையகத்தில் மாண்பரெல்லா
மமேன்மையுடனென்றுந் துதிப்பார்பாரே. (௨௫௭)

துதிக்கையிலேசித்துமுனி ரிஷியாதாமும் துரைராஜசிவயோகி
யிவரேயென்பார், மதிக்கவேபெல்லவர்களும் யோகவானாய் மகத்தான
காயாதி கற்பத்தாலே, விதித்தகொருவயதுவு மேலதாகி மேதினியில்
வெகுகால மிருப்பாயப்பா, ததியானமுப்பூவின் கைபாகந்தான் சாற்ற
வில்லைவெகுகோடி ரிஷிகள்பாரே, (௨௫௮)

கோடியாங்காலாங்கி கிருபையாலே கூறினேன்போகரே ழாயிரந்
தான், தேடியேபார்த்தாலுங் கிட்டாதப்பா தேசத்தில்விட்டகுறை யிரு
ந்தால்கிட்டும், வாடியேயலையாதே மன்னுகேளு மகத்தானபோகரேழா
யிரந்தான், பாடியதோர்போகரே ழாயிரத்தில் பாங்கானகடைக்காண்ட
ம் முப்பூபாரே. (௨௫௯)

பாரேதானபோகரே ழாயிரத்தில் பட்சமுடன்காண்டமது யேழு
தன்னில், நேரேதான்கடைக்காண்ட மேழிலப்பா நெடிதானமுப்பூவா
ஞ் சூட்சமுப்பு, சீரேதான்வையகத்து மாண்பருக்கு சிறப்புடனேபாடி
வைத்தேன் சூட்சமாக, ஆரோதான்கருவாளி செய்வானப்பா வப்பனே
யண்டபிண்ட மறிவான்கேளே. (௨௬௰)

பேசச் புலிப்பாணிக்கு பூநீறெடுக்க புத்திகூறல்.

கேளேதானின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் கெடியானபுலிப்
பாணி மன்னுகேளு, மீளேதான்பூநீறு யெடுப்பதற்கு மீளாமல்வெகு
மாண்டர் மாண்டாரப்பா, ஆளேதான்வகையறியா மாண்பரப்பா வப்ப
னேசாத்திரங்கள் படித்துக்கெட்டு, சூளேதான்சுடுவாதி மாண்பர்கூடி
துறையழகத்தைக்காணாமல் கெட்டார்தாமே. (௨௬௧)

கெட்டதோர்மாண்பர்களின் சாத்திரவண்ணம் கேடறியார்பாட றியா ரயனுங்காணார், நட்டதொருபயிரதனை களைகள்போக்க நாதாந்த சித்துமுனி சொல்லைப்போல, விட்டகுறையிருந்ததொரு மாண்பர்போ லே வீணாகவாசைகொண்டு மரியுங்கெட்டு, தொட்டலைந்துபூநீரையெ டுக்காமற்றான் சோர்ந்தருண்டுவெகுபேர்கள் மடிந்தார்தானே. (௨௬௨)

மடிந்தாரோவையகத்து மாண்பரெல்லாம் மகதேவர்கடவுளது யே மவித்தை, கடிந்ததொருபொருளறிய மாட்டாமற்றான் காசினியில்வெ குமாண்பர் மாண்டாரப்பா, முடிந்ததொருசிவானந்தப் பொருளைக்கா ண மூதுலகில்யாராலுங் கிட்டுமோசொல், படிந்தபொருள்முப்பூவின் நிதானமார்க்கம் பாருலகில்விதியாளி யறிவான்பாரே. (௨௬௩)

விதியானவிதியிருந்தா லவர்க்குக்கிட்டும் வீணானகருமிகட்கு கிட் டுமோசொல், துதியானபராபரமாம் வஸ்துதன்னை துறைமுறையாய்க் கண்டறிந்தோன் காண்பான்பாரு, மதியானமூடனுக்கு வாய்க்குமோ சொல் மகத்தானயோமவித்தை பிரம்மவித்தை, சதிகாணயெண்ணமது கொண்டபேர்க்கு கைவசமாம்யோமவித்தை கிட்டும்பாரே. (௨௬௪)

கிட்டுதற்குப்பூவழலை யெடுக்கவல்லான் கீர்த்தியுடனடராஜனரு ளேவேண்டும், தொட்டகுறிபோலதுபோல் காண்பதற்கு துரைராஜர் குருமுறைகள் வேண்டுமப்பா, பட்டமரம்போல்துளுக்கும் வழலைகா ண பாரபரியாள்கிருபையது வேண்டுமப்பா, விட்டகுறையிருந்தாலே லபிக்கும்பாரு விருதாவாய்மாண்டவர்கள் கோடியாமே. (௨௬௫)

கோடியாம்மனுகோடி ராஜமன்னர் குவலயத்தில்வழலையுட மார்க் கந்தன்னால், நாடியேவழலையது பூர்க்குங்காலம் நலமுடனேகண்டறிய மாளாமற்றான், ஓடியேயிறுமாப்பு வனப்புவாய்ந்து ஓகோகோமாண் பரெல்லா மடிந்தாரப்பா, நீடியதோர்பொருளதுவும் விஷகாலத்தான் நிகட்சியுடன்யெடுப்பதற்கு யில்லைதானே. (௨௬௬)

இல்லையேவெகுபேர்கள் மாண்பரப்பா யெழிலானசாத்திரத்தைப் பாராமற்றான், அல்லல்படிந்துபரமது வருமைபாலே வன்புடனேபூநீ ரை யெடுப்பதற்கு தொல்லையெனுஞ்சாத்திரத்தை முன்பின்னாக சோ ராமல்பாடிவைத்தார் சித்தர்யாவும், கல்லுதெய்வம்பேசுமென்று கை யெடுத்து காசினியில்கதையுரைத்த காட்சியாமே. (௨௬௭)

காட்சியாம்கனகமென்ற பொருளையப்பா காசினியில்வெகுபேர்கள் காண்பதற்கு, காட்சியில்லாசாத்திரங்கள் கண்டாராய்ந்து தடுமாறித லைமாறிக் கலையுமாறி, மாட்சியுடன்கோர்வையென்ற சாத்திரத்தை மார்க்கமுடன்காணாமல் மயங்கினார்கள், ஆட்சிபந்தம்வெகுநூல்கள்சொ ன்னாறாண்டு வைப்பனைகுருநூல்தான் பாரார்தானே. (௨௬௮)

பாரமல்மாண்பரெல்லாம் பதியுங்கெட்டு பாங்கானசாத்திரத்தின் முறையுங்கெட்டு, நேரானசாத்திரத்தை விட்டகற்றி நேர்மையுடன்மதி யூன்றி பாராமற்றான், பூராயமானதொரு ரிஷிகள்நூலில் புகன்றிட்டம ர்மமதை யறியாமற்றான், சாராயமானதொரு வஸ்துதன்னை சாங்கமு டன்கற்பமென்று கொண்டிட்டாரே. (௨௬௯)

கொண்டாரேலாகிரிக ளருந்தியல்லோ கோடானகோடி நூல்கள் மறைத்திட்டார்கள், விண்டதொருசாத்திரத்தை வினையக்கொண்டு வீ ண்காலம்போக்கியல்லோ மடிந்திட்டார்கள், தண்டனையாஞ்சாபமதுவ ன்றுமாறி தாரணியில்வெகுபேர்கள் சமைந்திட்டார்கள், சண்டமாருத ம்போலே சத்தகாண்டம் சாற்றினேன்போகரேழாயிரமுங்காணே. ()

புலிப்பாணிக்கு போகர் மறுபடியும் புத்திகூறல்.

காணவேயின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் கருவானபுலிப்பா ணி மைந்தாகேளு தோணவேபூசை யெடுக்கும்போது சுந்தரனை யுந்தனக்கு பயமுண்டாகும், வேணதொருசித்தமுனி ரிஷிகள்தாமும் வேதாந்தத்தாயினது கடாட்சத்தாலே, பூணவேவேஷமது மாறல்கொ ண்டு புகழாகமுன்னிற்பார் பிரம்மைபாரே. (௨௭௧)

பாரேதான்வேஷமது பூண்டுகொண்டு பங்கானசாலமது யேந் திகொண்டு, நேரேதான்முன்னாலேவந்துநின்று நேர்மையுடனுங்காரசெர் ச்சிப்போடும், ஆரோதான்பூசை யெடுக்கவல்லான் வாண்பிள்ளைதீதா னோ வென்றுகூறி, தேரோடும்சத்தமது கிரீச்சிபோலும் தேற்றமுட ன்சத்தமது கேட்கும்பாரே. (௨௭௨)

கேட்டுமேசித்துமுனி யசரீரவாக்கு கெவனமுடன்கேட்டதுவு மு ந்தமக்கு, ஆட்களில்லாவனந்தனிலே யிங்கவோசை யப்பனைவதிசயங் கள் காணுமென்று, நீட்கமுடன்தலையெடுத்துப் பார்க்கும்போது நீலை யானகறுப்பண்ணர் சாமிபோலே, வீட்கமுடன்முன்னிற்க கண்டபோ து வித்தகனேபயந்தொடுங்கி சாவார்தானே. (௨௭௩)

சாவாரேயின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் சட்டமுடன்கோர மென்ற வேஷத்தோடும், ஆவதுபோல்மகமேரு தன்னைப்போலே வப்

பனேஜடலமது கொண்டுமல்லோ, வேவலுடன்சவுக்கார வழலையாலே வேதாந்தத்தாயினது வருளினாலே, மேவலுடன்நடுக்கமது பயமுண்டாகி மேதினியில்வெகுமாண்பா மடிந்தார்தாமே. (௨௭௪)

வையசத்துமாண்பா பூநீறெடுக்கும்போது கருஞ்சாலையி
லேயாயதனைத் தோகா புலிப்பாணிக்கு வுபதேசத்தல.

தானேயிவ்வமொரு மார்க்கமுஞ்சொல்லுவேன் தண்மையுள்ளபுலிப்பாணிமைந்தாகேளு, தேனேயெனதையா காலாங்கிநாதர் கொற்றவனேசுகத்துக் கொண்ணைநீடு, பாருனவையகத்து மாண்பரெல்லாம் பாராமல்பூநீறு மெய்யாததனை, மானமெளனமென்ற மதியினத்தால் மூலுலகில்சாடத்தால மடிந்தார்தாமே (௨௭௫)

மடிந்தாரேயென்பார்க்கு கூடியல்லோ மாந்தானமேனமக்க ளிருவாகூடி, குடிகொண்டு பூநீறை யெடுப்பதற்கு துப்புறவாய்மனதுவந்து மாண்பாதாமும் விரைந்துதொருநாழிகையில ஜாமத்தனிலே விடுபட்டுவெனுந்திரத்தி லேருவாதாமும், முனாக தாருமுட பூலவக காண்பதற்கு முயற்சியுடன பூமிவனரு லென்றிட்டாரே. (௨௭௬)

சென்றுரை வணாகனி லே யிருவாதாமும சிறப்புடனே பூநீறை யெடுக்கும்போது அன்றதிதக்கிருசாலே சப்பகாரும் வப்பநெ பூநீறதை யெடுக்க நிவாதிருப யோகி மாண்பாதமனை கெடுந்தூரந்தாலதுசரி வருந்துமபோது குன்றுனமலேமேபாலே யிருட்சமப்பா கூறுனவிருடசாமி லேபதிட்டாரே. (௨௭௭)

ஏறிவாதோமாணபாமனைத கண்டபோது பெரிலானசம்பமதுவிருட்சாதன்னிலே, சிறியதான்கண்டு சினந்து மகான் தீர்க்கமுடனசிவயோகி யிருவாதடனமே, மீறியநினைக்கறந விட்டுமுனிகொண்டு மிககானமானிடரைகசாறுமபோது நாதியாசிவயோகி யிருவாதாமும் துப்புறவாயபதறு லெயிட்டாரே (௨௭௮)

எய்யவேசறபமது சிரசிறபட்டு பெரிலானசறபமது மடிந்ததங்கே, பைபவேசிவயோகி மண்பாதாமும ராசதுமேசாபமது மடிந்ததென்று, துயபநல்லவிருட்சமதை விட்டிறங்கி தூயதானவடிமட்டம் வருகும்போது வெயயதொருவ நிசயமாக னென்னசொலவேன வேதாந்தத்தாயினுட மகிமைகேளே. (௨௭௯)

இறந்துபோனகருஞ்சாரையை மறறெருகருஞ்சாரை
மூலிகையா லெழுப்புகல.

கேளப்பாபுலிப்பாணி மகனேமைந்தா கீர்த்தியுள்ளமகிமையதுயென்னசொல்வேன், ஆளப்பாசிவயோகி யிருவர்தாமும் வப்பனேபூலெடு

த்த வண்மைதன்னை, மாளப்பாபூவெடுக்குங் காலந்தன்னில் மகத்தான
கறுஞ்சாரை கண்டுமெல்லோ, மீளப்பாபோகாம லிருப்பதற்கு மீட்சியு
டன்தந்திரங்கள் செய்யலாச்சே. (உஅ௰)

தந்திரமாம்மூலியுட மகிமைதன்னை சதகோடிசூரியருங் கண்டதி
ல்லை, விந்தையுள்ளசித்தரது இருக்கூந்தப்பா விண்ணுலகும்மண்ணு
லகுங் கண்கொள்ளாது, சிந்தையுடனிருனது மொன்றதாகி சிறப்புட
னேபூமூலீ யெடுக்கும்போது, வந்துகல்லோகறுஞ்சாரை காலந்தானு
ம் வளையுள்ளமகிமையது புதுமைதானே. (உஅக)

புதுமையாம் சர்ப்பமதையின்னஞ்சொல்வேன் புசமூாகமூலிதனை மன
துவந்து. கதுவையுடன்காணைகத்திங் சென்றுமல்லோ கடிதானமலேது
கைகள் தான்கடந்து. மெதுவானசஞ்சீவி மூலிதானும் மேன்மையுடன்
வாய்தனிலே சௌவிக்கொண்டு, பறுமமென்றசர்ப்பமது யிருக்குமஸ்
தானம் பாண்மையுடன்வந்தல்லோ நிற்கலாச்சே. (உஅஉ)

நிற்கின்றமறுசர்ப்பந் தன்னைக்கண்டு நீதியுடன்சிவமாண்ப ரிருவ
ர்தாமும், அற்பமென்றுநினையாமல் வாலோசித்து அறிவுள்ளசர்ப்பம
தை கண்ணிற்கண்டு, துற்புரவாயெய்தவொரு சர்ப்பந்தன்னை துணிவு
கொண்டு மூலிதனைமணங்கள்வீச, சொற்பெரியசர்ப்பமது வுயிருண்
டாகி சோறுமலெழுந்திருக்கக் கண்டிட்டாரே. (உஅஈ)

கண்டாரேசர்ப்பமது மூலிதன்னைக் கைவாசஞ்சென்றதொரு சர்
ப்பந்தன்னை, பண்டுளவாமாலேயனி இருஷ்ணனகொண்ட பாங்கானமூ
லியது விஷமூலிதானும், கொண்டல்லோதான்கொடுத்து வயிருண்டா
க்கி கூட்டுறவாயழைத்துக்கொண்டு சென்றநேர்மை, சண்டமாருதம்
போலே யிருவர்தானும் சட்டமுடன்பிரம்மித்து திகைத்திட்டாரே.()

திகைத்துமேசிவமாண்ப ரிருவர்தாமும் தீர்க்கமுடன்மனஞ்சோ
ர்ந்து நிற்கும்போது. புகையுடர்ந்தவனந்தனிலே சர்ப்பங்தானும் புகட்
சியுடன்முன்னிறந்த சர்ப்பங்கூட்டி, பகைபோன்றசிவமாண்ப ரிருவர்
காண பாங்குடனேகானகத்தைச் சென்றவண்ணம், தகைமையுடன்சர்
ப்பமது கொண்டுசெல்ல தாட்சியுடன்சிவமாண்பர் பார்த்திட்டாரே. ()

பார்த்துமேசர்ப்பமது சென்றதென்று பாங்குடனேசிவமாண்ப
ரிருவர்தாமும், நேர்த்தியுள்ளமூலிகைதா னென்றறிந்து நேர்மையுடன்
சிவமாண்பர் மனதிலெண்ணி பூர்த்தியுடனினியிருக்கப் பயந்தானுவண்
டோ புகழானவடிவார மதக்கிற்றுனுர், கார்த்திருந்துமூலிதனைக்கையி
ற்றுனும் கவனமுடனெடுக்கவது நண்ணினாரே. (உஅசு)

சிவமாண்பரிருவரும் சர்ப்பத்தின்மூலியெடுத்து துன்பப்படுதல்.

நண்ணியேசர்ப்பமது சென்றபின்பு நாதாந்தத்தாயானாமனதிலெ ண்ணி, குண்ணியேமனதுவந்து முகமும்வாடி கூரானமூலிதனையெடு க்கவல்லோ, வண்ணமுடன்சிவமாண்ப ரிருவருந்தான் வளமையுடன்வு றவுகொண் டாடிகூடி, திண்மையுடன்மூலிதனை யொருதோமூன்றுன் துப்புரவாய்த்தானெடுக்க கண்டிட்டேனே. (உ௮எ)

கண்டேனேசிவமாண்பர்மூலிதன்னை கரந்தனிலேமூலிதனைத்தொ ட்டபோது, அண்டர்பிரான்மகிமையது யென்னசொல்வேன் ஆகாகா வையகத்தில் யார்தான்கண்டார், சண்டமாருதம்போலே சர்ப்பந்தானு ம சட்டமுடன்மூலிதனை வைத்தநேர்மை, தண்டகம்போலடியேனும் கண்டுமேயங்கி சட்டமுடனமகிமைதனைப் பார்த்திட்டேனே. (உ௮௮)

பார்த்தேனேசிவமாண்ப ரொருவன்தானும் பண்பானமூலிதனைக் கரந்திற்றானும், நேர்ததியுள்ளமூலியதுயென்றியம்பி நேர்மையுடன்கர ந்தனிலே யெடுக்கும்போது, பூர்த்தியுள்ளமூலியது யென்னசொல்வே ன் புகழானவஞ்சனமாம் மூலிதானும், ஆர்ததியுடன்சிவமாண்பர் தோ முன்றனை வபப்னையிருக்கவது பார்த்திட்டேனே. (உ௮௯)

பார்த்தேனேமூலியது மகிமைதன்னை பான்மையுடன்பிரம்மித்து யேங்கும்போது, தீர்த்தமுடன்மூலியது வனத்திற்றானும் தீர்க்கமுடன் சிவமாண்பர் கரந்தைப்பமறி, நேர்த்தியுடன்மூலியது தன்னைத்தானும் நேரானவனந்தனிலே யிழுக்கும்நேர்மை, பூர்த்தியுடன்யான்கண்டு திடு க்கிட்டேங்கி புகழாகக்குளிகைகொண்டு வந்திட்டேனே, (உ௯௦)

வந்தேனேகல்லாலின்மரந்தின்பேரில் வளமையுடன்குளிகைகொ ண்டு நிற்கும்போது, அந்தமுள்ளசிவமாண்பர் தன்னைத்தானும் வநித முள்ளமூலியது பிரமகற்பம், சிந்தனையைத்தான்மறந்து மாண்பர்தம் மை சிறப்புடனேதானிழுக்கும் வணமைமார்க்கம், தந்திரமாமூலியது வசியமூலி தண்மையுடன்மகிமையது கூறுவேனே (உ௯௧)

கூறுவேன்புலிப்பாணி புனிதவானே குவலயத்தில்சித்துமுனியா ரேனுந்தான், சீறுகின்றசர்ப்பத்தின் கற்பமூலி சீருலகில்கண்டவர்க ளெவர்தானுண்டு, தேறுபுகழ்பதினெண்பேர் நவகோடிதாமும் தேசம தில்வெகுமகிமை பூண்டாரல்லோ, மாறுடையகருஞ்சாரை சர்ப்பமூலி மானிலத்தில்கண்டவர்க ளில்லைதாமே. (உ௯உ)

இல்லையேசித்தர்களின் வணக்கங்கூறூர் யெழிலானசாத்திரத்தை தானுங்காணார், தொல்லையெனும்வனமூலி விஷத்ஸைதக்காணார் தொட்டதொருகிட்டிருந்த மூலிகண்டார், அல்லல்வினைதானறுக்கும் வசிய மூலி யவனிதனில்வெகுசித்தர் கண்டாருண்டு, கொல்லிமலைதிரிந்தாலு மித்தமூலி குவலயத்தில்கிட்டாது கிட்டாதன்றே. (உகூங)

கிட்டாதுயென்றதொரு மூலிதானும் கீர்த்தியுள்ளசிவமாண்பர் தன்னையல்லோ, எட்டாதபொருள்தேடிப் போனதாலே எழிலானசிவமாண்பர் தானுமங்கே, சடைமுடன்பனியையும் புழுதவார்போல் சாங்கமுடன்மூலியது வினையமாச்சு, விட்டகுறையிருந்ததினால் வாய்க்கும் பாரு விண்ணுடர்மண்ணுடர் காணார்தாமே (உகூச)

தானானபதாம்புயத்தைக் கண்டாலல்லோ தாக்கானவசியமூலி வாய்க்கும்பாரு, மானானசிவமாண்பர் மூலிகொண்டு மகத்தானகானகத்தைச் செல்லும்போது, பானானபாபதுதான் சென்றபாதை பாங்கானபடும்பாதை யென்றேயெண்ணி, கோனானகுருதனையே மனதிலுன்னிகொற்றவனார்மோசமென்று நினைத்திட்டாரே. (உகூரு)

மோசமதுவந்ததென்று மனதிலெண்ணி முனையானசிவமாண்பர் ஏதுசெய்தார், பாசமுடன்கைதனிலே யிருந்தமூலி பட்சமுடன்பூமிதனிலுதறிட்டாரே, நாசமதுகொண்டதொரு மூலிதானும் நற்கமலகரந்தனிலே விழாமற்றானும், வீசலுடன்மூலியது கரத்தைப்பற்றி விருப்பமுடன்கானகத்தில் விழுந்ததாச்சே. (உகூசா)

ஆச்சரியமாமூலியது விழுகும்போது வப்பிலைகூடி ரக்க தோழன்றானும், மூச்சுடனேயவர்காதத்தை யிவருங்கூடி முனையாகத்தானிழுக்கப பாரத்தேனையானும், கூச்சலுடனிருவருமே குய்யோவென்று கூர்மையுடன்மனதுவந்து யெண்ணங்கொண்டு, பாசலுடன்கரமிருந்த வாளால்தாமும பான்மையுடன்கரமதனைத் துணித்தார்பாரே. (உகூஎ)

பாரேதான்காமதுவுந் துணித்தபோது பாங்குடனேமூலியுடன் கானகத்தில, நேரேதான்கரந்தனையே மூலிதானும நேர்மையுடன்தானிழுத்து போகக்கண்டேன், சீரானசிவமாண்பர் இருவர்தாமும் சிறப்புடனேமறுபடியும பதிதிரும்பி, கூரானபூவழலை காய்க்குமார்க்கம் குறிப்புடனேவந்துமலலோ யமர்ந்திட்டாரே. (உகூஅ)

கறுஞ்சாரைமூலியால் முப்பூஎடுக்கப்போன சிவமாண்பர்
காமிழந்து மறுபடியும் குருவருளால்வழலைஎடுத்தல்.

அமர்ந்தாரேசிவமாண்ப ரிருவர்தாமும் வப்பனேபுலிப்பாணிமை ந்தாகேளு, சுமர்ந்ததொருவிருட்சமதில் பின்னுமாண்பர் சுந்தரனேம றுபடியும் யேகிவந்து, சமர்த்துடனேபூவழலை யெடுப்பதற்கு சட்டமு டன்குருசொன்ன நீதிபோல, தமர்ந்திடாவண்ணமுடன் புனிதவான் கள் சட்டமுடன்தானெடுத்தார் புண்யராமே (௨௯௯)

மூலியாலிழந்தகரத்தை சர்ப்பம் தன்னுசிரமத்திலிருக்கும்
குருவாகிய சித்துவுக்குகாண்பித்தல்.

புண்ணியராம்புலிப்பாணி மைந்தாகேளு புகழானசிவமாண்பர் கரத்தைபல்லோ, வண்ணமுடன்சர்ப்பமது மனதுவந்து வளமையுடன் தன்னுடைய குருநாதர்க்கு, திண்ணமுடன்கரந்தனையே காட்டவென்று தீர்க்கமுடன்வாய்தனிலே கௌவியல்லோ எண்ணறியநற்பொருளே யெந்தன்நாதா யெழிலானகானகத்தின் வளமைகேளே. (௩௱)

சர்ப்பம் குருவுக்குகரம்வந்த விசேடமுரைத்தல்.

கேட்கவென்றுலவடியேனும் கானகத்தில் கிர்த்தியுடனாண்பெண் ணாய் தானிருந்தோம், மீட்கமுடன்யிரைதேடி போகும்போது மிக்கா னகானகத்தில் யாம்திரிந்தோம, ருட்சமுடன்பாலையென்ற வனத்தில் நாங்கள் சுந்தரமேசித்தொனிலே போகும்போது, ஆட்கள்விட்டுவொ ருவரையும் பிரிந்துமல்லோ வையகனகல்லால மரங்கண்டோமே. ()

கண்டோமேசிவசித்த மாண்பர்தம்மை கைலாசநாதரைப்போல் வேஷங்கொண்டு, உண்டானபொருள்தேடி கற்பமுண்ண வுத்தமரேயி ருவர்தமைக் கண்டேன்யானும், விண்டதொருவழலையென்றமுப்பூதன் னை விருப்பமுடனெடுக்கவந்த மாண்பர்தம்மை, சண்டமாருதம்போ லே துறத்தியானும் சாங்கமுடன்சிறலது சீறினேனே. (௩௱௨)

சீறியேபோகையில் மாண்டர்தாமும் சிறப்பானகல்லாலின் மரத் தின்பேரில், மீறியேயெனைக்கண்டு பயங்கொடுங்கி மீளாதமரத்தின்மே லேறிநின்றார், வீரியமாய்ம்பாலே யெந்தனைத்தான் விட்டல்லோகொ ன்றுமேசிதைத்துப்போட்டார், சீரியென்னும்விஷமூலி தன்னைத்தா னும் கிருபையுடன்யெந்தனுக்குக் கொடுக்கலாச்சே (௩௱௩)

கொடுக்கவேயென்சேனை பிணையிலொன்று கொப்பெனவேநானி றந்த பாவனத்தை, அடுத்துமேகண்டல்லோ ஆலோசித்து ஐயனேகு ருமூலி தேடிவந்து, படுத்திருந்தயெந்தன்முன் வந்துநின்று பார்க்கான

மூலிதனை முகத்தில்வைக்க, நடுத்தலையில்வில்லறுந்த நாணிபோலே நாதனைவுயிர்கொண்டு வந்திட்டேனே. (௬௱௫)

வந்தேனேயென்பிணையுங் கூடியல்லோ வளமானமரம்விட்டுவந்த போது, சிந்தனையாய்மூலிதனை விட்டகற்றி சிறியோனாமிருவர்வங்கபின்பு, பந்தமுள்ளசிவமாண்ப ரிருவர்தாமும் பட்சமுடன்கல்லாலின் மரத்தைவிட்டு, சந்தோஷமாகியல்லோ யிறங்கிமாண்பர் சட்டமுடன்மூலிதனைத் தொட்டிட்டாரே. (௬௱௬)

தொட்டிட்டமூலியது யெந்தனுதா துடர்ந்துமேகைதனையே பற்றியல்லோ, விட்டுவிடாதவர்கரத்தைப் பிடித்துமல்லோ வீருனாமிருக்கும் கானகத்தில், சட்டமுடன்கரந்தனையே பற்றியல்லோ சாங்கமுடன் முனிமுக்குங் காலந்தன்னில், விட்டகுறையிருந்ததொரு புண்ணியத்தால் வீரமுடன்விரலதனை துண்டிட்டாரே. (௬௱௭)

துண்டிடவேகரமதுவு மெந்தன்பக்கல் துப்புரவாய்விஷமூலி வேகத்தாலே, கண்டிதமாயவர்செய்த பாவத்தாலே கர்த்தாவேகரமதுவும் வந்துதென்று, திண்டிரைசூழ்வையகத்தில் சமாதிபூண்ட திரளானயெந்தன்குரு தீர்க்கநாதா, கொண்டுவேந்தேனுந்தமக்கு சாட்சியாக கொற்றவனேகதியென்ன யென்னலாச்சே. (௬௱௮)

வனத்துரிஷியார் பாம்புக்கு யிதவுகூறல்.

ஆச்சென்றுசொல்லுகையில் ரிஷியார்தாமும் அங்ஙனவேசர்ப்பந்துக் கோதுவார்பார், மூச்சடங்கியிறந்ததொரு சர்ப்பந்தன்னை முனியாமலுயிர்மூலி தான்கொடுத்து, பாச்சலுடன்கானகத்தில் பின்னுமல்லோ பட்சமுடனிருபேரும் வந்திட்டார்கள், ஆச்சரியமானதொருவிஷமூலிதன்னால் வப்பனேபிழைத்ததுவு மருமைதானே. (௬௱௯)

தானனசற்குருவின் கடாட்சத்தாலும் தாக்கானமனோன்மணியாள் கிருபையாலும், கோனனமகதேவர் கிருபையாலும் கூர்மையுடன் பிழைத்ததுவும் புண்ணியந்தான், தேனனசிவமாண்பன் கரமறிந்து தீர்க்கமுடன்வந்ததுவும் பாவமாச்சே, மானனபாவத்துக் கிடங்கொடாமல் மகத்தானசாபமதை நீக்குவீரே. (௬௱௰)

நீக்கினால்வெகுகோடி புண்ணியந்தான் நிஷ்களங்கமானதொரு மாண்பருக்கு, ஆக்கமுடன்கரந்தனையே யொட்டிக்கொள்ள வப்பனேமூலியது கொண்டுவந்து, நோக்கமுடன்முன்கொடுத்து வனுப்பினுக்கால் நொடிதானவிரலதுவும்விருட்சந்தன்னில், பாக்களவுபிறந்ததொருகதையைப்போலே பாங்கானவிரலதுவும் வொட்டும்பாரே. (௬௱௰௧)

ஓட்டுமேபின்னுமந்த மாண்பர்தாமும் ஓகோகோவழலைதனைத் தானெடுக்க, கிட்டியேமறுபடியும் வருவாரங்கே கிழானவிரலதுவுமவரைக்கண்டு, எட்டியேதான்துறந்து கையிலொட்டி யெழிலானவங்கமது பங்கம்நீக்கி, சுட்டியேசிவமாண்பர் தானுமப்பா சொஸ்தமுடன்கரங்கொண்டு வாழ்குவாரே. (உாயக)

வாழ்ந்தாலேயுந்தமக்கு மோட்சமுண்டு வளமானகீர்த்தியதுவதிகமுண்டு, ஆழ்ந்ததொருவார்தமைக்குக் குறைவில்லாமல் அங்கணவேமுலியது ஆராய்ந்தல்லோ, தாழ்ந்துமேகுருபாதம வாக்குதப்பி தானடைந்தால்குருவுக்குப பாவமென்று, சூழ்ந்துமேகுநவுரைந்த வாக்குபோலே சூட்சமுடன்செய்பவல்லோ யெண்ணலாசசே. (ஈாயஉ)

தாமபிரகறபம் சிவலிங்கமானது.

எண்ணவேயின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் யெளிதானபுலிப்பாணி மகனேபாரு, வண்ணமுடன்காலாங்கி கிருபையாலே வளமையுடன்லோகபதி யெல்லாங்காண, திண்ணமுடன்குளிகையது பூண்டுகொண்டு தீர்க்கமுடன்சினைபதி சென்றேன்யானும், அண்ணலெனும்பதாம் புயத்தை யானுங்கண்டு வப்பனைகாலாங்கி வரமபெறறேனே. (ஈாயங)

பெற்றதொருவரத்தினு லனேகமபெற்று பேரானபேரின்ப வீட்டறிந்து, கற்றதொருசிவயோகி தவசியானி கைலாசசட்டமுனி நாதர்கூட்டம், சுற்றுமுள்ளதிருமூலவர்ககத்தியான சுந்தரானந்தரொடு ரோமர் தானும்,மற்றுமுளளசித்தாதி சித்தரெல்ல [illegible] புடன்மலைதனிலே பார்த்திட்டேனே, [illegible] (உாயச)

பார்த்தேனேயவரவர்கள செயதநூலை பாங்கானசம[illegible] நின்றுகொண்டு, நேர்த்தியுள்ளபெருநூலாங கிரந்தம்கோடி [illegible] நூலுஞ் சுருக்கங்கோடி, பூர்த்தியுடனவரவாக்கு மிதவுகூறி புகழானசாத்திரத்தைக் கையிற்பறறி, தீர்க்கமுடன்சிவலிங்கப் பதியிற்சென்று சிற்பரனே நூல்களையாம் பூசித்தேனே. (ஈாயரு)

பூசித்தேனதிதமென்ற நூல்கள்தம்மை புகழானசினைபதி மாண்பருக்கு, வாசித்தேன்சந்தேகந் தெளிவுநீக்கி வாகுடனேகருவிகரணியந்தம், நேசித்தேன்சினைபதிப் பெண்களைத்தான் நெடிதானசாத்திரத்தின் மார்க்கங்கண்டு, ஆசித்தேனெடுங்கால மங்கிருந்தேன் வப்பனை குளிகைகொண்டு பறந்திட்டேனே. (ஈாயசு)

போகர் புவனகிரியில் உச்சிலிங்கத்தேளென்னும்
சிறகுடைய செங்தேளைக்கண்டது.

பறந்தேனேகுளிகைபது பூண்டுகொண்டு பாங்கானயிமயகிரி மே
ற்கேயப்பா, சிறந்ததொருபுவனமென்ற கிரியில்யானும் சிறபானேகுளி
கைவிட்டு யிறங்கியேதான், நிறைந்ததொருகுகைதனிலே சென்றேன்
யானும் நெடிதானதேவரிஷி கோடாகோடி, குறைந்ததொருகணக்கது
வும் லகமேகாயிலலே கோடானகோடிசித்து முனிகண்டேனே. (௯௱௭)

கண்டதொருசித்துமுனி ரிஷியார்தாமும் கைலாசபுவனகிரி தன்
னிற்றானும், ஆண்டமுடிபோகாமல் யாகஞ்செய்து வப்பனேதானிருக
குங் காலந்தன்னில், தண்டரிகமானதொரு கானகத்தில் தாஷ்டீகமுள்
ளதொரு செந்தேளப்பா, சண்டமாருதம்போலேரகைகொண்டு சட்
டமுடனிறங்கிறகப் பார்த்திட்டேனே. (௯௱௮)

பார்த்தேனேபுவனகிரி சிகரந்தன்னில பாங்கான செந்தேளின்கொ
ரேந்தன்னை, தீர்க்கமுடன்சிகரமதிட்டு மேல்நோக்கி தேசமானகொ
டிமுனையைப் பற்றிநின்று, வோதவுடலமதெங்குமதுவும் தலைகொண்
டேறி மிக்கானசிகரமென்ற செயபுதனை, ஊர்தமேதானிறங்கி கொ
ட்டும்போது வழகானசெம்பதுவும வுருகிப்போச்சே. (௯௱௯)

உருகியேசெம்பதுவும மலையோரத்தில் வுதிர்ம்போயங்குங்கல்
லோ லிங்கமாச்சு, மெருகானலிங்கமது செம்புமாகி மேன்மையுள்ள
சமாதியென்ற பீடமச்சு, திருவானபீடமது சித்தர்களுந் தீரமுடன
சிவலிங்கமென்றுஞ்சொல்லி, பருவமுடனமாவாசை காலந்தன்னில பட்
சமதுகுருபூசை செய்வார்தாமே (௯௨௰)

ஞானபூசையது செய்யும்போது தாக்கானசிவலிங்கம் தன்னில்நி
ன்று, தேனானஜலமதுவு முத்துபோலே கறறமுடனசிவலிங்கந் தன்
னிற்பொங்கி, கோனானவிஷமதுவும் பொங்கியல்லோ கொப்பெனவேஜ
லமதுவாய் சுத்திருக்கும், பானானஜலமதனை யெடுத்துசித்தர் பாங்கா
னேசிசாவிலடைப்பாராமே. (௯௨௧

பாரேதான்ஜலமதனை யெடுத்துமல்லோ பாங்கானசெம்பதனையு
ருக்கிக்கொண்டும், நேரேதானுயிரமாய் களஞ்சிதானும நேர்மையுடன்
தானுருகுங் காலந்தன்னில, சேரேதானுருக்குமுகந் தனனிலப்பா சே
ர்வைகண்டுவிஷநீரை தாக்குவாரப்பா, கூரேதானுயிரத்துக் கோர்களஞ்
சி கொடுத்துமிகவுருகியல்லோ யெடுப்பார்காணே, (௯௨௨)

காணவேயாயிரத்து யெட்டுமொற்று கனமானதேவேந்திரன் தங்க ங்கமாச்சு, பூணவேதங்கமது பிறவித்தங்கம் புகழானசித்துமுனி வழுங் குந்தங்கம், வேணவேபூசைக்கு வுதவுந்தங்கம் வேறுபடாத்தங்கமதுக யம்புத்தங்கம், நீணவேகைலாச நாதர்தாமும் நீதியுடன்வீற்றிருக்கும் பீடந்தானே. (௩௨௩)

பீடமாமாயிரங்கண் ணிருனோர்க்கு பேரானவாசனத்தின் தங்கமா கும், கூடகோபுரந்தனக்கு சிகரத்தங்கம் குவலயத்தில்மாண்பர்களுங் காணுந்தங்கம், மாடமாளிகைநெருக்கும் மன்னர்தாமும் மார்க்கமுட னுகினத்தங்கமாகும், தேடறியநாதாக்கள் ரிஷிகள்தேவர் தேற்றமுடன் கண்டதொரு தங்கமாமே. (௩௨௪)

தங்கமாம்புவனகிரிகள் மில்நின்று தாக்கானவிஷமீறிவந்ததங்கம், சிங்கமாம்சமாதியென்ற பீடமங்களில நிஷ்களங்கமாகிவந்த தங்கமாச் சு புங்கசித்திவெட்டுடனே பிறந்ததங்கம் புகழானநாதாக்கள் வசிக்குந் தங்கம், பங்கமிலாத்தங்கமது பாரில்மாண்பர் பார்க்காதமிறவியென்ற தங்கமாச்சே (௩௨௫)

பாஷாணகற்பம்.

ஆச்சப்பாயின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் அப்பனேபுலிப்பா ணி சுருணமாரா, பாச்சலென்றபாஷாண கற்பஞ்சொல்வேன் பாருல கிலநாதாக்கள் சொல்லவில்லை, நீச்சுடையசர்ப்பமது தான்பிடித்து நீம கனைபாஷாணங் களஞ்சிரெண்டு, மூச்சுடனேசர்ப்பமது தானிருக்க முனியானபாஷாணந் தன்னைவாங்கே. (௩௨௬)

வாங்கியேஅரவத்தின் வாயிலதன்னில் வளமானபாஷாணங் கள ஞ்சிதன்னை, தாங்கியேசிரியாமல் மைந்தாபாரு துப்புரவாய்வாயில்லை த்து தைத்துபபோடு, ஏங்கியேபோகாமல் பாண்டர்தன்னில் ....பிலா கததானை..த்து அவாரமிட்டு, ஓங்கியேபோகாமல் மேலுமூடி ... மனைபதனமது நாள்தானெட்டே. (௩௨௭)

எட்டானநாளதுவுஞ் சென்றபின்பு யெளிதானபாண்டமதை திற ந்துமைந்தா, கட்டானஅரவத்தின் வாயைத்தானும் கடுகெனவே தான விழத்துப் பார்க்கும்போது, திட்டமுடனரவமது ஜீவன்செத்து தீர்க்க முடனுயிரதுவுஞ் சற்றேநிற்கும், சட்டமுடன்பாஷாணந் தனையெடுத் து சாங்கமுடன்பாமபுக்குப் பாலைவாரே. (௩௨௮)

வார்க்கையிலேபரவமது வுயிருண்டாகி வளமானஅரவமது வன மேசெல்லும், பார்க்கையிலேபாஷாணம் விஷந்தானேறி பாங்கானகா

யகற்ப மாச்சுதப்பா, தீர்க்கமுடன்பாஷாணந் தனையெடுத்து தினையள வுவாகவல்லோ மண்டலந்தான், ஏர்க்கையிலேமண்டலமு மூன்றுகொ ண்டாய் யெழிலானகாயமது யிருக்கும்பாரே. (கஉக)

இருக்குமேபாஷாண கற்பத்தாலே யெழிலானகற்பமது கொண்ட பேர்க்கு, குறுகியேதேகமது வயிரம்போலாம் குவலயத்தில்சித்துமு னி தம்மைப்போலே, அறுவதுவும்மிகவாகி புத்தியுண்டாய் அவனியி லெரீயுமொரு சித்தனுவாய், நறுவலென்றதிரைநரையு மற்றுப்போகும் நாதாந்தசித்தொளிவு நீயுமாச்சே. (கஙம)

சித்தானசித்துமுனி ரிஷிகளெல்லாம் தேசமதில்பலபலவாய் நூல் கள்கூறி, முத்தானபாஷாண கற்பஞ்சொல்ல மூதுலகில்மறைத்துவை த்தார் சித்தரெல்லாம், சத்தசாகரங்கடந்து குளிகைபூண்டு சாயுச்சிய பதவிதனைக் காணவென்று, புத்தியுடன்காலாங்கி தாள்பணிந்து புகழா னகற்பமதைக் கூறிட்டேனே. (கஙக)

கூறினேன்கற்பமதைக் கொண்டபேர்க்கு குவலயத்தில்நெடுங்கா ல மிருக்கலாகும், மாறிட்டமேனியது தங்கம்போலாம் மகத்தானவாசி யது மேல்நோக்காது, நீறிட்டமேனியது தவளம்போலாம் நிஷ்களங்க வாசியது மேலோடாது, வீறிட்டுவார்த்தையது மொழிசொன்னலும் வீணுகிதேகமது தூண்ணுதன்றே. (கஙஉ)

ஆமைகற்பம்.

அன்றானபுலிப்பாணி மைந்தாகேள் வப்பமே சொல்லுகிறே னு ந்தமக்கு, குன்றானமலையேறி குகைகடந்து கூரானசுவர்ணகிரி பதியம ர்ந்து, வென்றிடவேகுளிகைதா பூண்டுகொண்டு வீறானசிகரமென்று பதியைக்கண்டேன், தென்றிசையில்தட்சனு மூர்த்திநாயன் தேற்றமு டன்கண்டதொரு கூர்மந்தானே. (கஙங)

திரேதாயுகப்பிரளயத்தில் தட்சனுமூர்த்தி [illegible] மைந்தனேவிழுங்கிய கூர்மத்தை சுவர்ணகிரியில் போகர்கண்டது.

தானனகூர்மமது தன்னைக்கண்டேன் தாக்கானதிரேதாயினுகத்தி லப்பா, மானனபிரளயங்கள் வந்தபோது மகத்தானகூர்மமது மலையிற் சென்று, தேனனமனோன்மணியா ளிருக்கும்பீடம் தெரிசனமேசெய் வதற்கு மனதிலுன்னி, பானனயார்லோகப் பிரளயத்தில் பட்சமுடன் கூர்மமது வந்ததாச்சே. (கஙச)

வந்ததொருகூர்மமதைக் கண்டேன்யானும் வளம்பெரியசுவர்ணகி ரி மலையிலப்பா, அந்தமுடன்மலையைவிட்டுக் கீழிறங்கி வப்பனேசுனை யருகே சென்றேன்யானும், சிந்தனையாய்மனதுவந்து படியிறங்கி சிபர்

ரனைத்தெரிசிக்க தியானங்கொண்டு, சந்தோஷமாகியல்லோ சுனையோ
ரத்தில் சட்டமுடனிறங்கையிலே கண்டிட்டேனே. (௯௩ரு)

சுனையிலகூர்மம போகரைககண்டது.

கண்டவுடன்கூர்மமது யெனைபபணிந்து கைலாசநாதனென்று தா
ள்பணிந்து, தெண்டமுடன்பதாமபுயத்தைப் பணிந்துபோற்றி தெளி
வாகசுனையேறி மேலேநின்று, அண்டர்பிரானெநதனையுங் காணவந்த
வன்பானபோகரிஷி நாதாகேளும, துண்டரிகமாகவல்லோ தட்சணயன்
துப்புரவாய்சாபமது தநதிட்டாரே. (௯௩௬)

தந்ததொருசாபததால திரேதாயுகததில் சட்டமுடன்பிரளயத்தில்
வந்தேனிங்கே, அந்தமுடன்நெடுங்காலம சுனையிலயானும வன்புடனே
வாசமது செய்திருந்தேன், சிந்ததொருசுவர்ணகிரி சுனையில்தானும் சி
றபபானசித்துமுனி வநததிலலே, விந்தைய - னந்தனுக்குசாபந்தீர்க்க
விட்டகுறையிருநததினால் வநதீரபாரே (௯௩௭)

பாரேதான்காலாஙகி நாதபாதா ப னெநதன்மேல் கிருபை
வைத்து சீரேதான்சாபமதை நிவாத்திசெய்து தீக்கமுடனெந்தனை
யும் மீட்டீரானால், நேரேதானுந்தமக்குக் காயகற்பம் நெடுங்காலந்தா
னிருக்க யானகொடுப்பேன், கூரேதான்வார்த்தைபது மொழியுங்கூறி
குறிப்புடனேவரலாறு கூறலாச்சே. (௯௩௮)

போகர் சாபம் நிவர்த்திசெய்தது.

கூறவேகூர்மமது சொலலுமபோது கொற்றவனேசாபமது நிவர்
த்திசெய்தேன், மீறவேகூர்மமதை சாபம்நீக்கி மிக்கானகற்பமதைக்
கேட்குமபோது, மாறவேயெந்தனுக்குத் தெரியவோதி மகத்தானகற்ப
மதைக் கேட்குமபோது, நாறவுடலகூர்மமது வயிற்றிருக்கும் நலமா
னகுளிகைதனை தருதலாச்சே. (௯௩௯)

தருகவேவயிற்றிலுள்ள காயகற்பம் தனமையுடன்மன்னவுந்து
அடியேன்றானும், பெருகவேயானவாங்கி மண்டலந்தான் பேரானகுளி
கைதனில் குனறியுண்ண, மெருகலுடன்தேகமது யிறுகியல்லோ மே
தினியில்நெடுங்கால மிருப்பதற்கு, பெருகவேகாயாதி கற்பங்கொண்டு
பேரானவுலகுதனில் வசித்திட்டேனே. (௯௪0)

வசித்ததொருகுளிகையினா லெநதனுக்கு வானமகிமைகளு ம
னேகமுண்டு, பசியதுவுமில்லையபபா பண்புள்ளோனே பாலகனேசித்
தர்களுக் கிடைக்குமோசொல், நிசிதமுள்ளகாயாதி கற்பந்தன்னை நிகழ
ச்சியுடன்முன்னிருந்த நாதாதாமும, உசிதமுடன்கண்டவரும் யாருமி
ல்லை வுத்தமனேநாதாகள் சொலலார்பாரே. (௯௪௧)

கலைமான்கற்பம்.

சொல்லாசேயின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் சுவர்ணமென்ற மலையிலப்பா மேற்பாகத்தில், வெல்லவேகுளிகைகொண்டு வடியேன்றா னும் வேதாந்தத்தாயினது கடாட்சத்தாலே, புல்லவேவனந்தனிலேகலை மான்றன்னை புகழ்ச்சியுடனடியேனுங் கண்டபோது, நல்லதொருகலை மானு மென்னைககண்டு நலமுடனேவோடிவந்து பணியலாச்சே. ()

பணிந்துமேயெங்கனிட பாதம்போற்றி பட்சமுடனெந்தனையும் வினவிக்கேட்க, துணிந்துமேகாலாங்கி நாதர்பாதம் துப்புரவாய்மனது வந்து அடியேன்றானும், அணிகடவுள்பதாம்புயத்தின் சீஷனென்றேன் ஆத்தாளின்கடைபாத தாசியென்றேன், மணிபோன்றவார்த்தையதுகூ றும்போது மகத்தானயென்குருவே யென்னலாச்சே, (௩௪௩)

என்னவேகாலாங்கிநாதசீஷா யெழிலாகயெந்தனுக்கு வந்தசாயம், பன்னவேபுஜண்டமகா ரிஷியார்தாமும பாய்கானகானகத்தில் யாகஞ் செய்ய, துன்னயெயடியேனால் வந்தநேர்மை துப்புரவாயாதென்று வி னவிக்கேட்பீர், முன்னமேபெரியோர்கள்செய்தயாகம் மூதலகிலடியே னு மறியேன்றனே. (௩௪௪)

தானனபுஜண்டமகா ரிஷியார்தாமும் தண்மையுடன்தவஞ்செய் யுங் காலந்தன்னில், கோனனவுமதையர் காலாங்கிநாதர் கொற்றவனார் தாமுரைத்த நீதிபோலே, தேனனமனோன்மணியாள் கிருபையாலும் தேற்றமுடன்சாபமதை நீக்கவெண்ணி, பானனகுருபரன ரிஷியாசீர் மம் பாங்குடனேயான்வணங்கி நின்றிட்டேனே. (௩௪௫)

நின்றேனேபுஜண்டமகா ரிஷியார்பக்கல் நிஷ்களங்கமானதொரு சமாதிதன்னை, சென்றேனேநெடுங்காலம் நானிருந்தேன் தேஜொளிவி ன்கிருபைய்ந்து வண்மையாலே, வென்றதொருயான்செய்தபாவந்தன்னை வேட்கையுடனணிதவராவண்ணம்மயானும், குன்றுடனேமலைதேடிசமா திபக்கல் கொற்றவனேசாபமதால் சென்றிட்டேனே. (௩௪௬)

இட்டதொருசாபமதைநீக்கியல்லோ யெழிலாகவெந்தனுக்கு காட் சிதந்து, சட்டமுடன்ஞானேபதேசங்கொண்டு சாயுச்சியபதவிதனைக் காணவென்று, திட்டமுடன்மனோலயத்தா லருளுந்தந்து தீர்க்கமுடனு சீர்மஞ் சாபநீக்கி, விட்டகுறையிருந்ததொரு நேர்மையாலே விடிதிக் கிப்போகவென வருள்கொள்வீரே. (௩௪௭)

கொள்ளவென்றுகலைமானுங் கூறும்போது கொப்பெனவேகால ங்கி கடாட்சததாலே, தெள்ளமுர்த்தமானபரா பரியின்பாதம் தேற்றமு

டடியேறு முடிவணங்கி, எள்ளளவுந்தீங்குமிக நேராமற்றுன் யெழி லானமனேன்மணியைப் போற்றிசெய்து, உள்ளபடிகலைமானைப் பாது காக்க உவகையுடனென்மனதி லெண்ணினேனே. (௩௪௮)

எண்ணியேகலைமானின் சாபந்தீரந்தேன் யெழிலானகாயாதிதான் கொடுக்க, உண்ணவேநெடுங்காலம் காணிருந்தேன் வுத்தமனேசித்துமு னிரிஷியார்கூட்டம், வண்ணமுடன்கலைமானின் கற்பந்தன்னை வாரு பெறவுண்டவர்க ளாருமில்லை. கண்ணபிரான்கொண்டதொரு கற்பந்தா னும் கலைமானின்கற்பகநூக் கீடாகாதே. (௩௪௯)

நடானகற்பமதையுண்டேன்யாரும் யெழிலானவையகத்து மாண் பரெல்லாம், தேடாமல்கற்பமதை யுண்டேனென்று தேசமதில்சங்கி யசி வேஷங்கொண்டு, கோடானகோடிபொருள் சமாதிக்க கூடினர் கற்பமது கொண்டேனென்று, தாடாண்மைகொண்டதொரு பொய் ஞ்ஞானிகரு தாரணியிலதனைகொடுத்து கெட்டாராபாரே. (௩௫௰)

பாரேதானகற்பமதைக கொண்டபோது பாய்குடனேசினபதி செ ன்றேன்யாரும், நேரேதான்குளிகையது பூண்டுகொண்டு நெடுதான கடலோரஞ்சென்றபாறும், பிரேதான்சுவர்ணகிரி யிடபாகத்தில் சிற ப்புடனேமலையேறி சென்றோன்யாரும், ஆரேதான்கண்டவர்களாருமி ல்லை யப்பனேநவாகிரி கண்டிட்டேனே (௩௫௧)

சேதுபடலம்.

கண்டேனேயின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் கருவானபுலிப் பாணி மைந்தா கேளு சண்டமாருதம்போல குளிகைகொண்டு சாங்க முடன்சுவர்ணகிரி யிடபாகத்தில், தண்டகாரணியமதி லடியேன்றானும் சாங்கமுடன்சமாதி பூண்டு நன்னிலமிருந்தேன், அண்டர்பிரானருளினது கடாட்சததாலே யப்பனேகடலோர மாமலைதேடினேனே. (௩௫௨)

தானானவையகத்து மகிமைபெறலாந் தாக்கானசுவர்ணகிரி கட லோரதனில், மானனமகுத்துவமா ளதிமென்று மார்க்கமுடன்சுந்தரா னந்தரேசர், தேனானசாத்திரங்கள் பாடியல்லோ தேற்றமுடன்குகைத னிலே வைத்தாரப்பா, கோனானயெங்குருவாம் காலாங்கிநாதர் கொற் றவனாரெந்தனுக்குக் கூறினாரே. (௩௫௩)

கூறியதோர்நாலதுவும் பொய்யாதென்று கொற்றவனேசமாதியெ ன்ற பீடமின்று, மீறியேயஷ்டாங்க யோகஞ்சென்று மிக்கானதவநிலை யில் நிற்கும்போது, நீறுடையசுந்தரா னந்தரேசர் நிஷ்களங்கசொருப மென்ற சுடரேகொண்டு, மாறுடையசித்தனைப்போல் வேஷங்கொண்டு மார்க்கமுடன்தரிசனங்கள் தந்திட்டாரே. (௩௫௪)

தந்தாரேயெந்தனுக்குத் தரிசனங்கள் தாக்கானையெந்தனையு மாரெ
ன்றேதான், சிந்தனையாய்மனதுவந்து கேட்டயாலும் சிறப்புடையகாலா
ங்கி சிஷனென்றேன், அந்தமுடன்சிஷனையிர் விட்டியாலும் வையகனேகு
ளிகையது பூண்டுகொண்டு, விச்சைகளையறியவென்று யிடமாகத்தில
விருப்பமுடன்பலரிகளுயான் துதித்திட்டேனே. (௬௱௫)

சுந்தரானந்தர் கேசரிமார்க்கக்குளிகையை போகருக்கு கொடுத்தது.

துதிக்கையிலேஎந்தரா னந்தரேசர் அப்புரவாயெந்தனுக்குக் தக
ளகற்றி, மதிப்புடனேயெந்தனையு மனதுவந்து மார்பகமுடன்கண்டதெ
ரு வினையத்தாலும், விறிப்புடையசிட்டருடை யிருந்ததாலும் விருப்ப
முடனுந்தமக்கு வுபதேசங்களை, கிரிவெறமெருமேனுப தேசஞ்செய்து
கருவானகேசரியுக் தருவேன்பாரே. (௬௱௬)

பாரேதான்புலிப்பாணி யமக்காகேளு பாங்குடனேசுந்தரா னந்த
ரேசர், சேர்ந்ததான்யெந்தனுக்குகுளிகைதந்து தேற்றமுடனுலகுபதி
மகிமையெல்லாம், சேரேதான்சதாகாலந் சிஷனுக சேர்மையுடனென் நீ
தில் மனதுவந்து, கூரேதான்கேசரியின் மார்க்கந்தன்னை குறிப்புடனே
யெந்தனுக்கு கூறினுரே. (௬௱௭)

போகர் புலிப்பாணிக்கு சன்மார்க்கவிதிகூறல்

கூறவேபுலிப்பாணி மைந்தாகேளு குவலயத்திலெந்தனுக்கு சிஷ
மார்க்கம், தேறவேகண்டல்லோ வாராய்ந்தேதான் தேற்றமுடனிருப்ப
தற்கு முறையுஞ்சொல்வேன், மாறவேதொண்டுசெய்யும் சிஷனுக்கு
மகத்தானசன்மார்க்க மேதென்றக்கால், ஆறவேவிசுவாச மருளும்வே
ண்டும் வப்பனேஅறிவுஜெயம் வேண்டும்பாரே. (௬௱௮)

வேண்டுமேயாசையுட னின்பம்வேண்டும் விருப்பமுடன்சவமுட
னே பொறுமைவேண்டும், தாண்டவம்போல்குருமொழியின் வணக்கம்
வேண்டும் காரணியில்ஜீவகா ருண்ணியம்வேண்டும், ஆண்டகையின்
பதாம்புயத்தை நண்ணல்வேண்டும் வப்பனேயிறக்கமுட னீகைவேண்
டும், தூண்டியதோர்கருமான மின்னஞ்சொல்வேன் அப்புரவாய்த்தக
ளகற்றி யிருக்கநன்றே. (௬௱௯)

நன்றாகயிறவாமல் முயற்சிதேடல் நலமானகற்புடைமை நண்ணல்
வேண்டும், குன்றானகொடியதொரு பாவம்நீக்கி குவலயத்திலிருப்பவ
னே சன்மார்க்கன்றான், தென்றிசையிலகத்தியர்க்கு நேர்மையாக தேற்
றமுடனுபதேசஞ் செய்யவல்லோன், நன்றிபுரிவேளுடு வாழுமாண்
பர் நலமானசித்தமுனிக் குவமையாச்சே. (௬௱௰)

ஆச்சப்பாபொய்கூறு சபதேந்திரம் வப்பனேகிந்தையுடன் நிலை மையொழல, பேச்சுடனேமெய்தவறல் பொருமைகூறல் பேரானபேரின் பழிலமறத்தல், மூச்சடக்கிமெய்பேசிலை யாகதுசெய்தல் முனையான நாதுருக்களை ஞானைணிதல், ஆச்சரியமானதொரு களவுமார்க்கம் வப்ப னேகிக்குவது முண்மைபாரே. (கூகக)

உண்மையாம்மூன்புநய புராணிகூறல் வுந்தமனைரயுதாசினைக்கல் மிகவுமபேசல், நன்மையாயபெரியோரைப் பகடிகூறல கலமுடனேபரி சுந்தோன் போலகூறல, கண்மையாமமெய்மேலும்பேசர்வினொத்தல் கருவானபோ நடு றுபன்று பிறகல், தண்மையாம்சித்துமுனி நூல்க ளைலாற தாரோ நிநத தெக்கனைப்போல வொற்றுவானே. (கூகஉ)

பித்தனென்றுல்சொலலுமிறேனினைய்கேளு பிணிதீர்க்கும்பண் டிதன்போல பொய்யுருக்கு, சுத்தமுடனைசாவிகா தொயம்பூண்டு சுத்தா னேயுபிதேசகூறவல்லோன், சாமபெரிகவுறுத தருமவான்போல் தாரணியிலகோடமது பூணமுகொணடு, பாதிபுடனகோபமதை யற்றவ ன்போல் புலமையிமெயறிவாகோ கழுதைமோண்பே. (கூசூங)

மாண்பானவையகநிலமேகரப்பா மாககமுடன்பலபலவாய் வே ஷமகொணடு, ஆன்மிராமைபோல கவீசபகொணடு அகட்டியேவார்த் தையபமிகவுமகூறி, காண்பமாசொல்லார்நகுந கருத்துளான்போல் கைதனிலேருத்திராட்சமாலைபூண்டு, வீண்பினையாகவல்லோ இரிந் துகொண்டு விருதானவேஷமது கொளவாாதானே. (கூசச)

தானுமாபுலிப்பா பின்னமகேளு தண்மையுள்ளபூபாலா சொல் வேணப்பா, கோனுகுருவுருமு பெறமேருக குவலயத்திலகீர்த்தி கொணடுயிருப்போருக, நேனுமனேனுமணியாள் பதாம்புயத்தை தேறமுடனைனுளுக தாடிபபோறுக, பானுபரமசிவன் பதறிவானு ய பாருலகிலவிதகதிருக்குருசேடைராமீர. (கூசுரு)

கறபமுண்ண கெகதகநதயிலம்.

பாரேகானிர்ளமொரு மாககனுசொலவேன் பாங்கானபுலிப்பா னிமகனேகேளு, மேரதானுநகமக்குகாயசேடம செகிழ்ச்சியுடன் சொலலுமிறேன் கோமையாக, விரேநாக்செலபிககாய் கெஉதாலும விருப்பமுடன்பலமதுவு மைந்துசேரு, சிரேதானதாளகமும் ரெண்டு சேரு சிறப்பானசிமையது வொனறுகூட்டே. (கூசுசா)

கூட்டவேமனோசிலையு மொனறுசேரு குணமானகெவுரியது வொ ன்றுசேரு, நாட்டமுடன்பூரமது வொன்றுசேரு நலமானவீரமது ஒ

ரையேசேரு, வாட்டமுடனபினியது வொன்றேசேரு வகுப்பானலிங்க மது வொன்றுகூட்டு, தேட்டமுடன்றுருசதுவு மொன்றேசேருதெளி வானதுத்தமது வொன்றுதூக்கே. (௲௬௭)

தூக்கியேசிற்றண்டங் கருவிலப்பா நூடியாகத்தானரைப்பாய்நான் குஜாமம், தாக்குவாய்வாலுழுலைத் தயிலத்தாலே தானரைப்பாய்ஜாம மது வெட்டதாக, நோக்கமுடன்கருஞ்சீரந் தயிலமப்பா ணுக்கமுட ன்தானரைப்பா யாறுஜாமம், வாக்கதுவும்பிசகாத வண்ணமப்பா வள மானதாழம்பூ சார்தான்கூட்டே. (௲௬௮)

சாறானதாழம்பூ நாலுஜாமம் தன்மையுடன்மந்தாரை நாலுஜாம ம், நாறானசரக்கொண்ணை நாலுஜாமம் நலமானகொடிவேலி யாறுஜா மம், தேறானகௌதும்பை யாறுஜாமம் தேற்றமுடன்துவரையதுநாலு ஜாமம், சேறானவெண்குன்றி யாறுஜாமம் செய்மையுடன்தானரைப் பாய் மைந்தாகேளே. (௲௬௯)

கேளேதான்சரக்கெல்லா மரைத்தபின்பு கெவனமுடன்பில்லையது லேசதாக, நாளேதான்போகாமல் பகிர்லவைத்து நயமானபுதுக்கலசம் தன்னிலப்பா, கோளேதான்போகாமல் மைந்தாகேயுங் குமுறவேதானடை த்துச் சீலெசெய்து, கிளேதான்கலசமது அவாரமிட்டு இருளையுடன்தயி லமது யிறக்கிடாயே. (௲௭௰)

இறக்கியேகுழித்தயில மாவல்லோ வெறிலானகலசமதில் வடிதா ன்கொண்டு, சிறக்கவேமுப்பூவுங் களஞ்சிசேர்த்து செப்புடனேகலச மதிற் பதனம்பண்ணி, திறமானதயிலமதை யாரேனுந்தான் திர்க்கமு டன்சொல்லவில்லை நூல்கள்தன்னில், உறமானதயிலமது சித்தர்முப் ஓகோகோநாதாக்கள் சொல்லாரய்யே. (௲௭௧)

அன்றானதயிலமதை யாராய்ந்தேதான் அனேகந்தன்மாண்பர்களு ம் பிழைக்கவெய்து, குன்றானபுலிப்பாணி ரனைப்பாடெல்லாம் கூறினேன் போகரேழாயிரத்தில், தெய்விலாசயில்பொதிகைமலை தன்னில்வாழு தெளிவானசித்தமுனி நாதர்தாமும், வெண்டிடவேதயிலமதை மறை த்துவைத்தார் வேதாந்தருட்பொருளைக் காட்டார்தானே. (௲௭௨)

தானானசாத்திரத்தி லுளவுகண்டு தன்மையுள்ளகருவிகாறு, யெல்லாம், கோனானமயனதையர் காலாங்கிநாதர் கொற்றவனுரெந்தனு க்குச் சொன்னதீதி, தேனானமனோன்மணியாள் கடாட்சத்தாலே தே றமுடன்தயிலமதை வாங்கிமைந்தா, பானானபரிதியென்ற ருதந்தனி ல் பாங்குபெறதயிலமதைக் களஞ்சிடே. (௲௭௩)

# எ-வது காண்டம்.

நீட்டவேபத்துக்கு வொன்றமேதான் நீதியுள்ளமதவானே யடங்கி நிற்க, வாட்டமுடன்தனிலமதை யிரண்டுஜாமம் வாகுபெறத்தானரைக்க சூதமாகும், தாட்டிகமாய்ச்சூதமதை செந்தூரிக்க தன்மையுடன் சொல்லுகிறேன் மைந்தாபாரு, நாட்டமுடன்தாரமென்ற நாகந்தானும் நலமானகளஞ்சியது வொன்றுசேரே, (கூஎ௪)

சேர்த்துமேமுன்சொன்ன தயிலத்தாலே செவ்வையாய்த்தானரைப்பாய் [illegible]ம், நேர்த்தியாய்மெழுகுபதமாகுமட்டும் நேர்மையுடன் தா[illegible]று செப்பக்கேளீர், ஊர்த்துவமாய்குபபிக்குச் சீலைசெய்து [illegible]தனைக் குப்பியிட்டு திர்த்தமெஸறகுப்பிக்கு மாக்கல் [illegible]யோகமேல் மூடி சீலைசெய்யே. (கூஎரு)

செய்யவேதளவாயாக சட்டிதன்னில் செப்புடனேமணலதனைக் கொட்டி[illegible], பையவே[illegible]சட்டிதன்னில் பாங்குடனேவிரலதாறு[illegible], [illegible]தனை [illegible]மேற்கொட்டு துப்புரவாய்க்குப[illegible]எரியமூடி, [illegible]மேறபாண்டந் தன்னில்மூடி வுத்தானேசீலைசெய்து வலுவாயச்செய்யே. (கூஎசு)

[illegible] மைந்தனேமயங்கல் செய்வாய[illegible], [illegible]திரத்தில் [illegible]ன்தானே [illegible] சகலம்போலாம [illegible]தானே [illegible] வுத்தமனே[illegible]. (கூஎஎ)

[illegible]ப்பாடனாயதிக்குப் [illegible]செய்து கெட்டியாய்மறுன்மனி [illegible], [illegible] செந்தூரத்தை நலமாகசொலி [illegible] தேகந்தன்னை வட்சமுடனேநி [illegible]மிருபபதறகு, வேளப்பாயா[illegible]றபங்கொள்ள விருப்பமுடன் சொல்லுகிறேன் பண்பாய்க்கேளே. (கூஎஅ)

[illegible]பானசெந்தூரக்குன்றிய் பாலகனேமண்டலந்தா னிர[illegible], நன்பாலகனதனில் கொண்டாயானால் நலமானதேகமது [illegible]. [illegible] மேல்நோக்காது நீர்க்கமுடன்கொண்டவாகரு [illegible], [illegible]கப்பமெல்லாம வத்தமனே [illegible]. (கூஎகூ)

ஒன்றுதுசெந்தூரந் தானாப்பா [illegible]தமனேகோடிவனா யி[illegible]லாகும, கண்ணுனசெந்தூரந்தன்னைப்பா [illegible]துடனேபரச்சு[illegible]தக்கைக்கேபந, மண்ணு [illegible]செம்பதுவு [illegible] மகத்தானசெ

நூரம் களஞ்சியொன்று, ஒன்றுக்கானுருக்கி மூசைதன்னில் வுதத்தமா னேதானைபேற்று சாய்த்திடாயே. (௩-அ௰)

சர்க்கவேசெம்பதுவும் மாற்றுரூபத்து தனியானமாற்றதுவுமெ ன்னசொல்வேன், வாய்த்தெதொருபிறவியென்ற தக்கந்தானும் மகத்தான தங்கமது யிதற்கிணையோ, மெய்க்கொருமெய்வியென்ற தங்கமப்பா தேற்றமுள்ளபிறவியென்ற தங்கமாச்சு, பேய்க்கொருமனோபோவவி னைந்ததங்கம் பெருமையுள்ளதிருக்குப்புத் தங்கந்தானே. (௩-அக)

தானானதங்கமது யோகிதங்கம் தன்மையுடன்சிவவேடம் பூண் டோர்க்காகும், கோனானகுருத்தங்கம் ஞானத்தங்கம் கொற்றவர்களரச ஜாக்க ளணியுந்தங்கம், பானனமேனும்மணியாட்குஷந்தங்கம் பாரினி லேசித்தர்மெச்சுந் தங்கமப்பா, தேனானகுருக்கண்மா ரணியுந்தங்கம் தே ஜொளிவின்சொருபமென்ற தக்கந்தானே. (௩-அ௨)

தங்கமாமின்னமொரு போக்குசொல்வேன் தன்மையுள்ளபுலிப் பாணி மகனேகேளு, பங்கமில்லாத்தங்கமது யென்னசொல்வேன் பால கனேவன்பதுக்கு வொன்றாக்கு, தங்குமுள்ளாசிதமது மாற்றுரூபத் து அடியானபசுமையென்ற யேமமாச்சு, புங்கமித்தியெட்டிவடைய சிவ யோகிக்குப் புனிதனேதங்கமது வாய்க்கும்பாரே. (௩-அ௩)

பாரேதான்கருமிகட்குஞ் சண்டாளர்க்கும் பலியாதுயிவ்வேதைப் பலியாதப்பா, ஆரோதான்சாத்திரங்க ளனேகஞ்சித்தர் அபரிதமாய்பா டிவைத்தார் கோடிகோடி, நேரோதாளிவ்வேதைக் குலமைகூற நெடிய புகழ்வையகத்தி லாராலாகும், சீரோதான்விட்டகுறை யிருந்தபேர்க்கு தீர்க்கமுடன்வாய்ப்பதுவும் மெய்யதாமே. (௩-அ௪)

மெய்யானவித்தையது யென்னசொல்வேன் மேதினியில்காதாக் கள் கூறும்வித்தை, பொய்யானவித்தையது வினைக்கோடி பூட்டினோர் வெகுகோடி மாண்பர்க்காக, வையகத்தில்வாழுகின்ற மாண்பருக்கு மக த்தானசெந்தூரம் வுண்டபேர்க்கு, ஐயமறரோகாதி ரோகமெல்லாம் வப்பனேவுடலைவிட்டு யேகும்பாரே. (௩-அ௫)

விலாங்குகற்பம்.

ஏகுமேயின்னமொரு கற்பம்பாரு யேற்றமுடன்சொல்லுகிறேன் மைந்தாபாரு, பாகுடையகெய்போன்ற விலாங்குதன்னை பட்சமுடன்தா ன்பிடித்து பண்பாய்க்கேளு, சாகுதற்குமுன்பாக குதந்தன்னை சட்டமு டன்வாயில்விட்டு விலாங்குதன்னை, வேகுதற்குபாண்டமது தானமைத்து வேகமுடன்பூநீரைப் பாண்டம்போடே. (௩-அ௬)

போட்டுமேவிலாங்குகனை மேலேவைத்து பொங்கமுடன்மேலுமங்க பூரேவிட்டு, கிட்டமுடன்ஜலமதனை மேலேயிட்டு கிஞ்சுளங்கமாகவல்லோ பாண்டமூடி, வட்டமுடன்தானவித்து ரவியிற்போடு வளமானவிலாங்கதுவு முலர்ந்தபின்பு, தாட்டிகமாய்க்கல்லுரலில் பெட்டிமைந்தா சட்டமுடன் இரும்புலக்கை தன்னாற்சாடே. (௧௮௭)

சாடவேசூரணமாய்ச் செய்துகொண்டு சட்டமுடன்சுக்குடனே வோமஞ்சேர்த்து, கூடவேமிளகுடனே வாய்விளங்கம் குணமானபரங்கியென்ற பட்டைதானும், போடவேயேலமுடன் ஜாதிபத்திரி பொங்கமுடன்வெந்தயமு மிருசீரகந்தான், கூடவேபச்சையென்ற பூரந்தானும் அக்கமுள்ளரோசனையுங் கூடச்சேரே. (௧௮௮

சேர்த்துமேலவைக்கொருபலமாக நெய்யுடனேமெய்தேனும் விட்டுக்கிண்டி, பேர்த்துமேபுதுக்கலசந் தன்னிலப்பா பெருமையுடன் சீனிசர்க்கரையுங்கூட்டி, ஆர்க்கவேபாகுடனுந் தன்னிலப்பா வப்பனேமுன்னுரைத்த லேகியத்தை, நீர்க்கமுடன்தான்சேர்த்து கிளறிவாங்கி இட்டமுடன்பீங்கானிற் பதனம்பண்ணே. (௧௮௯)

பண்ணவேகணபதிக்குப் பூசைசெய்து பாலகனேசோடசத்தில் வைத்துப்போற்றி, உண்ணவேயுண்டலர்தான் கொண்டாயானால் வுத்தமனேசுழற்சிக்காய் விதிதங்கொள்ள, கன்னமுடன்தேகமது யிறுகிக்காட்டும் தாக்கானவாசியதுமேல்நோக்காது, கன்னபிரான்செய்ததொரு குளிகையப்பா கண்மணியேவுந்தனுக்குப் போதித்தேனே. (௧௯௦)

போதித்தேன்விலாங்கினுட மாயாகற்பம் பொங்கமுடன்சமுசாரிக்கானகற்பம், வாதிகளுங்கண்டறிந்து செய்வாரப்பா வையகத்திலிதியுள்ளான் செய்யுமார்க்கம், சோதித்துசாத்திரங்கள் கண்டாராய்ந்து சுத்தானேவுந்தனுக்கு வோதிவைத்தேன், சாதிக்கால்குளிகையென்ற விலாங்குகற்பம் சாங்கமுடன்யோகிகட்கு வுறுதியாமே, (௧௯௧)

உறுதியாஞ்சித்திடங் கொண்டோர்க்கும் வுத்தமனேயாக்கைநரம் புடையபேர்க்கும், நிறுதியெனுந்தாதுவிர்த்தி யில்லாதார்க்கும் நீடூழிபோகமது கொள்வோருக்கும், குறுதியதுயுல்லாத தேசத்தோர்க்கும் குணமில்லாமணமில்லா மேனியோர்க்கும், அறிவுகுன்றியவிருப்பதொரு மாண்பருக்கும் வழசானகுளிகையது பாருபாரே. (௧௯௨)

பாரப்பாகுளிகையது கொண்டபேர்க்கு பாங்குடனேயேழானை பிலமுண்டாகும், ஆரப்பாகுளிகையது செய்யப்போரார் வப்பனையறிவுடையோர் செய்யும்வேதை, நீரப்பாதனிலிருக்கும் விலாங்குகற்பம் நீதியுள்ளகற்பமது வென்னசொல்வேன், பேரப்பாசிவயோகி செய்யாரப்பா பேரின்பநிலைகடந்தோர் செய்யார்தாமே. (௬௬௩)

செய்வார்கள்சித்தியின்ப முடையபேர்கள் ஜெகதலத்தில்கோடியுண்டு லக்கோயில்லை, தய்யசமிழ்ப்பண்டிதங்கள் மெத்தவுண்டு அப்புவாய்செய்தாமல்லோ வதிதஞ்செய்வார், மெய்யானகற்பமலதசெய்தபேர்கள் மேதினியில்கலவிக்கு மூதன்மையாவார், பொய்யானகற்பமதுகூறவில்லை புண்ணியனேயுந்தனுக்குப் புகட்டினேனே. (௬௬௪)

புகட்டினேனுந்தனுக்கு வன்புகூர்ந்து புகழானவிலாங்கினது கற்பந்தன்னை, சகமுழுதுஞ்சித்துமுனிசாத்திரத்தில் சாங்கமுடன்மறைத்துவைத்தாரென்னசொல்வேன், அகங்கொண்டமாண்பர்களுக்காகவென்று வப்பனைசிடிகையெல்லா மறைத்துப்போட்டார், சுகம்பெறவேயடியேனுமனதுவந்து சூட்டினேன்மாண்பர்களுக்குகந்தவாறே. (௬௬௫)

வாறானசூத்திரத்தில் மறைத்ததெல்லாம் வாகுடனேசாத்திரத்தில்'பெருக்கிவிட்டேன், கூறானசிடிகையென்ற மார்க்கந்தன்னை குணம்பெறவேசெய்தவர்க்கு யெல்லாஞ்சித்தி, மாறுமல்கைபாகஞ் செய்பாகந்தான் மன்னவனேசெய்தவர்க்கு யெல்லாஞ்சித்தி, தூறுவமார்க்கமது சென்றபேர்க்கு துப்புரவாயதொன்றும் பலியாதன்றே. (௬௬௬)

பலியாதகுடிகெடுக்கும் பாவியோர்க்கும் பாங்கானசண்டாள துரோகியோர்க்கும், வசிதானபவமுடைய கருமியோர்க்கும் வாகுடைய சிடிகையென்ற வேதைதானும், கலியாளர்தங்களுக்கும் வெறுமியோர்க்கும் நற்பெண்டீர்தனைகெடுத்த துரோகியோர்க்கும், சலியுடையசப்பாணி குருடருக்கும் சட்டமுடனொருக்காலும் பலியாதன்றே. (௬௬௭

அன்றானபோகரேழாயிரத்தில் வப்பனைகண்டக்காண்டந் தன்னிலப்பா, குன்றானமலைபோலே கோடிகற்பம் கொட்டினேனுதாக்க ளறிந்ததில்லை, தென்றிசையிலகத்தியனார் காவியத்தில் தேற்றமுடன்வெகு கோடி பாடிவைத்தார், வென்றிடவேசத்தகாண்டந் தன்னிலப்பா விருப்பமுடன்பாடிவைத்தேன் கோடியாமே. (௬௬௮)

நாரைகற்பம்.

கோடியாமின்னமொரு கற்பஞ்சொல்வேன் கோபாலாயென்குருவே குமரவேலா, வாடியேமயங்காதே மன்னுகேளு வளமையுடன்நாரையென்ற கற்பஞ்சொல்வேன், தேடியேகருநாரை கொண்டாராய்ந்து தேற்றமுடன்குடல்போக்கி சிறகுபோக்கி, ஆடியதோர்சூதமென்ற யானைதன்னை வப்பனையதன்வாயிற் புகட்டிடாயே. (௫௯௯)

புகட்டவேயிருவாயுந் தைத்துமலேலா பொங்கமுடன்தாளியென்ற பாண்டந்தன்னில், அகலமதுசாணதுவும் விரள்தானுலு வப்பனைபூநீரைப் பறப்பிமைந்தா, மிகலவேநாரையென்ற பட்சிதன்னை மிஷ்களங்கமாகவல்லோ பாண்டம்வைத்து, புகலவேமேலுமந்த பூநீர்விட்டு புண்ணியனே மேற்பாண்டந் தன்னைமூடே. (௬௱)

மூடவேசீலையது வலுவாய்ச்செய்து மூசியாமல்தானெரிப்பா யிரண்டுசாமம், நீடவேயாறியது வெந்து நல்லோ நீதியுடன்நீயாறியெடுத்துப்பாரு, கூடவேமேலிருந்த பாண்டம்நீக்கி குற்றமறமாமிஷத்தை யெடுத்துமைந்தா, சாடவேகுழிக்கல்லில் தன்னிலிட்டு சட்டமுடன்யிருப்புலக்கை தன்னாற்சாடே. (௬௱க)

சாட்டியபின்சூரணமாய்ச் செய்துகொண்டு சாங்கமுடன்சூரணத்தில் நாலுக்கொன்று, நாட்டிகமாய்பஞ்சமூஷ்டிகாணுஞ்சேர்த்து சட்டமுடன்பஞ்சநிர வியங்களாந்தாம், வாட்டமுடன்திரிகடுகு திரிபலாதி வகைவகைக்குநாலுக்கு வொன்றுசேரு, பூட்டவேயித்தாதி சரக்கையெல்லாம் புகழ்பெறவேசெய்தேனும் விட்டுக்கிண்டே. (௬௱௨)

கிண்டியேபாணிதனில் பதனம்பண்ணு கீர்த்திபெறவுண்பதற்கு விபரங்கேளு, தண்டகம்போலிருவேளை யுண்பாயானால் தாட்டிகமாய் வாசியது மேல்நோக்காது. மண்டலந்தான்கொண்டவர்க்கு வாசியோகம் மகத்தானயார்க்கமெல்லாம் வழியேகாட்டும், சண்டமாருதம்போலேயிந்தகற்பம் சாங்கமுடனுண்பவர்க்குப் பலனேக்கேளே. (௬௱௩)

கேளப்பாகுளிகையதுகொண்டபேர்க்குகெடியானசின்மயத்திலொடுக்கவாசி, நாளப்பாதன்மயமுங் காணுமற்றும் நலமானவாசிவழிக் கிடங்கொடுக்கும், ஆளப்பாவாராதா ரத்தைக்காட்டும் வப்பனையதிலொடுங்கும் கலைகள்ரெண்டும், தேளப்பாகொட்டியதோர் விஷத்தைப்போலும் தேஜொளிவின்பூரணத்தைக் காணலாமே. (௬௱௪)

காணலாஞ்சுழுத்தியிலே யிருந்துகொண்டு கருவிகாணுதிபந்தம் மேலேதொட்டு, பூணலாம்விசித்தியிலேவாசிகொட்டி புகழ்பெறவேவனு

கரத்தை மேலேபூட்டி, தோணவேசுடரொளியைத் தாக்கும்போது சூட்சமென்றகலைதனையே பிரித்துக்காட்டும், மாணவேமாயாதி சித்தரெல்லாம் மார்க்கமுடன்மறைத்துவைத்தா ருண்மைபாரே. (௬௱௫)

